
# அறிவாலயம்

## திறப்பு விழாச் சிறப்பு மலர்



இணுவில் திருவூர் ஒன்றியம்

20-03-2005

இணுவில்

# அறிவாலயம்

திறப்புவிழாச்

## சிறப்பு மலர்

## Special Souvenir

to mark the
Opening ceremony of a
Public Library & Cultural Museum
in **Inuvil**

**மலராசிரியர்**
அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி
கல்விசார் நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

**இணுவில் திருவூர் ஒன்றியம்**
**இணுவில்**
**20-03-2005**

மலரின் பெயர் :- இணுவில் அறிவாலயம் திறப்புவிழாச் சிறப்புமலர்.

மலராசிரியர் :- அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி,
(கல்விசார் நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)

மலர்க்குழு :- பேராசிரியர் சபா. ஜெயராசா.
திரு. ஆறு. திருமுருகன்.
திருமதி. அ. ஸ்ரீகாந்தலட்சுமி
திரு. ச. வே. பஞ்சாட்சரம்.
திரு. மு. சிவலிங்கம்.
திரு. ந. ஞானசூரியர்.

வெளியீடு :- இணுவில் திருவூர் ஒன்றியம், இணுவில்.

ஆண்டு :- 2005.

பதிப்புரிமை :- இணுவில் திருவூர் ஒன்றியம்.

முன் அட்டைப்படம் :- திரு. ஜெ. மயூரன், பி.ஏ

கணினி வடிவமைப்பு :- லலிதா கிராபிக்ஸ், இணுவில் கிழக்கு.

அச்சுப்பதிப்பு :- ஷாம்பவி பதிப்பகம், இல-276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் :- xxxiii , 175பக்

அன்பளிப்பு :- ரூ 400

---

**Name of the souvenir** :- **Inuvil Arivalayam Special Souvenir**

**Editor** :- **Arulanantham Sri kanthaluxumy**
**Academic Librarian, University of Jaffna.**

**Editorial Board** :- **Prof. Saba. Jeyarajah.**
**Mr.Aaru. Thirumurugan.**
**Mrs. A. Sri kanthaluxumy**
**Mr.S.V.Panchadcharam.**
**Mr. M. Sivalingam.**
**Mr.N.Gnanasooriyar.**

**Publisher** :- **Inuvil Thiruvur Onrium, Inuvil.**

**Year** :- 2005.

**Copy right** :- **Inuvil thiruvur Onrium**

**Cover Page** :- **Mr.J. Mayuran(B.A).**

**Computer Designing** :- **Lalitha Graphics, Inuvil East.**

**Printers** :- **Shampavi Printers, No. 276, Kasthuriar Road, Jaffna**

**Pages** :- **xxxiii,175**

**Price** :- 400/=

மனிதரெலாம் அன்பு நெறி
காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல்
விரிவடைந்து
தனிமனித தத்துவமாம்
இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப
துணர்வதற்கும்,
இனித்தினிதாய் எழுந்த உயர்
எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு
சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள்
புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும்
நாட்டில் யாண்டும்.



🕮 பாவேந்தர் பாரதிதாசன் 🕮

இராகம் : பிருந்தாவனசாரங்கா தாளம் : ஆதி

வாழிய இணுவில் அறிவாலயமும்,

வழங்குதொல் பொருட்காட்சி யகமும்!

ஏழிசை, நாடகம் இலக்கியச் சைவ

இமயங்கள் உலவிய பூமி !

ஈழத்தின் சின்ன இந்தியா என்று

ஏத்துறும் புகழ் என்றும் நிலைக்க

(வாழிய இணுவில்)

மெத்தவும் வெளிநா டுகளுறை இணுவை

வித்துகள் உந்தலில், செலவில்

முத்தமிழ் இணுவை முருகனின் சிலிர்ப்பால்

முகிழ்த்ததோர் கலைக்கருவூலம்

(வாழிய இணுவில்)

வெறிப்படும் லோகா யதவாத மாயை

வேகத்தைத் தணித்தறி வான்ம

நெறிப்படும் மனிதம் நிலைபெற வைத்தே

நித்தியம் உறஇது உழைப்போம்.

(வாழிய இணுவில்)

★ பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ★

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# நூலகம்

இணுவில் அறிவாலயம்


கற்றனைத் தூறும் அறிவு

# வெளியீட்டுரை



செஞ்சொற்செல்வர்
**ஆறு. திருமுருகன்**
"பாலாவி"
மருதனார்மடம்
இணுவில்

இணுவில் திருவூர் தெய்வீக பூமி. இறையருளும் அருளாளர் வாசமும் இம் மண்ணின் மாண்புக்குக் காரணம் என்பர். இப்புனித பூமியின் வரலாறு ஈழத்து அறிஞர்களால் காலத்துக்குக் காலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. திருக்கோவில்கள் நிறைந்த இணுவையம்பதியில் அறிவுசார் பொதுக்கூடம் அமைய வேண்டும் என அகத்தில் நீண்ட நாள் ஆவல் கொண்டேன். அறிவியல் சார் நூலகமும் அரும்பொருட்காட்சியகமும், கலைக்கூடமும் பெரு விருட்சமாக அமைக்க வேண்டும் என்ற கற்பனை அகன்று கொண்டே போனது.

நமது கிராமத்து மக்கள் புலம் பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் இன்று வாழ்கின்றார்கள். இலண்டன், கனடா போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான இணுவை மக்கள் குடும்பம் குடும்பமாக வாழ்கின்றார்கள். ஆன்மீகப் பணிக்காக அந்நாடுகளுக்குச் சென்ற எனக்கு மகத்தான வரவேற்பு விழா எடுத்துக் கௌரவித்தார்கள். அவ்விழாக்களில் யான் விடுத்த அன்பு வேண்டுகோள் தான் இணுவில் அறிவாலயம் இன்று பரிணமிக்க ஏதுவாயிற்று.

இப்புனித கைங்கரியம் நிறைவேற உதவிய அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன். இணுவில் திருவூர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைவரது ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுகிறேன்.

அறிவாலயம் இணுவில் மக்களின்
சொத்து. எத்தனையோ இடையூறுகள்
வந்த போதிலும் ஆண்டவனும் அன்பு உள்ளங்களும்
அஞ்சேல் என்று என்னை உற்சாகப்படுத்திக் காத்தனர்.
அறிவாலயம் அகலத் திறக்கப்பட்டு இணுவை மக்களிடம்
ஒப்படைக்கப்படவுள்ளது.

**என் பிரியத்துக்குரிய அன்பு உள்ளங்களே !**

சூரியன் சந்திரன் இவ்வுலகில் நிரந்தரமாகப் பிரகாசிப்பது போல் அறிவாலயம் அனுதினமும் பிரகாசிக்க ஆவன செய்யுங்கள். பழமையையும், புதுமையையும் காக்கும் உயர் கூடமாக இதைப் போற்றுங்கள்.

அறிவாலயத் திறப்பு விழா குறித்து அறிவுசார் மலர் ஒன்று வெளியிட வேண்டும் எனத் திரு. மூ.சிவலிங்கம் ஐயா அவர்கள் வேண்டினார்கள். பேராசிரியர் சபா. ஜெயராசா போன்ற பெரியவர்களின் ஆலோசனையுடன் வெளியிட ஏற்பாடு செய்யுமாறு குறிப்பிட்டேன். யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விசார் முதுநிலை நூலகராகப் பணியாற்றுகின்ற சகோதரி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களது நெறிப்படுத்தலில் இம் மலர் வெளியிடுவது வரவேற்கத் தக்கது. சகோதரி அவர்கள் அறிவாலயத்துக்கான நூல்களை ஒழுங்குபடுத்துவதில் அரிய பணி செய்து வருகின்றார். அவர்களின் பணிகளுக்கு எல்லாம் மனம் நிறைந்த நன்றிகள்.

அறிவாலய நிர்மாணத்தில் பெரிதும் பக்கபலமாக உதவும் திரு.து.சிவராசா அவர்களுக்கும் கட்டிடநிர்மாணக் கலைஞர் மயில்வாகனம் கெங்காதரன் அவர்களுக்கும் ஏனையோருக்கும் எனது சுகம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அறிவாலயத் திறப்புவிழா ஞாபகமாக வெளியடப்படும் முதல்நூல் இம் மலர். எதிர்காலத்தில் பல நூல்களை அறிவாலயம் வெளியிட இறையருளை வேண்டி அமைகிறேன்.

நன்றி

# மலராசிரியர் உரை



அறிவுக்கு அறிவூட்டும் நன்நோக்குடன் அமைதியும் ஆன்மீகமும் நிறைந்த சூழலில், சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டவர்களின் அனுசரணையுடன், இணுவில் திருவூர் ஒன்றியத்தின் அரிய முயற்சியின் பெறுபேறாக, மெல்ல மெல்ல உருவாக்கம் பெற்று இன்று கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது இணுவையூர் அறிவாலயம். அறிவுப் பசிக்குத் தீனி போடக் கூடிய அறிவுக்கருவூலங்களை மட்டுமன்றித், தமிழ்ச் சமூகத்தினால் காலங் காலமாகப் புழங்கப்பட்டு மெல்ல மெல்லப் பாவனையிலிருந்து விலகிக் கொண்டு போகும் உண்மை உருவமைப்புகளையும் அவை கிடைக்காதவிடத்து மாதிரி உருவமைப்புகளையும் தன்னுள் உள்ளடக்கியதாக உருவாகின்றது இவ்வறிவாலயம்.

காலங்காலமாகவே ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களையும், நுண்மாண் நுழைபுலங் கொண்டோரையும் தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த பெருமை இணுவை மண்ணுக்கு உண்டு.

"செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை"

என்ற முதுமொழியின் நடமாடும் எடுத்துக்காட்டுகளாகத் திரியும் எமது பெரியவர்களைக் கேட்டால் இணுவில் மண்ணில் காலங்காலமாகச் சுருட்டுக்கொட்டில்கள், கோவில் மண்டபங்கள், வீட்டுத் திண்ணைகள் போன்றவை எவ்வாறு செவிவழி அறிவைப் பரப்பும் இடங்களாக இருந்திருக்கின்றன என்பது பற்றிக் கதை கதையாகச் சொல்வார்கள். அது மட்டுமன்றித் திரும்பும் இடமெங்கணும் ஆலயங்கள் என்னுமளவிற்கு ஆலயங்களால் நிறைந்த இணுவை மண்ணில் உள்ள பெரிய ஆலயங்களில் மட்டுமன்றிச் சிறிய ஆலயங்களிலுங் கூட உற்சவ காலங்களின் போது இடம் பெறும் சொற்பொழிவுகள் கேள்வி ஞானத்தை எவ்வளவு தூரம் அதிகரிக்க வல்லன என்பதை இங்கு வாழ்ந்தவர்களால் மட்டுமே உய்த்துணர முடியும்.

மலர் பற்றிப் பேசுமுன் பலரது மனதிலும் எழும் அடிப்படை வினாக்களுக்குப் பதில் கூற வேண்டிய கடமைப்பாடும் உண்டு. நூல்களைக் கொண்டுள்ள இடம் நூலகம் என்ற கருத்துநிலை வரலாற்றுக்கு முந்திய காலம் தொடக்கம் நிலை கொண்டிருக்கும் ஒன்றாகவும், சிறுவர் முதல் வளர்ந்தோர் வரை அனைவருக்கும் தெரிந்த ஒரு பொதுப் பதமாகவும் இருக்கும் ஒரு நிலையில் பொது நூலகம் ஒன்றுக்கு அறிவாலயம் என்ற இந்தப் புதிய பதப்பிரயோகம் வியப்பை மட்டுமன்றி வினவல்களையும் ஏற்படுத்துவது இயற்கையானதொன்று.

அறிவு, ஆலயம் என்ற இரு கருத்துநிலைகளின் ஒருங்கிணைப்பால் உருவான அறிவாலயம் என்ற பதம் ஆழம் மிக்க கருத்து நிலையைத் தனக்குள் கொண்டதொன்று. அறிவு என்பது இருவகை. எமக்குள்ளே இருப்பது – அதாவது கற்றது கை மண்ணளவு – ஒருவகை அறிவு. எமக்குத் தெரியாததை– அதாவது கல்லாத உலகளவை– எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்பது இன்னொரு வகை அறிவு என்கின்றார் மேற்கத்தையச் சிந்தனையாளர் சாமுவேல் ஜோன்சன். இந்த இரண்டாவது வகை அறிவைத் தமக்குள்ளே உள்ளடக்கியிருப்பவை தான் நூலகங்கள்.

அறிவுப் பதிவேடுகள் நூல் உருவில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில், நூல்களைப் பொறுத்துப் பயன்பாட்டை விடப் பாதுகாப்பு நோக்கமே முனைப்புப் பெற்றிருந்த ஒரு காலப் பகுதியில் நூல்களைக் கொண்டவை நூலகம் என்ற காரணப் பெயர் பொருத்தமானதாக இருந்திருக்கக் கூடும். அது மட்டுமன்றி ஒவ்வொரு நூலும் தனக்குள்ளே உள்ளடக்கிய பொருட் துறையை மிகத் தெளிவானதாக, சிக்கல்தன்மை அற்றதாக விளக்கும் அளவுக்குத் தனித்துவத் தன்மையைக் கொண்டிருந்த காலப்பகுதிவரை நூலகம் என்ற கருத்துநிலை பொருத்தமானதே. ஆனால் இன்றைய உலகம் அப்படிப்பட்டதன்று. அறிவியல் தொழினுட்ப வளர்ச்சி நூலின் உருவமைப்பில் கணிசமானளவு மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பது மட்டுமன்றி நூலின் உள்ளடக்கத்தையும் மிகச் சிக்கல் வாய்ந்ததாக, ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்துறைகளை ஒரு நூலிலேயே உள்ளடக்குவதாக, ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பொருட்துறைகளைக் கூடத் தேவைகளின் அடிப்படையில் ஒன்றிணைப்பதாக மாற்றியிருக்கின்றது. இத்தகைய நிலையானது நூலை அடிப்படையாகக் கொண்ட தேடுகையிலிருந்து தகவலை அடிப்படையாக கொண்ட தேடுதல் நோக்கி வாசகனை நிர்ப்பந்தித்திருக்கின்றது. எனவே நூலகம் என்ற கருத்துநிலையில் மாற்றம் அவசியமாகின்றது.

நூலைத் தேடிப் பெறுவது இலகுவானதாக இருந்தாலும் நூலுக்குள் இருக்கும் அறிவை இலகுவாக யாரும் பெற்று விட முடியாது. அதற்குத் தேவை மன ஒருமைப்பாடு. இந்த மன ஒருமைப்பாட்டைப் பெறுவதற்குப் புறச்சூழல் மட்டுமன்றி அகச் சூழலும் மிக இன்றியமையாததொன்று. கவர்ச்சிகரமான நூலகக் கட்டடம், வசதியான தளபாடங்கள், அமைதியான சூழல், கண்ணைக் கவரும் நூலக சாதனங்கள், அவற்றைச் சிரமமின்றித் தேடிப்பெறுவதற்கான ஒழுங்கமைப்புகள், இன்முகத்துடன் கூடிய நூலகப் பணியாளர்கள் என்று புறச்சூழலை எவ்வளவு தூரம் சரிவர அமைத்தாலும் வாசகனின் அகச்சூழல் என்பது சரிவர அமையாது விடின் அனைத்துமே வீணாகிவிடும். இங்குதான் ஆலயம் என்ற கருத்துநிலையின் முக்கியத்துவத்தை நாம் உணர்கின்றோம்.

ஆன்மா இலயிக்குமிடம் ஆலயம் எனப்படுகிறது. மனதை ஒருமுகப்படுத்தல் என்ற செயற்பாடு இடம்பெறாது விடின் இலயித்தல் என்பது சாத்தியமற்றது. இலயித்தல் சாத்தியப்படாதபோது எமது எண்ணமும் நிறைவேறுவது சாத்தியமற்றது. நூலகமும் ஆலயத்தைப் போன்றது தான். எமது மனதை ஒருமுகப்படுத்தி எமக்குத் தேவையானதைத் தேடி, அதற்குள் எம்மை முழுமையாக அர்ப்பணிக்கும்போது தான் அறிவு என்பது சாத்தியமாகின்றது. இல்லாது போனால் அது நுனிப்புல் மேய்தலாகவே மாறும்.

இத்தகைய உயர்ந்த, ஆழம்மிக்க எண்ணத்துடன் தான் இணுவில் மண்ணில் உருவாகும் இப் பொதுநூலகம் "அறிவாலயம்" என்ற பெயருடன் தன் பணியைத் தொடரப் போகின்றது. பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனோ, கருத்துநிலையின் ஆழம் புரியாமலோ அறிவாலயம் எனப் பெயரிட்டுவிட்டு ஓரிரு தினசரிகளுடன் தமது பணியைக் குறுக்கிவிடும் வாசிகசாலைகளும் எம்மிடையே உண்டு என்பதையும் இங்கு மனங் கொள்ளல் அவசியமானது.

இந்த அறிவாலயத்தின் நினைவுகளைச் சுமந்து கொண்டு உங்கள் கரங்களில் தவழுகின்றது அறிவாலயம் சிறப்பு மலர். இச்சிறப்பு மலர் வெறும் விளம்பரங்களுடனும் சாதாரண செய்திகளுடனும் மட்டுப்படுத்தப்பட்டு மதிப்பை இழந்து விடக் கூடாது; நூலகம் தொடர்பாக உருவாகும் சிறப்பு மலர் ஒன்று நூலகம் பற்றியே பெரிதும் பேச வேண்டும்; நூல்கள், வாசகர், நூலகர் ஆகிய மூன்றினதும் மூவுருவே நூலகம் என்ற அடிப்படையில் இவை மூன்றைப் பற்றியும் போதுமான தகவல்களை மலர் உள்ளடக்க வேண்டும் என்ற மூன்று பெரு விருப்பங்களின் அடிப்படையில் தமிழ் மண்ணின் நூலக வரலாற்றில் தனக்கெனத்

தனியிடமொன்றைப் பெறுமளவிற்குத் தமிழ்ச் சமூகத்தின் பெரியவர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பொதுநலவிரும்பிகள் என்று பலருடைய சிந்தனைகளினின்றும் கருக்கொண்ட காத்திரமான தகவல்களைத் தனக்குள்ளே உள்ளடக்கி வெளி வருகின்றது இச்சிறப்பு மலர். இணுவையூர் அறிவாலயத்தை ஆசீர்வதிப்பவர்கள், வாழ்த்துபவர்கள், அறிவாலயம் எப்படியெல்லாம் இயங்க வேண்டும் என்று தமது மன உணர்வுகள், விருப்பங்களை வெளிப்படுத்துபவர்கள், அறிவாலயம் சிறப்புற உதவும் அரிய தகவல்களை வழங்குபவர்கள் என பலரதும் பங்களிப்பை இம் மலர் உள்ளடக்கியிருப்பது இதன் சிறப்பம்சமாகும். அறிவுப் பகிர்வுக்கு இணையாக அனுபவப் பகிர்வும் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற விருப்பில் பழுத்த கனிகளின் சிந்தனைத் துளிகளுடன் பூக்கள், பிஞ்சுகள், காய்கள், கனிகள் போன்றவற்றின் உணர்வுகளும் ஓரளவுக்கு இங்கு பதியப்பட்டிருக்கின்றன.

மலர் உருவாக்கம் தொடர்பாகப் பேச விழையின் இணுவை மண்ணுக்கு அறிவாலயம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்த வெளிநாடுகளில் வதியும் இணுவையூர் அன்பர்களின் மன விருப்பத்தைத் தலை மேல் சுமந்து அறிவாலயம் உருவாக அரும்பாடுபட்டு உழைக்கும் பெருமை செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகனை ஆலோசகராகக் கொண்ட இணுவில் திருவூர் ஒன்றியத்தினருக்கு உரியது போன்று அறிவாலயத்துக்கான சிறப்பு மலர் ஒன்றின் அவசியத்தை உய்த்துணர்ந்து, அதை இணுவில் திருவூர் ஒன்றியத்தினூடாக வெளியீடுவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டது மட்டுமன்றித் தன்னால் முடிந்தளவுக்கு கட்டுரையாசிரியர்களைத் தேடி உடலால் மட்டுமன்றி மனதாலும் நெடுந் தொலைவு நடந்தவர் திரு மூ. சிவலிங்கம் ஐயா அவர்கள். அவரிடம் கட்டுரை வழங்கிய அனைவருக்குமே இந்த உண்மை புரியும். மலரின் காத்திரத்தன்மைக்கு மேலும் வலுவூட்டத் தன்னால் முடிந்தவரை பாடுபட்டவர் திரு. ந. ஞான சூரியர் அவர்கள். நூலகத்துக்கெனக் கீதம் ஒன்றை உருவாக்கியதுடன் சிறப்பு மலரின் சொற்பிழைகள் அனைத்தும் ஆற அமர இருந்து திருத்தி அறிவாலயத்தின் மலர் அறிவு மலராக உருவாக உதவியவர் மூத்த எழுத்தாளர் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் ஐயா அவர்கள். அவ்வப்போது மலர் உருவாக்கம் தொடர்பாக ஆலோசனைகளைத் தந்தவர் பேராசிரியர் திரு சபா. ஜெயராசா அவர்கள்.

அறிவாலயத்துக்கான இலச்சினை தொடர்பான எமது சிந்தனைக்கு வடிவம் கொடுத்தது மட்டுமன்றித் தொல்பொருட்கள் சார்ந்த படங்களையும் வரைந்து உதவிய இணுவை மண்ணுக்குரிய செல்வன் பா.சுரேஸ்கண்ணா, செல்வன் அ. முகுந்தன், கணினி அச்சுப்பதிவில் உதவிய செல்வன். ஆ. பிரசாத், செல்வி பா.செல்வரஞ்சினி, சிறப்பு மலரைச் சிறப்புற வடிவமைப்பதில் தன்னால் முடிந்தளவுக்கு அதிகம் உதவிய செல்வன் ஆ.கபேஸ்கர், அட்டைப்படத்தை அழகுற வடிவமைத்த திரு. ஜெ.மயூரன், அச்சுப்பதிப்பு செய்த ஷாம்பவீ பதிப்பகத்தினர் அனைவருக்கும் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சமூகச் சிந்தையுடன் மேற்கொள்ளப்பட்ட இப் பணியில் அறிந்தோ அறியாமலோ விடும் சொற் பிழை, பொருட் பிழைகளை மன்னித்து மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் உயரிய மனம் சமூகச் சிந்தையுள்ள அனைவருக்கும் உண்டு என்ற நம்பிக்கையில் அறிவாலயம் சிறப்பு மலரை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றோம்.

**நன்றி**

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# ஆசீர்வதிப்போர்

உ
குருபாதம் துணை

# பெருமைக்குப் பெருமை சேர்க்கும் அறிவாலயம்-----



நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன
குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குரு மகா சந்நிதானம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இவ்வுலகம் அறிந்த இனிய திருவூர் இணுவில். திருக்கோவில்களாலும் கலைஞர்களாலும் கல்விமான்களாலும் பெருமை சேர்ந்த இப்பதியில் அனைவர்க்கும் பலன் தரும் "அறிவாலயம்" அமைக்கப்பெற்றது அறிந்து மிகவும் ஆனந்த மடைகின்றோம். அறிவு வளர்க்கும் நூல்நிலையமும் அற்புதமான அருங்காட்சியகமும் இவ்வறிவாலயத்துக்குள் அமைந்திருப்பது போற்றுதலுக்குரிய பணியாகும். மிகத் தொன்மை வரலாறு கொண்ட இணுவில், மற்றைய ஊர்களுக்கு முன்னுதாரணமாக அறிவாலயம் அமைத்துத் தன் பெருமையை மேலும் நிலை நிறுத்திக் கொள்கிறது. இப்புனிதப் பணிக்குத் தம் உதவிக்கரங்களை நீட்டிய உத்தமர்களை வாழ்த்துகின்றோம். அறிவாலயம் அமைக்கும் சிந்தனையைத் தோற்றுவித்து அதனை நிறைவேற்ற ஊர்மக்களை ஒன்றிணைத்துப் பணி நிறைவேற்றிய செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்களையும் இப்பணியில் ஈடுபட்ட ஏனைய அன்பர்களையும் பாராட்டி. இப்பணி சிறக்க இறையருளை வேண்டி நல்லாசி கூறி அமைகிறோம்.

**" என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

சுபம்

உ
சிவமயம்

# அறிவாலயம் என்னும் பெருங்கோட்டம்-----



ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

அறங்காக்கும் அரிய நற்திருவூர் இணுவில். ஆத்மீகமும், அறிவியலும், வைத்தியமும், கவினுறு கலைகளும் என்றும் இம்மண்ணுக்குத் தந்த பெருமை இணுவிலைச் சாரும். இவ்வரலாற்றுப் பதியில் "அறிவாலயம்" என்ற பெருங் கோட்டம் அமைக்கப்படுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற மகத்துவமான சிந்தனைக்கு உதவும் நூல்நிலையமும் தேடற்கரிய அரும் பொருள்களைக் காக்கும் காப்பகமும் எமக்கு மிகவும் அவசியமானவையாகும். அவ்வகையில் எம் தேசத்தின் விருத்திக்கும் வரலாற்றுக்கும் உதவும் இக்கைங்கரியத்தை நிறைவேற்றும் இணுவில் வாழ் மக்களை வாழ்த்தி வணங்குகின்றேன். அரிய பணிக்கு மக்களைத் தூண்டி ஆட்படுத்தும் எங்கள் ஆறு.திருமுருகனை இத்தருணத்தில் நன்றியோடு வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். எல்லாம் வல்ல ஈஸ்வரி துர்க்கை அம்பாளைப் பிரார்த்தனை செய்து அறிவாலயம் என்றும் பிரகாசிக்க வேண்டியமைகிறேன்.

சுபம்

# அறிவாலயம் பெருகி வளர-----



"சிவாகமஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
அதிபர்,
காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்,
ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவ்யாலயம்,
இணுவில்.

எல்லாச் சிறப்புக்களும் நிறைந்திருப்பது இணுவில் கிராமம். தர்மத்தை நிலை நிறுத்தும் வர்த்தகர்கள், பேரறிஞர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், தெய்வபக்திபுடன் வாழும் மக்கள் நிறைந்த இறையாலயங்கள் முதலியனவற்றைக் கொண்டு இராசதானி போல் பிரகாசிப்பது இணுவில். இங்கே, நடு நாயகராக அருளாட்சி செய்து வரும் முருகப்பெருமான் சந்நிதியில்.

"வித்யா ததாதி விநயம்
விநயாத்யாதி பாத்ரதாம்
பாத்ரத் வர்த்தன மாப்னோதி
தனாத் தர்மம் ததஸ்ஸுகம்"

என்ற முது மொழிக் கேற்ப வித்தையை, அறிவை வளர்க்கும் அறிவாலயம் அமைந்திருப்பது கிராமத்தின் மேலதிகச் சிறப்பாகும். புலம் பெயர்ந்து வாழும் பெரு மக்களின் பேருதவிபுடனும் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் பெருமுயற்சியாலும் இவ்வறிவாலயம் அமைந்திருக்கிறது. இதிலே நம் முன்னோர் பாவித்த, கையாண்ட பல அரும் பொருட்களும் காட்சிக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்படும். இவ்வறிவாலயம் பெருகி வளர்வதற்கு முருகன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்



# வாழ்த்துக்கூறுவோர்

# இணுவையூர் அறிவாலயம்
# திறப்பு விழா



முதுபெரும் புலவர்,
கலாபூஷணம்,
ஆசிரியர்,
**வை.க.சிற்றம்பலவனார்.**

அழகான திருமுருகன் கோயில் – அதன் முன்
அருஞ்சாலி நெல்வயற் குளக்கரை வீதி
நிழல் செய்யு நிலா தங்குஞ் சோலை – நடுவே
நிற்கின்ற இணுவைஅறி வாலயம் பாரீர்.

உளமார வெளிநா டிருந்தே – எம்மூர்
உயர்மக்கள் வாரி வழங்கும் உழைப்பால்
தனமா யெழுந்த இந் நிலையம் – இணுவைத்
திருவூர் ஒன்றியம்தனது சால்சிந்தை விளைவு

ஊரிலே நடுநிற்கும் நிலையம் – உயர்ந்த
உத்தமர் வாழ்ந்திடும் ஒப்பிலா நிலையம்
சீருடன் அமைந்த நன் னிலையம் – என்றும்
சிறந்திட வளர்ந்திடுஞ் செல்வநூல் நிலையம்

செந்தமிழ் ஆங்கிலம் வடநூல்~ நிறைந்த
சிறப்புடை மெய்ஞ்ஞான விஞ்ஞானி நூல்கள்
வந்திடும் பலதின சரிகள் ~ வடிவாம்
வாராந்த மாதாந்த சஞ்சிகை மலர்கள்

புலவர்கள் வாழ்ந்த, இவ் வூரில் ~ உயர்
புகழ்பூத்த கலாநிதி பண்டிதர் போற்றும்
தலையாய நல்லா சிரியர் ~ அரசின்
தனிப்பணி புரியுத்தி யோகத்த ரோடு

விவசாய வணிகமேன் மக்கள் ~ தங்கள்
விருந்தாக அமைந்திடு வித்தக நிலையம்
தவயாய நடையுடைப் பெண்கள் ~ வாழ்ந்து
தனிமழை பெய்விக்கும் தக்கவூர் நிலையம்

வாழ்கரும் மணித்திரு வாரூர் ~ வற்றா
வளந்தரும் புத்தூராய் மதித்திட வாழி
தாழ்விலா தெமதுநல் லூராய் ~ இணுவில்
தமிழ்கூறு மூலச்சிடைத் தங்கமாய் வாழி!

# அரும் பொருட்காட்சியகம் ஓர் ஆக்கபூர்வமான முன்னெடுப்பு



திரு. சிவகுருநாதன் திவாகரன்
பிரதேசச் செயலாளர்,
உடுவில்.

சிறப்பான பாரம்பரியமும், கலாசாரப் பெருமையும் மிக்க ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் பெருமைப்படத்தக்கோராக நாம் விளங்கி வருகிறோம். எம் முன்னோரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்வதற்கு நாம் பல ஆய்வுகளில் ஈடுபட நேர்ந்தது. இருப்பினும் முழுமையான அறிவை நாம் பெற்றிடவில்லை. இதற்குக் காரணம் எம் முன்னோரின் வாழ்க்கை அடையாளங்கள் எதிர் காலத்திற்காக உரிய முறையில் பேணப்படாமையே ஆகும்.

இத்தகைய தவறு எதிர் காலத்தில் உணரப்படாமல் இருப்பதற்காக ஓர் ஆக்கபூர்வமான முன்னெடுப்பு இணுவை வாழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது எமக்கென ஓர் அருங்காட்சியகத்தை ஆரம்பிக்கும் நன் முயற்சியாகக் கால்கோள் இடப்பட்டுள்ளது.

நவீன வாழ்க்கை முறைகளாலும் மண்ணைப்பிரிய நேர்ந்த அவலங்களாலும் மறக்கப்பட்டிருக்கும் எமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளின் பக்கங்களை எதிர்காலச் சந்ததி புரட்டிப் பார்ப்பதற்கு இம் முயற்சி பெரிதும் உறுதுணையாகும் என்பதில் ஐயமேதுமில்லை.

இவ்வரிய கைங்கரியத்தைச் சமூகப்பொறுப்புடன் நிறைவேற்றி முடிக்கும் ஆர்வத்துடன் திரு.ஆறு.திருமுருகன் அவர்களது தலைமையில் திரண்டு நிற்கும் அனைத்து ஆர்வலர்களுக்கும் என் பாராட்டும் நன்றியும் எம் எதிர்காலச் சந்ததியினரின் சார்பில் உரித்தாகுக.

# அறிவு நிலையமாக----



பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மனிதனுக்கு ஞானமும் அறிவும் இன்றியமையாதன. அறிவினை அவன் பள்ளியில் பெறலாம். பள்ளியிலே படிப்பவர்களும், பல்கலைக்கழகத்திலே படிப்பவர்களும் ஆசிரியர்களிடமிருந்து பெறும் அறிவோடு நூலகத்திலே பல நூல்களைப் படித்துப் பெறும் அறிவினையும் சேர்த்துக் கொள்ளலாம். நூலகம் அறிவை வளர்க்கும் நிலையம். வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும்.

உலகத்திலே எழுத்தறிவுடையோர் தொகை எங்கு கூடியதாக இருக்கின்றதோ அங்கு வாசிப்போர் தொகையும் கூடியதாக இருக்கும். வாசிப்புக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் இடம் நூல் நிலையமே ஆகும். யாழ்ப்பாணத்திலே ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே ஒரு பெரிய நூலகம் அமைந்திருந்தது பற்றி வரலாறு கூறுகின்றது. அந்த நூலகம் பிறநாட்டவர் வருகையால் அழிவுற்றது. இயல்பு வாழ்வுடைய மக்களும் வாசிப்புப் பழக்கத்தை மேற் கொண்டார்களானால் எமது சமூகம் அறிவுடைய சமூகமாக மாறிவிடக் கூடிய வாய்ப்புண்டு. அந்நிலையில் எம் சமூகச் சிக்கல்கள் பல தாமாகவே தீர்க்கப்பட்டுவிடும். இயல்பு வாழ்க்கை வாழும் மக்களும் வாசிப்பதற்குரிய இடம் நூல்நிலையமேயாகும். தேநீர் குடிப்பதற்கு ஒரு கடையைத் தேடிச் செல்வது போன்று வாசிப்பதற்காக நூல் நிலையத்தை நாடிச் செல்லும் நிலை உருவாக வேண்டும். அத்தகைய நிலையினை இன்று திறக்கப்படும் இந்த நூல் நிலையம் உருவாக்கும் என எண்ணலாம்.

இன்று திறக்கப்படும் இந்த நூல்நிலையத்துடன் ஒரு அரும்பொருட் காட்சியகமும் திறக்கப்படவுள்ளது. இன்று எம்முடைய பண்பாட்டுப் பொருட்களைப் பேணி வைக்க வேண்டிய பொறுப்பினை உடையவர்களாயுள்ளோம். ஜப்பான் போன்ற நாடுகளிலே ஒவ்வொரு மாவட்டத்திலும், பட்டினத்திலும் அரும்பொருளகங்கள் இருக்கின்றன. அவ்விடத்தினுடைய வரலாறு, அங்குள்ள சிறப்பான இடங்கள், அங்கு இடம் பெறும் விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பவற்றை ஆவணப்படுத்தி வைத்திருப்பார்கள். அவ்வூருக்குச் செல்பவர்கள் அதன் வரலாற்றை அங்குள்ள அரும்பொருளகத்தினூடாக அறிந்து கொள்ள முடியும். இன்று திறக்கப்படும் அரும் பொருளகமும் இத்தகைய பணியுடையதாக இருக்கவேண்டும். இச்சுற்றாடலிலுள்ள மக்கள் தம்மிடமுள்ள அரும்பொருள்களை இச்சாலையிலே சேர்ப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அவர்கள் தாம் கொடுக்கும் பொருட்கள் மிகப்பாதுகாப்பாகவும் பலர் பார்த்து மகிழவும் இச் சாலையிலே பேணி வைக்கப்படும் என்னும் நம்பிக்கையை ஊட்ட வேண்டும். இந்த நம்பிக்கை பலருடைய அரும் பொருள்களை இந்நூதனசாலை பெறுவதற்கு வழி வகுக்கும். அறிவை வளர்க்கும் இந்த நூலக, நூதனசாலை இவ்வூர் மக்களுக்குத் தன்னாலான பணியைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்த பெரியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

# அறிவு விநியோக நிலையமாக----



பேராசிரியர் சோ. சந்திரசேகரன்,
கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இணுவில் வாழ் மக்களின் மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு திறக்கப்படும் ஆய்வு நூலகம் அப்பகுதி மக்களின் கல்வி அறிவு மேம்பாடு தொடர்பான அவர்களுடைய அபிலாசைகளை நிறைவு செய்வதில் பெரு வெற்றிகாண வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். காலங்காலமாகச் சிறந்த கல்விமான்களை உருவாக்கிய புகழ் மிக்க இணுவிலில் இத்தகைய ஒரு நிறுவனம் அமைவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

பாடசாலை செல்லும் வயதெல்லைக்குட்பட்டோர் மட்டுமன்றிச் சகல வயதினரும் கல்வி பெறவேண்டும்; கல்வியானது வாழ்நாள் முழுவதும் நீடித்து நிலவவேண்டியதொன்று என்னும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்விலக்குகளை அடையும் வகையில் புதிய நிறுவன ஏற்பாடுகளும் நிறுவன மாற்றங்களும் இடம் பெற்று வரும் ஒரு காலகட்டத்தில் இத்தகைய ஒரு நூலக அமைப்பு உருவாகியிருப்பது பாராட்டப்படவேண்டிய ஒரு முயற்சியாகும்.

இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இவை போன்ற முறையான கல்வி நிறுவனங்களுக்கு அப்பால் உள்ளவர்களும் கல்வி பயிலவேண்டும்; இவற்றுக்கு அப்பாலும் கல்வி வாய்ப்புக்களை வழங்கக்கூடிய கல்வி நிறுவனங்களும் ஏற்பாடுகளும் செய்யப்படல் வேண்டும் என்பது நவீன கல்விச்சிந்தனை; இத்தகைய சிந்தனையே அறிவு – மைய, தகவல் – மைய நூற்றாண்டான உ௧ ஆம் நூற்றாண்டை வழி நடத்திச் செல்லும் கல்விச்சிந்தனை என்ற கருத்து மிகப்பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பின்புலத்தில் நோக்குமிடத்து இணுவிலில் அமைந்திருக்கும் நூல்நிலைய அமைப்பின் முக்கியத்துவம் விளங்கும். பாடசாலை முறைமைக்கு அப்பால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவு பெறும் வாய்ப்புக்களை வழங்கும் நூல்நிலையமானது, சமூக உறுப்பினர்கள் வாழ்க்கையில் நீடித்த கல்வியை வழங்கும் பிரதான அமைப்பாக விளங்கும். இணுவிலின் 'அறிவு விநியோக' நிலையமாகவும் பாடசாலைகள் போலன்றி நெகிழ்வான அனுமதி விதிகளைக் கொண்டதாகவும் இந்நிலையம் விளங்குதல் வேண்டும்.

மாணவர்கள், ஆசிரியர்களின் விரிவுரை, பாட நூல்கள் என்பவற்றை மட்டும் நம்பித் தமது அறிவுத்தேட்ட அபிலாசைகளை நிறைவு செய்துகொள்ள இயலாது என்பதால், நாட்டிலுள்ள 4000 பாடசாலைகளில் உலக வங்கியின் உதவியுடன் நூல்நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தேசியக் கல்விமுறையில் நூல்நிலையங்கள் பெற்றுவரும் இம்முக்கியத்துவம் இணுவிலின் புதிய ஆய்வு நூலகத்தின் முக்கியத்துவத்தை மேலும் சிறப்பிக்கின்றது.

இணுவில் நிலையம் ஏனைய சாதாரண நூல்நிலையங்கள் போலன்றி, இணுவிலின் பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிக்கும் பல அம்சங்களைக் கொண்டிருக்கும் என அறிகிறோம். ஆராய்ச்சிக்கான ஆதார நூல்களின் விசேட சேகரிப்பு, இணுவிலின் வரலாற்றுடன் தொடர்புடைய ஆதார ஏடுகள், அரும்பொருட்சாலை என்ற அம்சங்களில் இணுவில் நூலகம் ஒரு புதிய முன் மாதிரியாக (Model) அமையும் என்பது எமது எதிர்பார்ப்பு.

**மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்**
**தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு**

**நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற**
**நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு – மேலைத்**
**தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்**
**குலத்து அளவு ஆகும் குணம்**

**– ஔவையின் மூதுரை –**

# அறிவுப் பசிக்கொரு அறிவாலயம்----

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்,
உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம்.



சிவ பூமியாகிய இலங்கையிலே ஞான பூமியாகத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். யாழ்ப்பாணக்குடா நாட்டிலே உள்ள பல கிராமங்களிலே ஆத்மிக உணர்வு மிக்கவர்கள் செறிந்து வாழும் கிராமங்களில் ஒன்றாகத் திகழ்வது, இணுவிற் பதியாகும். பரமனைப் பாடும் பக்தர்கள், தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள், சித்தத்தைச் சிவன் பாலே வைத்த சித்த புருஷர்கள், தமிழ் மொழி ஆர்வம் மிக்க ஆய்வாளர்கள். ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் ஈடுபாடு மிக்க கலைஞர் பெருமக்கள், கல்வியாளர்கள் எனப் பலரும் செறிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்பு மிக்க கிராமம் இணுவில் திருவூர் ஆகும்.

அந்நியர்கள் நமது நாட்டில் கால் பதித்துப் பல சலுகைகளை வழங்கி மக்களை மதமாற்றம் செய்ய முற்பட்ட பொழுது அவர்களுடைய ஆசை வார்த்தைகளுக்கு மயங்காது தங்களுடைய சமயத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்து வளர்த்த உறுதிப்பாடு மிக்க மக்கள் இக் கிராமத்திலே வாழ்ந்து வருகின்றார்கள். பட்டங்கள், பதவிகள் பல கிடைத்தாலும் பரமனடி மறவாச் சிந்தையுடையவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். தமக்குக் கிடைத்த சிறப்புக்கள், செல்வங்கள் அனைத்தும் இறைவன் தந்த பிச்சை என்றே கருதுகின்றார்கள்.

இக் கிராமத்தின் பல பகுதிகளிலும் அருள் மிக்க பல ஆலயங்கள் காணப்படுகின்றன. "நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய இக்கிராம மக்களில் பலர் நாள் தோறும் ஆலய வழிபாடு செய்வதை நியமமாகக் கொண்டு வாழ்கின்றார்கள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய ஆலயங்களிலே பலன் எதுவும் கருதாமல் திருத்தொண்டினைச் செய்து வருகின்றார்கள். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கேற்பச் சமூக நன்மை கருதிப் பல நல்ல காரியங்களைக் கிராம மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செய்து வருகின்றார்கள்.

இணுவில் திருவூர் ஒன்றியத்தினர் "அறிவாலயம்" என்ற நூலகக் கட்டடத்தினை இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக அமைத்து இக்கிராம மக்களின் அறிவுப் பசியினைத் தீர்ப்பதற்கு உதவியுள்ளார்கள். இக் கிராமத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் எழுதிய நூல்கள், பயன்படுத்திய நூல்கள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பதுடன் அறிவியல் உலகிலே வெளிவரும் பல அரிய நூல்களையும் பெற்று அரியதொரு நூலகத்தை உருவாக்கியுள்ளார்கள்.

பழமையும் பெருமையும் மிக்க நமது தமிழர் சமுதாயத்திலே காலம் காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த கலைப் பொக்கிஷங்கள் பல திருடப்பட்டும், சொற்ப பணத்திற்கு விற்கப்பட்டும் வருகின்ற அவல நிலை இன்று நமது சமூகத்தில் காணப்படுகின்றது. திட்டமிட்ட அழிப்பு ஒரு புறம், திருடப்படும் அழிப்பு இன்னொரு புறமாக நடைபெறுகின்றது. அழிந்தவையும் திருடப்பட்டவையும் போக எஞ்சியுள்ள பொக்கிஷங்களையாவது பாதுகாத்து நமது அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க வேண்டிய பொறுப்பு தமிழர் சமுதாயத்தின் சமூகத் தலைமைகள் செய்ய வேண்டிய அத்தியாவசியப் பணி ஆகும். இப் பணியினை இவ்வறிவாலயத்திலே செய்வதற்கு இணுவில் திருவூர் ஒன்றியத்தினர் எடுக்கும் முயற்சியினை இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

இணுவில் ஒன்றியத்தினை நல்ல முறையில் வழி நடாத்துகின்ற சிவநெறித்தவமகன் ஆறு திருமுருகனின் சமய சமுதாயப் பணிகளை உள்ளம் திறந்து பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இணுவில் கிராமத்தில் இருந்து வீசுகின்ற ஞான ஒளி ஈழமணித் திருநாடு முழுவதும் பரவ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

**"அறிவு" தொடர்பான ஔவையின் வரிகள்**

எண்ணெழுத் திகழேல்.
இளமையில் கல்.
கேள்வி முயல்.
நூல் பல கல்.

ஆத்தி சூடி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
நிற்கக் கற்றல் சொற்திறம்பாமை.
நூன் முறை தெரிந்து சீலத்தொழுகு.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.
சான்றோரென்கை ஈன்றோர்க்கழகு.

கொன்றைவேந்தன்

# இணுவில் பொதுமக்களுக்கோர் அறிவுக்களஞ்சியம்



செ.சோதிப்பெருமாள்.
செயலாளர், தர்மகர்த்தா சபை,
இணுவில் கந்தசுவாமி கோவில்

இணுவில் கந்தசுவாமி கோவில் வாசலில் கந்தன் திருவூஞ்சல் மடம், சரித்திரப் பிரசித்தி பெற்ற மஞ்சம், சிற்பரதம் என்பவற்றின் கொட்டகைகளைப் பார்த்த வண்ணம் நிமிர்ந்து நிற்கின்றது, ஏராளம் ஏராளம் தொன்மையான ஏட்டுச்சுவடிகள் நூல்களையும் நவீன கலை விஞ்ஞான தொழில் நுட்ப நூல்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் அறிவாலயமும், தமிழரின் காலத்தாற் கழிந்து போன பண்பாட்டுக் கருவூலங்களின் அடையாளச் சின்னங்களான தொல்பொருட்கள் பேணிக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தொல்பொருட்காட்சியகமும் உள்ளடங்கிய பெரிய கட்டடம்.

ஒரு நூலகத்தை நிறுவுவதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகளை நிறுவுவதைத் தடுக்கலாம் என்றார் சுவாமி விவேகானந்தர். ஒரு இறையாலயத்தை நிறுவுவதற்கு முன்பாக நிறுவ வேண்டியது ஓர் அறிவுக்கூடம் என்றார் வரகவி சுப்பிரமணிய பாரதியார். இந்த உண்மையை உணர்ந்து கடந்த நூற்றாண்டில் நம்மிணுவை மக்கள் இணுவைப் பரமானந்தவல்லி வாசிகசாலையுடன் ஒரு நூலகத்தையும் இணுவைச் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்துடன் ஒரு நூலகத்தையும் இணுவை மஞ்சத்தடி முருகனாலயச் சூழலில் ஒரு நூலகத்தையும், இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரடியில் (கணேச நூலகத்தையும் இணுவை (முருகன் சனசமூக நிலைய நூலகத்தையும் இணுவைக்கந்தன் இளந்தொண்டர் சபை நூலகத்தையும் நிறுவி மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் சமய தமிழ்ப்பண்பாட்டு விருத்திப்பணியாற்றி வந்தன. ஆனால் அண்மைய தசாப்தங்களில் இம் மண்ணில் ஏற்பட்ட யுத்தப் பயங்கரம், இடப்பெயர்வுகள் காரணமாக இந்நூலகங்கள் கைவிடப்பட்டும் சீரழிக்கப்பட்டும் சிதைந்து விட்டன. ஆயினும் மஞ்சத்தடி முருகன் ஆலயச்சூழலிலும் இணுவைப் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயச் சூழலிலும் நூலகங்கள் அண்மை நாட்களில் மீளமைக்கப்பட்டு அறிவுப்பணி ஆற்றி வருகின்றன.

புலம் பெயர் நாடுகளில் வாழும் இணுவைத்தமிழிளைஞர்களால் சில வருடங்களின் முன்பு திட்டமிடப்பட்ட இணுவைப் பொது அறிவாலயமும் தொல்பொருட் காட்சியகமும் செஞ்சொற் செல்வர், ஆறுதிருமுகனின் வழிகாட்டலில்

இயங்கும் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் அயராமுயற்சியாலும் சங்கமிருந்து தமிழாய்ந்த தண்டமிழ் முருகனின் திருவருட்சித்தத்தாலும் இன்று பூர்த்தி நிலையை எய்தியுள்ளன.

ஒரு காலத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் நிறுவிய தமிழ்ச்சங்கம் இயங்கிவந்த சூழலாக ஆதாரபூர்வமாக அறிஞர்களாற் கொள்ளப்படும் இணுவிற் கந்தசுவாமி கோவிற் சூழலில் – இணுவைமக்கள் எல்லாத் திக்குகளிலுமிருந்து வந்து கூடும் இணுவைநகரின் இருதயப்பகுதியான கந்தசுவாமி கோவிற்சூழலில் இணுவைப்பொதுமக்கள் அனைவரதும் அறிவுக் களஞ்சியங்களாக விளங்கும் இந்த அறிவாலயமும் அரும்பொருட்காட்சியகமும் அமைவதையிட்டு இணுவில் கந்தசுவாமி கோவில் நிர்வாகம் மகிழ்ச்சியடைகிறது, பெருமைப்படுகிறது.

யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் காலத்தில் நிலவி, போர்த்துக்கேய அந்நியரால் அழிக்கப்பட்டு மீண்டும் பூத்தெழுந்த கந்தசுவாமி ஆலயம் பற்றிப் பண்டிருந்த புலவர் பலர் பாடிய, இணுவையாற்றுப்படை, இணுவைக்கந்தன் பதிகம், இணுவைக்கந்தன் பத்திரசக் கீர்த்தனைகள், இணுவை அந்தாதி போன்ற பிரபந்தங்கள் அழிந்தொழிந்தது போல அண்மைக்காலமாக இணுவைத்தலங்கள் மீது பாடப்பட்டுவரும் பக்தி நூல்களும் அழிந்து விடாமற் பாதுகாக்கும் பணியை இந்த அறிவாலயம் புரிந்து வரவேண்டும் என இணுவைக்கந்தன் ஆலயநிர்வாகம் வாழ்த்துகின்றது.

**"அறிவு"க் குறள்கள் சில**

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

எப்பொரு வாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு

நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று

# சமூக மேம்பாட்டின் ஆதார மையம்---



திரு. ச. தனபாலசிங்கம்
பிரதம நூலகர்.
யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்.

பொது நூலகம் உருவாகிறதென்றால் அப்பிரதேசத்தின் தகவல், கலை கலாசார விழுமியங்கள் பாதுகாக்கப்படுவது உறுதியாகிறது. பொது நூலகமானது சமூகத்தின் அடிமட்டத்திலிருக்கும் மனிதனிலிருந்து அதியுயர்ந்த அறிவுள்ள மனிதன் வரைக்கும் சேவை செய்ய வேண்டிய கடப்பாடுடையது. அந்நூலகமானது பிரதேச மக்களுடைய கல்வி, அறிவு, ஆற்றல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்ய வேண்டிய பொறுப்புள்ள நிறுவனமாகும். நவீன நாகரிகத்தை நோக்கி முன்னேறும் எமது சமூதாயத்தின் கலாசார பாரம்பரியங்கள் மாற்றமடைகின்றன. அவ்வாறு மாறும் போது அடிப்படைக் கலாசாரத் தகவல்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் பொது நூலகத்தையே சாரும்..

பொது நூலகமானது மக்கள் தமது பொழுது போக்கு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிப்பதற்குத் தேவையான நூல்களையும் அறிவேடுகளையும் வழங்கும் நிறுவனமாக இருக்க வேண்டும். சிறார்கள் தமது பொன்னான நேரத்தைக் கல்வியை மேம்படுத்த உதவும் வகையில் நூலகச் செயற்பாடுகள் அமைய வேண்டும். பிரதேச நூலகம் தனியே ஏட்டுக் கல்வியை வளர்க்கும் நிறுவனமாக இல்லாது தகவல் பரிவர்த்தனை நிறுவனமாக மாறும் போதுதான் பிரதேசம் சமூக பொருளாதார அபிவிருத்தியில் வளர்ச்சியடைய வாய்ப்புக்கள் ஏற்படும்.

நகரங்கள் வளர்ச்சியடைவதற்குக் காரணம் கிராமங்களே. கிராமங்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைய வேண்டுமெனின் அதற்கான அறிவை ஊட்ட வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு சமூக நிறுவனம் பொது நூலகமேயாகும். அங்கு பிரதேச மக்கள் எதுவிதக் கட்டுப்பாடுமின்றி அறிவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வசதிகள் ஏற்படுத்தவேண்டும். இதற்காகத் தேவைப்படும் நிதியை ஏற்பாடு செய்வதன் மூலம் நூலகத்தின் நோக்கத்தை நிறைவேற்றலாம்.

அறிவாலயம் என்ற பெயரில் உருவாகும் இணுவில் பொது நூலகமும் அவ்வாறான சமூக அபிவிருத்தி, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கும் நிறுவனமாகத் தழைத்தோங்குமென நம்புகின்றோம். இந்நூலகத்தை உருவாக்கும் பெரியோர்கள் நூலகம் தொடர்ந்தும் வளர ஆக்கபூர்வமாக உழைப்பார்களென நம்புவோமாக. இந்நூலகம் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எமது வாழ்த்துக்கள்.



# வாழ்க அறிவாலயம்! வளர்க செந்தமிழ்!

செந்தமிழின் ஆர்வமதும் செழுங்கலையின்
ஆர்வமதும் செகத்தே கொண்ட
சிந்தை நலம் மிக்கோராம் இணுவையூர்ப்
பதிவாழும் சிறப்பின்மிக்கோர்
சந்ததமும் வளர்ந்தோங்கும் நூல்நிலையம்
அமைத்திட்டார். தமிழ் நெஞ்சத்தோர்
எந்த இடத்திருந்தாலும் நூலகத்தின்
தொடர்பின்றி இருத்தல் ஆமோ?

சங்கத்துத்துத் தமிழ் நூலும் தகுதியினால்
மிக்குயர்ந்த நூலே ஆய
தங்கநிகர் திருக்குறளும் காப்பியங்கள்
அவைதாமும் தொண்டர் வாழ்வை
இங்கருளும் புராணமுடன் இன்னும் பல்
நூல்களுமே கொண்டதாகி
எங்கட்கிங் கொளிகொட்ட எழுந்திருக்கும்
நூலகமாம் சுடரேவாழி.

பார்போற்றும் பிறநாட்டு நூல் பலவும்
குறைவின்றிக் கொண்டே மற்றும்
சீர் போற்றும் நாவலராம் பெருமகனார்.
அருளியவாம் நூல்கள் கொண்டும்
ஏர்போற்றம் இணுவையூர்ப் பதிக் கொளிசெய்
விளக்கம் என யாரும் போற்ற
நேரின்றி எப்போதும் புகழ்விளைத்து
நூலகமே இனிதின் வாழி.

- புலவர். ம. பார்வதிநாதசிவம் -

# பொருளடக்கம்


1. நுழைபுலம் / **குழந்தை ம. சண்முகலிங்கம்** 1–5
2. நூலகத்தால் ஏது பயன்.../ **கவிஞர் இ. முருகையன்** 6–7
3. வீடு கோயில், பாடசாலை, நூலகம் / **பேராசிரியர் நந்தி** 8–10
4. தமிழ்ப் பாரம்பரியத்தில் கல்வி: ஒரு மறு வாசிப்பு / **பேராசிரியர் சபா ஜெயராசா** 12–5
5. மெச்சத்தக்க முன்னுதாரணம் / **திரு. ஏ.ஜே. கனகரட்னா** 16–7
6. நூல் வரவுப் பதிவேடு – விதிமுறைகள் 18–9
7. நூலகமும் கல்வியும்: அன்றும் இன்றும் /**பேராசிரியர் வீ. சிவசாமி** 20–5
8. மாணவி ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள் 26–7
9. கல்விக்குத் துணையாக... / **சிற்பி** 28–9
10. புழக்கப்பண்பாட்டு அருங்காட்சியகம் / **பேராசிரியர் க. சிவத்தம்பி** 30–2
11. இணுவில் மத்திய நூலகமும் அரும்பொருட்காட்சியகமும் / **திரு. செல்லப்பா நடராசா** 34–40
12. எதைக் கொடுக்கப் போகிறோம் / **திரு. செ. பத்மநாதன்** 42–3
13. நூல் விரோதிகள் / **பா.செல்வரஞ்சினி** 44–6
14. சீரிணுவைத் திருவூர்க்கோர் அருங்காட்சியகம் / **திரு. மூ. சிவலிங்கம்.** 47–50
15. இணுவில் அறிவாலயம்: காலத்தின் தேவை **பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்** 52–3
16. இணுவில் :அதன் கோவில் பண்பாடு குறித்த ஒரு பிராரம்ப உசாவல் / **கலாநிதி. வல்லிபுரம் மகேஸ்வரன்** 56–9
17. நூலகம் ஓர் ஊரின் செல்வம் / **திரு.ம.பா. மகாலிங்கசிவம்** 60
18. புத்தகங்களே சிறந்த தோழர்கள் / **மதுரைப் பண்டிதர் க. சச்சிதானந்தம்** 61–3
19. அறிவாலயம் வழங்கும் அறிவுக் கருவூலங்கள் / **அருளானந்தம் ஸ்ரீகாந்தலக்சுமி** 65–77

20. மாணவர் ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள் 79 – 80

21. நான் சந்தித்த வாசகர்: நேசமிகு சில நினைவுகள்/
**திரு. க. சௌந்தரராஜன்** 81 – 5

22. அறிவுப் பொக்கிஷம் / **திரு.த. சிவபாதம்** 86 – 7

23. நூலகம் ஒரு பல்கலைக்கழகம் / **தமிழவேள் இ. கந்தசாமி** 88 – 91

24. பொது நூலகங்கள் முகாமைத்துவ நோக்கும் போக்கும்/
**திரு. ச.தனபால சிங்கம்** 92 – 7

25. இல்லத்தரசி ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள் 98 – 9

26. இணுவைத் திருவூர் அறிவாலயம்./ **திருமதி வா. பரமேஸ்வரன்** 101 – 3

27. அறிவு வழங்கும் அமுத சுரபிகள் /
**சைவப்புலவர். ச. முகுந்தன்** 104 – 5

28. சீலம் பேணும் உள்ளம் தெய்வம் தேடி வருகின்றது /
**திரு. குமாரசுவாமி .சண்முகநாதன்** 106 – 10

29. தகவல் யுகத்தின் இணையற்ற கண்டுபிடிப்பு/ **நித்திலன்** 111 – 4

30. நாம் இதைச் செய்வோமா? / **திரு. மு. சின்னராசா** 115 – 9

31. இணுவையூரில் ஓர் அறிவாலயம் /
**சிவநெறிச் செம்மல் வை. அநவரதவிநாயகமூர்த்தி** 120 – 3

32. வருமுன் காப்போம் / **திருமதி மைதிலி விசாகரூபன்** 124 – 7

33. நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம் / **பாவெல் கர்ச்சாகின்** 128 – 30

34. வாசகர் சேவையில் தனித்துவம் பெறும் பாடசாலை நூலகம் 131 – 3

35. வாழ்வோர் வாழ வளமளிக்கும் நூலகம்/
**பண்டிதை த.மகாலிங்கம்** 134 – 8

36. இணையம் என்னும் நூலகம்: உள்ளும் புறமும் / **தி. சேந்தன்** 139 – 43

37. நடமாடும் நூலகம் 144 – 9

38. இணுவை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் பெண்கள் கல்லூரி
நூலகம் / **திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன்** 150 – 2

39. தந்தை ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள் 153 – 4

40. அறிவின் திறவுகோல் / **திருமதி. இ. கருணானந்தராஜா** 155 – 62

41. தூயி தசமப் பகுப்புத்திட்டம் 22ம் பதிப்பு 163 – 72


நுழைபுலத்துக்கான
நுழைவாயில்

# நுழைபுலம்

**குழந்தை ம. சண்முகலிங்கம்**

நூல் நுழைந்து ஆராய்ந்து கற்ற புலமையை "நுழைபுலம்" என்பர். எந்நாளும் நாம் நுழைவதற்குகந்த புலமாக நூலகம் அமையவேண்டும். அமைதியும், அழகும், தூய்மையும் நிறைந்த இடமாக நூலகம் இருப்பது அவசியம். சத்தமும், சந்தடியும், ஆரவாரமும் அறிவு நுகர்ச்சிக்கு உகந்த இடமாக அமைய முடியாது. ஆரவாரமற்ற ஆலயம் போல, மன ஒருமைக்கான தபோவனம் போல அறிவாலயமாம் நூலகம் அமைய வேண்டும். இத்தகைய பௌதீகச்சூழலைக் கொண்டமைந்த நூலகத்தில்தான் நுண்மாண் நுழைபுலம் சாத்தியமாகும். புறச் சூழலே அகச் சூழலுக்கான நுழைவாயில். நுழைவாயில் சிறப்புற அமைந்து விடுமாயின் நுழைபுலம் சாத்தியமாகிவிடும். அத்தகைய நிலையில் நூலகம் குருந்த மர நிழலாகிவிடும். சிவனே எனச் சும்மா இருக்கும் நூல்கள், சிவசொருப மெடுத்துத் தம்மை நாடிவரும் பக்குவான்மாக்களுக்கு நயனதிட்சை நல்கி ஞான அறிவினைக் கொடுக்கும்.

வாசிக்கப்படாத நூல்களைக் கொண்ட நூலகத்தால் பயனேதுமில்லை. வாசிப்பதற்காகவே நூல்கள் ஆக்கப்படுகின்றன. உண்பதற்காக உணவு, உடுப்பதற்காக உடை, உறைவதற்காக உறையுள் அமைவது போல, வாசிப்பதற்காகவே நூல்கள் உள்ளன. உணவு, உடை, உறையுள் என்பன எமக்கு எத்துணை அவசியமாகின்றனவோ, அத்துணை அவசியமானவையாக நூல்களும் உள்ளன என்பதைச் சிறுவர் முதல் வளர்ந்தவர் வரை உணரவேண்டும்.



"இளமையிற் கல்" என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒன்று. எனவே, நூல்களையும் நூலகங்களையும் சிறுவயது முதலே சிறுவருக்கு அறிமுகப்படுத்தி விடுவது நல்லது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரையும்" நின்று நிலைக்குமாதலால், சிறுபராயப் புத்தகப் பழக்கம், "இளமையிற்கல்" என ஆரம்பித்துச், "சாந்துணையுங் கற்றல்" என்பது வரை தொடரும் என உறுதியாக நம்பலாம். இந்த நம்பிக்கைக்கு நிழல் தரும் விருட்சமாக அமைவது நூலகமாகும். ஒவ்வொரு குடும்பமும் தத்தம் வசதிக்கேற்பத் தத்தமது இல்லத்தில் ஒரு சிறு நூலகத்தையேனும் அமைத்துக் கொள்வது நல்லது. தாய் தந்தையர் சிறுவருக்கென ஒரு சிறு

நூலகத்தையும் இல்லங்களில், அமைத்துக் கொடுக்கலாம். இதன் மூலம் நூல்களை வாசிக்கும் பழக்கத்தையும், நூல்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பழக்கத்தையும், அவற்றைச் சேகரிக்கும் விருப்பத்தையும், நூல்களை நேசிக்கும் பண்பையும் ஏற்படுத்த முடியும்.

அத்தோடு நூலகங்களுக்குச் செல்லும் பழக்கத்தையும் சிறுவர் மத்தியில் ஏற்படுத்துவது நல்லது. நூல்களை எப்படி வாசிப்பது என்பது பற்றி எமது கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும், நூல் நிலையங்களும் பிள்ளைகளுக்குச் சொல்லித்தரும் மரபு எங்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலைத் தேசங்களில் பல்கலைக்கழகங்கள் வரை இது சொல்லித்தரப்படுகிறது. பிள்ளைகள் சுயமாக நூல்களைக் கற்று, தம்மிடத்து முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கண்டறிய நாம் எந்த அளவுக்கு உதவுகிறோம் என்பதையும் இங்கு சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்.

பரீட்சையில் வரக்கூடிய வினாக்களுக்கான விடைகளைச் சொல்லிக் கொடுக்கும் நிறுவனங்களாகவே இன்றைய பாடசாலைகளும், தனியார் கல்வி நிறுவனங்களும் அமைந்து விட்டன என்று, வெளிநாடுகளிலிருந்து வரும் கல்வியாளர்கள் கூறுகின்றனர். 'வினாக்களுக்கான விடைகள்' எனச் சொல்லித்தரப்பட்டவற்றை எழுதுவதோடு மட்டும் நில்லாது, விடைகளின் விளைவுகளையும் ஆராய்கின்றவர்களாக மாணவர்கள் மாறவேண்டும் என வெளிநாட்டில் ஆசிரியராக இருக்கின்ற எம்மவர் ஒருவர் கூறியிருந்ததை நாம் கவனத்தில் கொள்வது நல்லது. எமது மாணவர் மத்தியில் சுயகற்றலை ஊக்குவிப்பதற்கு இது எமக்குத் துணை புரியும்.

முக்கியமான நூலகங்கள் இன்று நூல்களை மட்டும் வைத்திருப்பதில்லை. தகவல் தொழில் நுட்பம் இன்று மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளதால், உலகின் நூல்கள் யாவற்றையும் ஒரு கணினிப் பெட்டியில் பார்த்து வாசித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அத்தோடு, வானொலி, தொலைக்காட்சி, ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள் என்பனவும் நூலகங்களின் அறிவுப் பொக்கிஷங்களாக இருந்து வருகின்றன. அத்தோடு, முக்கியமான நூலகங்கள் பலவற்றிலும் கேட்போர் கூடங்களும், கலந்துரையாடல் மண்டபங்களும் உள்ளன. இவற்றில் துறைசார் அறிஞர்களது உரைகளும், ஆய்வரங்குகளும், கருத்தரங்குகளும் இடம் பெறுவதுண்டு. கற்றறிந்த அறிஞர்களை மட்டுமல்லாது, வாழ்வில் பட்டறிந்த முதியவர்களையும் இங்கு பயன்படுத்திக் கொள்வது நல்லது. பாட்டன் பாட்டி மடியிலிருந்து, நிலாவொளியில் கதை கேட்டிருந்த பேரன் பேத்திகளுக்கு எமது தொன்மங்கள், ஊடுகடத்தப்பட்டு வந்ததை நாம் அறிவோம். இதனை உணர்ந்த ஆபிரிக்கப் பண்பாடு, முதியவர் ஒவ்வொருவரையும் ஒரு நூல் நிலையமாகக் கருதியது. "முதியவர் ஒருவரின் சிதையில் நூல்நிலையமொன்று எரிகிறது" என ஆபிரிக்கப்பண்பாட்டில் வந்த ஒருவர் கூறினார்.

கேடில் விழுச் செல்வத்தைத் தம்மகத்தே கொண்டவை தான் நூலகங்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரிய வேண்டும். அதனாற்தான் நூலகங்களின் பௌதீகச் சூழலான அதன் முகப்புத்தோற்றமும் அழகுற இருக்க வேண்டுமென முன்னர் கூறினோம்.

நுண்மையும் மாட்சிமையும் உடையவராக மனிதரை ஆக்கும் நூலகம் மெய்யறிவின் பீடமெனக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும். சமூகமொன்றைப் பொறுத்தவரையில் நூலகம் எத்துணை முக்கியமானது என்பது உணரப்பட்டதன் காரணமாகவே யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. ஒரு இனத்தை அழிக்கவேண்டுமானால் முதலில் அதன் நூலகங்களை அழித்து விடவேண்டும்.

இந்தவகையில் மெய்யறிவுப் பயிற்சியினைப் பெறுவதற்கு வாசிப்புப் பழக்கம் என்பதும் பெருந்துணையாக நிற்கும் என்பதை நாம் உணரவேண்டும். வாசித்தவற்றை அப்படியே திரும்ப ஒப்புவிக்காது, "சிறப்பு என்னும் செம்பொருள்" கண்டு உரைப்பதே அறிவெனப்படும். ஐயம் திரிபின்றிக் கற்றல் என்பதும் "செம்பொருளைக்" காண்பதனையே இலக்காகக் கொண்டுள்ளது.

கடலைப் போன்றது நூலகம். மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம். சிப்பி, சங்கு, சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம். குளிப்போர் குளிக்கலாம். காற்று வாங்க விரும்புவோர் காற்று வாங்கலாம். மீனினங்களைப் பிடிக்க விரும்புவோர் அவற்றைப் பிடிக்கலாம். வெறுமனே கரையில் இருந்து கடல் அலையைப் பார்த்து மகிழ விரும்புவோர் அவ்வாறு செய்யலாம். முத்தெடுக்க விரும்புவோர் முத்தெடுக்கலாம். செல்கின்றவரது நோக்கம் எதுவோ அதனை அவர் நிறை வேற்றிக் கொள்ளலாம்.

இன்று, "நூல்கள்" எனக் கூறுமிடத்து அறிவினைப் பெற உதவும் அனைத்துச் சாதனங்களையும் கருத்திற் கொள்வது தவறாகாது. இந்தப் பரந்து பட்ட ஊடகங்கள் யாவும் மெய்ப்பொருள் காண்பதற்கு, அதாவது, மெய்யறிதலுக்குத் துணை புரிவனவாக உள்ளன. மெய்யறிதல் என்பது மெய்ஞ்ஞானத்துக்கு மட்டுமன்றி விஞ்ஞானத்துக்கும் உதவுகின்றன. உண்மையை அறிதல் என்பதே அறிவுத்தேடலின் இலக்காக அமையும். எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது குறள் தரும் அறிவு. கல்வி, கேள்வி மூலம் ஒருவர் அறிந்து கொண்டவற்றைத் தனித்திருந்து ஆராய்ந்து ஒரு தெளிந்த முடிவுக்கு வருதலே மெய்யறிவு எனப்படும்.

கற்கக் கற்க அறிவு ஊறும் என்றே கூறப்படுகிறது. "கற்றனைத்து ஊறும் அறிவு" என்பதுதான் வள்ளுவம். "ஊறும்" என்று வள்ளுவர் கூறியதன் செம்பொருளை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். நூல்கள் வாயிலாகவும் கேள்வி வாயிலாகவும் நாம் பலவற்றையும் அறிந்து கொள்கிறோம். அவ்வாறு அறிந்து கொள்வதோடு நாம் நின்று கொண்டால், எம்மால் ஒரு தகவற் களஞ்சியமாக மட்டுமே இருக்கமுடியும். அறிந்து கொண்டவற்றை ஆய்வுக்குட்படுத்தி ஆராய்ந்து செல்லும் போதுதான் "அறிவு" எம்முள்ளிருந்து ஊறத்தொடங்குகிறது. கல்லுதல் என்ற பொருள் கொண்ட கல்வியின் நோக்கமும் இதுவே. தாம் இன்புறுவது, உலகு இன்புறக்கண்டு, காமுறும் கற்றறிந்தோரே, "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

எனும் உயரிய நோக்குடன் நூல்களைப் படைத்துள்ளனர். கொடுக்கக் குறையாது, கொடுக்கக் கொடுக்கப் பெருகும் கல்விச் செல்வத்தைக் கற்றறிந்தோர் நூல்களாக எமக்குத் தந்துள்ளனர். அவற்றை நூலகங்களில் சேர்த்து வைப்பதும், பாதுகாப்பதும், பயனுள்ள வகையில் ஆகக்கூடிய அளவில் பயன்படுத்திக் கொள்வதும் எமது கடமையாகும். அறிவுடைய சமூகமொன்றை எவராலும் வெற்றி கொள்ள முடியாது. புதிதாகத் தகவல்களை மட்டும் ஊடுகடத்தும் ஒரு சமூகத்தைச் சுலபமாகத் தோற்கடித்து விட முடியும்.

நூலகமொன்றுக்குள் செல்லும் போது நாம் ஏதேனுமொரு பிரச்சினையோடு செல்லவேண்டும். அதாவது ஓர் உண்மையைக் கண்டறிவதற்கான தேடலோடு செல்ல வேண்டும். அத்தோடு கடலைப் போன்றது நூலகம். மணலை விரும்புவோர் மணலை எடுக்கலாம் சிப்பி, சங்கு, சோகிகளைப் பொறுக்குவோர் அவற்றைப் பொறுக்கலாம்; குளிப்போர் குளிக்கலாம்; காற்று வாங்க விரும்புவோர் காற்று வாங்கலாம்; மீனினங்களைப் பிடிக்க விரும்புவோர் அவற்றைப் பிடிக்கலாம்; வெறுமனே கரையில் இருந்து கடல் அலையைப் பார்த்து மகிழ விரும்புவோர் அவ்வாறு செய்யலாம்; முத்தெடுக்க விரும்புவோர் முத்தெடுக்கலாம்; செல்கின்றவரது நோக்கம் எதுவோ அதனை அவர் நிறை வேற்றிக் கொள்ளலாம்.

"குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றவாறு, எதுவித நோக்குமில்லாது நூல்களை வாசிப்பதில் பயனில்லை நோக்கத்தோடு வாசிக்கும் போதுதான், எமக்கு வேண்டியவற்றை நூல் எங்களுக்குக் காட்டும். நூறு நூறு விடயங்களை அது வெளிக்காட்டி நிற்கும். "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது புத்தகங்களுக்கும் பொருந்தும். இதனாற்தான், நூலகத்திற்குச் செல்லும் போது ஏதேனுமொரு பிரச்சினையோடு, அதாவது, யாதாயினுமொரு அறிவுத் தேவையோடு செல்லவேண்டு மென்பார்கள்.

அதே போன்று "நான் நிறையக் கற்றுவிட்டேன், எனக்கு எல்லாமே தெரியும்" என்ற நினைப்பு எவருக்கேனும், எப்போதாயினும் வருமாயின், அவர்கள் உடனடியாகவே ஒரு நூலகத்திற்குச் செல்வது நல்லதென்பார்கள். காரணம், அவர் அங்குள்ள நூலெதையும் படிக்கத் தேவையில்லை, அவற்றை அவர் ஒருமுறை கண்ணாரக் கண்டாலே போதும். "இத்தனை நூல்கள் இங்கே இருக்கின்றனவே! இதைவிட எத்தனை நூல்கள் உலகெங்கும் இருக்கும்! நான் கற்றது கைம்மண் அளவும் ஆகாதே! இரு விரல் நுனியிடைப் பொடியளவும் இருக்காதே!" எனும் எண்ணம் அவருள் எழ அவரது அகந்தை அடங்கும்.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்பது தமிழ்மறை. பிறர் சொல்லக் கேட்டு அறியும் பண்பும் மிக முக்கியமானதாகும். ஓசை ஒலியெல்லாம் ஆனவனாகவே இறைவனையும் நாம் நோக்குகிறோம். "ஓம்" எனும் ஒலியுள் மெய்ஞ்ஞானமும் மெய்யடக்கமும், அடக்கம். வரிவடிவத்தினுள் கிடக்கும் சொற்களின் உயிரொலிப்பை ஒலி உச்சரிப்பினூடுதான் நாம் உணர்ந்தறிகிறோம். "நமச்சிவாய" எனும் திருமந்திரங்கூட, "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்," என்பது தான் எமக்கான அறிவுரை. எனவே தான் சிறுவயதில் பிள்ளை எதையும் உரத்து

வாசிக்க வேண்டுமென்பார்கள். எழுத்துக்களுக்குள் இருக்கும் ஒலிகளை, ஒலி விகற்பங்களை, உணர்வுச் செறிவுகளை, தொனிகளை, தொனிப் பொருள்களைப் பேச்சினூடே வரும் ஒலி ஏற்ற இறக்கங்கள் மூலம் சரியான முறையில் வெளிப்படுத்த அறிந்து கொள்வதற்கு உரத்த வாசிப்பு உதவும். உரத்த வாசிப்பினூடே மொழியின் ஒலியழகைப் பிள்ளை உச்சரித்தறிந்த பின்னர், மௌன வாசிப்பிற்குச் செல்வது நல்லது. கருத்தூன்றிய நிட்டையில் சிவத்தோடு அமைதியிற் கலத்தல் போன்று, மௌன வாசிப்பினூடே ஆழ்ந்த கற்றலுக்குப் பிள்ளை செல்ல வேண்டும். அந்த மௌனத்துள் இதய நாதமும் மொழியின் நாதமும் சங்கமித்துக் கிடக்கும். அங்கு ஆழ்ந்த ஞானத்துக்கான அகச் சூழல் நிலவும்.

அறிவு நிறைந்த புலமையாளர்கள் எப்போதுமே உவப்பக் கூடி உள்ளப் பிரிவர் என ஈரடிப்பா கூறும். நூல் நிலையத்துக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு மனோநிலை மேற்கண்டவாறு இருப்பது நல்லது. மிகவும் மகிழ்ச்சியோடு நூலகத்திற்குச் சென்று, ஆனந்தமாகக் கற்று மீண்டும் மீண்டும் வருவேன் என்ற பெருவிருப்போடு பிள்ளை நூலகத்தை வீட்டு வீடு செல்லும் மனநிலை உருவாக்கப்பட வேண்டும். அத்தகையதோர் மனநிலை தோன்றுமிடத்து, கல்வி இனிக்கும், கலந்துரையாடல் இன்பம் பயக்கும். நூலகம் தன் பிறவிப்பயனை எய்தும்.

ஆலயங்கள் யாவற்றிலும் நூலகங்கள் அமைப்போமா? எமது தொன்மையின் அடையாளங்களாகவுள்ள பழமையான கோயில்களை அழித்துத் தரைமட்டமாக்கிப் புதுக்கோயில்களை அமைத்து வரும் நாம், இதைச் செய்வோமா? நான் நினைக்கவில்லை!

"உலகத்து மக்கள் எத்தனையோ எண்ணுகிறார்கள், சொல்கிறார்கள், செய்கிறார்கள். அதில் பெரும்பகுதி கவனிக்கப்படாமல் போகின்றது. கவனித்தவைகளில் ஒருபகுதி நினைவில் நிற்கின்றது. நினைவில் நிற்பவைகளில் ஒரு பகுதி பதிந்து வைக்கப்படுகிறது. பதிந்து வைத்தவைகளில் ஒரு பகுதி எஞ்சியிருக்கிறது. எஞ்சியுள்ளவற்றில் ஒரு பகுதியே ஆராய்ச்சியாளருக்குத் தெரிகின்றது. தெரிந்தவைகளில் ஒரு பகுதியே முறையாக எடுத்துச் செல்லப்படுகின்றது. அதாவது நமக்குக் கிடைத்துள்ள தகவல்கள் மிகமிகச் சுருக்கமானவை"

- வாயி கோட்சாக் -



## நூலகத்தால் என்ன பயன்? நோக்கம் என்ன?
## நுண்ணறிவைத் தீட்ட அது உதவும் அன்றோ!

காலை என்றும் மாலை என்றும்
பின்னர் தோன்றும்
கறுப்பிருட்டுப் பொழுதென்றும்
காலம் -
ஓயா வேகமுடன் சுழலுகையில்
அந்த வேகம் விட்டுச் செல்கின்ற சுவட்டுக்கெல்லாம்,
ஏதும் உண்டோ அர்த்தம்? இது என்ன
அர்த்தம்?




இவைகளை நாம் யோசித்துப்
பார்க்கும் போதில் ....
எண்ணங்கள் எத்தனையோ
எங்கள் நெஞ்சாம் இருட்டறையில்
மின்னுவதை உணருகின்றோம்.

உண்மைகளின் பிள்ளைகளாய்
உயிரும் பெற்றே,
உலகத்தை ஆட்சி செய்யும்
வலிமை வாய்ந்த எண்ணங்கள் பலவற்றுள்
அருமையான இயல்புடைய அவற்றை எல்லாம்
திரட்டிக் கூட்டி, வண்ணங்கள் பல தீட்டி வைத்தால்,
எங்கள் மன - அறைகள் நிரம்பாவோ? நிரம்பும் தானே?
மனவறைகள் தோறும் யாம் மாற்றுயர்ந்த மாணிக்கம் வயிரமணி,
மற்றும் உள்ள விலை உயர்ந்த இரத்தினங்கள் சேகரித்தால்,
மேம்பட்டு விளங்காதோ எங்கள் செல்வம்?

தினசரிகள், சஞ்சிகைகள், கவிதைக்கோவை,

திருநெறிய பாசுரங்கள் என்றவாறாய்....

புனைகதைகள், காவியங்கள், நாவல்கள்,

பாட்டு, பொருள் பொதிந்த சங்கீதம் என்றவாறாய் .....

திரவியங்கள் திரட்டி வைக்கும்

ஞானசோதித் திருக்கோயில் தான்,

நல்ல நூலகங்கள்.

பிறவி என்ற பேறு பெற்ற பலனை நல்கும்

பெட்டகங்கள் அடுக்கி வைத்த செல்வச்சாலை

உலகில் உள்ள நூலகங்கள் -

ஆதலாலே,

உலகினர்கள் நூலகத்தை நாடிச்சென்று,

தமது உரிமை எனத்தக்க அறிவை,

அன்பை, அறிவுணர்வை, திறமைகளை அள்ளிக்கொண்டால் --

நூலகங்களால் விளையும் பயனை,

எங்கள் நுணுக்குணர்வின் முழுப்பலனை

நுகர்வோம் நாங்கள் -

காலமெல்லாம் நிலைத்து நிற்கும் அறிவுப் பேற்றை,

கலைச்சுவைப்பு முழுத் திறனைப்

பெறுவோம் நாங்கள் -

கூனல் மதி படைத்தோரின்

கோணலான கொக்கரிப்பும் வக்கரிப்பும் மக்கிப் போக,

ஞான நிலை பொன்கதிர்கள் விரியலாகும்.

நாம் விரும்பும் கோயில்,

நூல் அகங்கள் ஆகும்.

கவிஞர். இ. முருகையன்

# நூலகம்




வீடு இல்லாமல் நாம், நமது குடும்பம் சுகமாகவும் மகிழ்வுடனும் வாழ இயலாது. கோவில் இல்லாத ஊர் பாழ் என்பது பழைய அனுபவமும் படிப்பினையும். பாடசாலை இல்லாவிட்டால் நீங்களே கூறுங்கள்... உங்களின் இன்றைய நிலை எப்படி இருந்திருக்கும்.? பாடசாலை அறிவுக்கு உறுதுணை என்றால், நூலகம் அறிவுக்கு விருந்து, அறிவுக்கு மருந்து, அறிவுக்கு வாகனம். இந்தக் கட்டுரை நூலகம் பற்றியது.

சிந்திப்பவன் மனிதன். சிந்திக்கும் போது மேலும் மேலும் பல விடயங்களை அறிய விரும்புகிறோம். யாரிடமாவது கேட்டு அறிகிறோம், மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும், விரிவாகவும், ஆறுதலாகவும் அறிய விரும்பும் போது ஒரு புத்தகத்தை – நூலைப் படிக்கிறோம், நூல்களில் எத்தனையோ, விடயங்களைப் படிக்க முடியும், ஒரு சிறு பட்டியல்; கதைகள், கவிதைகள், நாடகம் என்ற இலக்கியம்; தெய்வம், அன்பு, தர்மம், நல்லபண்புகள் சார்ந்த ஆத்மீகம்; அவை முதல் கணினி பற்றி, உயிர் வாழ்வன பற்றி, உயிரற்றவை பற்றி, இரண்டும் சேர்ந்த இயக்கங்கள் பற்றிய விஞ்ஞானம்; மேலும் அரசியல், சோதிடம், நமது நாடு, உலகம், சரித்திரம், வாழ்வின் இன்பம் துன்பம்.......



இவற்றை எல்லாம் கையில் வைத்துப் படிக்கலாம், எல்லா நூல்களையும் நாம் பணம் கொடுத்து வாங்க இயலாது, நூற் பிரியர்கள் மாதத்தில் ஒரு நூல் வாங்குவார்கள். வருடத்தில் 12 நூல்கள். 21 ஆம் நூற்றாண்டின் அறிவியல் உலகில் இது போதுமா? உண்மையில் வாழ்நாளில் 12 நூல்கள் வாங்காதவர்கள்தாம் எம்மிடையே அதிகம். ஆனால், நாம் விரும்பினால் இன்று 120 புத்தகங்கள் 1,200, 12,000, 120,000, 1,200,000.... புத்தகங்கள் உள்ள ஒரு இடத்துக்குச் சென்று வேண்டிய ஒரு நூலை எடுத்து, வேண்டிய விடயத்தைப் பார்க்கலாம். அது தான் நூலகம். ஒரு கிராமத்திலுள்ள நூலகத்தில் 120 – 1,200 நூல்கள் இருக்கும். பெரிய நூலகத்தில் பகுதி பகுதியாக ஆயிரக்கணக்கில் இருக்கும். ஆனால் ஒவ்வொரு பகுதிக்கும் பெயரிட்டுத் தகவல்கள் இருப்பதால், வேண்டிய நூலை 3 – 5 நிமிடங்களில் எடுக்கலாம். கொம்பியூட்டர் உள்ள நூலகத்தில் உங்களுக்கு வேண்டிய நூல் எங்கே இருக்கிறது என்பதை அரை நிமிடத்தில் அறிய முடியும்.

நூலகம் இருப்பது மனித வளர்ச்சியினதும் நாகரீகத்தினதும்

எடுத்துக்காட்டாகும். கி.மு ௨000 ஆண்டுகளுக்கு முன் பாபிலோனியாவில் எழுத்துக்கள் கொண்ட களிமண் பலகைகள் இருந்திருக்கின்றன. இவை அந்தக் காலத்தின் பாபிலோனிய நாகரிக மக்களின் நூல்கள். பண்டைய எகிப்து நாட்டு நூல்நிலையங்களும் பிரசித்தி பெற்றவை. அங்கே கல்வெட்டுக்களாகவும், பாப்பிரஸ் என்ற ஓலைச்சுவடிகளாகவும் நூல்கள் இருந்திருக்கின்றன. அலெக்சாந்திரியா நகரத்தில் கி.மு 300 இல் முதலாம் டலாமி என்ற கிரேக்க மன்னர் இரண்டு நூல் நிலையங்களை நிறுவினார். அவற்றில் சுமார் ஏழு லட்சம் சுவடிகள் இருந்தன. எகிப்தியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் போர் நிகழ்ந்தபோது ஜூலியஸ் சீசர் தலைவர் மட்டும் அல்லர், அவர் ஒரு எழுத்தாளரும் கூட. அப்படி இருந்தும் எதிரியின் நூலகத்தை அழிப்பது போரின் ஒரு யுக்தி என்று நம்பினார். ஒரு மக்களின் அறிவு நிலையத்தை அழித்தால் அந்த மக்களை அடிமையாக்குவது இலகு என்பதே அந்த யுக்தி. அண்மைக்காலத்தில் சிங்கள அரசியல் வெறியர்கள் மிகவும் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண நூல்நிலையத்தை முழுமையாக எரித்தது நாம் மறக்கமுடியாத, மறக்கப்படாத சரித்திரமாகும். இப்படியாக மிகப்பழைய காலம் தொடக்கம் நாகரிகம் தோன்றிய ரோமாபுரி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் நூலகங்களுக்கு முதன்மை கொடுத்திருக்கிறார்கள்.

இந்த அதிசயத் தகவல்கள் எனக்கு எப்படித் தெரியும்? நூல்கள் மூலம் என்பது தான் விடை. என்னிடம் வீட்டில் ஒரு குட்டி நூலகம் உண்டு. சிறுவனாக இருந்த போது அறிஞர் அண்ணாத்துரை, எழுதிய "வீட்டிற்கு ஒரு நூல் நிலையம்" என்ற 10 – 15 பக்க நூலைப்படித்தேன். அன்று தொடக்கம் நூல்களை வாங்கிச் சேகரித்தேன். அவற்றில் ஒன்று தான் சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியம் என்ற தொகுப்பு நூல்கள். அதில் எனது விடயங்களை அறிந்தேன்.

வீட்டில் ஒரு குட்டி நூலகம் இருந்தும், பொது நூலகங்களுக்கு மிகவும் ஒழுங்காகப் போய் வருகிறேன். இந்தப் பழக்கம் அனைவருக்கும், முக்கியமாக இளைஞருக்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுத விரும்புகிறேன்.

**உங்கள் வீட்டிற்கு அண்மையில் ஒரு நூலகம்தோன்றுகின்றது.**

***அது சரஸ்வதி அம்மா அயலில் குடிபுகுந்தது போன்ற ஒரு ஐசுவரியம். மிகப் பக்குவமாகக் கிடைத்த அந்த அருளைப் பயன்படுத்துங்கள். அதை இயன்றளவு வளருங்கள். அனைவரும் அங்கத்தவராகச் சேருங்கள், அங்கத்தவராவதற்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்துங்கள். ஒரு நூல் நிலையம் செழித்துப் பயன் தருவதற்குப் பணமும் நூல்களும் வேண்டும். நீங்கள் விலை கொடுத்து அவ்வப் போது வாங்கும் நூல்களை, படித்த பின் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யுங்கள். அவற்றின் முன் பக்கத்தில் உங்களை விட்டுப்பிரிந்த உறவினரது ஞாபகம் என்பதைக் குறித்து எழுதுங்கள். 'எனது சிறிய தகப்பனார் அமரர் ............ இனது ஞாபகமாக, இந்த நூல் அன்பளிப்பு' என்கிற நினைவுச்சின்னம் மறைந்தவர் ஆத்மாவை மகிழவைக்கும்.***

உங்களுக்கு அண்மையில் இருக்கும் நூலகத்தில் ஓர் அங்கத்தவராகி, அதைப் பயன்படுத்துங்கள். அதன் பலனை நீங்கள் மூன்று மாதங்களிலேயே உணருவீர்கள்.

பிரான்சிஸ் பேக்கன் என்ற அறிஞரின் "வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்குகிறது" என்ற கூற்று – Reading maketh a full man – மிகவும் பிரசித்தமானது. அவர், Francis Bacon மேலும், கூறினார், 'சில நூல்களை ரேஸ்ற் (உருசி) பண்ணிப் பார்க்க வேண்டும். சில விழுங்கப்படவேண்டும். இன்னும் சில சப்பிமென்று சமிக்கச் செய்யப்பட வேண்டும். இந்த வார்த்தைகள் நூல்களை எப்படிப் படிப்பது என்ற நுணுக்கமான விடயத்திற்கு அழைத்துச் செல்கின்றன. அவற்றை விளக்க முயன்றால் இந்தக் கட்டுரை நீண்டதாகும்.

சேர் ரிச்சார்ட் ஸ்டீல் என்ற அறிஞர் 'உடலுக்குத் தேகாப்பியாசம் போன்றதே வாசித்தல் மனத்திற்கு' என்று கூறினார். உண்மையில் வாசித்தல் வெறும் பயிற்சி மட்டும் அன்று, அதனால் வரும் நன்மைகளும், ஆனந்தமும், ஆத்ம திருப்தியும் சொற்களால் கூறமுடியாத பரிமாணம் கொண்டவை.

நூல்கள் தனிமையில் இருப்பவர்களுக்கு உற்ற நண்பர்களாகின்றன. துக்கத்தைப் போக்கி மகிழ்வையும் சாந்தியையும் தருகின்றன. தடுமாற்றத்தைத் தெளிய வைத்து மன உறுதியைத் தருகின்றன. ஒருவர் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க வழிகாட்டியாகின்றன. ஒருவருடைய வாழ்வில் தன்னம்பிக்கையை விதைத்து மேம்பாடுகளை வளர்க்க உதவுகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர்கள், நல்ல மனிதர்கள் ஆகியோருடன் ஆத்மார்த்த நிலையில் சில மணிநேரம் வாழவைக்கின்றன. அத்துடன், தற்காலத்தில் வாழும் பெரியோருடன் உறவாட முடிகிறது. வள்ளுவர் மாணிக்கச் சுருக்கமாக நல்ல நூல்களையும் பண்புள்ள பெரியார்களையும் இணைத்துப் பின்வரும் குறளைத் தந்திருக்கிறார்.

நவில்தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு"
(குறள் 783)

உங்கள் வீட்டிற்கு அண்மையில் ஒரு நூலகம் தோன்றுகின்றது. அது சரஸ்வதி அம்மா அயலில் குடிபுகுந்தது போன்ற ஒரு ஐசுவரியம். மிகப் பக்குவமாகக் கிடைத்த அந்த அருளைப் பயன்படுத்துங்கள். அதை இயன்ற அளவு வளருங்கள். அனைவரும் அங்கத்தவராகச் சேருங்கள், அங்கத்தவராவதற்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்துங்கள். ஒரு நூல் நிலையம் செழித்துப் பயன்தருவதற்குப் பணமும் நூல்களும் வேண்டும். நீங்கள் விலை கொடுத்து அவ்வப்போது வாங்கும் நூல்களை, படித்த பின் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யுங்கள். அவற்றின் முன் பக்கத்தில் உங்களை விட்டுப்பிரிந்த உறவினரது ஞாபகம் என்பதைக் குறித்து எழுதுங்கள். 'எனது சிறிய தகப்பனார் அமரர்........ இனது ஞாபகமாக, இந்த நூல் அன்பளிப்பு என்கிற நினைவுச்சின்னம் மறைந்தவர் ஆத்மாவை மகிழவைக்கும். கட்டாயமாக நூலகத்தில் இருக்க வேண்டிய சில நூல்கள் மனத்தில் தோன்றுகின்றன. அவையாவன; தமிழ் அகராதிகள், ஆங்கிலம் – தமிழ் சொற்களஞ்சியம், கலைக்களஞ்சியம், சிறுவர் கலைக்களஞ்சியம், திருக்குறள், தோத்திரத் திருப்பதிகங்கள், திருவாசகம், திருவிவிலியம், திருக்குர்ஆன், பாரதி பாடல்கள்......

நூலகம் ஒரு கூட்டு முயற்சி. அதன் பலன் இப்போதைய சமூகத்திற்கும், வரும் சந்ததியினருக்கும் கிடைக்கும். வீடு – கோவில் – பாடசாலை – நூலகம். எங்களைப் பாதுகாப்பன, எங்களை வாழவைப்பன, எங்கள் ஆளுமையைத் தெரிவிப்பன, எங்கள் பண்பாட்டை நிலை நிறுத்துவன என்பதை ஞாபகத்தில் கொள்வது எமக்குச் சிறப்புத் தரும்.

# சிந்தனை முத்துக்கள்

- யானையின் பலம் தும்பிக்கையில்.
  மனிதனின் பலம் நம்பிக்கையில்.

- சில சமயங்களில் புத்தி வெற்றி பெறுகிறது.
  பல சமயங்களில் வெற்றியே புத்தியாகிறது.

- அறிவினிலே குரு பேசுகின்றான்.
  அனுபவத்திலே இறைவன் பேசுகின்றான்.

- கலக்கம் ஒவ்வொரு வீட்டிலும் உண்டு.
  கவலை ஒவ்வொரு நெஞ்சிலும் உண்டு.

- சாவே இல்லாத வீடும்,
  சஞ்சலமே இல்லாத மனமும்
  இன்னமும் சிருஷ்டிக்கப்படவில்லை.

- பிறர் குறை காண்பவன் அரை மனிதன்.
  தன் குறை காண்பவன் முழு மனிதன்

- வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு.
  தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.

- விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையன்று.
  விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே
  பெருமை.

**— தொகுப்பு —**
**அம்பிகா**

# தமிழ்ப் பாரம்பரியத்திற் கல்வி ஒரு மறு வாசிப்பு

பேராசிரியர். சபா ஜெயராசா



சமூகக் கட்டமைப்பு, சமூக அசைவியம், சமூக இலக்குகள் முதலியவற்றால் கல்வி இலக்குகள் நெறிப்படுத்தப்படும் பொழுது அவற்றுக்கியைந்தவாறு கற்பித்தற் கலையும் முகிழ்த்தெழுகின்றது. நிலமானியப் பொருளாதாரமும், குறுநில அரசுகளும், வணிகச் செயற்பாடுகளோடு இணைந்த பட்டினங்களும், நீரும் நிலமும் தழுவிய உற்பத்திக் கோலங்களும் நிலவிய தொன்மைத் தமிழகம் தனது சமூக இயல்புக்குரிய கல்வியையும், கற்பித்தற் கலையையும் கொண்டிருந்தது.

கற்றல் கற்பித்தல் தமிழ்ப் பாரம்பரியத்தில் வளர்ந்து மேலெழுந்த நிலையை நன்னூல் பாயிரவியல் பின்வருமாறு விளக்குகின்றது.

"உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையோன் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங் கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப"

கற்பித்தற் கலையை முன்னெடுக்கும் இலட்சிய ஆசிரிய மாதிரி வடிவினர் (MODEL) பற்றிய விளக்கமாக இது அமைகின்றது.

தமிழ்ப் பண்பாட்டில் ஆசிரிய மாதிரி வடிவினர் சித்தரிக்கப்படுவது போன்று மாணவர் வகை மாதிரியினரும் விளக்கப்பட்டுள்ளனர். நன்னூல் பாயிரவியல் மாணாக்கரை முதல். இடை, கடை என வகைப்படுத்தியுள்ளது.

" அன்னமாவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடை மாணக்கர்"

சமூகத்தில் மேட்டுக்குடியினர், வற்கடமெய்தி நலிந்தோர் என்ற நிரலமைப்பு (HIERARCHY) வளர்ச்சி பெறும் பொழுது, மாணவர்களை வகைப்படுத்தித் தரம் பிரித்தலும், சமூக நிரலமைப்பைக் கட்டிக் காப்பதற்குக் கல்வியைக் கருவியாக்குதலும், தோன்றுதல் பொதுவான ஓர் அகிலப்பண்பாகும். சமூகத்தில் 'கற்கலாகாதார்' என்று ஒரு சாராரை வகைப்படுத்தும் பொழுது அது பெரும்பாலும் ஒடுக்கப்பட்டோரையே சுட்டி நின்றது.

மாணவர்கள் வேறு பிரிக்கப்பட்டமை போன்று ஒடுக்கு முறைமைக்கு ஏற்றவாறு ஆசிரியரும் தரம் பிரிக்கப்பட்டனர். ஆசிரியரது தன்மை **"ஈவோன் தன்மை"** எனவும் கற்பித்தல் செயல் **"ஈதலியற்கை"** என்றும், மாணவர் இயல்பு **"கொள்வோன் தன்மை"** எனவும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். ஈவோர் என்போர் நல்லாசிரியர் என்றும், நல்லாசிரியர் ஆகாதோர் என்றும் வகைப்படுத்தப்பட்டனர். நல்லாசிரியர் ஆகாதோர் கழற் பெய் குடத்துக்கும், மடற்பனைக்கும், முடத் தெங்கினுக்கும், குண்டிகைப் பருத்திக்கும் நச்சினார்க்கினியாரால் உவமையாக்கப்பட்டுள்ளனர். மாணாக்கரது கொள்ளளவு சிறிதாயினும், அதனைக்கருத்திற் கொள்ளாது, தாம் கற்றதெல்லாவற்றையும் திணிப்பவர் கழற் பெய் குடத்துக்கும், மடற்பனைக்கும், முடத் தெங்கினுக்கும், குண்டிகைப் பருத்திக்கும் நச்சினார்க்கினியாரால் உவமையாக்கப்பட்டுள்ளனர். மாணாக்கரது கொள்ளளவு சிறிதாயினும், அதனைக்கருத்திற் கொள்ளாது, தாம் கற்றதெல்லாவற்றையும் திணிப்பவர் கழற் பெய் குடத்துக்கு உவமிக்கப்பட்டுள்ளார். இனிய பயன்களைக் கொண்டிருந்தாலும் கிட்டுதற்கு அரிதாக இருக்கும் ஆசிரியர் மடற்பனைக்கு உவமிக்கப்பட்டுள்ளார். ஒருவர் வேண்டி நிற்க அவரைப் புறக்கணித்துப் பிறர்க்கு உரைக்கும் ஆசிரியர் முடத்தெங்கினுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளார். கற்கும் மாணவரது ஆற்றல் பெரிதாக இருப்பதை மனங்கொள்ளாது, சிறிதளவு அறிவை மட்டும் வழங்கும் ஆசிரியர் குண்டிகைப் பருத்திக்கு ஒப்பானவர்.

சமூகத்தில் பன்முகப்பாங்கான ஏற்றத்தாழ்வுகள் நிலவும் வேளை ஆசிரியர்களை எதிர்மறை நோக்கில் பலவாறு பாகுபடுத்துதல் ஒடுக்குமுறைகள் தோன்றிய காலகட்டங்களில் நிலவுவதாயிற்று. உயர்க்குடிப் பிறப்பு நல்லாசிரியர்களுக்குரிய, நிபந்தனையாக நன்னூல் பாயிரத்திலே (26) கூறப்படுதல் மேற்கூறிய கருத்தை மீள வலியுறுத்துகின்றது.

மேலைத்தேய மரபில் இயற்பண்புக் கோட்பாட்டினை முன்னெடுத்த ரூசோ என்பவர் தாம் எழுதிய எமிலி (EMILE) என்ற நாவலில் எமிலி என்ற கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கி அவனது இயற்கையான படிநிலை வளர்ச்சிக்குரிய கல்வி பற்றியும் விளக்கியுள்ளார். தமிழ் மரபில் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர், சீவகன் என்ற கதாபாத்திரத்தின் வழியாகத் தமிழகத்து இலட்சியவடிவிலான கல்வியை விளக்கியுள்ளார். சீவகன் தனது ஐந்தாம் வயதில் மையோலை பிடித்துக் கற்கத் தொடங்கிய செய்தி சீவக சிந்தாமணியிற் (2706) குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வியானது பொருள் நிலை சார்ந்து செயற்பட்டமைக்குரிய செய்தியைச் சீவக சிந்தாமணியிலே (நாமகள் கலம்பகம் 339) காண முடியும். ஆசிரியரும் மாணவரும் தங்க ஆசனங்களில் அமர்ந்து கற்றல் கற்பித்தலிலே ஈடுபட்ட செய்தியும் சீவக சிந்தாமணியிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீவக சிந்தாமணிக்கு முற்பட்ட இலக்கியமாகிய பரிபாடலில் கற்கத் தொடங்கும் மாணவர்கள் **'மழபுலவர்'** என்று அழைக்கப்பட்டனர். முதல் முதலாக அவர்கள் சுவடி தூக்கி எழுதத்தொடங்கிய செயல் **'மையாடல்'** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (பரிபாடல் 11, 88 – 90) கல்விச்செயல் முறை தொழிற்பிரிவு (DIVISION OF LABOUR) அடிப்படையில் சிறப்பெய்தி வளரும் நிலையில் இவ்வாறான தனித்துவமான சிறப்புப் பெயர்கள் வழங்கப்படுதல் மரபு.

கற்கும் செயற்பாடு **"கோடன் மரபு"** என அழைக்கப்பட்டது. அதாவது ஆசிரியரிடத்து மாணவர் பாடங் கேட்கும் முறையும், கலையும் கோடன் மரபு எனப்பட்டது. நேரம் தவறாமை, வழிபாடு செய்தலில் வெறுப்பில்லாமை, ஆசிரியர் குறிப்பொடு பொருந்திச் செல்லல், உரைத்தபடி செய்தல், பாடங்கேட்டலில் ஆசையுடையவனாயிருத்தல், சித்திரப்பாவை போன்றிருந்து கற்றல், மீண்டும் கற்றல், கற்ற பொருளை மறந்துவிடாது உள்ளத்திலே நிலை நிறுத்தல் முதலியவை கோடன் மரபிலே விளக்கப்பட்டுள்ளன (நன்னூல், பாயிரவியல் 40).

சமூக வளர்ச்சியில் ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் என்ற இருமை நிலைகள் துருவப்பட்டு வளரும் போது, நூற் கல்வியும், நூல் சாரா அனுபவக் கல்வியும் துருவப்பட்டு முரண்படுதல் மரபு. இத்தகைய துருவப்பாடு **"செய்யுள்", "உலக வழக்கு"** என்ற அருமை நிலைகளாற் புலப்படுத்தப்பட்டுள்ளது. **"நூல் பயிலியல்பே நுவலின் வழக்கறிதல்"** என்று நன்னூல் பாயிரவியலில் (41) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றின் பின்புலத்தில் நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் கலையை நோக்கும் பொழுது வினாவுதல், மீண்டும் மீண்டும் கேட்டு மனத்திலே பதித்தல், சகமாணக்கரோடு பழகுதல், ஆசிரியரைப் பின் தொடர்ந்து செல்லும் நிழலைப்போன்று விட்டகலாதிருத்தல் முதலியவை நச்சினார்க்கினியாராலும், பவணந்தியாலும் விளக்கப்பட்டுள்ள கற்றல் உபாயங்களாகும். மாணக்கர் இறைவனிடத்துப் பக்தி செலுத்துதல் போன்று ஆசிரியரிடத்தும் பக்தியும், அன்பும் செலுத்துதல் வேண்டுமென்று தமிழ் மரபில் வலியுறுத்தப்பட்டுள்ளது. **"மாணாக்கன் என்பான் அன்பின் வழிபாடுவான்"** என்று சிறு பஞ்ச மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் வாவென்றதும் வருதல், இருவென்றதும் இருத்தல், சுவடிகளைப் பிரிக்கும் படி கூறியதும் பிரித்தல், படிக்கும்படி கூறியதும் படித்தல் என்ற வகையில் ஆசிரியரின் கட்டளைகளே கற்றல் கற்பித்தலில் மேலோங்கியிருந்தன. மாணாக்கர் வணங்கி நின்றேனும், வாய்பொத்தி நின்றேனும், ஆசிரியரிடத்துப் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டுமென ஆசாரக் கோவை குறிப்பிட்டுள்ளது. பசித்தவர்கள் உணவுப்படையலை உண்பதற்கு எத்தகைய ஆவல் கொண்டிருப்பார்களோ அவ்வாறே மாணவர்களும் கற்பதற்குரிய அவாக் கொண்டிருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கற்றலைக் காட்டிலும் இனிய செயல் வேறொன்றும் இல்லை என்பதை **"கற்றலின் காழினியது இல்"** என்று இனியவை நாற்பது குறிப்பிட்டுள்ளது.

தமிழ்ப் பாரம்பரியத்திற் கற்றல் கற்பித்தற் கலையை நோக்கும் பொழுது அந்தணர்க்குரிய கல்வியில் தனித்துவமான பண்புகள் விரவியிருந்தன. **"அறுவகைப் பட்ட பார்பக்கம்"** (தொல்காப்பியம், வாகைத்திணை) ஆறுதிறன்களாகிய அந்தணர் ஒழுக்கம் என்பதில் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் – ஏற்றல் என்றவாறு விரித்துரைக்கப்படும். நூல்களை விட்டுப் பிரியாதிருத்தலும் அந்தணர்க்குரிய அணிகலனாயிற்று.

தமிழகக் கல்வி வருணப் பாகுபாடுகளோடும் தொடர்புபட்டிருந்தமை அந்தணர்க்குரிய தனித்துவமான உயர் கல்விச் செயற்பாடுகளினால் அறியப்படக் கூடியதாகவுள்ளது. அரசமரபினருக்கும் தனித்துவமான உயர்கல்விச் செயற்பாடுகள் காணப்பட்டன. இவ்வாறான கல்விக் கட்டமைப்புக்களை நோக்கும் பொழுது சாமானியர்களுக்குரிய கல்வி சமூக ஒழுங்கைக் கட்டிக்காப்பதற்குரிய வற்புறுத்தல்களையும் ஒடுக்குமுறையை மௌனமாக ஏற்கும் பக்குவத்தையும் கொண்டிருந்தது.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்"

என்ற புறநானூற்றுப் பாடல் (186) அரச மேன்மையைச் சாமானியர்கள் மீது திணிக்கும் கல்விசார்ந்த வலியுறுத்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். திருக்குறளிலும் இதற்குரிய பல்வேறு சான்றாதாரங்களைக் காணலாம். வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும்"

தமிழகக் கல்வி வரலாற்றை ஆழ்ந்து நோக்கும் பொழுது வரன் முறை சார்ந்த நிலையிலும், சாரா நிலையிலும் ஒடுக்கப்பட்டோர் மனங்களை அடக்கி அழுத்தி நின்றமையைக் காணலாம்.



"ஒரு கருத்தை எடுத்துக் கொள்க! அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்குக! அதையே கனவு காண்க! அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வருக! மூளை, தசைகள், நரம்புகள், நாடிகள் முதலிய ஒவ்வொரு பகுதியிலும் அந்த ஒரு கருத்தே நிறைந்து நிலவட்டும். இந்த நிலையில் மற்றக் கருத்துகளை தவிர்த்து விடுக! வெற்றிக்கு வழி இதுதான்"

- விவேகானந்தர் -

# மெச்சத்தக்க முன்னுதாரணம்



ஏ.ஜே. கனகரட்ணா

இணுவில் வாழ் மக்கள் குறிப்பாக இளைஞர்களும், புலம்பெயர்ந்து வாழும் இணுவில் வாசிகளும் ஒன்றிணைந்து, இணுவிலில் "அறிவாலயம்" என்ற பெயரில் ஒரு நூல்நிலையத்தையும் அதனுடன் இணைந்த அரும்பொருட் காட்சியகத் தொகுதியினையும் அமைத்து, அத்தொகுதியின் திறப்பு விழா விரைவில் நடைபெறும் என்பதைக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன்.

புலம்பெயர்ந்தோர் கோயில்களைப் பெருப்பிப்பதற்கும், அவற்றின் திருவிழாக்களை நடாத்துவதற்கும் மட்டுமே பணத்தை வாரிவழங்குவதோடு தமது செயற்பாடுகளைக் குறுக்காது, தமது ஊரின் தொன்மை வரலாற்றையும் பேணுவதோடு, இளம் சந்ததியினரின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை இது கோடிட்டுக் காட்டுகிறது.

அரசாங்கத்தையே எல்லாவற்றிற்கும் நம்பியிருக்காது, தன்கையே தனக்குதவி என்ற அடிப்படையில், மக்களே முன்வந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன் வரவேண்டும். அப்பொழுதுதான் அடிமட்டத்திலிருந்து குடியாட்சி (grassroot democracy) மலரும்.

இணுவிலின் இந்த மெச்சத்தக்க முன்னுதாரணத்தைப் பின்பற்றி ஏனைய கிராமங்களும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டால், ஊர் மட்டத்தில் எமது வரலாறு நிறைவு பெறுவதோடு, இத்தகைய வரலாறுகளை உருவாக்குவதற்கு (யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பினைப் பெறலாம். அதன்மூலம் இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதன் குறிக்கோள்கள் ஒன்றினை எய்தலாம்) இளைஞர்களின் ஆற்றல்களும் சக்திகளும் வீண்விரயமாவதைத் தடுக்கலாம்.

அரும்பொருட் காட்சியகங்களை அமைப்பதன் மூலமாக, அடிமட்டக்

குடியாட்சி போன்று, சாதாரண, பாமரமக்களின் அடிமட்ட வரலாற்றினையும் உய்த்துணரமுடியும். இதன் மூலம் வரலாறு என்றால் அரச வம்சங்களினதும், உயர் வர்க்கத்தினினதும் வரலாறு என்னும் மாயையைக் கலைத்து, வங்காள வரலாற்று ஆசிரியர் ரணஜித்குகா (Ranajit guha) போன்றோர் தொடங்கி வைத்த கீழ்மட்டங்களின் வரலாற்றாய்வுகள் (subaltern studies) என்ற மார்க்கத்தில் எம்மைச் செல்வதற்கு உந்தும். அப்பொழுது இதுகாறும் நாம் படித்த, படித்துவரும் 'வரலாறு' என்ற பாடம் அடித்துச் செல்லப்படும். இது குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

பௌத்தரும், பாளி அறிஞருமான கலாநிதி E.W அதிகாரத்திடம் (Dr.E.W.Adikaram), 1983 இல் ஏற்பட்ட தமிழ் இனப்படுகொலையை எவ்வாறு எதிர்காலத்தில் ஏற்படாது தடுக்கலாம் என்று பத்திரிகையாளர் ஒருவர் வினவிய போது, அவர் அளித்த அதிரடிப்பதில்

'மகாவம்சத்தின் எல்லாப் பிரதிகளையும் தீயிட்டுக் கொளுத்துவதே'.

ஆம், திரிபுற்ற வரலாற்றினால் தான் இந்த நாடும் மக்களும் அழிவுப்பாதைக்குள் தள்ளப்பட்டுள்ளமை உணரற்பாலது.

---

☞ அறிவு என்பது இருவகை; எமக்கு தெரிந்த அறிவு ஒருவகை; எமக்கு தெரியாததை எங்கே பெறலாம் என்ற அறிவு இன்னொருவகை.

☞ எழுத்தாளனின் நேரங்களில் மிகக்கணிசமான அளவு பகுதி வாசிப்பிலேயே கழிகின்றது. நல்லதொரு நூலை எழுதுவதற்கு நூலகத்தின் அரைப்பங்கு நூல்களின் பக்கங்கள் புரட்டப்படுகின்றன.

☞ நூல்களை வாசிக்கும் போது ஏற்படும் நன்மையைப் போன்று நூல்களிலிருந்து பெறப்படும் விரிவுரைகள் நன்மையைத் தருவதில்லை.

- சாமுவேல் ஜோன்சன் -

# நூல் வரவுப் பதிவேடு
# [Accession Register]

## விதிமுறைகள்

- நூல் வரவுப் பதிவேடு என்பது நூலகம் ஒன்றில் உள்ள தகவல் சாதனங்களின் மொத்தக் கையிருப்பை அறிந்து கொள்ள உதவும் ஒரு பதிவேடு ஆகும்.

- நூலகங்களால் பெற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு நூலும் அது பெறப்படும் கால ஒழுங்கின் அடிப்படையில் தொடரெண் ஒன்றைப் பெறுகிறது. இது நூல் வரவுப் பதிவெண் அல்லது சேர்வு எண் [Accession number] என அழைக்கப்படுகிறது.

- நூலைப் பொருள் அடிப்படையிலோ அல்லது நூல் பெறும் வழிகளான அன்பளிப்பு, கொள்வனவு என வகைப்படுத்தியோ அதுவுமன்றி மொழி ரீதியாகவோ பதிவு செய்யும் முறை பொருத்தமானதன்று. நூலகத்துக்கு ஒரு நூல் வந்து சேரும் கால அடிப்படையில் பதிவு செய்தலே சரியான முறையாகும்.

- குறித்த திகதி ஒன்றில் நூலகத்தை வந்தடையும் நூல்கள் முதலில் ஆசிரியர் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்பட்டு அதன் பின்னரேயே வரவுப் பதிவேட்டில் பதியப்படவேண்டும்.

- நூல் வரவுப் பதிவேட்டில் நூல் சார்ந்த போதுமான விபரங்கள் உள்ளடக்கப்படவேண்டும். பொதுவாக நூல் பெறப்பட்ட திகதி, நூலுக்கான வரவுப்பதிவெண், நூலாசிரியர் பெயர், நூலின் தலைப்பு, வெளியிடப்பட்ட இடம், வெளியீட்டாளர் பெயர், வெளியிடப்பட்ட ஆண்டு ஆகிய மூன்று விபரங்களையும் உள்ளடக்கிய வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், நூல் பெற்றுக் கொள்ளப்பட்ட முறை, நூலை வழங்கியவர் விபரம் (அன்பளிப்பாயின் அன்பளிப்புச் செய்தவர் பெயர் முகவரியும், கொள்வனவாயின் நூல் விநியோகஸ்தர் பெயரும்), நூலின் பக்க அளவு, விலை, வகுப்பெண், மேலதிக குறிப்புகள் போன்ற விபரங்களை நூல் வரவுப் பதிவேடு கொண்டிருக்கும். சிறிய நூலகங்கள் ஒரு CR –Book ஐ நூல் வரவுப் பதிவேடாகப் பயன்படுத்தலாம்.

- குறிப்பிட்ட நூலொன்று பல தொகுதிகளில் வெளிவருமாயின் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி வரவுப் பதிவெண் வழங்குதல் வேண்டும். அதே சமயம் ஒன்றிற்கு மேற்பட்ட தொகுதிகள் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்குமாயின் ஒரு வரவுப் பதிவெண்ணின் கீழேயே தலைப்பு விபரத்துடன் இணைத்துத் தொகுதிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

- சஞ்சிகைகளின் தனித்தனி இதழ்கள், பழைய தகவல்களை வருடாவருடம் உள்ளடக்கி வெளியாகும் புள்ளிவிபர அறிக்கைகள், செயல் நூல்கள், சிறு பிரசுரங்கள், செய்திக் கடிதங்கள், ஏனைய குறுங்கால வாழ்வுடைய வெளியீடுகள் போன்றவை வரவுப்பதிவேட்டில் பதியப்படுவதில்லை. சஞ்சிகைகளின் ஒரு ஆண்டுக்கான முழுத்தொகுதிகளும் நூலகத்தை வந்தடைந்து அவை ஒன்றாகக் கட்டப்பட்ட பின்னர்

அவை நூலாகக் கருதப்பட்டு அவற்றிற்கும் நூலைப் போன்றே வரவுப் பதிவெண் கொடுக்கப்படல் வேண்டும்.

- பொதுவாக நூலக சாதனங்களை நூலுருச் சாதனங்கள் நூலுருவற்ற சாதனங்களென வகைப்படுத்தி அவற்றுக்குத் தனித்தனி நூல் வரவுப்பதிவேடு பராமரிப்பது பொருத்தமானது.

- சர்வதேச நியமப்படி 48 பக்கங்களுக்குக் குறைவான வெளியீடுகள் சிறுபிரசுரங்களாகக் கருதப்பட்டு அவற்றிற்கு வரவுப்பதிவெண் வழங்கப்படுவதில்லை. எனினும் கூட அச்சிடுதல் தொழினுட்பம் வளச்சியடையாத எமது பிரதேசங்களில் நூல் வெளியீட்டுச் செலவு அதிகரிப்பினால் முக்கியம் வாய்ந்த நூல்கள் பெரும்பாலும் குறைந்த பக்கங்களிலேயே வெளியிடப்படுவது இனங்காணப்பட்டிருப்பதன் காரணமாக 25 பக்கங்களுக்கு மேற்பட்டவை அனைத்தையும் நூல்களாகக் கருதி அவற்றிற்கு வரவுப் பதிவெண் கொடுக்கலாம். ஆய்வு நூலகங்களாயின் சிறு பிரசுரங்களின் பெறுமதியை இனங் கண்டு அவற்றுக்கெனத் தனியானதொரு வரவுப் பதிவேட்டையும் பராமரித்துக் கொள்ளலாம்..

- நூல்கள் பாவனைக்கே என்ற விதி சரியாகச் செயற்படுத்தப்படுமாயின் காலத்துக்குக் காலம் நூலக இருப்பிலிருந்து நூல்கள் குறைந்து போதல் வேண்டும். பாவனை கூடியோ அல்லது பழுதடைவதன் காரணமாகவோ அவை நூலக இருப்பிலிருந்து விலக்கப்படினும் கூட இந் நூலுக்கான வரவுப்பதிவெண்ணும் நூலின் விபரங்களும் நூல்வரவுப்பதிவேட்டில் என்றும் நிலைத்திருப்பது அவசியமாகும். எனவே எக்காரணங் கொண்டும் ஒரு நூலுக்கு வழங்கப்படும் வரவுப்பதிவெண்ணை இன்னோர் நூலுக்குப் பயன்படுத்தக்கூடாது. விலக்கப்படும் நூலுக்கான விபரம் மட்டும் வரவுப் பதிவேட்டின் குறிப்புப் பகுதியில் பதியப்பட வேண்டும். இதன் மூலம் ஒரு நூலகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இற்றை வரைக்கும் நூலகம் பெற்றுக் கொண்ட மொத்த நூல்களைக் கணக்கிடவும் நூலகத்தில் எந்த நூல்கள் அதிக பாவனையில் இருந்தன என்பதை மதிப்பிடவும், எவ்வளவு நூல்கள் பாவனை காரணமாக அழிந்தன என்பதை மதிப்பிடவும் இத்தகைய செயல்முறை உதவும்.

- நூல் வரவுப் பதிவெண் நூலின் தலைப்புப் பக்கத்திலும், நூலின் இறுதிப்பக்கத்திலும், நூலகம் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படும் மறைவுப் பக்கம் ஒன்றிலும் பேனா மை கொண்டு அல்லது எண்ணீடும் கருவி கொண்டு பதியப்பட வேண்டும். தலைப்புப் பக்கமும் இறுதிப்பக்கமும் பாவனை காரணமாக கிழிந்துவிடும் பட்சத்தில் நூலுக்கான வரவுப்பதிவெண்ணை இனங் காண்பதற்கும், நூல் விபரப்பதிவேட்டில் அதனை சரிபார்ப்பதற்கும் இந்த மறைவுப்பக்கம் உதவும். பெரும்பாலான நூலகங்கள் 25–30 இடையிலான பக்கங்களில் ஏதாவதொன்றை இதற்கெனப் பயன்படுத்துகின்றன.

- நூல் வரவுப்பதிவேட்டில் எக்காரணங் கொண்டும் திருத்தங்கள் மாற்றங்கள் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

*ஸ்ரீ - அருளானந்தம்*

# நூலகமும் கல்வியும்

## அன்றும் இன்றும்



பேராசிரியர்
வி.சிவசாமி

மனிதர் மனிதர்களாக, மனிதநேயமுள்ளவர்களாக வாழ்வதற்குக் கல்வி அவசியமாகும். உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த ஞானிகள், கவிஞர்கள், அறிஞர்கள் மற்றும் பலரும் கல்வி இன்றியமையாததெனக் கருதி வந்துள்ளனர். பலர் இதனை நன்கு அழுத்தியும் கூறியுள்ளனர். தென்னாசியக் கல்வி மரபிலே ஒருவருக்கு ஆபரணங்கள், ஆடைகள் முதலியவற்றிலும் பார்க்கக் கல்வியே உண்மையான அணிகலன் என நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏனைய செல்வங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து கொண்டே போகும். ஆனால் கல்வியோ ஏனையோருக்குப் புகட்டுந் தோறும் குன்றாது அதிகரித்து வரும். இற்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதன நாகரிகங்களிலே கல்வியும் இடம் பெற்றுள்ளது. அக்காலம் தொட்டு இக்காலம் வரை கல்வி பல்வேறு வழிகளிலே முக்கியமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. முற்காலத்திலே சமூகத்திலே குறிப்பிட்ட சிலரே கூடுதலாகக் கற்றனர். கற்றவர்கள் தாம் கற்றவற்றை மற்றவர்களுக்கு ஏதோவகையில் புகட்டி வந்தனர். கல்வி நிறுவனங்கள் மட்டுமன்றிக் குறிப்பாகச் சமய நிறுவனங்கள் இத்தகைய பணியில் ஈடுபட்டன. ஆனால் இன்று அனைவருக்கும் கல்வி எனும் உயர்ந்த குறிக்கோள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இக்கல்வி எவ்வெவ்வறிவியல் பற்றியதாயினும் முற்காலத்திலே அது பெரும்பாலும் கேள்வியாகவே இருந்தது. திருவள்ளுவரும் "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்", "கற்றிலனாயினும் கேட்க" எனக் கூறியிருப்பது இக்கருத்தை வலியுறுத்தும். இங்கு கூடுதலாக வாய்மொழி, அல்லது செவிவழிக் கல்வியே குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய கல்விமுறையிலே தான் சமயங்களுக்குரிய புனித நூல்கள் பேணப்பட்டு வந்தன. ஆனால் வரிவடிவம் பயன்பாட்டில் வந்த பின்னரும், வாய்மொழிக்கல்வி வந்த பின்னரும் வாய்மொழிக் கல்வி தொடர்ந்து நெடுங்காலமாக நிலவி வந்துள்ளது. பழைய காலத்திலே களிமண், உலோகம், தாவரங்களின் இலைகள் (பனை ஓலை போன்றவை), மிருகங்களின் தோல், கல், கடதாசி, முதலியவற்றிலே மக்கள் எழுதிவந்தனர். ஆனால் கி.பி 15ம் நூற்றாண்டிலே அச்சுப்பதிவு செய்யும் முறையும், கடதாசிப் பயன்பாடும் ஏற்பட்ட பின் படிப்படியாக முற்காலத்திலும் பார்க்கப் பெருந்தொகையான நூல்கள் வெளிவரலாயின.

வரி வடிவத்தின் பயன்பாடு ஏற்பட்ட பின் வாய்மொழிக்கல்வியிலும் பார்க்க அறிவை ஒரு பொருளிலே எழுதிப் பிறருக்கும், பிற்சந்ததியினருக்கும் அதனை முது சொத்தாக்கிவிட்டுச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. வாய்மொழிக்கல்வி குறிப்பிட்ட ஆசிரியருடன் நின்று விடும். அவருக்கு நல்ல மாணவன் இருந்தால் தான் அவருடைய அறிவு தொடர்ந்து முன்னெடுக்கப்படும். ஆனால் உலோகம் அல்லது ஓலை போன்றவற்றில் எழுதப்பட்டவை நீண்ட காலம் நிலவும் வாய்ப்பைப் பெறுவன. ஓலைச்சுவடிகள் நன்கு பேணப்படாவிடில் பிரச்சினைகள் தோன்றும். எனினும் வரிவடிவம் – எழுத்தில் வந்துள்ள அறிவு நிலைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் கூடுதலாக உள்ளன. வடமொழியிலே எழுத்தினைக்குறிக்கும் 'அரம் என்னும் சொல் அழியாதது என்று பொருள்படும். களிமண் சுவடிகளாகவோ, செப்பேடுகளாகவோ, புத்தகங்களாகவோ, வேறு வடிவங்களிலோ அறிவியல்கள் நீண்டகாலமாக வெளிவந்துள்ளன.

இவ்வாறு அறிவியல்கள் பலவடிவங்களிலே வெளிவர அவற்றைத் தனிப்பட்டவகையிலும் நிறுவன ரீதியாகவும் சேகரித்துப் பயன்படுத்தும் வழக்கமும் ஏற்படலாயிற்று. தனிப்பட்ட வகையில் இவற்றைச் சேகரித்தவர்கள் தாமே அவற்றைத் தமது நூலகமாக ஒழுங்கு படுத்திப் பயன்படுத்தினர். மற்றவர்களுக்குத் தேவைக்கேற்றபடி உதவி செய்தனர். ஆனால் நிறுவன ரீதியாகச் சேகரிக்கப்பட்டவற்றை ஒழுங்குபடுத்திப் பயன்படுத்த நூலகர் அவசியமாயினர். இவ்வகையிலே, மேற்காசியாவில் இன்றைய ஈராக்கிலே முற்காலத்தில் ஆட்சி புரிந்த ஆசீரிய மன்னன். ஏற்படுத்திய ஆசுர் பணிபல் நூலகம் குறிப்பிடற்பாலது. நூலகர் பதவியை முதன் முதல் வகித்தவர் அனில் (அனு) எனும் பபிலோனியர் ஆவர். சின்னாசியாவிலுள்ள பேர்கமத்திலிருந்த நூல்நிலையத்திற்கு மார்க் அந்தனி எனும் உரோமானிய வீரர் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்தார் என்று கூறப்படுகின்றது. புராதன ரோமாபுரியிலிருந்த அல்பியான நூலகம் மிகப்புகழ் பெற்றதாகும். இந்தியாவிலும் நூல்களைச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தும் வழக்கம் நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது. புராதன இந்தியாவிலே தட்ஷசீலம், நாலந்தா, விக்கிரமசீலம், காஞ்சி முதலிய இடங்களிலிருந்த பல்கலைக்கழகங்களிலே பெருந்தொகையான நூல்கள் நூலகங்களிலே சேகரித்து ஒழுங்கு படுத்தி வைக்கப்பட்டிருந்தன என்று அறியப்படுகின்றது. இவற்றை ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்படுத்தினர். மேலும் அரண்மனைகள், இந்துக் கோவில்கள், மடங்கள், பௌத்த, சமணசமய நிறுவனங்கள் முதலியனவற்றிலே நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. இவற்றை விடத் தனிப்பட்டவர்கள் சிலரும் தத்தம் வீடுகளில் நூல்களைச் சேகரித்து வைத்திருந்தனர். இலங்கையிலே பௌத்த விகாரைகள், பிரிவேனாக்கள், இந்துக் கோவில்கள், அரண்மனைகள் முதலியவற்றிலே நூல்கள் சேகரித்து வைத்துப் பயன்படுத்தப்பட்டன. எனவே உலகின் பலபாகங்களிலும் கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், தனிப்பட்ட அறிஞர்களின் இல்லங்களிலே பல்வேறுபட்ட அளவுகளிலே நூலகங்கள் அமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

நூல்களை இலவசமாக வழங்குதலும் வித்தியதானமே. இதிஹாஸங்கள் புராணங்கள் எழுதப்பட்ட

ஏடுகளை வழங்குதலும், சிறந்த கொடையாகக் கருதப்பட்டமை அக்கினி புராணம் போன்றவற்றால் அறியப்படுகின்றது. பவிஷ்ய புராணத்திலே இவ்வாறு குறிப்பிட்ட நூல்கள் மக்களுடைய பயன்பாட்டுக்காக மடங்களிலே வைக்கப்படும் என அறியப்படுகின்றது. சிவபெருமான், விஷ்ணு, சூரியன் ஆகிய கடவுள்ரகளுக்கான கோயில்களிலே மக்கள் வாசிப்பதற்காக நூல்களை ஒழுங்குபடுத்தி வைப்பவர்கள், பசுக்கள், நிலம் ,பொன் முதலியவற்றைத் தானம் செய்வதால் ஏற்படும் புண்ணியத்தைப் பெறுவர் எனப் பவிஷ்ய புராணம் கூறுகின்றது.

யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்தது. யாழ்ப்பாண மாநகரசபை நூலகம் மிகச்சிறந்த நூலகமாக விளங்கி 1981இலே குண்டுவீச்சுத்தாக்குதலுக்குப் பலியாகிற்று. இது மிகவும் வேதனைக்குரிய சம்பவமே. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் ஒரு சிறந்த நூலகம் இருந்தது. சிறந்த கல்விமான்கள் பலரிடம் தனிப்பட்ட நூலகங்கள் இருந்தன. சில இடங்களில் சாதாரண ஆசிரியர்கள், சமயகுருமார்கள், சோதிடர், சித்தவைத்தியர் முதலியோரிடம் குறிப்பிடத்தக்க ஏடுகள், நூல்கள் இருந்தன. சேர். பொன்னம்பலம் இராமநாதன், கலைப்புலவர் நவரத்தினம், வணபிதா ஞானப்பிரகாசர், க.சி.குலரத்தினம், த.கைலாயபிள்ளை, பல்கலைக்கழகப் பேராசிரியர்களான கா.கைலாசநாதக்குருக்கள், சு.வித்தியானந்தன், வணபிதா சே.தணிகாசலம் அடிகளார், க.கைலாசபதி, ச.தனஞ்ஜெயராசசிங்கம் முதலியோரிடம் தனிப்பட்ட வகையிலே பல்வேறு பரிமாணங்களிலான நூலகங்கள் இருந்தன.

- **"வாசித்தல் ஒரு கலை, சிந்தித்தல் ஒரு கலை, எழுதுதலும் ஒரு கலையே" (சாள்ஸ்லாம்ப்)**
- **"கல்வியினாலே பெருந்தொகையான மக்கள் வாசிக்கக் கூடியவர்களாக விளங்கினாலும், தாம் வாசிப்பனவற்றிலே எவை வாசிக்க வேண்டியவை என்பதைப் பிரித்தறிய முடியாதுள்ளனர்" (ஜி.எம்.றெவெலியன்)**
- **"நான் உயிர் வாழ்வதற்காகக் கற்க மாட்டேன். ஆனால் கற்பதற்காகவே உயிர்வாழ விரும்புகிறேன்" (பிரான்சிஸ் பேக்கன்)**
- **"அறிவாளிகளுடைய காலம் காவ்யம் (இலக்கியம்) சாஸ்திரம் (அறிவியல்) ஆகியனவற்றைக் கற்பதிலே கழிகின்றது. ஆனால் அறிவிலிகளின் காலம் கடுந்துயரம், நித்திரை, கலகமாகியனவற்றிலே கழிகின்றது". (வடமொழி நீதிநூல்)**
- **"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" (ஔவை முதுமொழி)**

யாழ்ப்பாணத்திலே 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளிலே பாடசாலை, கிராம, நகர, மாநகரசபை, சமயநிறுவனங்கள் போன்றவற்றின் ஆதரவில் மட்டுமன்றி, தனிப்பட்ட அறிஞர்களின் இல்லங்களிலும் பல்வேறு அளவுகளிலே நூலகங்கள் இருந்து வந்தன. கல்லூரிகளிலே மிகச் சிறந்த நூலகம் வட்டுக்கோட்டையிலுள்ள

இவர்களிற் பலரின் நூல்கள் பல்வேறு அளவுகளிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலது. வேறு ஒரு சாரரின் நூல்கள் அவர்கள் படித்த பாடசாலை அல்லது வாழ்ந்த இடத்திலுள்ள பாடசாலை நூலகங்களில் இடம் பெற்றுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்திலே கடந்த இரு தசாப்தங்களாக நிலவி வந்துள்ள போர்க்கால சூழ்நிலை, போர் அனர்த்தங்களால் தனிப்பட்டவர்கள் பலர் சேகரித்த நூல்கள், ஏடுகளிற் பலவும் நூலகங்களில் பேணப்பட்டவற்றுள் கணிசமானவையும் அழிந்து விட்டமை பேரிழப்பே. இப்பொழுது பல மீள அமைக்கப்பட்டு வருவதும், புதியன அமைக்கப்படலும் பாராட்டற்குரியன.

நூலகங்கள் நிறுவனங்களின் ஆதரவிலோ அல்லது தனிப்பட்டவர்களின் ஆதரவிலோ இருந்தாலும் அவை இருக்கும் பிரதேசங்களிலே இருந்தாலும் அவை இருக்கும் பிரதேசங்களிலே வாழும் மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குவன. பல தரப்பட்ட மக்களின் அறிவுத்தேடலுக்கான கற்பகதருவாகவும் அவர்களின் அறிவுத்தாகத்தைத் தணிக்கும் வற்றாத சுனைகளாகவும், அறிவைப்பெருக்கும் அருநிதிக் களஞ்சியங்களாகவும் அவை விளங்குதல் சாலச்சிறந்ததாகும்.

நூலகங்கள் வாசகர்களின் நன்மையைக்கருதியே அமைக்கப்படுவன. எனவே வாசகர்கள் அதனைப்பயன்படுத்தும் முறையிலும் அவர்களுக்கு உதவும் வகையிலும் நூலகங்கள் இயங்கி வருவதும் அவசியமாகும். நூல்களைப் பலரும் கற்பதும், கற்பவர்களை உற்சாகப் படுத்துவதும் முக்கியமே. ஒருவர் தனக்குத் தேவையான அறிவினைத் தனிப்பட்ட வகையிலே குருவிடம் மட்டுமோ, நிறுவனரீதியிலோ பெறமுடியாது. மேலும் ஓரளவு கற்றுப் பின்னர் படிக்க விரும்புபவர்கள், நன்கு கற்றவர்கள், கல்வியில் ஈடுபாடு உள்ள வயோதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் முதலிய பலருக்கும் நூலகங்கள் ஏதோவகையில் துணைபுரிவன. அவர்களின் அறிவை அதிகரிப்பன, வளப்படுத்துவன. இந்தவகையில் அவர்களுக்கு உதவும் வகையில் நூலகங்கள் அமைந்திருப்பதே மிக நன்று.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு நூல்களை வாசிக்கும் பழக்கம் நெடுங்காலமாக நிலவிவந்துள்ளது. வாசிப்பதனாலே அறிவு வளரும், ஏற்கனவே பெற்ற அறிவு மெருகு பெறும், காலத்திற்கு ஒவ்வாதவை கைவிடப்பட்டு புதிய கருத்துக்களை அறியும் வாய்ப்பு ஏற்படும். இன்று கணினி, இன்ரர்நெற் போன்ற புதிய ஊடகங்கள் தோன்றியுள்ள போதிலும் அவற்றினைப் பயன்படுத்தும் வாய்ப்பு அனைத்து மக்களுக்கும் கிடைக்குமோ என்பது ஐயமே. இவற்றையும் பயன்படுத்தும் வகையில் சில நூலகங்களையாவது அமைக்கலாம். எனினும் நூல்வாசிக்கும் பழக்கம் தொடர்ந்து நிலவும் எனலாம். ***"நூல்களை வாசித்தல் ஒரு மனிதனை (அறிவை) முழுமையாக்குகின்றது. கலந்துரையாடி ஆராய்வதால் அவன் எப்பொழுதும் (ஒன்றைப்பற்றிக் கூறுவதற்குத்) தயார் நிலையிருப்பான். (தன் கருத்துக்களை) எழுத்துருவத்திலளிக்கும் போது அவன் துல்லியமாகவே கூறும் ஆற்றல் பெறுவான்"*** எனப் பிரான்சிஸ் பேக்கன் எனும் மேலைநாட்டு அறிஞர் கூறியிருப்பது மனங்கொளற்பாலது. இதே அறிஞர் "படித்தல் இன்பத்திற்கும், அணிக்கும், ஆற்றலுக்கும் ஏதுவாகும்" எனவும் கூறியுள்ளார்.

***"இன்றும், எப்பொழுதும் மிகச்சிறந்த நண்பனாகவே ஒரு சிறந்த நூல்விளங்கும்"*** என எம்.எவ் தப்பர் எனும் அறிஞர் கூறிய கருத்து குறிப்பிடற்பலாது. நூல்கள் பொதுவாக அவ்வக்கால அறிஞர்கள், ஞானிகள், கவிஞர்கள் முதலியோரின் மிகச்சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியனவாகவே விளங்கும். ***"ஒரு சிறந்த நூல் அந்த நூலாசிரியரான அறிஞரின் மேலான உயிர்ப்பின் விலைமிக்க ஜீவஇரத்தமாகும். (அவரின் பின்னரும்) அது தொடர்ந்துநிலவும் வகையிலே நன்கு பேணி (நூல்வடிவிலே) பாதுகாக்கப்பட்டுள்ளது"*** என ஜோன் மில்ரன் எனும் ஆங்கிலக் கவிஞர் கூறியுள்ளமை மிகப்பொருத்தமானதே. நூலாசிரியர் இவ்வுலகைவிட்டுப் போன பல நூற்றாண்டுகள், ஆயிரம் ஆண்டுகளின் பின்னரும் வாசகரும் பிறரும் அவரை நினைவு கூருவது கண்கூடு. வால்மீகி, இளங்கோ, காளிதாசன், கம்பன், மில்டன், சேக்ஸ்பியர் போன்ற பெரிய கவிஞர்கள், நாடகாசிரியர்களையும், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், கௌடில்யர், திருவள்ளுவர் போன்ற சிந்தனையாளர்களையும் இவ்வகையிலே குறிப்பிடலாம்.

நூல்கள் பலவகையாக எண்ணிறந்தனவாகக் கடந்த ஒரு நூற்றாண்டாக வெளிவந்துள்ளன. எல்லா நூல்களையும் எவரும் படிக்க முடியாது. எனவே வாசகர்கள் தத்தம் தேவைக்கேற்றவாறு, மிகச்சிறந்த நூல்களைத் தெரிவு செய்து அவற்றினை முழுமையாகவோ அல்லது தேவைக்கேற்றபடி அவற்றின் சில பகுதிகளையோ கற்றுப்பயனடைய வேண்டும். அவற்றின் சாராம்சத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். நீருடன் கலந்துள்ள பாலை அன்னம் எவ்வாறு பிரித்துப்பருகுகின்றதோ அவ்வாறே நூல்களின் சாரத்தைக் கிரகிக்க வேண்டும். ஏனெனில் கற்பவரின் வாழ் நாள் குறைவு. அவருக்குப் பல நோய்கள் வரலாம். ஆனால் கல்விக்குக் கரையில்லை. இந்தக் கருத்துக்களை உள்ளடக்கியவாறு

**"கல்வி கரையில கற்பவர் நாள் சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல — தெள்ளிதின்**
**ஆராயந்து அமைவுடைய கற்பவே**
**நீ ரொழியப் பாலுண் குருகில் தெரிந்து"**

என வரும் நாலடியார் பாடல் உற்று நோக்கற்பாலது.

**"காற்றும் ஒளியும் நீரும் எங்ஙனம் மக்களில் வேறுபாடு காட்டாமல் எவ்வாறு பயன் தருகின்றனவோ அது போலவே அறிவும் மக்கள் அனைவருக்கும் தரப்பட வேண்டும். இதற்கான நல்ல சாதனம் நூலகமே"**

**வே. தில்லைநாயகம்**

நூலகங்கள் எங்கெங்கு அமைக்கப்படுகின்றனவோ, அவ்விடத்துத் தேவைகளை, கல்வித்தேவைகளை நிறைவேற்றும் வகையிலே விளங்க வேண்டும். நூல்கள், சஞ்சிகைகள் புதினத்தாள்கள் முதலிய பிரசுரங்களை மட்டுமன்றிப் பழைய ஏடுகள், முன்னோர் பயன்படுத்திய பொருட்கள் – பழைய நாணயங்கள், பாவனைப்பொருட்கள், முக்கியமான சிற்பங்கள் போன்றவற்றையும் வசதிப்படி உள்ளடக்கியிருக்கலாம். வரலாறு தொடர்பான வேறு சான்றுகளையும் கிடைப்பதற்கேற்பச் சேகரித்து ஒழுங்கு படுத்தி வைக்கலாம்.

நூலகங்களைப் பலரக வாசகர்களும் பயன்படுத்துவதால், அவரவர் ஈடுபாடுகளுக்கேற்ப நூல்களும், பிறபிரசுரங்களும் இடம் பெறல் அவசியமே. மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வி ஆர்வலர், முதியவர்கள் எனப்பலவகை வாசகர் உள்ளனர். இத்தகையோரின் ஈடுபாட்டிற்கேற்ப நூல்கள் இடம்பெறில், இவர்கள் தத்தம் ஓய்வுநேரங்களைப் பயனுள்ள வகையிலே கழிக்க வாய்ப்புக்கள் ஏற்படும். சமூகத்திலே வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கும். அறிவு வளம் பெறும்.

மேலும் நூலக வசதிகளை வாசகர் நன்கு பயன்படுத்தும் வகையிலே நூலகர், அவரின் உதவியாளர்கள் அவர்களுக்குத் தேவையான சில தகவல்கள் போன்றவற்றைப் பெற உதவி செய்தல் மிக நன்று. அதே வேளையில் வாசகரும் நூலகத்திலுள்ள நூல்களையும், பிறபிரசுரங்களையும் தங்களுடைய உடைமைகளிலும் பார்க்க நன்கு கவனமாகப் பயன்படுத்தலும் அவசியமே. நூலகம் போன்றவை மக்களுடைய பொதுச்சொத்து. பலரும் பயன்பெற வேண்டிய சொத்து. எனவே அதனையும் நன்கு கவனிக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்திலே நூலகங்கள் வளர்ச்சி பெற்ற நாடுகளிலே பல்வேறு வசதிகளுடன் விளங்குகின்றன. வளர்முக நாடுகளிலும் நூலகங்கள் பல இருப்பினும் பலவற்றிலே நவீன வசதிகள் குறைவாகவே உள்ளன. ஆனால் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி நூலகங்களை அமைப்பது மட்டுமன்றி அவை தொடர்ந்து நன்கு இயங்குவதையும் கவனித்தல் அவசியம்.

இன்று யாழ்ப்பாணத்திலே வாசிக்கும் பழக்கம் குறைந்துவருகின்றது. கல்வித்தரம் வீழ்ச்சியடைகின்றது. எனப் புதினப் பத்திரிகைகளிலும், கூட்டங்களிலும் அடிக்கடி கூறப்படுகின்றது. இற்றைக்குச் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் நூலகங்கள் இன்றைய காலத்திலும் பார்க்க மிகக்குறைவாகவே இருந்தன. ஆனால் அக்கால நோக்கிலே கல்விநிலை குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. அக்காலகட்டத்திலே யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரபல எழுத்தாளரும், 'கல்கி' ஆசிரியருமான திரு. கிருஸ்ணமூர்த்தி தான் யாழ்ப்பாணத்தில் எங்கு சென்றாலும் தமிழ்ப் புலமையாளர்களை (பண்டிதர்களை)க் கண்டதாக வியந்து கூறியுள்ளார். அப்புலமையாளரிடம் தனிப்பட்ட சிறு நூலகங்கள் இருந்தன என்பதும் குறிப்பிடற்பலாது. எனவே நூலகங்கள் காலத்தின் தேவைகளுக்கேற்றவாறு மக்களுடைய கல்வித் தேவைகளை நிறைவேற்ற முயலுதலும், வாசிப்புப் பழக்கம், புலமை, அறிவை வளர்ப்பதற்கு செயலாற்றுதலும் சாலவும் நன்றே.

# மாணவி ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள்



— கார்த்திகா ஞானசோதியன் —
(யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்)

## ☺ உங்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியது யார்?

வாசிப்புப் பழக்கம் என்பது சுயமாக ஏற்பட வேண்டியது. திணிக்கக் கூடாது. ஆனாலும் பிள்ளைகளுக்கு வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டிய முதற் கடமை பெற்றோர்களுக்கே உண்டு. அக் கடமையை எனது பெற்றோர்கள் செய்திருக்கின்றனர் என்றே எண்ணுகின்றேன். அடுத்தது எனது தாத்தா. அவர் வீட்டிற்கு வரும்பொழுதெல்லாம் அதில் வாசித்தேன் இதில் வாசித்தேன் என்று சுவாரஸ்யமான விடயங்களை எல்லாம் கூறுவார். இதுவும் எனது வாசிப்புப் பழக்கத்துக்குப் பிரதான காரணமாகும்.

## ☺ எப்போது வாசிக்கத் தொடங்கினீர்கள் ?

விபரமறியாத பருவத்திலிருந்தே நான் வாசிக்கத் தொடங்கி விட்டதாக எனது பெற்றோர்கள் கூறுவார்கள். ரஷ்ய மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், சிறுவர் சஞ்சிகைகள் போன்றவற்றை எனது தந்தையார் வாங்கித் தந்ததாக எனது தாயார் கூறுவார்கள் ஆனாலும் நாலாம் வகுப்பிலிருந்து வாசித்தவை தான் எனது நினைவில் நிற்கின்றன. அப்போதிலிருந்து கிடைத்தவை எல்லாவற்றையும் வாசிப்பேன்.

## ☺ பொது நூலகத்திற்குள் எப்போது நுழைந்தீர்கள் ?

நான்காம் ஆண்டிலிருந்தே யாழ் பொதுசன நூலகத்துடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டதற்கு மூலகாரணமாய் இருந்தவர் ஆ. சபாரத்தினம் என அறியப்படுகின்ற எனது தாத்தா தான். அவர் ஒரு நடமாடும் அறிவுக் களஞ்சியம். அவர் மூலமாகத் தான் பாடசாலைக் காலங்களில் எனது அறிவுப் பசிக்குத் தீனி கிடைத்தது.

**உங்களை முழு மையான வாசகராக்கியது எது ?**

பல்துறை அறிஞர்கள் மத்தியிலும் நின்று கதைக்கக்கூடிய ஆற்றல் இருக்கவேண்டும் என்ற எனது பேரவாவும், இதனை நிறைவேற்ற வேண்டுமாயின் அறிவுப் பிரபஞ்சத்துக்குள் முடிந்தவரை நுழைய வேண்டும் என்ற ஆசையுமே என்னை முழுமையான வாசகியாக்கியுள்ளது எனக் கருதுகின்றேன்.

**வாசிப்புப் பழக்கம் தொடர்பாக இன்றைய இளம் சிறார்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன ?**

வாசிப்புப் பழக்கமற்ற எந்தச் சமுதாயமுமே முன்னேற்றமடைந்ததாக வரலாறு இல்லை. துரதிஷ்டவசமாக எமது சமுதாயத்தில் தற்போது பட்டப்படிப்பு என்பது முக்கியமானதாகக் கருதப்படுவதால் கல்விச் செயற்பாடுகளிலேயே பெரும்பாலான மாணவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர். அவர்களுடைய பெற்றோர்கள் கல்வி சம்பந்தமானவை தவிர வேறெதுவும் வாங்கிக் கொடுப்பதில்லை. ஏன் தினசரிப் பத்திரிகைகள் கூட அவர்கள் வாங்குவதில்லை. அதனால் பெரும்பாலான மாணவர்கள் கிணற்றுத் தவளைகளாகவே இருக்கின்றனர். பொது விடயங்கள் தெரிவதில்லை. இதனை நான் எனது நண்பர்கள் மூலம் உணர்கின்றேன். என்னை நினைத்து எனக்கு ஒரு திருப்தி ஏற்படுகிறது. ஏனெனில் எனது வாசிப்புப் பசிக்குப் பெற்றோர்கள் ஒருபோதுமே பட்டினி போட்டதில்லை. இதற்குக் காரணம் எனது பெற்றோர்களும் அவர்களது முன்னோர்களும் வாசிப்பில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதே என எண்ணுகின்றேன். எனவே இன்றைய சிறார்களுக்கும் அவர்களது பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே உறுதுணையாக இருப்பார்களானால் வாசிப்புப் பழக்கமுள்ள ஒரு சமுதாயத்தை எம்மால் விரைவிலேயே உருவாக்கிக் கொள்ள முடியும்.

"விரும்பிய பாடத்தை விரும்பிய நேரத்தில்
விருப்பப்படி சென்று படிக்கக்,
கதவுகளை விரியத் திறந்து வைத்துக் கொண்டு,
வருக! வருக! என வரவேற்றுக் காத்திருக்கும் நூலகங்களும்,
இதோ! இதோ! வென இன்னமுதூட்டி இரு கரம் நீட்டி
அழைக்கும் நூல்களும் இருக்கும் வரை
அந்தச் சமூகம் அறிவமுதம் பெற்ற சமூகமாக இருக்கும்.

# கல்விக்குத் துணையாக...



- சிற்பி -

மக்கள் ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாதது. பல்லாண்டுகளாக இவ்வுண்மையை வலியுறுத்தி வரும் அறிஞர்கள் கல்வி சம்பந்தமான பல விளக்கங்களையும் வரை விலக்கணங்களையும் வெளியிட்டுள்ளனர்.

கல்வி என்பது வெறும் தகவற் திணிப்பு அன்று என்பதையும் மக்களைத் தகவல் களஞ்சியங்களாக ஆக்குவது அதன் நோக்கமன்று என்பதையும் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். தொழில் வாய்ப்பை, அதன் மூலம் பொருளாதார வளத்தைப் பெறுவதற்குக் கல்வி உதவுமாயினும் கல்வியின் இறுதி இலட்சியம் அதுவன்று. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கல்விச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஆனால் அவை மட்டுமே கல்விக்குரியவை எனக் குறுக்க முடியாது.



அப்படியானால் கல்வி என்பது என்ன? மக்களுடைய சிந்தனையில், மனப்பாங்கில், செயலில் ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான, முன்னேற்றகரமான மாற்றங்களை விளைவிக்கின்ற. செயற்பாடே கல்வி என்பதை அதன் தத்துவார்த்த விளக்கமாகக் கொள்ளலாம்.

*"கற்க கசடறக் கற்பவை, கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்ற திருவள்ளுவரின் குறட்பா மேற்கூறிய விளக்கத்தை அரண் செய்கின்றது. கற்பவற்றைக் கசடறக் கற்க வேண்டும். கசடு என்பது ஐயம் திரிபுகளாகிய குற்றங்கள். இக்குற்றங்கள் இன்றிக் கற்றபின் கற்றபடி ஒழுகுதல் வேண்டும். நீதி எது? தர்மம் எது? நன்மை எது? புண்ணியம் எது? என்பன போன்றவற்றை நன்கு ஆராய்ந்து, தேர்ந்து, தெளிந்து அவற்றை வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டும் என இதனை விரித்துரைக்கலாம்.

இத்தகைய கல்வி குறிப்பிட்ட ஒரு பருவத்திற்கு மட்டும் உரியதன்று. ஏதோ ஒரு வயதுடன் முற்றுப் பெறுவதுமன்று. மரண பரியந்தம் தொடர்வது: தொடரப்பட வேண்டியது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது ஓர் உன்னதமான மனப்பாங்கின் வெளிப்பாடு. எந்த ஊரையும் தன் சொந்த ஊராக உணரும் மனப் பக்குவம் சித்திப்பது எளிதன்று. கல்வியின் விளைவான அன்பு, கருணை, நீதி, தர்மம் முதலிய பண்புகள் நிறைந்தவர்களிடம்தான் இப்படியான பரந்த மனப்பான்மை – மானிட நேயம் உருவாகும்.

இத்தகைய உயர்ந்த மனப்பாங்கை ஏற்படுத்தும் கல்வியைச் சாகும் வரை கற்காமல் ஒருவன் வீணாகக் காலங் கழிப்பதேன்? எனக் கேட்பதன் மூலம் அதன் அவசியத்தை அழுத்திச் சொல்கின்றார் திருவள்ளுவர்.

*"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாதவாறு".*

என்பது வள்ளுவர் வாக்கு. சாந்துணையும் கற்பதற்கு நல்ல நூலகங்கள் பெரிதும் உதவக் கூடியவை. அவற்றில் இருப்பவை வெறும் புத்தகங்கள் – அஃறிணைப் பொருட்கள் அன்று. அவற்றை ஆக்கியவர்களின் உள்ளக் கிடக்கையை, உயர்ந்த இலட்சியங்களை உறுதியாக எமக்குரைக்கும் உயிர்த்துடிப்பு மிக்க "உயர்திணை"ப் பொருட்கள்! அத்தகைய நல்ல நூல்களை வாசித்து நல்ல இலட்சியங்களைத் தெளிந்து கொள்வதன் மூலம் அவற்றின் ஆசிரியர்களை நமது நண்பர்களாக்கிக் கொள்ளலாம்.

ஒருவனுக்கு அவனுடைய நண்பர்கள் செய்ய வேண்டிய கடமை அவனுடன் சிரித்துப் பேசி மகிழ்வது மட்டுமன்று. எதைச் செய்வது என்பது தெரியாமல் அவன் தடுமாறும் போது, பிழையானவற்றைச் செய்ய முயலும் போது, பிழைகளை இடித்துக் காட்டி அவற்றைச் செய்ய விடாமல் தடுத்து நல்லவற்றைச் செய்ய வழிகாட்டுவதாகும். தம் நூல்களின் வாயிலாக இப்பணியைச் செய்பவர்கள் நூலாசிரியர்கள். கணினிப் பதிப்பு வசதிகள் நிறைந்துள்ள இக்காலத்தில் நூல்களின் தொகை பல்கிப் பெருகி வருகின்றது.

*கல்வி கரையில கற்பவர் நாள்சில*
*மெல்ல நினைக்கில் பிணி பல — தெள்ளிதின்*
*ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீர் ஒழியப்*
*பாலுண் குருகின் தெரிந்து.*

என்பதை நினைவில் நிறுத்தி நூல் அகத்தை – நூலின் உள்ளே இருப்பவற்றை – நன்கு ஆராய்ந்து மக்களுக்கு "அமைவுடைய" நூல்களை மட்டுமே நூலகங்களில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

இணுவிலில் இயங்கவுள்ள அறிவாலயம் என்னும் நூல் நிலையம் கல்விமான்கள், அறிஞர்கள், கலைஞர்கள், தொண்டர்கள் நிறைந்துள்ள சீரிணுவைத் திருவூரின் கல்வி, கலை, கலாசார, பண்பாட்டுத்தரத்தை மேலும் உயர்த்துவதிற் பேருதவி புரியும் என்பது திண்ணம்.

# பழக்கப்பண்பாடு ஆவணக்காட்சியகம்

ஒரு சமூகம் ஒன்றிணைந்து அதிலே உள்ள சகலரையும் ஏதோ ஒரு வகையில் உறவினராகக் கொண்டு நடக்கின்ற குழுமத்தையே சமுதாயம் (Community) என்று கூறுவார்கள். இந்த சமுதாயத்தின் வாழ்வில் அதனுடைய நடைமுறைப் பண்பாடு / பண்பாட்டுப் பழக்கம் என்பது மிக முக்கியமானவொன்றாகும். எந்த ஒரு சமுதாயமும் இயங்குவதற்கு அதனுடைய பண்பாட்டு நடைமுறைகள் மிகமிக முக்கியமானவை. இந்தப் பண்பாட்டு நடைமுறைகள் என்று கூறும் பொழுது அவை ஒரே நேரத்தில் அந்தச் சமுதாயத்தினுடைய வரலாற்றுப் பேறுகளையும், அவர்களுடைய நடைமுறைத் தேவைகளையும் மாத்திரம் அல்லாமல், அவர்களுடைய நம்பிக்கைகள், அவர்களுடைய உறவின் பரஸ்பர தன்மைகள் ஆகியன யாவற்றையும் இணைத்துக் காட்டுவதாக இருக்கும்.



பேராசிரியர்
கார்த்திகேசு சிவத்தம்பி

குறிப்பாக யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொள்வோமேயானால் ஒவ்வொரு கிராமமும் அல்லது கிராமத்தின் ஒவ்வொரு பகுதியும் சமுதாயங்களாகவே இருந்து வந்துள்ளன. இந்தச் சமுதாய இறுக்கம் இன்னுமொரு சற்று நவீனமயமாக்கப்பட்ட முறைமையிலே கடந்த — ஏறத்தாழ 50 வருட காலமாக யாழ்ப்பாணச் சமூக வாழ்க்கையிலே தெரியப்பட்டு வந்துள்ளது. அதனால் தான் ஒவ்வொரு சமூகக் குழுமத்தினரும் அல்லது சமுதாயக் குழுமத்தினரும் தங்களுக்கென ஒரு வாசிகசாலையையும் நூல் நிலையத்தையும் வைத்துக் கொள்வார்கள். அதிலிருந்து யார் யார் அந்தக் கிராமம் என்கின்ற பெரும் குழுமத்தினுள் சமுதாயங்களாக வாழ்கின்றனர் என்பதனை நாங்கள் இனங்காண முடியும். ஆனால் ஒட்டுமொத்தமான ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டு, அந்தக் கிராம மக்களின் வாழ்க்கையை நாம் பார்க்க வேண்டுமேயானால், அந்தக் கிராமத்தில் உள்ள தொழில் முறைமைகள் யாவை? பாரம்பரியமான அல்லது நடைமுறைத் தொழில் முறைமைகள் யாவை? அந்தத் தொழில் முறைமைகளுக்கான உற்பத்தி முறைமைகள், அவற்றிற்கு வேண்டிய வளங்கள், அவற்றினுடைய கேள்விகள் எல்லாவற்றையும் உள்வாங்கி, அவர்களுடைய நாளாந்த அசைவியக்கத்தைக் காட்டுகின்ற முறையில் அமைகின்ற விடயங்களை ஒன்றாகத் தொகுத்து ஓரிடத்திலே வைத்திருப்பதன் மூலம் நாங்கள் அவர்களுடைய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக யாழ்ப்பாணத்துக்குக் கிராமம் ஒன்றை எடுத்துக் கொள்வோமேயானால் பெரும்பாலும் அங்கு ஒரு விவசாய குடியான தன்மை (Peasant agriculture) ஒன்று காணப்படும். அங்கு ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறைமை ஒன்று காணப்படும்.

அந்த உற்பத்தி முறைமை என்பது ஒரு அச்சாணியான விடயம். ஏனெனில் அந்த விவசாயமோ அல்லது விவசாய முறைமையோ எவ்வாறு இயங்குவது என்பதற்கு அது தான் எமக்கு களமாக இருந்து முழு உண்மையும் காட்டுகின்றது. யார் யார் ஈடுபடுகின்றார்கள்? எத்தகைய காணி புலங்களில் ஈடுபடுகின்றார்கள்? அவர்கள் எவற்றை பயிர்களாக விளைவிக்கின்றார்கள் ? அந்தப் பயிர்களை விளைவிப்பதற்காக பயன்படுத்துகின்ற சாதனங்கள் யாவை? தொழில் நுட்பங்கள் யாவை? அவற்றுக்கான பசளையானது அவற்றை எவ்வாறு பயன்படுத்து கின்றார்கள்? அவை நவீனமான உத்திகளா அல்லது பாரம்பரிய உத்திகளா, அல்லது நவீனமும் பாரம்பரியமும் சேர்ந்த உத்திகளா? அவற்றை எவ்வாறு பகிர்ந்து கொள்கின்றார்கள்? அதனாலே ஏற்படுகின்ற இலாபம் அல்லது உபரி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது? என்று இவை முழுவதையும் எடுத்துக் கொண்டோமேயானால் உண்மையில் அந்தக் கிராமத்திலுள்ள விவசாயத்தன்மையை / தோட்டச் செய்கையை மாத்திரம் அல்லாமல் அதனோடு அந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு மக்கட் குழுமங்களுக்குமுள்ள உறவுகளை நாங்கள் அறிந்து கொள்ளலாம். தோட்டத்துக்கு தொழிலுக்கென வருபவர்கள் யார், அல்லது தோட்டத்திலே நாங்கள் அறுவடை செய்த பின்பு யார் யாருக்கு என்னென்ன கொடுக்க வேண்டும், எவ்வாறு கொடுக்கின்றோம், சந்தைப்படுத்தல் எவ்வாறு நடைபெறுகின்றது, யார் சந்தைக்குப் போகின்றார்கள், சந்தையினுடைய தன்மைகள் என்ன, என்பது மாத்திரமல்லாமல் இந்த உற்பத்தி முறைமைக்கு வேண்டியவையான கருவிகள் யாவை, இந்தக் கருவிகளுடைய தன்மைகள் யாவை, இவற்றிலே பாரம்பரியமானவை எவை, நவீனமானவை எவை, இவை எவை எவற்றிற்கு நாங்கள் சில புதுமைகளைக் கொண்டு வந்துள்ளோம் என்று – இவை யாவற்றையும் தொகுத்தெடுத்து ஓரிடத்திலே வைக்க முடியுமானால், உண்மையில் அந்தக் கிராமத்து வாழ்க்கையினை நாங்கள் எங்கள் கண்களால் நிதர்சனமாகக் காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு நாம் குறிப்பிட்ட உற்பத்தி முறைமையை மையமாகக் கொண்டு அதற்கு வேண்டிய பொருட்கள் யாவற்றையும் அல்லது அந்தக்கிராமம் அந்த உற்பத்தியோடு எவ்வாறு ஈடுபடுகின்றது என்பதனை ஒருங்கு சேர்த்துக் கொண்டு வருகின்ற பொழுது, சமூக மானிடவியலிலும் – சமூகவியலிலும் கூறப்படுகின்ற (Material culture) புழக்கப் பண்பாடு அதாவது சாதாரண புழக்கத்திலுள்ள பண்பாட்டு நிலையை நாம் அறிந்து கொள்ளலாம். அங்கு எப்பொழுதும் ஒரு உற்பத்தி முறைமையே மேலோங்கி நிற்கும், ஆனால் சில கிராமங்களில் இரண்டு மூன்று வகையான உற்பத்தி முறைமைகள் இருக்க முடியும். விவசாயத்தை எடுத்துக் கொண்டால் – நெற்செய்கை ஒரு புறமாகவும், தோட்டச்செய்கை இன்னொரு வகையாகவும் அமைந்திருக்கும். ஆனால் தோட்டச்செய்கையில் அந்த மக்களுடைய ஈடுபாடு அதிகமாக இருக்கும். இது ஒரு நிலை. இன்னொரு கட்டத்தில், விவசாயம் ஒருபுறமாயிருக்க இன்னொரு புறத்தில் மீன்பிடி போன்ற தொழில்கள் முக்கியமானதாயிருக்கும். அத்தகைய கிராமங்கள் மிகக்குறைவு. இருந்தாலும் அவற்றை நாம் ஒன்று திரட்டிப் பார்ப்போமேயானால், அவற்றினுடைய தன்மைகள் எல்லாவற்றிலும் நாம் இரண்டும் இணைந்திருப்பதைக் காணலாம்

உதாரணமாகச் சந்தை விடயங்களில் பொருள் கொள்வனவு விடயங்களில் எவ்வாறு இணைந்தும் தனித்தும் வாழ்கின்றன என்கின்ற நிலைமைகளைக் காணலாம், அப்போது அந்தக்கிராமம் பொதுவாக இருக்கின்றது என்பது எங்கே தெரியும் என்றால் கோயில், சந்தை போன்ற பொதுவிடயங்களில் நிச்சயமாகப் பாரம்பரியமாக ஒரு பொதுத்தன்மையைக் காணலாம்.

யாழ்ப்பாணத்து வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் ஒரு கிராமத்தினுடைய பொது நிலையமாக அந்தக் கிராமத்துக் கோயில்கள் விளங்குவதைக்காணலாம். நமது மரபின் படி கோயிலுக்குச் செல்லக்கூடியவர்கள், செல்ல முடியாதவர்கள் என்கின்றவர்கள் கூட அந்தக் கோயில்களிலே திருவிழாக்களுக்கு அவற்றினுடைய முகாமையில் அவர்களுக்கு இடமுண்டு. இவற்றையெல்லாம் நாங்கள் மனதிலே வைத்துக்கொண்டு குறுகிய அளவிலாவது வேண்டிய பொருட்களைச் சேர்த்து வைப்போமேயானால் அவை ஒரு அற்புதமான அருங்காட்சியகத்தை நமக்குத் தருவது மத்திரமல்லாமல், குறிப்பாக நமது மாணவர்கள், இளவயதினர் அந்த அந்தக் கிராமத்து வாழ்க்கை முறை எவ்வாறு இயங்குகின்றது என்பதனையும் நன்கு அறிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும்.
இணுவில் கந்தசுவாமி கோயிலடியில் இத்தகைய ஒரு அருங்காட்சியகம் உருவாகிக் கொண்டிருக்கின்றது என்று நண்பர் ஞானசூரியர் என்னிடம் குறிப்பிட்டபோது, ஒவ்வொரு உற்பத்தி முறைமையையும் அதனுடன் இணைந்தவற்றையும் மையமாகக் கொண்டு இந் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது எம்மால் நடைமுறையில் பயன்படுத்தப் படுகின்ற விடயங்களைக் கொண்ட புழக்கப் பண்பாடு மிகத் தெளிவாகத் தெரியவரும். அதனை நாங்கள் சரியான முறையில் பேணுவோமேயானால் – வரும் சந்ததியினருக்குக் கூட நாங்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தோம் என்பதனைக் காட்டுவதாக முடியும் என நான் கூறினேன். இவ்வாறு கூறுகின்ற பொழுது ஒவ்வொரு கிராமமும் தங்களுக்கெனத் தனித்தனி அம்சங்களாக மற்றைக் கிராமங்களிலிருந்து தங்களைப்பிரித்துக் காட்டுகின்ற தனித்துவமான அம்சங்கள் யாவை என்பதனைப் பார்ப்பதற்கும், அதே வேளையில் தாங்கள் எல்லோரும் எவ்வாறு ஒரு பொதுப்பண்பாட்டிற்குள் வருகின்றோம் என்பதனையும் காட்டுகின்ற தன்மையாகவும் இருக்கும். இந்த விடயத்தில் நாங்கள் சற்று அகன்ற மனத்தோடு – திறந்த மனத்தோடு மற்றைய மதங்கள், மற்றைய தொழில் குழுமங்கள் போன்ற எல்லாவற்றையும், ஒட்டுமொத்தமாகவும் பார்க்கின்ற போதுதான் யாழ்ப்பாணம் பற்றிய – வடபகுதிபற்றிய – வடக்கு கிழக்கு பற்றிய ஒருமைப்பாடு / அடிப்படையான ஒருமைப்பாடு நமக்குத் தெரியும். இந்த முயற்சி மிகச் சிறப்பாக நடக்கவேண்டுமென்பது என்னுடைய பெருவிருப்பமாகும்.





அன்று மிருந்தேன்; இன்றும் இருக்கின்றேன்;
என்று மிருப்பேன்; எங்கு மிருப்பேன்;
கந்தலுமாவேன் ; கனகமும் கொள்வேன்;
வந்தனை செய்வார் வசமாய் விடுவேன்!




படிப்பை அறியேன்; படிப்போர்க்குதவுவேன்;
மிடியாம் இருட்டு விடியச் செய்வேன்;
குருடர் படிக்க, செவிடர் கேட்கத்
திருவாம் அறிவு தெவிட்டாதளிப்பேன்!

கல்லில் தொடங்கி, காலப்போக்கில்
களிமண் கட்டியில் கருத்துக்கள் ஈந்தேன்;
பப்பிரசுத் தாளில் பன்னாள் வாழ்ந்தேன்;
தோலாம் தாளிலும் துவண்டு இருந்தேன்;
மெழுகாம் ஏட்டிலும் மெதுவாய்த் தவழ்ந்தேன்
ஓலையை மட்டும் விட்டேனா நான்?



எல்லாம் படிக்க எழிலார் தாளிலும்
உருவம் கொண்டேன்; உருளும் உலகம்
அச்சுப் பெற்றதும் அனைத்தும் வளர்ந்தது.
அறிவிய லோட்ட அணைப்புச் சிறப்பால்
மைக்ரோ உருவிலும் மறைந்து நிற்கின்றேன்!





கன்னித் தமிழ் மொழி, கருத்துயர் ஆங்கிலம்,
இன்று மெத்தனை மொழிகளிவ் வுலகில்
அனைத்திலும் நானே! அறிவீர் என்னை?
நினைத்துப் பார்மின்; நினைத்துப் பார்மின்;
அழியா அறிவுச் சுரங்கம்
எழிலாம் புதிராம் என் பெயர் நூலே!



- வே. தில்லைநாயகம் -

# சீர் இணுவைத் திருவூர்க்கோர் அருங்காட்சியகம்

திரு.செல்லப்பா நடராசா

## வெற்றிலைத் தட்டம்



சைவத்தமிழ் மக்களது இல்லங்களில் வெற்றிலைத் தட்டங்களின் பாவனை தினசரி இருந்த காலம் ஒன்றிருந்தது. எமது பாட்டிமார் காலத்தில் வீட்டிற்கு வரும் எந்த ஒரு விருந்தினரையும் முதலில் அவர்கள் வெற்றிலை கொடுத்து உபசரித்தனர். இதற்காக வீடுகள் தோறும் அழகிய வெற்றிலைத்தட்டங்கள் அன்று பாவனையில் இருந்தன. இவை அனைத்தும் பித்தளையிலானவை. அழகிய வேலைப்பாடுகள் கொண்டவை. இவற்றுள் கால் தட்டங்கள் மிகவும் பிரசித்தமானவை. வட்டவடிவிலான சற்று உயரமான ஆசனத்தில் பொருத்தப்பட்டுள்ள தட்டங்களே கால்தட்டங்கள் என்று அழைக்கப்பட்டன. கலியாணம், பூப்புனித நீராட்டுவிழா போன்ற வைபவங்களில் இக்கால் தட்டங்களின் தேவைகள் பெரிதும் உணரப்படுபவை.

மணமகனுக்கோ, மணமகளுக்கோ, வளர்ந்து விட்ட மங்கை ஒருத்திக்கோ பால் அறுகு வைத்து நீராட்டும் வைபவங்களின் போது பாலையும் அறுகையும் வைப்பதற்குக் கால் தட்டங்களே வீடுகள் தோறும் பாவனையில் இருந்தன. புளிக்காப்புச் சார்த்திய பின் இவற்றின் அழகே தனியானது. இவ்வாறான அழகுமிகு கால் தட்டங்களின் பாவனை இந்நாட்களில் மிக அரிதாகி விட்டது. அரும் பொருட்காட்சியகங்களில் பார்க்க வேண்டிய நிலையில் இன்று கால் தட்டங்கள் இருக்கின்றன.சைவத்தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக்கலந்திருந்த பல பொருட்களை இன்று பார்க்க வேண்டுமாயின் அரும்பொருட் காட்சியகங்களையே நாடவேண்டியுள்ளது.

## பறைகள், கொத்துக்கள்

யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்கள் அனைவரும் கமக்காரர்களாக இருந்த ஒரு காலத்தில், நெல், குரக்கன், தினை, வரகு, போன்ற தானிய வகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட வேளையில் இவற்றைப் பறைக்கணக்காகவே விற்பனை செய்தனர். ஒரு பறை அரிசி, அல்லது நெல், குரக்கன், தினை என்பவை இருபத்து நான்கு கொத்து அளவுடையனவாகும்.. சரியாக ஆறு கொத்துக் கொள்ளக்கூடிய, கைபிடிகளுடன் கூடிய பறைகள் அந்நாட்களில் வீடுகள் தோறும் இருந்தன. தினை விளைவித்தவர்களிடம் ஒரு காற்பறை அல்லது அரைப்பறை தினை தர முடியுமோ என்றுதான் உசாவுவது நுகர்வோரது வழக்கமாகும். இன்று எந்தக் கமக்காரன் வீட்டிலாவது பறைகள் உண்டா?


அங்காடிகளில் சில்லறையாக அரிசி, தினை, குரக்கன் முதலியவற்றைக் கொத்துக்கணக்கில் விற்பனை செய்த காலமும் ஒன்றிருந்தது. ஒரு கொத்து, கால் கொத்து எனக் கொத்துக்கள் பாவனையிலிருந்த காலமும் இன்று மறைந்து விட்டது. பறைகளையும் கொத்துக்களையும் கூட இன்று மாணவர்கள் அரும் பொருள் காட்சியகங்களிலேயே பார்க்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

## கலப்பை

கலப்பைகளினால் உழவு செய்யப்பட்ட கமநிலங்கள் இன்று உழவு இயந்திரங்களினால் உழவு செய்யப்படுவதனால் கலப்பைகளையும் பார்க்க வேண்டுமாயின் எவரும் அரும்பொருட்காட்சியகங்களுக்கே செல்ல வேண்டிய நிலையும் சிறிது சிறிதாக மேலோங்கி விட்டதேன்றே கூறவேண்டும்.

## மூக்குப் பேணிகள்.


கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்து வீடுகள் தோறும் மோர் போன்ற நீராகாரங்களைப் பருகுவதற்கு மூக்குப்பேணிகளே பாவனையில் இருந்தன. அக்காலத்தில் வாய் வைத்துக் குவளைகளில் எவரும் நீராகாரத்தைக் கொள்வதில்லை. நீராகாரங்களை எச்சிற் படாதவாறு பருகுவதற்கு மூக்குப்பேணிகளே பெரிதும் பயன்பாட்டில் இருந்தன. சுகாதாரத்தைப் பெரிதும் பேணிய இம்மூக்குப் பேணிகளை இன்றைய சந்ததியினர் எவரும் அறியமாட்டார்கள். இன்று மூக்குப்பேணிகளும் இல்லை, சுகாதாரமும் இல்லை என்ற நிலையையே குடாநாட்டில் அவதானிக்க முடிகிறது.





## வில்லுவண்டிகள்.

அன்றைய குடாநாட்டு மக்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் பயணஞ் செய்வதற்கு ஆடம்பரமான வில்லுவண்டிகளையே பயன்படுத்தினர். இவை, குதிரைகள், எருதுகள் கொண்டு பயன்படுத்தப்பட்டன. பயணிப்பவர்கள் சிறப்பான மெத்தை ஆசனத்தில் கதிரைகளில் இருப்பதைப்போன்று காலைச்சௌகரியமாக வைத்துக்கொள்வதற்கு வசதியான வடிவமைப்பைக் கொண்டவை இவை.

இணுவில் கிராமத்தில் சேர்.பொன். இராமநாதன் அவர்கள் மகளிர் கல்லூரி ஒன்றை ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் மிகமிக வசதிபடைத்தவர்களின் பிள்ளைகள் வில்லுவண்டிகளிலேயே பாடசாலைக்குச் சென்று திரும்பினர். இத்தகைய வில்லு வண்டில்களை இன்று அரும்பொருள்







காட்சியகங்களிலும் எவரும் பார்க்க முடியாத நிலை வந்துவிட்டது.

## பட்டைகள்

கமங்களில் துலாவின் துணை கொண்டு நீர்ப்பாசனம் நடைபெற்ற ஒரு காலத்தில் பனை ஓலைகளால் இழைக்கப்பட்ட பெரிய பட்டைகள் பாவனையிலிருந்தன. இப்பட்டைகள் மூலமே நீர் வெளியேற்றப்பட்டது. இன்றைய இளைஞர் சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள் துலா, துலாக்கொடி, பட்டை, பட்டைக்கல், பட்டைக்கயிறு, அச்சுலக்கை, நெம்பு என்பவற்றை அறியார்கள்.

ஒரு சமயம் பட்டணத்துப் பாடசாலை மாணவன் ஒருவனைப் பார்த்து "தம்பி உமக்கு அச்சுலக்கையைத் தெரியுமோ" எனக் கேட்ட பொழுது "ஆம்" எனப் பதிலளித்தான். எப்படித் தெரியும்? எங்கே அச்சுலக்கையைப் பார்த்தீர்? என மீண்டும் வினா விடுத்தேன். என்ன ஐயா அடிக்கடி அச்சுலக்கையைப்பற்றித் தானே பத்திரிகைகளில் செய்திகள் வெளி வருகின்றனவே என்றான் மாணவன். அச்சமயம் அத்துலத்முதலி என்பவர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். தமிழ்பேசும் மக்களுடைய இனப்பிரச்சினைகள் விடயத்தில் எந்தவிதமான நெகிழ்ச்சிப் போக்கோ, வளைந்து கொடுக்கும் தன்மையோ இல்லாதிருந்த அத்துலத் முதலியைக் கிராமத்து முதியவர்கள் அச்சுலக்கை என்றழைத்தனர். வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாத ஒருவனை அவன் ஒரு அச்சுலக்கை எனக் கிராம மக்கள் விமர்சனம் செய்வதுண்டு. எனது மாணவனுக்குத் தெரிந்த அச்சுலக்கை அத்துலத்முதலியே.

## கொண்டோடி (கொண்டடி)

அந்தக் காலத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் செல்லும் பேர்த்தியைப் பார்த்து பேரனார் "பிள்ளை கொண்டடி சரியில்லை கவனம்" என்று எச்சரிப்பார். கொண்டடி என்றால் என்ன என்பதனை இன்றுள்ள இளைய தலைமுறையினர் எவரும் அறியார். கிணறுகளில் துலாக்களின் துணை கொண்டு இந்நாட்களில் நீர் எடுக்கப்படுவது அரிதாகிவிட்டது.

குடாநாட்டில் சூரைக் கொடிகளின் பயன்பாடு இப்பொழுது அறவே இல்லை எனலாம். ஒரு காலத்தில் கிணறுகளிலிருந்து துலா மூலம் நீரை எடுப்பதற்குச் சூரைக்கொடிகளே பயன்படுத்தப்பட்டன. வளவுகள் தோறும் சூரைக் கொடிகள் இருந்த அக் காலத்தில் முற்றிய கொடிகளை வெட்டி எடுத்துச் சுட்டு தோல் நீக்கி மரங்களில் கட்டித் தொங்கவிட்டு நெளிவெடுத்துப் பின்னர் துலாக்களில் பிணைப்பதுண்டு. துலா நுனியுடன் கொடி இணைத்துக் கட்டப்படும் பகுதி கொண்டடி எனப்படும். துலாவைக் கீழ்நோக்கியும் கிணற்றுப்பட்டையில்


உள்ள நீரை மேல்நோக்கி வெளியேயும் கொண்டோட உதவுவதால் இவ்விணைப்பு கொண்டோடி எனப்பட்டது. இது காலப்போக்கில் கொண்டடி என மருவியது. இப்பிணைப்பு உக்கிப் பலமிழந்தால் விபத்து ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இளவயதிலான பேர்த்தியை "தொங்கித் தொங்கி நீரை அள்ள வேண்டாம்" என்பதே பேரனாரின் அந்த எச்சரிக்கையின் பொருளாகும்.

## பேண்

அதிகாலையில் எழுந்ததும் இன்று முதல் வேலையாகப் பேணைச் சரிபார்க்க வேண்டும் என்பார் வீட்டிலுள்ள முதியவர். ஆடுகால்களும் சரியில்லை எனவும் முணுமுணுப்பார். இன்னும், துலா பயன்பாட்டிலுள்ள ஓரிரு இடங்களில் மட்டும் பேண், ஆடுகால், நெம்பு எனும் பதங்களுக்குப் பொருள் புரியுமே தவிர ஏனையோர் இவற்றைப்பற்றி எதையுமே அறியார். துலா முன்னும் பின்னுமாக ஆடுதற்குத் துணையாகப் பேண் தடிகள் பிணைக்கப்படுவதற்கு வசதியாக நடப்படும் உறுதிமிக்க பூவரசங்கதிகால்களே ஆடுகால்கள் எனக் காரணப் பெயர் கொண்டு விளங்குவன.

## உழவாரம்.

உழவாரம் என்பதும் இன்று பலராலும் அறியாத ஒன்றாக வந்து கொண்டிருக்கிறது. இதன் உபயோகத்தைப் பற்றிக் கிராமப்புற இளைஞர் சமுதாயம் சிறிது அறிந்திருந்தாலும் பட்டணத்து இளைஞர்களுக்கு இதன் பயன்பாடு பற்றி விவசாயப் போதனாசிரியர்கள் விளக்க வேண்டிய நிலையே உள்ளது.




## பத்தாயங்கள்.

குடாநாட்டு மக்கள் பண்டைக்காலத்தில் தாம் விளைவித்த தானிய வகைகளைப் பத்தாயங்களில் சேமித்து வைத்தனர். ஒடியல், புழுக்கொடியல் போன்றவையும் பத்தாயங்களிலேயே சேமிக்கப்பட்டன. இன்று பத்தாயங்களில் சிலவற்றைக் கோயில்களே பாதுகாத்து வருகின்றன.

## கதிர்ப்பாய்கள்.

யான் சிறுவயதில் இணுவில் கிராமத்தில் "அரிச்சந்திரன்" நாடகம் பார்த்தது இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. நாடகம் நடத்தப்பட்ட தோட்டம் முழுவதும் பெரிய கதிர்ப்பாய்களை ஆசனமாக விரித்திருந்தார்கள். கதிர்ப்பாயில் சௌகரியமாக எனது தந்தையாருடன் இருந்து நாடகம் பார்த்தேன் சூடடிக்கவும்



தானிய வகைகளைக் காயப்போடவுமென அன்றைய கமக்காரர்கள் அனைவரும் மூன்று, நான்கு, ஐந்து என்ற கணக்கில் கதிர்ப்பாய்களை வைத்திருந்த காலமும் இன்று சரித்திரமாகிவிட்டது. நெல், குரக்கன், சாமைக் கதிர்களைக் காயப்போடப் பயன்படுத்தப்பட்ட பெரிய பாயானது கதிர்ப்பாய் எனக் காரணப் பெயரால் அழைக்கப்பட்டது.

## காவடிகள், வாகனங்கள்.

குடாநாட்டில் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பாவனையிலிருந்த காவடிகள், வாகனங்கள் பலவும் கலையம்சங்கள் நிறையப்பெற்றனவாகும். இணுவில் கிராமத்தில் காவடி ஆட்டத்தில் புகழ் பெற்றவராக விளங்கிய அனுமான் கதிர்காமர் என்ற பெரியவர் பயன்படுத்திய காவடி கலையம்சங்கள் மிகுந்தது என இன்றைய ஆய்வாளர்கள் வியந்து கூறுகின்றனர். வரலாற்றில் பெரிய கோவிலென அழைக்கப்பட்ட இணுவில் கந்தசுவாமி கோவிலில் உள்ள பழைய வாகனங்களில் சில மிகுந்த கலைநுணுக்கம் கொண்டவையாகும். இவ்வித வாகனங்களை இன்று காண்பது அரிதாகிவிட்ட தென்பதும் ஆய்வாளர்களது கவலையாக உள்ளது.

## பழைய பதிப்புக்கள்.

**நான்கு பாகங்களைக் கொண்ட பெரிய எழுத்து மகாபாரதம் நூற்தொகுதி இன்றும் இணுவில் கிராமத்தில் பெரியவர்களால் பாதுகாக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. மகாபாரதம், இராமாயணம், விக்கிரமாதித்தன் கதை போன்றவற்றின் பழைய பதிப்புக்கள் மிகவும் நயமுடையவை. இவையும் இன்று அரிய காட்சிப் பொருள்களாகி விட்டன.**


**பண்டையகாலக் குடாநாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்ட அரிய கலைப்பொருட்களை இன்று காணமுடியவில்லை. ஏட்டுச்சுவடிகள் பல கறையானுக்கு இரையாகிவிட்டன. இன்று எஞ்சி இருப்பவற்றையாவது நாம் பாதுகாக்க வேண்டும் என்ற நமது ஆவலை இன்று இணுவைக் கந்தனின் முன்றிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அறிவாலயத்தினர் பூர்த்திசெய்வார்களாக. உலகப் புகழ் பெற்ற திருமஞ்சத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது இணுவையம்பதியாகும். அழிவின் விளிம்பிலிருந்து இப் பெருமஞ்சத்தைக் காப்பாற்றி உலகப் புகழ் மஞ்சமாக மாற்றியமைத்த பெருமையும் இணுவையம் பதிக்குரியதாகும். அத்தகைய பதியில் தமிழ்மக்களது பாரம்பரியமான கலைப்பொருட்களும், அரிய நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் பாதுகாக்கப்படும் என்பதில் ஐயத்திற்கும் இடமுண்டோ?**

## சுமை தாங்கிகள்

ஒரு காலத்தில் பிரதான வீதிகள் தோறும் பயன்பாட்டிலிருந்த சுமை தாங்கிகள் என்பவை இன்றைய யாழ்ப்பாணக் குடாநாட்டில் அழிந்தொழிந்து போய்விட்டன. தலைச்சுமையாகவே வியாபாரிகளும், விவசாயிகளும், காய்கறி, கீரை, கிழங்கு, பழவகைகளை எடுத்துச் சென்று சந்தைப்படுத்திய காலத்தில் சுமைதாங்கிகளின் தேவை பெரிதும் உணரப்பட்டது. பிறரின் தயவின்றித் தமது தலைச்சுமைகளைத் தாமே நின்ற நிலையில் சுமை தாங்கிகளில் வைத்து விட்டுக் களைப்பாறிய பின் மீண்டும் அவற்றை மக்கள் எடுத்துச் செல்வதுண்டு.நெடுஞ்சாலைகள் தோறும் சுமை தாங்கிகளை அமைத்தலை புண்ணிய கருமங்களுள் ஒன்றாகக் கருதி அன்றைய தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் கோண்டாவில் உப்பு மடத்தடியில் அழிந்தொழிந்த நிலையில் சுமைதாங்கி ஒன்று நேற்று வரை இருந்துள்ளது. சுமை தாங்கிகளையும் இன்றைய இளைய தலைமுறையினர் அறியார்.

## கோர்க்காலிகள்.

குடாநாட்டில் வழக்கொழிந்து போனவற்றுள் இன்னொன்று கோர்க்காலிகளாகும். பண்டைய கமக்காரர்கள் அனைவரும் தமது பனை ஓலை வீடுகளில் கோர்க்காலிகளை அமைத்து அவற்றின் மேல் தினை, வாகு, குரக்கன், நெல், ஒடியற்கூடைகளை வைத்துப் பாதுகாத்தனர். கோர்க்காலிகளின் கீழே இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறு கிழங்கு வகைகளைச் சேமிப்பில் வைத்தனர். இன்று கோர்க்காலிகளும் இல்லை. அவற்றுக்கான தேவைகளும் இல்லாமல் போய்விட்டன.



## மத்துக்கள்

யாழ்ப்பாணத்து வீடுகள் தோறும் தயிர் கடைவதற்கான மத்துகளின் உபயோகம் தினசரி இருந்தது அந்தக் காலம். இக்காலச் சிறார்களுக்கு மத்துக்களை பற்றி ஏதுவுமே தெரியாது. பூனைகளிடமிருந்து தயிர், வெண்ணெய், பலகார வகைகள், சமைத்த கடல் உணவு வகைகளைப் பாதுகாக்கவென அடுப்படிகள் தோறும் பாவனையிலிருந்த உறிகளும் பெருமளவில் வழக்கொழிந்து விட்டன.

## வல்லுவங்கள்.

வல்லுவம் எனப்படும் துணியிலான காசுப்பைகள் அந்தக்கால வியாபாரிகளிடம் பாவனையில் இருந்தன. நாணயக்குற்றிகளை நடுப்பையில் போட்டு தாள் காசுகளை வேறாக வைக்கக் கூடிய இவற்றைப் பாய்போல் சுருட்டி

அதிலுள்ள நடாவாற் சுற்றிக்கட்டி வேட்டி இடுப்பிற் செருகிக் கொள்வது வியாபாரிகளது வழமை. வல்லுவங்களும் இன்று முற்றாக மறைந்து விட்டன. வல்லுவம் என்ற சொல்லே பாவனையில் இல்லாமல் போய்விட்டது.

## செப்புச்சல்லி.

எமது பாட்டி காலத்துக் கொட்டைப் பெட்டிகள் அற்புதமானவை. பல வர்ண குருத்தோலைகளால் இழைக்கப்படுபவை ஒன்றுக்குள் ஒன்றாகச் செருகி மூன்று நான்கு அமைப்புக்களைக் கெண்டவை. அதன் நடுவில் வெற்றிலை பாக்கை வைத்திருப்பர். பக்கவாட்டுக்கள் காசுகளை வைக்க உதவுபவை. அந்தக்காலத்தில் 5, 10, 25, 50 சத நாணயங்கள் வெள்ளிக் குற்றிகளாக இருந்தன 1, ½ இ ¼ சதங்கள் செம்புச் சல்லிகள் என்று அழைக்கப்பெற்றன. யாராவது காசு கடன் கேட்டால் ஒரு செம்புச் சல்லி கூட கொட்டைப் பெட்டியில் இல்லையென்று பாட்டிமார் அலுத்துக் கொள்வதுண்டு. இன்று செம்புச் சல்லிகளோ அதன் பதப் பிரயோகங்களோ அற்றுப் போய்விட்டன.

## பவுண் கணக்கு

குடாநாட்டு மக்கள் பத்து ரூபாவை ஒரு பவுண் என்று வழங்கிய காலம் ஒன்றிருந்தது. அரச ஊழியர்களின் சம்பளங்களை அந்தக் காலத்தில் கிராம மக்கள் பவுண் கணக்கில் தான் மதிப்பிட்டனர். கடன் கேட்பவர் ஒருவர் ஒரு பத்து பவுண் கைமாற்றாக எடுக்க முடியுமோ என்று கேட்கும் பழைய வழக்கையும் இன்று பார்க்க முடியவில்லை.

## அட்டாளைகள்

இன்றைய கமங்களில் அட்டாளைகள் பாவனையில் இல்லாதொழிந்து விட்டமையால், அவற்றைப்பற்றி இளம் சிறுவர், சிறுமியர் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அட்டாளைகள் கமங்களில் இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியவை. பகலில் ஓய்வெடுக்கவும் உணவருந்தவும் பெரிதும் உதவுபவை. பனை ஓலைகளால் வேயப்படுவதால் குளிர்ச்சிமிக்கவை. அவற்றில் பாவல், வெண்டி, சுரை, பூசணி, பீர்க்கு போன்ற காய்கறி விதைகள் கட்டித்தொங்கும். உழவாரம், புல்லுச்சத்தகம், கத்தி, மண்வெட்டி, தேனீர் பாத்திரங்களின் இருப்பிடமாகவும் அட்டாளைகள் பேணப்படுவதுண்டு. இத்தகைய அட்டாளைகள் இன்று எங்கே போய் ஒழிந்து கொண்டுள்ளன என்று தெரியவில்லை.

## குத்துக்கண்ணி

யாழ்ப்பாணப் பசுக்களின் கழுத்துக்களை, பனம் நாரினால் முறுக்கித் தயாரிக்கப்படும் குத்துக்கண்ணிகள் அலங்கரித்த காலமும் மலை ஏறிவிட்டது. குத்துக்கண்ணி என்ற பதப்பிரயோகத்தையும் இன்றைய குடாநாடு இழந்து விட்டது. ஆங்கிலேயர்கள் இன்றும் எத்தனையோ இத்தகைய பழைமைகளைப் பேணுகையில் நம்மவர்கள்தான் அவர்களது நைலோன் கயிறுகளாக மாறிவிட்டார்கள்.

# நூலகர் நூலகர் என்கின்றீர்! நுவலும் நூலகர் யாரையா?

- கலைக்களஞ்சிய மனம், அபரிமித நினைவாற்றல், பரந்த வாசிப்புத்திறன் கொண்டவர் !
- புலமைத்துவ நேர்மை, தன்னம்பிக்கை, சாமர்த்தியம், முன்னெச்சரிக்கை உணர்வு நிரம்பப் பெற்றவர் !
- கடமை மனப்பாங்கு, உதவும் மனப்பாங்கு, அடுத்தவர் கருத்தை மதிக்கும் மனப்பாங்கு, அடுத்தவருடன் நல்ல உறவை உருவாக்கும் மனப்பாங்கு கொண்டவர் !
- மனித உறவுகளைப் புரிந்து கொள்ளும் திறன் கொண்டவர் !
- தொடர்பு ஊடகங்கள் பற்றிய புரிந்துணர்வு கொண்டவர் !
- தகவற் குப்பையில் குன்றிமணித் தகவலைத் தேடி எடுக்கும் ஆற்றல் மிக்கவர் !
- நூல் பற்றிய அடிப்படை அறிவு, களிமண் பதிவுகள் முதற்கொண்டு கணினிப் பதிவுகள் வரையிலான தகவல் சாதனங்கள் பற்றிய அறிவு, அறிவை முறைப்படி ஒழுங்கமைக்கும் அறிவு என்பவற்றைக் கொண்டவர்!
- விடயங்களைத் துல்லியமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல் உடையவர் !
- வாசகனில் நம்பிக்கை, வாசகனில் மதிப்பு, வாசகனில் பாரபட்சமற்ற நடத்தை, வாசகனின் தேவைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை, வாசகனின் தன்மைகளைப் புரிந்து கொள்ளும் பக்குவம் போன்றவற்றில் தேர்ந்தவர் !
- சமூக நடத்தை தொடர்பான விழிப்பு நிலை உடையவர்!

# எதைக் கொடுக்கப் போகின்றோம்?

## நூலகர் ஒருவரின் சிந்தனைத் தடம்



திரு. செல்வரத்தினம்
பத்மநாதன்

நவீன உலகில் அறிவு கொட்டிக் கிடக்கின்றது. பல்துறை அறிவும் பல்கிப் பெருகுகின்றன. ஏட்டிலும் பாட்டிலும் வலம் வந்த அறிவு புத்தகங்களுக்கு மாறி கணினி யுகத்தில் புகுந்துள்ளது.

"கற்றாங்கொழுகல்" என்பது மனிதன் மனிதனாக, வாழ்வாங்கு வாழ வழியமைத்த கல்வி முறை. இன்றைய கல்வி முறையில், வாழ்வின் ஆதாரம் கல்வி என மாறி, முற்றுமுழுதாகப் பொருளாதார நலம் சார்ந்து வளர்வதை அவதானிக்கலாம். ஏட்டில் பாட்டினூடாக வரம்பமைத்து வாழ்ந்த மனித வாழ்வு படிப்படியாக யந்திர மயமாக மாறி வருகின்றது.

ஐம்புலன் வழி அறிவைப் பெற்றுப் பகுத்தறிவின் வழிப்பட்டுச் சிந்திக்க வழியமைக்கும் அறிவை எப்படிப் பெறுவது? என்பதும் எவ்வறிவை யாருக்கு அளிப்பது? என்பதும் பிரதானமாக எழுப்பப்படவேண்டிய கேள்வியாகும்.

ஒரு விடயத்தைக் கற்றல், சிந்தித்தல், தெளிதல் என்பதனூடாக அறிவைத் தனதாக்கி அதனூடாக தனது வாழ்வை, சிந்தனை உலகத்தை ஆக்கிக் கொள்வதே பகுத்தறிவு படைத்த மனித வாழ்வின் பயன். இச் செயற்பாட்டினைத் தொடர்வதற்கு, மாணவநிலை அறிவை அளிப்பதற்கு, (இங்கு மாணவநிலை என்பது வயதை அடிப்படையாகக் கொண்டதன்று.) ஒரு பொருட்துறை பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்ட புத்தகங்களே ஏற்றவையாகும். குறிப்பாக ஒரு பண்பாட்டின் மொழி, சமயம், வாழ்வியல் சம்பந்தமான கோலங்களை இயல்பாக அடுத்த சந்ததிக்குக் கொடுப்பதற்கும், ஒரு மனிதன் சமூகப் பெறுமானத்துடன் மனிதப் பண்புடையவனாக வளர்த்தெடுக்கப் படுவதற்கும் வேண்டிய கல்வி எது எனக் கண்டு அதை அவனுக்கு அளிப்பதில் புத்தகங்கள் மிகவும் பொருத்தப்பாடுடையவை.

பண்டைய கவிதைகள் குறிப்பாக அறக் கருத்துக்கள், இலக்கிய செழுமையும் ,இலக்கண விதிகளும் மிக்கவை. வாழ்வுக்கான, மொழிக்கான, சமயத்துக்கான வரம்பை வகுத்தளித்தவை. பின் வந்த நூல்களோ அறிவின் பொக்கிஷமாக மாறிவிட்டன. அவை அறியவும், சிந்திக்கவும், தெளிவு பெறவும் விரிவான விளக்கங்கள் தந்தன. இன்று கணினி ஊடாகப் பெறும் அறிவும் அத்தகையதே. அதற்கு மேலும் அது ஒரு பண்பைக் கொண்டுள்ளது. "அறிவை நுகர்தல்" என்பதே அப்பண்பாகும். இங்கு நுகர்தல் என்பது மேலதிக சிந்தனைக்கோ, செயற்பாட்டுக்கோ வழிகாட்டாத, தற்குறித்தனங்கள் வளர்வதற்கான விடயங்களைத் தருவதைக் குறிப்பதாகும். பொதுவாக மானுடத்தின் செழுமை மிக்க பண்புகளைப் புரிந்து கொள்வதற்கு, கைக்கொள்வதற்கு வழியமைக்காத அறிவு எவ்வகையிலும் பயனற்றதாகும். இவ்வறிவை

எச்சாதனம் எளிமையாகத் தருகின்றதோ அதுவே மானுடம். அது காலங்காலமாகக் கொண்டிருந்த பண்பாட்டை கைக்கொண்டொழுக வழியமைக்கும்.

எமது பண்பாட்டின் வாழ்க்கைக் கோலங்கள் மிக எளிமையானவையாகவும் செழிப்பாகவும் உள்ள அதே நேரம் ஆற்றலும், நளினமும் கொண்டு விளங்குகின்றது. அவற்றை விளங்கிக் கொண்டு அதன் வழி நடக்க வேண்டுமாயின், அவசர உலக இயந்திர வாழ்வுக்கு மேல் இயற்கையையும், தன்னையும் புரிந்து கொள்ள எதிர்காலத்தில் எவ்வாறான தகவல் சாதனங்கள் துணை புரியும் என அறிந்து அவற்றை நூலகங்களில் சேர்க்க முயல வேண்டும். 700 சுலோகங்கள் கொண்ட பகவத்கீதையைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு 40 ஆண்டுகள் ஆகும் என்பது பெரியோர் அனுபவம். இப் பண்பு கூடியோ குறைந்தோ ஒவ்வொரு நூலுக்கும் உண்டு என்பதை அறிவுலகம் ஒப்புக் கொள்ளும். சிறப்பாக எமது பண்பாட்டின் கருவூலங்களான நூல்கள் நூலுருவில் வைத்துப் பேணப்பட வேண்டியவை என்பது பிரதான எடுகோளாகும். அவை கணினி வலைப்பின்னலில் கலப்பதில் தவறில்லை. அதையும் தாண்டி அந் நூல்கள் அச்சுருவில் பாதுகாக்கப்படுதலே அவற்றின் சிறப்பு.

ஒரு துறை சார்ந்த ஆரம்ப அறிவைப் புத்தகங்களுடாகப் பெறுவதே சாலச் சிறந்ததாகும். தொட்டும், பார்த்தும், உணர்ந்தும் அறியப்படும் ஆரம்ப அறிவு அவன் வாழ்வின் அடித்தளமாக நிலை பெறும். புலன்களின் ஆர்ப்பரிப்பு அனுபவிக்கத்தான். அதற்குப் பெருமளவிலான தீனியை இன்றைய தொடர்பு ஊடகங்கள் வழங்குகின்றன. கணினி மயப்பட்ட சர்வதேச வலைப்பின்னலானது, ஒவ்வொரு பொருட் துறை சார்ந்தும் பிரமாண்டமான தகவல்களைக் குவித்து வைத்துள்ளது. கணினி கொண்டுள்ள அறிவை யாரும் எப்படியும் கையாளலாம் என்ற நெகிழ்ச்சியே அதன் பலமும் பலவீனமுமாகும். ஒரு துறை சார்ந்த அறிவைப் பெறுவதற்கு கணினி செய்யும் பங்களிப்பு மகத்தானது. ஒரு புறத்தில் கணினி ஆய்வாளர்கள், அறிவியலாளர்கள், விஞ்ஞானிகள், தொழிற் துறையினர் போன்றோருக்கு பெரிய வரப்பிரசாதம். மறுபுறத்திலோ இயற்கையின் குழந்தைகளாக வாழவேண்டிய மனுக்குலத்தை இயந்திர மயவாழ்வுக்கு முனைப்படையச் செய்வதற்கும் அது காரணமாயிற்று. அறிவியல் தகவல்களுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும், பொழுது போக்கு அம்சங்களுக்கும் இன்று குறைவில்லை. இவற்றை இன்றைய மனிதன் போதிய அளவில் பெற்றுக்கொள்ள முடியும். ஆனபோதும் எமது பண்பாட்டின், எமது பிரதேசத்தின் உயரிய இயக்க நெறிகளைக் கட்டிக் காத்து வைத்தவை எவை? அவை காலங்காலமாக எவ்வாறு புதுப்பிக்கப் பட்டன.? அவை பற்றிய இன்றைய தேடல் என்ன? எதை வைத்திருக்கின்றோம்? எதைக் கொடுக்கப்போகின்றோம் என்ற கேள்வி ஒவ்வொரு நூலகத்துக்கும் உண்டு. உதாரணமாக, பட்டினத்தார் பாடல்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருந்த காலம் போய் எமது பிரதேசத்தில் உள்ள ஒரு நூலகத்தில் பட்டினத்தார் பாடல்கள் உண்டா? எனக் கேட்கும் காலம் ஒன்று தோற்றம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வகையில் நூலகங்கள் அப்பிரதேசம் சார்ந்த நூலுருவிலான ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளன. இச் செயற்பாட்டைச் செய்ய வேண்டியது நூல்களுக்காகவன்று. நூலகங்களின் தகுதிக்காகவே.

மனித உயிர் போன்றது தான் நூலும். எனவே நோய் வந்தபின் பார்ப்போம் என்று நோய் பீடிக்கும் வரை காத்திருக்காது வருமுன் காத்தல் நடவடிக்கையில் ஈடுபடின் எவ்வளவோ இழப்புகளைத் தடுக்கமுடியும். நூல் வாங்குவதற்கு எடுக்கும் கவனத்தை விடவும் நூலைப் பாதுகாப்பதற்குப் பன்மடங்கு கவனம் அவசியமாகும்..

# நூல் விரோதிகள்

நூலகம் ஒன்றில் குவிந்து கிடக்கும் தகவல் வளங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஆவண விரோதிகளை இனங்கண்டு அவற்றை அழிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு விசேட கவனஞ் செலுத்த வேண்டியது நூலக முகாமைத்துவத்தின் முக்கிய படி நிலையாகக் கருதப்படுகிறது. நூல்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பின்வரும் ஐந்து காரணிகளால் ஏற்படமுடியும்.

- மனிதன், விலங்குகள், பூச்சிகள், பூஞ்சணங்கள் போன்ற உயிரியல் காரணிகள்.
- ஒளி, வெப்பம், ஈரப்பதன் போன்ற பௌதிக இரசாயனக் காரணிகள்.
- நூலக சாதனங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களினால் ஏற்படும் பாதிப்புக்கள்.
- தூசி,அழுக்கு, புகை போன்ற சூழல் காரணிகள்
- வெள்ளப்பெருக்கு, தீ விபத்து, வன்முறை போன்ற எதிர்பாராத பேரழிவுகள்

நூல் விரோதிகளில் மிகவும் ஆபத்தானதும், அறிவுசார் ரீதியில் அழிவை ஏற்படுத்தவல்லதுமான உயிரியாகக் காணப்படுவது ஆறறிவு படைத்த மனித உயிரி என்பதையே தகவல் விஞ்ஞானத் துறையின் அனுபவ அறிவு இனங்கண்டிருக்கின்றது. மனித உயிரியால் ஏற்படுத்தப்படும் பாதிப்புப் பின்வரும் மூன்று தன்மைகளின் அடிப்படையில் ஏற்படுகிறது.

- உற்பத்தியாளனாக ஏற்படுத்தும் பாதிப்பு
- பாவனையாளனாக ஏற்படுத்தும் பாதிப்பு
- பாதுகாவலனாக ஏற்படுத்தும் பாதிப்பு

## உற்பத்தியாளனாக ஏற்படுத்தும் பாதிப்பு

- இலாப நோக்கம் கருதிய மனிதனது உழைப்பும் முயற்சியும் இணைந்து நீண்ட நார்ப் பொருளைக் கொண்ட, கனதியான நீடித்து உழைக்கக்கூடிய தாள்களின் உற்பத்தியிலிருந்து தரங்குறைந்த குறுங்கால வாழ்வுடைய தாள்களின் உற்பத்திக்கு வித்திட்டதன் காரணமாகத் தாளை அடிப்படையாகக் கொண்ட தகவல் சாதனங்களின் பாதிப்பு மிகக் கூடுதலாக அதிகரித்துள்ளது.

- தாள்கள் மட்டுமன்றி நூல் கட்டுதலுக்கெனக் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனச் சேர்வைகள் அடங்கிய உற்பத்திப்பொருட்களான தோல், பசை, மை போன்றனவும் நூல்களின் தரத்தை வெகுவாகப் பாதித்துள்ளன.

- நூல்களின் பாவனையை அதிகரிப்பதற்கென மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒளிப்படப் பிரதியாக்கமுறை நூல்களின் பாதிப்பை வேகப்படுத்துகின்றது.

- வெப்பத்தை அதிகரிப்பதற்கெனக் குளிர் நாடுகளில் பின்பற்றப்படுகின்ற மரம், நிலக்கரி, வாயு போன்ற எரிபொருட்களின் பயன்பாடும், வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதற்கென வெப்ப நாடுகளில் பின்பற்றப்படும் குளிரூட்டல் வசதிகளும் தகவல் சாதனங்களில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

- நூலகக் கட்டடங்களுக்கு உள்ளேயே வடிவமைக்கப்படும் கழிவறைகள், நீர்க்குழாய்கள் போன்றவற்றில் ஏற்படும் வெடிப்புகள், உடைவுகள் ஈரலிப்பை அதிகப்படுத்தித் தகவல் சாதனங்களுக்கு அழிவை ஏற்படுத்துகின்றன.

- மக்களின் இலகுவான பாவனையைக் கருத்திற் கொண்டு நகரின் மையப்பகுதியில் வடிவமைக்கப்படும் கட்டடங்கள் சரியான முறையில் வடிவமைக்கப்படாதவிடத்து போக்குவரத்துச் சாதனங்கள் ஏற்படுத்தும் மாசுகளின் தாக்கத்திற்குட்படுகின்றன.

## பாவனையாளனாக ஏற்படுத்தும் பாதிப்பு

- நூலக இறாக்கைகளிலிருந்து நூலின் முதுகுப்புறத்தைப் பலவந்தமாக இழுத்து எடுப்பதன் காரணமாக நூலின் முதுகுத் தண்டு கிழிபடுதல்.

- நூலை விரித்து வைத்து அதன் மேல் முழங்கைகளால் அழுத்தியபடி வாசித்தல், பக்க ஓரங்களை இறுதியாகப் படித்த அடையாளத்துக்காக மடித்துவிடுதல், நூலின் பக்கங்களைக் கீழிருந்து மேலாகத் தட்டுவதன் மூலம் பக்கங்களைப் புரட்டுதல், படுத்திருந்து ஒரு கையால் பிடித்தபடி மறுகையால் பக்கங்களைப் புரட்டுதல் போன்ற காரணங்களால் நூலின் பௌதிக அமைப்புக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுதல்.

- நூலகங்களிலிருந்து இடையிடையே ஆவணங்களைக் களவெடுத்தல் அல்லது அகற்றுதல்.

- நூல் இரவல் பெறும் போது பிழையான பெயர்களைக் கொடுத்தல்.
- அடையாள அட்டைகளைத் தவறான முறையில் பயன்படுத்துதல்.
- ஆவணங்களிலுள்ள பக்கங்கள், படங்கள், வரைபடங்கள் என்பவற்றை வெட்டியெடுத்தல்.
- ஆவணங்களில் எழுத்துக்களின் கீழ் கோடிடுதல், பக்க ஓரங்களில் எழுதுதல், கோடிடுதல், கொழுப்பு எண்ணெய்க் கறைகளை ஏற்படுத்துதல்.

## பாதுகாவலனாக ஏற்படுத்தும் பாதிப்பு

- நூல்தாங்கிகளுக்குள் நூல்களைப் பலவந்தமாகச் செலுத்த முனைதல் தாள்கள் கிழிவதற்கும் நூல் மட்டைகளின் கட்டுத் தளர்வதற்கும் ஏதுவாகின்றது.
- இறாக்கைகளில் நூல்களை மிக நெருக்கமாக இறாக்கைப்படுத்துவதன் காரணமாக நூல்களை மீள எடுக்கும் சந்தர்ப்பங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது.
- நூல் தாங்கிகள் இன்றி நூல்களைச் சாய்ந்த நிலையில் இறாக்கைப் படுத்தலின் காரணமாக நூல்களின் கட்டுத் தளர்வடைகிறது.
- பிரதான நூலகத்திலிருந்து கிளை நூலகங்களுக்கோ, நூலகத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதிக்கோ நூல்களை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் கவனமற்ற கையாள்கை காரணமாக நூல்கள் பாதிப்படைகின்றன.
- நூல் வண்டிகள் இன்றி நூல்களைக் கைகளில் காவிச் செல்லுதல் காரணமாக நூல்கள் கீழே விழுந்து கிழிபட ஏதுவாகின்றது.
- நூல்களை இரவல் வழங்கும் செய்முறையில் நூல்களின் பின்புற அட்டைகளின் உட்பகுதியில் பின்புறப் பலம் கொடுக்காது திகதி முத்திரை இடும் போது அல்லது பேனாவினால் எழுதும்போது ஆவணங்களின் கட்டு விட்டுப்போக வாய்ப்பு ஏற்படுகின்றது.

(Ross Harvey என்பவரின் Preservation in Libraries என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)

**தொகுப்பு :- பா. செல்வரஞ்சனி.**

# இணுவில் அறிவாலயம்

திரு. மூ. சிவலிங்கம்

"நாவலர் போற்றிடும் நல்லிணுவைத் திருவூர்"
"ஏழிசை வாழ்ந்திடும் இணுவையம்பதி"

என இயலிசை வாரிதி மகா வித்துவான் அமரர் ந. வீரமணி ஐயர் அவர்கள் மனமாரப் பாடிய திருவூர் இது. பண்டு தொட்டுப் பலசீரும் மேவியது. இங்கு உறையும் தெய்வங்களின் திருவருள் பொலிந்தது.

இயற்கை அன்னை அரவணைக்க, எழில் பொங்க, கலை மகளும், திருமகளும் கொலுவிருக்கின்றனர். இதன் பயனாக அருட் செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம் ஆகியன நிறைந்துள்ளன. முத்தமிழ் வித்தகர்களும் பெருகியுள்ளனர். பெருஞ்சித்தர் பெரிய சந்நியாசியாரின் (சுப்பிரமணியம்) வழி வந்த சமயத் தொண்டும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழி வந்த சைவமும் தமிழும் மேலோங்கியுள்ளன.

நாவலர் பெருமானின் தூண்டுதலில் பல திண்ணைப் பள்ளிகள் தோன்றின. நாவலர் பெருமானிடம் நேரில் கற்ற பலர் சைவமும் செந்தமிழும் சிறக்க அயராது உழைத்தனர். தூய தமிழில், இலக்கியம், சைவ சித்தாந்தம் போன்ற துறைகளில் பலர் பாண்டித்தியம் பெற்றனர். தாம் கற்ற கல்வியைத் தம்மை நாடி வந்தவர்களுக்குப் புகட்டி அவர்களை ஊக்குவித்தனர்.

நாவலர் பெருமானின் தூண்டுதலில் இணுவிலில் சைவப்பிரகாச வித்தியாசாலை முதன் முதல் உதயமாவதற்கு ஆரம்பகாலத்தில் இருந்த திண்ணைப் பள்ளிகள் உதவின.



இணுவையின் வட பால் சேர். பொன். இராமநாதன் அவர்களின் சொந்த முயற்சியால் மருதனார்மடம் குறிச்சியில் பெண்கள் பாடசாலை தோன்றியது. இசை மரபு பேணி இதே கல்விக்கூடத்துக்கு அருகே இசை நடனக்கல்லூரியும் உதயமானது. இணுவில் கிழக்கில் நூறு வருடங்களுக்கு முன் அமெரிக்க மிஷனறிச் சமூகத்தினால் கிறிஸ்தவ ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டது. இணுவில் மேற்கில் சைவமகாஜன வித்தியாசாலையும் ஆரம்பமானது. காலப்போக்கில் சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்ற போது அமெரிக்கமி'ன் பாடசாலை இணுவில் மத்திய கல்லூரியின் (சைவமகாஜன வித்தியாசாலை) ஆரம்பப் பிரிவாக மாறியது.

எமது கிராமத்தில் மூன்று சிறந்த பாடசாலைகளும் திறம்பட இயங்குவதால் பெரும்பாலானோர் கல்வியில் சிறப்படைய நேர்ந்தது. அன்று பிரத்தியேகமான துணைக்கல்வி நிலையங்கள் இல்லை. நூலகங்களும் குறைவாகவே காணப்பட்டன. பாடசாலையில் ஆசிரியரின் நேரடிக் கல்விப் போதனையிலேயே பலர் முன்னேறினர். பாடசாலைப் படிப்புக்கான பாடப்புத்தகங்கள் மட்டுமே கைகொடுத்தன. நாவலர் பெருமான் சைவமும் தமிழும் முறைப்படி

வளர்வதற்காகப் பல நூல்களைத் தாமே எழுதி, அச்சியந்திரங்களை நிறுவி நூல்களை வெளியிட்டார். பாடப்புத்தகங்களுடன் துணைநூல்களும் வெளிவந்தன. தமிழ்ப் பெரியார் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் நூல்களைப் பேணுவதன் நோக்கில், செல்லரித்துச் சிதைவுற்ற ஏட்டுப்பிரதிகளையும் பழைய நூல்களையும் தேடி எடுத்துச் சிறந்த நூல் வடிவமாக்கினார். இவ்விரு பெரியார்களினதும், தமிழக டாக்டர் உ.வே சாமினாதையரினதும் அயராத உழைப்பினால் பல வரலாற்று நூல்களும் துணை நூல்களும் தாராளமாகக் கிடைத்தன. கல்வியில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது.

காலப்போக்கில் ஆங்காங்கே அச்சு இயந்திரங்கள் தோன்றின. உள்ளூரிலும் வெளியூர்களிலிருந்தும் பற்பல நூல்கள் வெளிவந்தன. மக்களும் நூல்களை விரும்பிக் கற்றனர். பல நூலகங்கள் தோன்றின. இவ்வாறான நூல்களின் பாவனையால் யாழ் மக்களின் கல்வியறிவு நன்கு பிரகாசித்தது. யாழ்நகரில் ஏறக்குறைய ஒரு லட்சம் நூல்களைத் தன்னகத்தே கொண்ட பொது நூலகமொன்று யாழ் மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. யாழ் மக்கள் இலங்கை வாழ் மக்களிற் சிறந்த கல்வித்தரத்தை அடைந்திருந்தனர். இதனைக்கண்டு மனம் பொறுக்காத பேரின வாதிகள் சதியினால் யாழ் நூலகத்திற்கு தீயிட்டு அழித்தனர். மக்கள் பெரும் வேதனை அடைந்தனர். அந் நூல்நிலையம் நெடுங்காலத்தின் பின் வெளிநாடுகளைச் சேர்ந்த பலரது அனுதாப அலை வீசியதால் மெல்ல மெல்லப் புனர்வாழ்வு பெற்று இன்று இயல்பு நிலைக்கு வந்துள்ளது.

ஆரம்பத்தில் இணுவில் கிராம மக்கள் கல்வியின் பேரில் பணநெருக்கடி காரணமாக மேலதிக நூல்களை எடுத்துப்படிக்க முடியவில்லை. சிறப்படைந்த ஊர்களின் மாணவர்களுக்கு இணையாக தமக்குப் போதிய நூல் வசதி இல்லாத நிலையை எவரும் சிந்திக்கத் தவறுவதில்லை. வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் மேற்படிப்பு நோக்கியும் வசதி குறைந்தவர்களின் பிள்ளைகள் வேலை தேடியும் வெளிநாடு சென்றனர். வெளிநாடுகளில் பல்வேறு நூல்களைக் கொண்ட பிரமாண்டமான நூலகங்களிற் படித்துத் தமது அறிவுப்பசியைப் போக்கினர். இதேகாலத்தில் உறவை நாடி, நட்பை நாடி எம் ஊர் வசதியீனங்கள் பற்றி அறிந்து தாம் முன்னர் இங்கு நூல் வசதியின்றி மனம் நொந்ததையும் சிந்தித்தனர். இணுவையூர் மக்கள் இலண்டன், கனடா, அவுஸ்ரேலியா போன்ற வெளிநாடுகளில் இணுவை மக்களுக்கான ஒன்றியத்தை அமைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் இணுவில் கிராமத்தின் மத்தியில் ஒரு சிறந்த நூலகத்தை அமைக்க முன் வந்தனர். இச் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தன்னலமற்ற விசுவாசமானவரை எதிர்பார்த்தனர்.

நல்லாசிரியர் குடும்பத்தில் பிறந்து, நாவலர் பெருமான், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் போன்று பிரமச்சரியம், சமயப்பற்று, நாட்டுப்பற்று, நலிவுற்றவர் மீது அனுதாபம் என்பன மிகுந்தவரும், 1992ஆம் ஆண்டு காரைக்கால் சிவன் கோயிலில் சிறந்த சமயச் சொற்பொழிவாற்றியதால் "செஞ்சொற்செல்வர்" என்ற தகுந்த பட்டம் பெற்றவருமான ஆறு.திருமுருகன் அவர்களை இலண்டன் வாழ் இணுவையூர் மைந்தர்கள் நேரிற் கண்டு, ஆர்வத்தை அறிந்து இணுவிலில் நூலகம் அமைக்கும்

பொறுப்பை அவருக்கு வழங்கினர். தமது வெளிநாட்டுச் சொற்பொழிவின் நற்பேறு, நூலகமாக மாறிய நற் செய்தியுடன் இவ்வூர் வந்த திருமுருகன் அவர்கள் பல மூதறிஞர்களுடன் ஆலோசித்தார். பலரின் வேண்டுகோளின் படி கிராமத்தின் மத்தியில், தெய்வீகச் சூழலில் கற்றோரும், கற்போரும் நாடும் மத்திய கேந்திரமாகத் தற்போதைய கட்டடம் அமைந்துள்ள இடத்தைக் கண்ணுற்றுபோது இவ்விடத்தைத் தெரிவு செய்தனர். இக்காணி இன்றும் குளக்கரை என்றே அழைக்கப்படுகின்றது.

இந்த அமைவிடம், முத்தமிழ்ச் சங்கத் தலைவனாக அமர்ந்தும், ஔவைப் பிராட்டிக்குச் சுடச்சுட நாவற்பழம் நல்கியும், நற்றமிழ் கேட்டு மகிழ்ந்த முருகன்— இணுவைக் கந்தன்— தனது காலடியில் நூலகம் அமைத்து, நூல்கள் பல நயக்கும் பாங்கில் திருவிளையாடல் புரியப் புகுந்த தெய்வீகப் பிரதேசம் எனலாம். இணுவையூரில் இணைந்த இரு குளங்கள் இருந்தன. இக் குளத்தைச் சூழவுள்ள இடத்தில் கனிதரும் தருக்களும் மூங்கில், கரும்பு, தென்னை, பனை, போன்ற மரங்களும் ஓங்கி வளர்ந்து சோலையாகக் காட்சியளித்தன. சோலையில் பல்வேறு பறவையினங்கள், குறிப்பாக மயில்கள், கூடு கட்டிக் குஞ்சு பொரித்துத் தமது சந்ததியைப் பெருக்கி மகிழ்ந்தன. சோலைக் குயில்கள் முருகன் வரக்கூவின. வானம்பாடிகள் முருகன் புகழ் பாடின. குளத்திற் குலாவிக் கும்மாளமடித்த தவளைகள் பல இராகங்களைத் தாளத்துடன் மீட்டன. வண்டினங்கள் ரீங்காரஞ் செய்தன. இவற்றையெல்லாம் பார்த்து அகமகிழ்ந்த மயில்கள் முருகனுடன் பவனி செல்லும் களிப்பில் ஆனந்த நடனமாடின. இத்தகைய இயற்கைக் காட்சிகளைக் காணக் கோடி கண்கள் வேண்டும்.

பெரிய சந்நியாசியாரினால் மஞ்சத்தடியில் அமைக்கப்பட்ட பெரு மஞ்சம் பூர்த்தியானதும் இணுவைக் கந்தகோட்டத்திற்கு உருட்டி வரப் போதிய பாதை வசதி இருக்கவில்லை. முருகன் அருளால் பாதை உருவாக்கப்பட்டது. இப்பாதையானது காலப்போக்கில் பெருவீதியானது. இவ்வீதியின் இரு

பிரம்போ தடியோ
இல்லாமல்,
வெறுப்போ கோபமோ
கொள்ளாமல்,
உணவையோ பணத்தையோ
எதிர்பாராமல்,
உங்களுக்கு அறிவூட்டும்
நல்ஆசான் நான்.
உறக்கம் என்பது எனக்குக்
கிடையாது.
உங்களுக்கு வேண்டியவற்றை நான்
ஒளிப்பதில்லை.
தவறிழைக்கும் உங்களை நான்
கண்டிப்பதில்லை.
உங்கள் அறியாமையைப் பார்த்து
எள்ளி நகையாடுவதுமில்லை.

*நான் உங்களை மதிக்கிறேன்.*
*அதுபோல்*
*நீங்களும் எனக்கு மதிப்பைத்*
*தாருங்களேன்.*

மருங்கும் வீடுகள், கடைகள் தோன்றின. சோலையானது தேவைக்கேற்ப அழிக்கப்பட்டது. வெளியிலிருந்து குளத்துக்கு வெள்ளம் வரும் மதகுகள் அடைக்கப்பட்டன. குளங்கள் நீரின்றி வரண்டு தூர்ந்து போயின. குளத்தை அண்டிய நிலங்கள் குடியிருப்புக்களாகவும், நடுவேயுள்ள தரவை விளையாட்டு மைதானமாகவும் மாறியது. தெய்வீகச் சூழலும், நில வளமும், நீர் வளமும் பொங்கும் இந் நூலகக் காணியில் இக் கட்டடம் அமைந்தது எமது பெரும்பேறாகும். இக்கட்டுமானப் பணிக்கெனச் சிறந்த பெரியார்களைக் கொண்ட சபையொன்று உருவானது. இச்சபையினரின் சேவை சிறப்பானது.

இம் மண்டபமானது தன்னகத்தே நூலகத்தையும் நம் முன்னோரது பாவனையிலுள்ள (எதிர் காலத்தில் இவை பாவனையிலிருந்து அருகிச் செல்லும்) பொருள்களைக் கொண்ட அருங் காட்சியகத்தையும் உள்ளடக்கியது. இங்கு வாழ்ந்த பல பெரியார்கள் தமது அறிவு விருத்திக்காக அரும்பாடுபட்டுத் தேடிய நூல்கள் பலவற்றையும் பாதுகாத்து வைத்திருந்தனர். இவற்றுள் செந்தமிழ் இலக்கணம், இலக்கியம், புராண வசனங்கள், சைவசித்தாந்தம், சோதிடம், சங்கீதம், நடனம், வரலாற்று ஆய்வுகள் போன்றன முக்கியமான தேடற்கரிய நூல்களும் அடங்கும். எம்மண்ணில் நடமாடும் நூலகங்களான அறிவின் மிக்கோர் உலாவருவது மிகச்சிறப்பானது. நூல்களிலிருந்து அறிவதை விட நடமாடும் கற்றோரின் உரையாடலில் அனேக பொருள் பொதிந்திருக்கும். இச்சிறப்பு இணுவிலில் தாராளமாக இருப்பது திருவருளாகும். மேற் குறிப்பிட்ட நூல்கள், மற்றும் தேடி எடுக்கப்பட்ட அரும் பொருட்கள் இந்த மண்டபத்தை அலங்கரிப்பது எமது பேறாகும்.

இங்கு அமைந்துள்ள நூலகமும் அரும்பொருட் காட்சியகமும் எமது பொதுப் பாவனைக்குரியன. இவற்றை நன்கு பராமரித்து நூலக விதிமுறைப்படி சேவையாற்ற முன்வந்த நூலகரின் அளப்பரிய சேவை மகத்தானது. இவருக்கு உறுதுணையாக ஒரு சில அன்பர்கள் நூலகத்தைப் பேணிப்பாதுகாக்க முன் வந்துள்ளனர். இவர்களது தூய சேவையும் நூலக வளர்ச்சியின் ஒரு படிக்கல்லாகும். இது போல நாம் அனைவரும் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற முது மொழிக்கிணங்கப் பொதுச்சேவையாற்ற முன்வர வேண்டும்.

மானிட வாழ்வும் தேடிய செல்வங்களும் அழியக்கூடியவை. எமது வாழ்வின் இறுதியில் எம்முடன் கூடவருபவை புண்ணியம், பாவம், ஞானம் என்பவற்றைத் தவிர வேறு ஏதும் இல்லை. அரும்பெரும் நூல்களில் படித்த கல்வியானது எம்முடன் ஏழு பிறப்பிற்கும் கூடவருமென்று வள்ளுவர் பெருமானும் "ஒருமைக்கண் தாம் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமைக்கும் ஏமாப்புடைத்து" எனும் குறள் வெண்பா மூலம் சுட்டிக்காட்டுகிறார்.

எனவே கல்விக்கு உறுதுணை செய்யும் கிடைத்தற்கரிய நூல்களை நன்கு வாசித்துப் பயனடைவோம். இவ்வரிய நூலகத்தை நிறுவிப் பொதுப்பணியாற்றிய செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுக்கும் இவருக்குக் கைகொடுத்து உதவிய இணுவை மைந்தர்களுக்கும் இறையருளுக்கும் நன்றியுடன் வணக்கம் செலுத்துவோமாக.

# மக்கள் சேவை

"பொதுமக்களுடன் இணைய வேண்டுமெனில் பொது மக்களின் தேவைகள், விருப்பங்களுக்கமையச் செயல்பட வேண்டும். பொது மக்களுக்காகச் செய்யும் வேலைகள் எல்லாம் அவர்களது தேவையிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். ஆனால் எவ்வளவு நல்லெண்ணம் உடைய எந்தவொரு தனிநபரின் ஆசையிலிருந்தும் தொடங்கப்படக் கூடாது. பல சந்தர்ப்பங்களில் புறநிலையில் பொதுமக்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. ஆனால் அகநிலையில் அவர்கள் அத்தேவையை இன்னும் உணராத, அம்மாற்றத்தை இன்னமும் செய்ய விரும்பாத அல்லது தீர்மானிக்காத நிலையே இன்னமும் இருக்கிறது. இத்தகைய நிலைமைகளில் நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். நமது பணி மூலம் பொது மக்களில் பெரும்பாலானோர் இம் மாற்றத்தின் தேவையை உணர்ந்து அதைச் செய்ய விரும்பி ஒரு தீர்மானத்திற்கு வரும்வரையில் நாம் அம்மாற்றத்தைச் செய்யக் கூடாது. பொதுமக்கள் பங்கு பற்ற வேண்டிய எந்த வேலையும் அவர்கள் தாமாக உணர்ந்து செய்ய விரும்பாவிடில் அது வெறும் சம்பிரதாயமாக மாறித் தோல்வியில் முடிந்து விடும்.

**-மாவோ-**

# இணுவில் அறிவாலயம்
## காலத்தின் தேவை



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் –

ஒருவன் தான் செவிமடுக்கும் பேச்சையும், வாசிக்கும் எழுத்தாக்கத்தையும் நுட்பமாக – முழுமையாக விளங்கிக்கொள்ள அவனுக்கு நிறைந்த வளமான சொல்லறிவு தேவைப்படுகிறது. அந்தக் கண்டுணர் சொற்கள் அவன் எழுத்திலும் பேச்சிலும் இடமறிந்து வந்து பயின்று அவன் கருத்து வெளிப்பாடு பொருட்சிறப்பும் கூர்மையும் நுட்பமும் கொண்டதாக அமைய வேண்டுமானால் நிறைய வாசிப்பதோடு நிறைய எழுதும் பயிற்சியிலும் அவன் ஈடுபடவேண்டும்.. பிரபல ஆங்கில நாடக மேதையாகப் பிற்காலத்திற் புகழ்பெற்ற அறிஞர் பேர்ணாட்ஷா இளமையில் காலையில் எழுந்ததும் தினமும் 5 பக்கம் எதையாவது எழுதும் பயிற்சியைக் கைக்கொண்டிருந்ததால் சொல்வளமும் சிந்தனை வளமும் மிக்கவரானார். இந்த அடிப்படையில் எழுத்து மொழிக்கும் பேச்சுமொழிக்கும் நிறைய வேறுபாடுள்ள தமிழினைப் பொறுத்தமட்டில், வெறுமனே பேச்சு மொழி மூலமே செயற்படும் – பேச்சு மொழியில் மட்டுமே தங்கிநிற்கும் நிலையில் ஒருவன், எழுதும் எழுத்தும், பேசும் பேச்சும் கருத்துத் தெளிவு, செம்மை, பொருட்கூர்மை கொண்டவையாக அமைய முடியாது. இக்குறைபாடு தனிமனித மொழிக் கையாட்சியை மட்டுமன்றிச் சமூகக் கருத்துருவாக்கத்தையும் வெகுவாகப் பாதித்து விடும். அம்மொழியின் கலைகள், இலக்கியங்களின் வளர்ச்சியும் ஊறுபட்டுக் காலப்போக்கில் ஓரினம் மொழிவழிக் குழுமங்கள் பலவாக உடைந்து போக வாய்ப்பேற்பட்டுவிடும்.

இந்த நிலையில் இன்று மக்களிடையே கருத்துப்பரிமாற்றங்கள், இலக்கண அமைதி கொண்ட கடிதங்கள், கட்டுரைகளுக்குப் பதிலாகக் கொச்சைப் பேச்சு மொழிச் சொற்களால், இலக்கண வரைபறைகளைப் பேணாத தொலைபேசி உரையாடல்கள் மூலமே பெரும்பாலும் நடைபெறுகின்றன. இதனால் எழுத்துப்பயிற்சி பெருமளவில் குறைந்து விடுவதோடு, பேச்சுமொழிப்பயிற்சியூடு நம் ஒவ்வொருவரின் மனத்திலும் பிழையான சொற்படிமங்கள் வேரூன்றிப் பதிந்துவிடுகின்றன. இதனால் வேறுபட்ட பிழை பிழையான – ஒருமைப்பாடற்ற மொழிநடைகளுக்கு நாம் உரியவர்களாகி இனச் சிதறுண்ணலுக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறோம். தென்னிந்தியா, இலங்கை, மலேசியா போன்ற பல்வேறு நாடுகளில் நிலவும் பல்வேறுபட்ட பிரதேச வழக்குகளின் தாக்கம் தமிழைச் சிதறுண்ணாமல் இன்றும் தடுத்துக் காத்து நிற்பது வலுமிக்கதாக விளங்கும் – எல்லாப்பிரதேசங்களுக்கும் பொது மொழியாக விளங்கும் எழுத்து மொழிதான்.

இந்த எழுத்து மொழி என்றென்றும் பலம் குன்றாது வலுப்பெற வேண்டுமானால் தமிழ் நூல்களை வாசிப்பவர்களும் – அதனால் உற்சாகம் பெற்று நிறைய எழுதுபவர்களும் – இலக்கிய ஆக்கங்களும் தமிழர் மத்தியில் பெருகவேண்டும்.

இந்தத் தேவை என்றுமில்லாதபடி நம்மிடையே எழுந்துள்ள இன்றைய நிலையில் – தமிழின் நிலைபேற்றுக்கும் – காலத்துக்கேற்ற வளர்ச்சி தழுவலுக்கும், கலை இலக்கிய மேம்பாட்டிற்கும் மூலவேராக விளங்கவேண்டிய வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது தமிழார்வலர்கள் மேற்கொள்ள வேண்டிய தலையாய தமிழ்ப்பணியாயுள்ளது. காலத்துக் கேற்ற சிறந்த பணிகளிற்கெனத் தம் வாழ்நாளையே முழுமையாக அர்ப்பணித்துள்ள செஞ்சொற்செல்வரின் மண்ணின் வளமறிந்து பயிரிடும் திறமைக்கு எடுத்துக்காட்டாக – அவரது முயற்சியில் உருவாகியுள்ள நிறுவனம் தான் இணுவில் அறிவாலயம். இவரது இந்த முன்மாதிரியைப் பின்பற்றித் தமிழ் ஊர்கள் தோறும் நூலகங்கள் நிறுவப்பட்டு நம்மக்களிடையே வாசிப்புப் பழக்கம் மீண்டும் செழிக்கவைக்கப்பட்டு உலகமயமாக்கற் பேரபாயத்தையுங் கடந்து தமிழன்னை சிறந்து வாழவைப்பது காலம் வேண்டி நிற்கும் தட்டிக்கழிக்க முடியாத நம் பெருங்கடமையாகும்.

இவ்வறிவாலமும் அரும்பொருட் காட்சியகமும், சரித்திரப் பழமையும் இணுவிலின் கலை வளர்ச்சிக் களமாக விளங்கிய பெருமையும் சங்கமிருந்து தமிழாய்ந்த தமிழழகன் அருட்கழற்சிறப்பும் வாய்ந்த இணுவில் கந்தசுவாமி கோவில் முற்றிலில் அமைந்துள்ளமை இணுவை மக்களின் பெருந்தவப் பேறு என்பதில் ஐயமில்லை. அறிவாலயத்தில் உள்ளடங்கும் அரும்பொருட்காட்சியகத்தில் உலகப் போக்குகளின் தாக்கத்தினால் கைவிடப்பட்டு வரும் தமிழீழத்தவரின் பழக்க வழக்கங்களின் அடையாளங்களாக விளங்கும், வழக்கொழிந்து பாவனையிழந்து மறைந்த வீட்டுப்பாவனை, வயற்பாவனை, தொழிற்பாவனை கல்விப் பாவனை, கலைப்பாவனைக் கருவிகள் பற்றியும் இன்றும் இனியும் கிடைத்தற்கரிய அரும்பொருள்களான அவற்றைப்பற்றி இனிவரும் இணுவில் தலைமுறையினரின் எவ்வூர்த் தலைமுறையினரும் கண்டு அறிய ஆராயவென வைக்கப்பட்டுள்ளன.

இப்பாரிய கல்வி, பண்பாட்டுப் பணியில் முன்னின்று இரவு பகல் பாராது உழைக்கும் அரும்பொருட்காட்சிப் பொருள்கள், நூல்கள் தேடித்திரட்டும் திரு.மூ.சிவலிங்கம் அவர்களும் மலராசிரியராகவும், நூலக வடிவமைப்பினை நிர்வகிப்பவராகவும் உழைக்கும் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களும் அனைவரதும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களாவர்.

**"தமிழன் வாசிப்புப் பழக்கம் வளம்பெற உழைப்போம்"**

# நீங்கள் எவ்வகை?

கீழைத்தேச நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படும் கலாநிதி எஸ்.ஆர். இரங்கநாதன் அவர்கள் வாசகரை அவர்களின் குணவியல்பின் அடிப்படையில் பின்வரும் ஏழு பிரிவாக வகைப்படுத்தியுள்ளார்.

- **கூச்ச சுபாவம் உள்ள வாசகர் [Meek reader]**

  பொதுவாகப் பயந்த சுபாவமுள்ள இவ்வாசக வகையினர் நூலக அலுவலர்களிடம் உதவி கோர கூச்சப்படுபவர்கள். எவரையும் எதுவும் கேட்காமல் நூலக இறாக்கைகள், நூலகப் பட்டியல் போன்றவற்றுடன் தடுமாறுபவர்கள். இவர்கள் எம்மிடம் எதுவித உதவியும் கோரமாட்டார்கள் அதேசமயம் தாமும் பயன்பெற மாட்டார்கள்.

- **தாழ்வு மனப்பாங்குடைய வாசகர்[Inferiority complex Reader]**

  நாம் ஏதாவது போய்க் கேட்டால் எமக்கு ஒன்றுமே தெரியாது என நூலகர் நினைத்து விடுவாரோ, எமது அறியாமை, பலவீனம் என்பன அவர்களுக்கு தெரிந்து விடுமோ என நினைக்கும் வாசகர் கூட்டம் எம்மவர் மத்தியில் மிக அதிகமாக உண்டு. சற்று நேரம் அவர்களை உறுத்து நோக்கினால் போதும், குறித்த சில காலத்துக்கு எமது கண்ணிலேயே இவர்கள் படமாட்டார்கள். இவர்களை நூலகர் இனங்கண்டு அவரின் அறியாமையைப் போக்கி அவரை நிரந்தர வாசகராக ஆக்கும் பொறுப்பு நூலகருக்கு உண்டு.

- **உயர்வு மனப்பான்மையுடைய வாசகர் [Superiority complex Reader]**

  நூலகம் என்பது தகவல் சுரங்கம். அள்ள அள்ள குறையாத நீருற்று இது. சில வாசகர்கள் இதற்கு முரண்பட்டவர்கள். நூலகத்திலுள்ள அறிவுப் பதிவேடுகளை விடவும் தமது மூளையில் அதிகம் உண்டு என தம்மைப் பறைசாற்றிக் கொள்பவர்களை எமது அன்றாட வாழ்வில் நாம் கண்டு கொண்டு தான் இருக்கிறோம். இத்தகையவர்களைக் கண்டு மனம் சலிக்காது இந்திய தேசிய கவி எனப் போற்றப்படும் தாகூரின் வார்த்தையில் சொல்வதானால்" நண்பனே! நாயகனே! மனிதனிடமிருந்து கிடைக்கும் பொது அவமதிப்பின் மத்தியிலும் கூட அதனைத் தாங்கி அவனுக்கு சேவை செய்யும் மனத்துணிவைத் எனக்கு கொடு" என்ற எண்ணத்துடன் சேவையைத் தொடருவது தான் நூலக உணர்வு மிக்க நூலகரின் கடமையாகும்.

- **சாதாரண வாசகர்[Normal reader]**

  நூலக வாசகர்களில் பெரும்பாலானோர் இவர்களே. இவர்களுக்குத் தேவைப்படுவதை மட்டும் கேட்பார்கள்.

- **சுயநலமிக்க வாசகர்[Selfish reader]**

  இவர்கள் தாம் மட்டும் பாவிப்பதற்காக குறித்த நூலை எடுத்து வேறு தட்டுகளில் ஒளித்து வைத்து விடுவார்கள். தவறான இடத்தில் வைக்கப்படும் நூல்கள் தொலைந்த

நூல்களுக்கு சமமானது என்பதனால் இவர்களை மிகக் கவனமாக அவதானிக்க வேண்டும்.


- **நூல் திருடர்கள் [Book theft]**

நூல்களிலிருந்து தேவையான பக்கங்களைக் கிழித்தோ, வெட்டியோ, சில சமயம் கண்ணுக்குள் மண்ணைத் தூவிவிட்டு முழுப் புத்தகமாகவோ அபகரித்துச் சென்றுவிடுபவர்கள். இவர்களிடம் எவ்வித கருணையும் காட்டக் கூடாது என்பதுடன் இவர்கள் மீது எமது பார்வை எந்நேரமும் படும்படி நாம் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

- **நுண்ணறிவுள்ள வாசகர் [Intelligent reader]**

இவர்களுடன் பழகுவது மிகவும் கடினமானது. நூலகத்தை, நூலக சாதனங்களை, நூலக வசதிகளை, நூலக சேவைகளை அணுவணுவாக அறிந்து வைத்திருப்பவர்களும் அதனை முழுமையாகப் பயன்படுத்துபவர்களும் இவர்கள் தான். ஒளிவு மறைவின்றிக் கூறுவதானால் நூலக சேவையின் பெரும் பகுதி இவர்களுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. நூலக செயற்பாடுகளும் இவர்களை மையமாகக் கொண்டே திட்டமிடப்படுகின்றன.

**Source: S.R.Ranganathan.Library manual**



# இணுவில்

## அதன் கோயிற்பண்பாடு குறித்து ஒரு பிராரம்ப உசாவல்.



*கலாநிதி – வல்லிபுரம் மகேஸ்வரன்*

யாழ் மாவட்டத்தில் நகரமயமாதல் காரணமாகப் பல ஊர்கள் தமது இயற்பண்பை இழந்து கொண்டு வருகின்றன. எனினும் சில கிராமங்கள் காலவோட்டத்தில் மாற்றங்களைப் பெற்றாலும், தமது தனித்துவத்தையும் பேணிவருகின்றன. அவ்வாறான கிராமங்களுள் ஒன்று இணுவில். யாழ் பெருநகருக்கு அண்மையில் இது அமைந்திருந்த போதும் நகரமயமாதல் காரணமாக மாறாது தனது இயற்பண்பை இன்று வரை பேணிவருதல் அதன் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகும். இவ்வாறான பேணுகைக்கு அதன் சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்புலமே காரணங்களாக அமைந்தன.

இணுவில் கிராமத்தின் சனவேற்றம் என்பது நீர் நிலைகளை மையமாகக் கொண்டே அமைந்தது. 'பெரிய கிணற்றடி' என்ற நீர் நிலையும் அதைச் சூழ்ந்த குடியிருப்பு முறைகளும், உறவு முறைகளும் அதன் சமூக பண்பாட்டுத் தளத்தின் அடியாதாரமானவை. இதனையடுத்து இக் கிராமத்தைச் சூழ்ந்துள்ள கமம் அல்லது புலம் என்று கூறப்படுகின்ற விவசாய நிலங்களினூடான பொருளாதார உற்பத்தி, உற்பத்தி உறவுமுறைகள் முதலான பொருளியல் சார் நடவடிக்கைகள் விளங்குகின்றன.

நிலமானிய சமூக அமைப்பின் நிலம் சார்ந்த உற்பத்தி உறவுமுறைகளும், உறவுகளும் அண்மைக்காலம் வரை இங்கு நீடித்திருந்தன. மேற்கூறிய இரண்டு தளத்துக்கும் மேலாக இவ்வூரின் கோயில் சார் பண்பாடு என்பது இக்கிராமத்தின் சகல பண்பாட்டுத் தளங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற அம்சமாக விளங்குகின்றது. இக் கிராமத்தின் சைவ சமயப் பின்புலத்தினூடாக கோயிற் பண்பாடு என்பது எவ்வாறு நிலவுகின்றது என்பது பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

கோயில் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு தெய்வங்களின் பெயர்களுடைய கோயில் என்ற கட்டமைப்புக்குள் நோக்கினால் பிள்ளையார் கோயில்கள், முருகன் கோயில்கள், அம்மன் கோயில்கள், சிவன் கோயில்கள், வைரவர் கோயில்கள், ஏனையவை எனக் காணப்படுகின்றன. இவற்றுள் பிள்ளையார் கோயில்கள் யாழ்ப்பாணத்து அரச பரம்பரைப் பெயர்களை (பரராசசேகரன், செகராசசேகரன், கருணாகரன்) பெரும்பாலும் கொண்டவை. ஒருசிலவே இடத்தின் பெயரால் அல்லது சிறப்புப்

பெயரால் வழங்கப்படுகின்றன. முருகன் கோயில்கள் இரண்டும் (கந்தசுவாமி கோயில், மஞ்சத்தடி முருகன் கோயில்) பிரபலமான மேன்மையாக்கம் பெற்றவை. அம்மன் கோயில்கள் பல இருந்தும் சிவகாமி அம்மன் கோயிலே பிரபலம் பெற்று விளங்குகின்றது. சிவன் கோயில்கள் இரண்டும் தனித்துவமான பின்புலம் கொண்டவை. காரைக்கால் எனும் இடத்தில் சுடுகாட்டிற்கு அண்மித்தமைந்த சிவன் கோயில் என்பது தனித்துவமான வரலாறு கொண்டது. சுடலையில் வாசம் செய்யும் சிவனுக்கு அமைந்த தொன்மை வழிபாட்டின் எச்சமாகவே அதனை இனங்காணலாம். அண்மைக்காலம் வரை அங்கு பிராமணர்களல்லாத வீரசைவ மரபினர் பூசைகளை நடத்தி வந்தமை இதற்குச் சரியான சான்றாகும். அண்மைக் காலங்களில் இது மேனிலையாக்கம் பெற்று விட்டதை அதன் பூசகர் மாற்றம், விழாக்களின் தாற்பரியம் ஆகியவற்றால் அறியலாம்.

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சைவன் கோயில் என்ற சிவன் கோயில் தனியார் கோயிலாக இருந்த போதும் இறுக்கமான சைவ சமயிகள் வாழ்ந்தமைக்குச் சிறந்த உதாரணம் இதுவாகும். வைரவர் கோயில்களுள் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மித்ததான விளாத்தியடி வைரவர் கோயில், மருதனார் மடம் சந்தியில் அமைந்துள்ள வைரவர் கோயில் ஆகியவை முக்கியம் பெற்றவை. மேலும் சுடலைக்கும் (பூவோடை) பெரிய கிணற்றடிகளோடும் இத்தெய்வம் இணைத்து வழிபடப்பட்டது. சுடலை, ஊரெல்லை, ஊர்நடுப்பொது என்ற மூன்று இடங்களிலும் இத்தெய்வத்திற்கான வழிபாடு நடைபெறுவதை நுணுக்கமாக ஆராய்ந்தால் சைவ வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி பற்றிய பயன்தரு பண்பாட்டுத் தகவல்களைப் பெறமுடியும்.

ஏனையவை என்ற தலைப்பில் பல கிராமியத் தெய்வக் கோயில்களை இனங்காணலாம். கண்ணகி அம்மன் கோயில் ஒன்று இங்குண்டு. ஈழத்திலே யாழ்ப்பிரதேசத்தில் கண்ணகி அம்மன் கோயில்கள் பல இருந்துள்ளன. எனினும் 19ஆம் நூற்றாண்டின் பின் ஆறுமுகநாவலரது, கோயில்களை ஆகம மயப்படுத்தும் கொள்கை காரணமாகப் பல கண்ணகி கோயில்கள் அம்மன் கோயில்களாக உருமாற்றமும், பெயர் மாற்றமும் பெற்று மேனிலையாக்கம் பெற்று விட்டன. ஆயினும் இங்குள்ள கோயில் இன்னும் கண்ணகி அம்மன் கோயிலாகவே உள்ளது. (இவ்வாறான பேணுகையை வடமராட்சிப்பிரதேசத்திலும் அவதானிக்க முடிகிறது)

கோயில் சாரா நிலையில் குல தெய்வ வழிபாடு இங்கு அதிக அளவில் காணப்படுகின்றது. வீட்டுக்கிணற்றடி, பொதுக்கிணற்றடி, ஊர் எல்லை, வீதிகளின் சந்திப்பு, ஆல், அரசு, அத்தி, விளா, வேப்ப மரத்தடிகள் என் இது விளங்குகின்றது. பிள்ளையார் வைரவர் ஆகிய தெய்வங்களே இக் குலதெய்வ, பொது வழிபாட்டில் முதன்மை பெற்றுள்ளன.

பழமரபுக்கதைகளை அடியொற்றிய கிராமிய வழிபாட்டு முறைமை ஒன்றும் இங்குண்டு. இளந்தாரியார் வழிபாடு, அண்ணமார் வழிபாடு என்பவை இங்கு நீண்ட காலமாக நிலவி வருகின்றன. வெவ்வேறான மரபுக் கதை மரபுகளுடன் தொடர்புடைய இவ் வழிபாட்டில் இளந்தாரிகள் வழிபாடு மேனிலைச் சமூகத்துக்கு உரியதாகவும், அண்ணமார் வழிபாடு பிற்படுத்தப்பட்ட

சமூகத்திற்குரியதாகவும் காணப்படுகின்றன. முதலியார் அல்லது முதலிகள் வழிபாடும் ஆங்காங்கே இடம் பெறுகின்றது. இப்பெயர் எவ்வாறான கதைமரபுடன் தொடர்புடையது அல்லது யாரைக் குறிக்கின்றது என்பது ஆய்வுக்குரியதே.

இக்கிராமத்தின் கோயில் பண்பாட்டின் தொன்மையை பேய்ச்சி அம்மன் வழிபாடு கொண்டும், விளங்கிக் கொள்ள முடிகின்றது. இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் கோண்டாவில் எல்லையில் அமைந்துள்ள மிகச் சிறிய கோயில் இது. பிற்படுத்தப்பட்ட அல்லது, ஆதிதிராவிட மக்களால் வழிபடப்படும் இத் தெய்வத்திற்கும் அண்மைக்காலம் வரை மிருகபலி கொடுக்கும் வழக்கம் (வேள்வி) நிலவியது. 'பேய்ச்சி' என்ற பெயரும் அதற்கு ஆட்டுக்கடாக்களைப் பலியிடும் விழாக்களும் தமிழரின் மிகத் தொன்மையான தாய்த் தெய்வ அல்லது பெண் தெய்வ வழிபாட்டுடனும், சடங்குகளுடனும் பொருத்திப் பார்க்கக் கூடியவை. இதனைப் போலவே, நீண்ட காலமாக இங்கு நிலவி வந்த 'கொத்தியாத்தை' (கொற்றி ஆத்தை) பற்றிய நம்பிக்கைகளும் தமிழர் பண்பாட்டின் தொன்மையான அம்சங்கள் எனக் கருத இடமுண்டு. இவற்றை நோக்கும் போது இக்கிராமத்தில் தொன்ம வழிபாட்டு எச்சங்கள், கிராமியத் தெய்வ வழிபாட்டு முறைமைகள், மேனிலையாக்கக் கோயில் பண்பாடு எனப் பல கூட்டு அம்சங்கள் நிலவி வருவதை அவதானிக்கலாம்.

மேனிலையாக்கம் பெற்ற கோயிற் பண்பாடு என்பது வழிபாட்டு முறைகளிலும், விழாக்கள், விரத அனுட்டானங்கள், சமயம் சார் நடவடிக்கைகள் என்பவற்றிலும் தென்னிந்தியக் கோயிற் பண்பாட்டை ஒத்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக இணுவில் கந்தசுவாமி கோயிலின் இட அமைவு. (பெரும்பாலும் ஊர்ப் பொது, ஊர் நடுவில் ஆலயங்கள் அமைப்பது வழக்கம்) அதன் சூழலில் பிராமணக் குடியிருப்புக்கள் (அக்ரஹாரங்கள்) கோயில் சேவையாளர்களான வீர சைவர்கள், இசை வேளாளர் முதலியோரது குடியிருப்புக்கள் முதலியவை மேற்படி கோயிலை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

மேலும் இவ்வூர்க் கோயில்களின் திருவிழாக்களில் சகல சமூகத்து மக்களையும் ஒருங்கிணைத்த சமூகக் கூட்டு முறைமையும் குறிப்பிடத்தக்கது. திருவிழாக்கள் மேனிலைச் சமூகத்தவர் (பிராமணர், வேளாளர்) களுக்கு மட்டுமன்றி இசைவேளாளர், விசுவகர்மர் (தச்சுத் தொழிலாளர்), வீரசைவர் (பண்டாரங்கள்) பிற்படுத்தப்பட்டோர் (ஆதி திராவிடர்) ஆகியோருக்கும் பங்கிட்டளிக்கப்பட்ட முறைமையை நோக்கின் கோயில் என்பது சமய நிறுவனம் மட்டுமல்ல சமூக நிறுவனமுமாகும் என்ற கோட்பாட்டை இவ்வூரார் தொன்று தொட்டே பேணி வந்துள்ளமை புலனாகிறது. இவ்வாறாகச் சகல சாதியினரையும், கோயிற் கருமங்களில் சேர்க்கும் ஓர் உள் ஈர்ப்பு முறைமை இவ்வூருக்கு மட்டுமன்றிக் குடாநாட்டுக் கோயில்கள் அனைத்துக்கும் பொதுவான விடயம். இது பற்றிய சமூகவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியக் கட்டுமானத்தின் அகமும் புறமும் மேலும் துலக்கம் பெறும்.

கிராமச் சமூகங்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டின் இன்னோர் அம்சம் கோயில் எழுந்தருளிகள் ஊர் உலாச் செய்வதாகும். இணுவில் கந்தசுவாமி வேட்டைத்திருவிழாவின் போது எழுந்தருளி இணுவில்

மேற்கிலிருந்து, கிழக்கில் சிவகாமியம்மன் ஆலயத்திற்குச் சென்று வள்ளியைத் திருமணம் செய்து மீளுதல், நவராத்திரியின் இறுதி நாளான மகாநோன்பு (மானம்பு) தினத்தில் சிவகாமி அம்பாள் கிழக்கில் இருந்து மேற்கில் கந்தசுவாமி கோயிலுக்கு வந்து வன்னிமரம் வெட்டிச் மகிசசங்காரம் செய்து மீளுதல். என்பவை வெறுமனே சமயச் சடங்குகளின் நிலைப்பட்டவையல்ல. அவை சமூகப் பண்பாட்டின் வழிப்பட்டவையுமாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழும் ஏழூர் திருவுலாவை இது நினைவு படுத்துகின்றது.

மேற்குறித்த கோயிற் பண்பாடும், சமயப் பண்பாடும் இவ்வூர் மக்களின் வாழ்வின் சகல நிலைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிறப்புச் சடங்கு முதல் இறப்புச்சடங்கு வரையுள்ள வாழ்க்கை வட்டச்சடங்குகள், விரதங்கள், வாழ்க்கை முறைகள் யாவும் இப்பண்பாட்டின் அடியாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. இச் சமூகத்தின் சமயமயமாதல் அம்சங்கள் தனியே நோக்கப்பட வேண்டியவை.

மேற்குறிப்பிட்டவற்றினடிப்படையில் நோக்குகின்ற போது இணுவில் கிராமத்தின் தனித்துவத்திற்கு அதன் சூழ்நிலைப்பட்ட கோயிற்பண்பாடே அரிச்சுவடாக நின்று இயங்கி வருகின்றது என்பது புலனாகின்றது. இது தொடர்பான நடுநிலையான ஆய்வு, குறிப்பிட்ட தேடல்கள் நடைபெறும் போது இப் பண்பாட்டுச் சூழல் மேலும் துலக்கம் பெறும்.

"சமுதாய மேம்பாடு என்பது மனிதனது உணர்வு பூர்வமான பங்கு பற்றுதலின்றி முற்றிலும் தானாக நிகழும் ஒன்றல்ல. அதே சமயம் மனித சமூகச் சூழலின் இயல்பை மீறி யாராலும் வலிந்து ஏற்படுத்தப்படுவதுமல்ல. மனிதனது தேவைகளும் சமுதாய உறவுகளும் இணையும் போது மட்டுமே மேம்பாடு கருக்கொள்கிறது"

- மாவோ -

# நூலகம்

# ஓர் ஊரின் செல்வம்

ம.பா.மகாலிங்கசிவம் BA.(Hons)



தடியின்றி மிரட்டாமல் தண்டனையும் இன்றித்
தமைநாடி வருவோர்க்கு அறிவுதரும் நூல்கள்
தடையின்றி ஒளிக்காமல் தம்முளுள தெல்லாம்
தந்தெம்மை வழிகாட்டும் தரமிக்க நூல்கள்.

உலகெங்கும் வாழ்கின்ற நல்லறிஞர் தங்கள்
உளப்பூர்வச் சிந்தனையின் விளைவான நூல்கள்
பலவாகச் சேர்த்துவைத்துப் பக்குவமாய்க் காக்கும்
பண்புடைய நூலகம்தான் ஓர் ஊரின் செல்வம்.

இணுவையூர் மக்களுமே நூலகத்தின் தேவை
உணர்ந்தார் இயல்பான கலையார்வம் தன்னால்
இணுவையிலே நூலகமும் அரும்பொருட்கள் காட்சிச்
சாலையதும் உருவாக்கி எங்களுக்காய்த் தந்தார்.

நூலகத்தைத் தினந்தேடி நாம் செல்ல வேண்டும்
நுண்ணியதாம் அறிவுதனைச் சேர்த்திடவும் வேண்டும்
ஞாலமெலாம் ஒன்றாக்கும் இணையதளச் சேவை
நன்கமைத்து முன்னேற்றப் பாதைசெல வேண்டும்

# புத்தகங்களே சிறந்த தோழர்கள்



மதுரைப் பண்டிதர்
க.சச்சிதானந்தன்

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்"

எழுத்தறிவு என்பது அறிவுக்கண்; "வாழ்நாள் முழுவதும் கல்வி" என்பது இன்றைய கல்வியாளரின் தாரகமந்திரம். இன்று வாழக்கற்க வேண்டும்; மிக விரைவாக மாறிவரும் உலக சமுதாயத்தில் வாழவேண்டுமானால், புரட்சிகரமான உலகவாழ்வில் தாம் பின்தங்கி நிற்காமல் அதனோடு இணைய வேண்டுமானால் அறிவை ஒவ்வொருநாளும், மாற்றத்திற் கேற்பத் தேட வேண்டும். இது கட்புல செவிப்புல ஊடகங்களினால் உள்வாங்க வேண்டியுள்ளது.

புத்தகங்கள் இவற்றில் தலையாய நண்பர்களாவர். வானொலி நிலையத்தாரின் விருப்பு வெறுப்புக்களுக்குக் கேற்பவே தயாரிக்கப்படும். அவ்வாறே ஒளிக்காட்சிகளும் ஒரு நிலைபத்தாரின் சுவைக்கேற்பவே அமையும். ஒரு வாசிகசாலையினுள் புகுந்தோமானால் எங்களுக்கு விரும்பிய, எமது நாட்டத்திற்கேற்றவற்றைத் தெரிந்து சுவைக்கலாம்; அறிவைத்தேடலாம்; அங்கு வாசிக்கும் நூல்கள், படிக்கும் நூல்கள், கற்கும் நூல்கள் என மூன்று வகையானவை உண்டு. இன்று ஒரு பரீட்சை நிலையமாற்றம் திடீரென அறிவிக்கப்பட்டது; காலைத் தினசரியில் அது வெளியிடப்பட்டிருந்தது. அதனை எட்டுமணிக்கு வாசித்த ஒருவர் உடனே செயற்பட்டுத் தனக்குரிய பரீட்சை நிலையத்தை அடைந்தார். இது நிஜமான ஒரு சம்பவம். இப்படியே எத்தனையோ. காலைத்தினசரி ஒரு வாசிக்கும் தகவற் றொகுதி. மரண அறிவித்தல்கள், விவாக அழைப்புகள் அன்றன்று தினசரியில் வாசியாவிட்டால் வாழமுடியாது. ஆனால் முதல்நாள் பத்திரிகை ஒரு நாவலைப்போலப் படித்து மீட்டு மீட்டும் சுவைக்கக்கூடியதன்று. கவிதை, சிறு கதைத் தொகுப்புக்கள், நாவல்கள் படிக்கும் நூல்கள். ஒரு வாசிகசாலையின் எமக்குப் பிடித்தமான துறை நாவலைத் தெரிந்து கொள்ளலாம். அது, துப்பறியும் நாவலாகலாம்; சரித்தர நாவலாகலாம்; சமூக நாவலாகலாம்; அவை எமது தெரிவு. எமது நண்பன். இந்த நண்பனோடு நமக்கு வேண்டிய நேரத்தில் உறவாடலாம். பஸ் நிலையத்தில் காத்திருக்கும் நேரம் அடுத்தவரோடு வீண்வம்பு பேசி விபரீதம் தேடாமல் எமது புத்தகத்தோழனை விரித்து வைத்துப் பஸ் நிலையத்தை டோவர் தெருவின் குதிரைவண்டிப் பிரயாணமாக மாற்றலாம். டிக்கன்ஸ் எழுதிய இரு நகரக் கதையில் **'Dover mail'** என்ற

பகுதியினை வாசித்தால் நேரம் எவ்வாறு போனதென்றே தெரியாது. படுக்கைக்குப் போகுமுன் ஒரு குடும்பப் பெண், "கள்வனின் காதலி" என்ற கல்கியின் நாவலை வாசிக்கின்றாள். கல்யாணியின் அன்புக்கு அவள் மனம் நெகிழ்கிறாள். வைத்தியசாலைகளில் நீண்ட கியூவரிசையில் அமர்ந்திருக்கின்றோம். அப்பொழுது என்ன செய்வதென்றே தெரிவதில்லை. சிவகாமியின் சபதம் எங்களை வேறோரு உலகத்துக்கு இட்டுச் செல்கிறது.

கற்கும் நூல்கள் ஆழமான இன்பத்தைத் தரவல்லன. அவை, தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு என்றாங்கு கற்கக் கற்கப் புதுப்புதுப் பொருள்கள் சுவைகள் தோன்றி ஆரா இன்பத்தைத் தரும். அன்னத்தைத் தமயந்தியிடம் தூது சொல்லிவிட்டு என்ன முடிவு கொண்டு வருமோ என்று ஏங்கித்துடிக்கிறான் நளன்.

"இவ்வளவிற் செல்லுங்கொல்! இவ்வளவிற் காணுங்கொல்!
இவ்வளவிற் சேதி இயம்புங்கொல் – இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினான் –"
என்ற வரிகள் அவன் அந்தரமனத்தைக் காட்டுகின்றன. இப்பொழுது போயிருக்கும், இப்பொழுது தமயந்தியைக் காணும், இப்பொழுது சேதி சொல்லும், இப்பொழுது மீண்டு வரும் என்று அங்கலாய்த்து வானத்தைப் பார்க்கின்றான். மில்ரன் எழுதிய சாம்ஸன் நாடகத்தில் ஒரு பகுதி. அவனைக் காட்டிக் கொடுத்த சொந்த மனைவி, அவன் மறியற்சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டுக் கிடக்கிறான். அப்பொழுது மனைவி தான் செய்த பிழையை மன்னிக்கும்படி கேட்கிறாள். அப்போது, சாம்ஸன் கூறுவதை எத்தனை தரம் வாசித்தாலும் தெவிட்டாது. மில்ரனின் கவிதை ஓசை ஒருவனை மேலே உயர்த்திச் செல்லும். அதனால் **"Miltion is sublime"** என்று கூறுவார்கள். இந்த நாடகத்தைக் கிட்டத்தட்ட ஐம்பது முறையாவது வாசித்து விட்டேன். காத்திருக்கும் கியூவரிசைகளில் இந்த நாடகம் என்னை வேறோர் உலகத்துக்கிட்டுச் செல்லும். அப்படியே சேக்ஸ்பியரின் நாடகங்கள். **Hamlet** என்ற நாடகத்தில் ஹாம்லெற்றின் **"To be, not not to be"** என்ற பகுதி தெவிட்டாது. மலைகளின் உயரம் அடிவாரத்தில் தெரியாது. **"Mountains are not seen at the foot, but at a distance, one can see the top"** அவ்வாறு சில நூல்களின் பெருமை காலம் போகப்போகவே தெரியும். அவை கற்கும் நூல்கள்.

இன்று கணினியுகம். அதனால் ஒரு நாளைக்குக் குறைந்தது மூன்று நூல் வெளியீட்டு விழாவாவது நிகழும். **Printing outpace reading**. அச்சேற்றல் வாசிக்கும் வேகத்துக்கு முன்னோக்கிச் செல்கிறது. அதனால் வாசகர்கள் தெரிந்து படிக்க வேண்டியிருக்கின்றது. "கல்வி கரையில கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணி பல, – தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, பாலுன் குருகிற றெரிந்து" என்றாங்கு புத்தகக்குவியல்களில் நாம் தெரிந்து கற்க வேண்டியவற்றைப் பொறுக்கி அமைதியாகக் கற்க வேண்டும். ஒரு தினசரியின் வார வெளியீட்டில் இருபத்திநாலு பக்கங்களுக்கு மேல் கண்ணைக்கவரும் வண்ணப்படங்களுடன் பல்துறையிலும் கட்டுரைகள் வெளியாகின்றன. நோயியல், மருத்துவம் எல்லா வார வெளியீடுகளிலும் காணலாம்; அரசியல் அலசல், போர்நிலைகள், சினிமா இப்படிப் போகின்றது. பெண்களின் அரை நிர்வாணப்படங்கள் இத்தியாதி, இத்தியாதி,

இவையெல்லாவற்றையும், வீட்டில் சும்மா இருப்பவனாலும் ஒரு கிழமைக்குள் வாசிக்க முடியாது.

இப்படியான நீர்ப்பாலில் பாலைத்தெரிவது ஒரு கலை. வாசிப்போர் இந்தக் கலையைக் கற்க வேண்டும். ஒரு பந்தியில் இரண்டொரு சொற்களை, வசனங்களை வாசித்தவுடன், என்ன சொல்லப்படுகின்றது என்று விளங்குவது ஒரு அறிவுக்கலை. அந்தக்கலை கைவந்தவர்கள் ஒரு நூலில் பக்கம் பக்கமாகப்புரட்டி அந்த நூல் முழுவதிலும் என்ன சொல்லப்படுகிறது என்று சொல்லுவார்கள். **Skipping in Reading,** "வாசிப்பில் பாய்ந்து செல்லல்" என்று சொல்லலாம்.

இன்று நூல் நிலையங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் மிக அவசியமானதாகும். பிரதேசசபைகள் நூல்நிலையங்களை ஆக்கி, அவற்றைக் கிராமத்தவருக்குப் பயனுள்ளனவாக்கப் பெரும் பிரயத்தனம் செய்கின்றன. அவற்றுக்குக் குறிப்பிட்ட தொகையான பணமும் செலவழிக்கிறார்கள்.

இக்காலத்தில் மாணவர்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுகிறார்கள். அவர்களுக்குப் பிரதேசசபை நூல்நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன. யாழ்ப்பாண மாநகரசபை நூல்நிலையம் ஒரு அறிவுக்கோயில். வெளியீடுகள் வெளிவரும் வேகத்தில் பிரவாகிக்கின்ற நூல்கள் எல்லாவற்றையும் ஒரு பிரதேசயினால் வாங்க முடியாது. எனவே தெரிந்து பணத்தைச் செலவழிக்கவேண்டும்.. அதற்குச் செயலாளர், நூலகர் இருவருடைய ஒத்துழைப்பும் வேண்டும்.. அதனால் மிகமலிவான நூல்களைத் தரத்தை நோக்காது வாங்கச் சிபார்சு செய்வது சில நூலகர்களின் போக்கு. அவர்கள், தரமான நூல்களைப் பொதுமக்கள் வாசிப்பதில்லை என்று கூறுவார்கள். இது ஒரு வட்டப் பாதையிற் போகும். நூலிருந்தால் வாசிக்கச் சந்தர்ப்பம் வரும். இல்லையென்றால் வாசிக்க வராது. அதனால் மக்கள் வாசிப்பதில்லை என்று 'சிறுகதை' நாவல் முதலியவற்றை மாத்திரம் தெரிகிறார்கள்.

"ஊருக்கு அழகு கோயில்; ஊருக்கு அறிவு நீர்க்கேணி நூல்நிலையம்"

சில நூல்கள் சுவைக்கப்பட வேண்டியவை, ஏனையவை விழுங்கப்பட வேண்டியவை, மிகச் சிலவே சப்பிச் சீரணிக்கப்பட வேண்டியவை.

- பிரான்சிஸ் பேகன் -

# நூலின் அமைப்பு

*பண்புகள் :- ஆங்கில அகர வரிசையில்*


| | |
|---|---|
| *Accuracy* | *துல்லியம்* |
| *Brevity* | *சுருக்கம்* |
| *Confidence* | *நம்பிக்கை* |
| *Dignity* | *கண்ணியம்* |
| *Emphasis* | *அழுத்தம்* |
| *Facility* | *வாய்ப்பு வசதி* |
| *Grammatical correctness* | *இலக்கண ஒழுக்கம்* |
| *Honesty* | *நேர்மை* |
| *Illustrations* | *விளக்கப்படங்கள்* |
| *Judgement* | *தீர்ப்பு* |
| *Knowledge* | *அறிவு* |
| *Logic* | *காரண காரியத் தொடர்பு* |
| *Mechanical neatness* | *அமைவு நேர்த்தி* |
| *Normal procedure* | *விதிப் பாங்கு* |
| *Objectivity* | *புலனறி தன்மை* |
| *Planning* | *திட்டம்* |
| *Qualification* | *தகுதி* |
| *Revision* | *திருத்தம்* |
| *Straight sentence* | *நேரடிச் சொற்றொடர்* |
| *Thoroughness* | *செம்மை* |
| *Unity* | *ஒருமைப்பாடு* |
| *View point* | *நோக்கு* |
| *Word choice* | *சொற்தேர்வு* |
| *Xeniality* | *விருந்துறவு* |
| *Your point* | *உங்கள் பார்வை* |
| *Zest* | *ஆர்வம்* |

*மூலம் :* **Paul M. Zall – Elements of technical report writing-1963**


# அறிவாலயம் வழங்கும் அறிவுக் கருவூலங்கள்

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்





மனித இனம் தோன்றிய காலம் முதற் கொண்டு
தன்னைச் சுற்றியுள்ளவை மீதான அவதானிப்புகளும்,
அவ்வவதானிப்புகளைப் பரிசோதனைக்குள்ளாக்கித்
தீர்வு காண முயலும் மனித மூளையின் ஆற்றலும்,
தான் பெற்ற அறிவை அடுத்தவரும் பயன்படுத்தும்
வகையில் காலத்துக்குக் காலம் கிடைத்த
எழுதுபொருட்களில் பதிந்து வைக்கும்
மனித சிந்தனையும், இணைந்ததால்
தோற்றம் பெற்ற எண்ணற்ற மனித
சிந்தனைப் பதிவேடுகளை, அனைவரும்
பயன்படுத்துவதற்கேற்ற வகையில் சேகரித்து,
ஒழுங்கமைத்துப், பாதுகாத்துப், பாவனைப்படுத்தும்
பணியில் காலத்துக்குக் காலம்
பல தகவல் நிறுவனங்க ள் தோற்றம் பெற்றுள்ளன.
இன்றும் புதிதாகத் தோற்றம் பெறுகின்றன.
அவ்வாறு தோற்றம் பெற்ற நிறுவனங்களுள்
ஒன்று தான் இணுவையூரில் உருவாகும்
இவ் அறிவாலயம்.



நூல்களைக் கொண்டது நூலகம் என்ற எண்ணக்கரு மாறி இன்று நூலகங்கள் நூல் வடிவில் மட்டுமன்றி நூலுருவற்ற வடிவிலும் பொதியப்பட்ட தகவலைக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சாதனங்களை இனங்காணும் அறிவைப் பெற்றால் மட்டுமே நூலகம் என்பது நூல்களைச் சேமித்து வைக்கும் காப்பகம் என்ற கருத்துநிலை மாறி அது அறிவைப் பரப்பும் நிறுவனம் என்ற கருத்துப் புதிதாக உருவாகும். இந்த வகையில் நூலகத்தை நாடும் ஒரு வாசகனுக்கு அங்கு என்னென்ன சாதனங்கள் இருக்கும் என்பதை அறியத் தருவதும் நூலகர்களுக்கு இச் சாதனங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தல் பொருத்தமானது என்பதைத் தெளிவுபடுத்துவதுமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தகவல் வளங்கள் [Information resources]

மனித சிந்தனைப் பதிவேடுகள் கால மாற்றத்துக்கமைய உடல் உள மாற்றங்களைச் சந்தித்திருக்கின்றமையை வரலாறு எமக்குப் புலப்படுத்துகின்றது. உருவமைப்பின் அடிப்படையில் ஓலைச் சுவடிகளாக உருப்பெற்று அச்சின் கண்டுபிடிப்புக்கு முன்னரேயே நூல் - எனக் காரணப் பெயர் பெற்றுப், பின்னர் நூலுருவற்றனவற்றையும் உள்ளடக்குமுகமாக ஆவணம் எனப் பெயர் தாங்கி, தகவல் என்ற கருத்துநிலை தகவல் உலகில் நிரந்தர இடம் பெற்றபோது தகவலைக் கொண்டிருக்கும் சாதனங்கள் என்ற வகையில் தகவற் சாதனங்கள் எனப் பெயர் மாற்றம் பெற்றுப் பயன்பாட்டுக்குரிய வளம் என்ற வகையில் தகவல் வளம் என்ற பெயருடன் இன்றைய தகவல் உலகில் இப் பதிவேடுகள் உலா வருகின்றன. தகவல் வளங்களை ஆவணம் சார்ந்த வளங்கள், ஆவணம் சாராத வளங்கள் என இருவகையாக வகைப்படுத்த முடியும். ஆவணம் சார்ந்த வளங்கள் **[Documentary resources]** அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் முதல்நிலைத் தகவல் வளங்கள் இரண்டாம்நிலைத் தகவல் வளங்கள் மூன்றாம்நிலைத் தகவல் வளங்கள் என மூன்று வகையாகவும் உருவமைப்பின் அடிப்படையில் நூலுருச் சாதனங்கள் நூலுருவற்ற சாதனங்கள் என இருவகையாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. ஆவணம் சாராத வளங்கள் மனித வளங்கள், நிறுவன வளங்கள் என இருவகைப்படுத்தப்படுகின்றன. அறிவாலயம் உள்ளடக்கக்கூடிய ஆவணம் சார்ந்த வளங்களும் இவற்றை எங்கே ஒழுங்குபடுத்தல் பொருத்தமானது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

## இருப்புப் பகுதி [Stack Area]

அறிவாலயத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு வாசகருக்கும் அறிவாலயத்தின் மொத்தத் தகவல் சாதன இருப்பின் கணிசமான அளவு பகுதி இருப்புப் பகுதிக்குரியது என்பது தெளிவாகப் புரியும். வாசகரால் வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்குமுகமாக ஒரு வாரமோ இரு வாரங்களோ இரவல் வழங்கப்படுகின்ற நூல்களே இருப்புப் பகுதிக்குரியவையாகும். குறிப்பிட்ட பொருட்துறை சார்ந்து பரந்து பட்ட ரீதியில் எழுதப்படும் நூல்களை இருப்புப் பகுதியில் ஒழுங்குபடுத்தல் சிறந்ததாகும். பொதுவாக எந்தவொரு நூலகமும் கொண்டிருக்கும் தகவல் சாதனங்களில் கணிசமான அளவு நூல்களாகவே இருப்பது மட்டுமன்றி அனைவருக்கும் மிகப் பழக்கமான தகவல் வளமாகவும் இவை கருதப்படுகின்றன.

### புனைகதை நூல்கள் [Fictions]

புனைகதை நூல்கள் சிறப்பாகப் பொது நூலகங்களுக்குரியவை. எமது பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நூலகங்களின் மொத்த நூல் இருப்பில் கணிசமான அளவு புனைகதை நூல்களே என்று கூறுமளவிற்கு அதன் அளவு மிக அதிகமாகும். சமூக நாவல்கள், துப்பறியும் நாவல்கள், வரலாற்று நாவல்கள், மட்டுமன்றிக் குறுநாவல்கள், மொழிபெயர்ப்பு நாவல்கள் போன்றனவும் சிறுகதைகளும் பொதுநூலகங்களின் இருப்புப் பகுதியை அலங்கரிக்கின்றன.

### தனிப்பொருள் நூல்கள் [monographs]

குறித்த ஒரு பாடத்துறையில் விளக்கமாக எழுதப்பட்டு வெளியிடப்படுவதே தனிப்பொருள்நூல்கள் எனப்படும். இவை ஓர் ஆசிரியரால் தனித்தோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்தோ எழுதப்பட்டவையாக இருக்கும். பல்கலைக்கழகச் சமூகத்தின் ஆய்வுத் தேவைகளையும் பாடவிதானம் சம்பந்தப்பட்ட

தேவைகளையும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இவற்றின் பாவனையானது ஏனைய அறிவுசார் சாதனங்களையும் விட ஒப்பீட்டளவில் அதிகமானது. எனினும் நவீன தொழிநுட்ப வசதிகளின் விளைவால் மில்லியன் கணக்கில் வெளியாகும் நூல்களின் எண்ணிக்கையும் நூலகங்களின் இடவசதியின்மையும் இந்நூல்களின் அதிகரிப்பிற்கு அச்சுறுத்தலாக அமைகின்றன.

## உசாத்துணைப் பகுதி [Reference section]

பாடவிதானத்துடன் தொடர்புடைய நூல்கள் அனைத்தும் உசாத்துணைப் பகுதியைச் சார்ந்தவையாகும். இவை ஓரிரவுக்கு மட்டுமே இரவல் வழங்கப்படக் கூடியவையாகும். இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பிரதிகள் இல்லாத நூல்கள் பாடநூலாயினும் நிரந்தர உசாத்துணைப் பெறுமதி கொடுக்கப்பட்டு இரவல் வழங்கும் செயற்பாட்டிலிருந்து நிறுத்தப்படுகின்றது.

### பாட நூல்கள் [Text books]

குறிப்பிட்ட ஒரு பொருட்துறையைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கென உருவாக்கப்படும் நூல்களே பாட நூல்கள் ஆகும். இவை பொதுவாகப் பரந்த பொருட்துறையை உள்ளடக்குபவை. வாசிப்பு நோக்கம் என்பதே இங்கு முக்கியமானதாக இருப்பதனால் தகவல் வழங்கப்படும் விதம் இங்கு மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டியுள்ளது.
வண்ணப்படங்களும் போதிய விளக்கப்படங்களும் கவர்ச்சிகரமான வடிவமைப்பும் வாசிப்பில் தூண்டலை ஏற்படுத்துபவை. நல்லதோர் பாடநூலானது வாசிப்புக்கு மட்டுமன்றி நல்லதோர் கற்பித்தலுக்கும் வழிகாட்டக்கூடியது. புதிய அபிவிருத்திகள், மாறிவரும் கற்பித்தல் முறைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இவை அடிக்கடி மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளன.

### கைந்நூல்கள் [Hand books]

கைந்நூல்கள் என்பவை கையடக்க வடிவில் நானாவிதத் தகவல்களைத் தொகுத்துத் தருபவை. தரவுகள், செய்முறைகள், கோட்பாடுகள், போன்றவற்றை இவை வழங்குவதுடன் அட்டவணைகள், வரைபடங்கள், விளக்கப்படங்கள் போன்றவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. அறிவியலாளர் தொழினுட்பவியலாளர் மத்தியில் கைந்நூல்களின் பாவனை மிக அதிகளவில் காணப்படுகின்றது.

### கையேடுகள் [Manuals]

கையேடு என்பது ஒரு வேலையை எவ்வாறு நிறைவேற்றுவது, தெளிவான தனித்துவமான வழிகாட்டுதலினூடாக ஒன்றை எவ்வாறு செய்வது என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குகின்ற ஓர் அறிவுறுத்தல் நூலாகும்.

### மீளாய்வுகள் [Reviews]

முதல்நிலைத் தகவல் வளங்கள் பற்றிய ஒரு மதிப்பீடே மீளாய்வு எனப்படுகிறது. குறிப்பிட்ட துறைசார்ந்து குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளைச் சுட்டிக்காட்டுவதே மீளாய்வுகளின் நோக்கமாகும். இவை மாதாந்த, காலாண்டு வருடாந்த ரீதியில் தோன்றுகின்ற கட்டுரைத் தொகுதிகளாகவோ பருவஇதழில் வெளிவரும் கட்டுரையாகவோ இருக்கலாம். புதிய பிரச்சினைக்கான பின்னணித் தகவல்களைப் பொருத்தமான வடிவத்தில் வழங்குவதுடன் இலக்கியத்துக்கான திறவுகோலாகவும் கருதப்படுகின்றன.

### அட்டவணைகள் [Tables]

எழுதப்பட்ட சொற்கள், குறியீடுகள், எண்கள் அல்லது இவற்றின் சேர்க்கைகளை நிரல் ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்ட தரவுகளில் தரும் ஓர் ஒழுங்கமைப்பு. கைந்நூல்களில் பெரும்பாலானவை அட்டவணைகளின் வடிவமைப்பில் பெருந்தொகையான தகவல்களை உள்ளடக்குகின்றன. சில கைநூல்கள் அதன் பொருட்துறையிலும் பார்க்கக் கணிசமான அளவு அட்டவணைகளுக்கு ஒதுக்குகின்றன. பாட விளக்கங்களை விட அட்டவணைகளின் மூலம் ஒரு தகவலை விளங்கிக் கொள்வது இலகுவானது. குடித்தொகைத் தரவுகள், அறிவியல் துறையில் குறிப்பாக பௌதிக தொழினுட்பத் துறைகளில் அட்டவணைகள் மிகுந்த பயன்பாடுள்ளவையாகக் கருதப்படுகின்றன.

## உடனடி உசாத்துணைப் பகுதி [Ready Reference Section]

தனித்துவமான தகவலைப் பெறும் நோக்குடன் காலத்துக்குக் காலம் குறிப்பெடுக்கவென வடிவமைக்கப்படும் நூல்கள் இவ்வகைக்குள் அடங்கும். இவற்றின் ஒழுங்கமைப்பும் பயன்பாடும் ஏதாவது ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கும். சாதாரண நூல்களைப் போன்று தொடர்ச்சியான முறையில் இவற்றை வாசிக்க முடியாது. இவற்றில் உள்ள தகவல்கள் சரியாகவும், முறையாகவும் ஒழுங்குபடுத்தப் பட்டிருப்பதன் காரணமாக தேவைப்படும் தகவல்களை உடனுக்குடன் எவ்வித காலவிரயமுமின்றிப் பெற்றுக்கொள்ள முடியும்.

நூலகம் ஒன்றின் தரத்தை நிர்ணயிப்பதில் உடனடி உசாத்துணைப் பகுதிக்குப் பெரும் பங்குண்டு. இருப்புப் பகுதியில் குவிந்து கிடக்கும் கதைப் புத்தகங்களை நாடி வரும் வாசகரின் அளவைக் கொண்டு அதனை சிறந்த நூலகம் என்றோ அவ் வாசகரைக் கொண்ட சமூகத்தை வளர்ச்சியடைந்த சமூகம் என்றோ கொள்ள முடியாது. வாசகரின் எத்தனை வீதம் உசாத்துணைப் பகுதியைப் பயன்படுத்துகின்றனர் என்பதிலேயே வாசகரின் தகுதி, நூலகத்தின் தகுதி, நூலகம் அமைந்துள்ள சமூகத்தின் தகுதி என்பன நிர்ணயிக்கப்படுகின்றன.

**கலைக்களஞ்சியங்கள் [Encyclopaedias]:**

காலங்காலமாக மனிதனது அறிவுத் தேடலும் ஆன்மமுயற்சியும் உடலுழைப்பும் இணைந்து சாதிக்கப்பட்டவைகளை எழுத்துவடிவில் ஒன்றுதிரட்டித் தரும் ஒரு உசாத்துணை நூலே கலைக்களஞ்சியமாகும். மானுட வரலாற்றின் கூறுகள் அனைத்தையும் ஓரிடத்தில் பார்த்து அறிந்துகொள்ளும் வாய்ப்பை இந்நூல் தருகிறது. தற்காலத்தில் பெரும்பாலானோருக்குக் கலைக்களஞ்சியம் என்பது உலக அறிவின் தொகுப்பைப் பல பகுதிகளாகக் கொண்டு படங்கள் சொல்லடைவுகள் என்பவற்றை உள்ளடக்கி நூல்விபரப்பட்டியல்கள், விளக்கப்படங்கள், புவியியல் விபரங்கள், சுருக்க விளக்கங்கள் என்பவற்றையும் இணைத்து வெளிவரும் நூலாகக் கருதப்படுகிறது. ஆனால் இவை அனைத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொண்டு தனிநபரால் தொகுக்கப்பட்ட ஒருதொகுதிக் கலைக்களஞ்சியம் முதற்கொண்டு ஆயிரக்கணக்கான பங்களிப்பாளர்களின் உதவியுடன் உருவாக்கப்படும் பலதொகுதிக் கலைக்களஞ்சியம் வரை இன்றைய நூலகங்களை அலங்கரிக்கின்றன. வெளியிடப்பட்ட இடம், காலம், என்பவற்றுக்கமைய அறிவின் உள்ளடக்கப் பரப்பானது வேறுபடுகிறது. எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய பொதுக் கலைக்களஞ்சியங்கள் பொது நூலகம் ஒன்றுக்கு ஏற்றதெனினும் பரந்த பொருட் துறைகளை உள்ளடக்கிய சிறப்புக் கலைக் களஞ்சியங்களையும் பொது நூலகம் கொண்டிருக்க வேண்டும். ஆங்கிலக் கலைக் களஞ்சியங்களில் பிரித்தானியக் கலைக் களஞ்சியம், அமெரிக்கானா கலைக்களஞ்சியம், World book encyclopaedia போன்றவையும், தமிழ்க் கலைக் களஞ்சியங்களில் குழந்தைகள் கலைக் களஞ்சியம், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கலைக் களஞ்சியம், வாழ்வியல் கலைக்களஞ்சியம், அறிவியல் களஞ்சியம் என்பவையும் முக்கியமானவை.

**அகராதிகள் [Dictionaries]**

ஒரு மொழியில் வழங்குகின்ற சொற்களை அகரவரிசையில் நிறுத்தி அவற்றிற்குப் பொருள் கூறும் நூல்கள் அகராதிகள் எனப்படும். 'ஒரு மொழியின் சொல் வளம், அதன் பொருள் நயம், அவை பயன்படுத்தப்படும் விதம், அவற்றின் இலக்கணக் கூறுகள், அவற்றின் வரலாற்று மூலம் முதலிய இன்னோரன்ன அம்சங்களை அகரவரிசையில் தந்து நிற்பது அகராதி என்கிறார் அகத்தியலிங்கம். அகராதிகள் பொதுவாக மொழி அகராதிகள் [Linguistic dictionaries] பொருள் அகராதிகள் [ Subject dictionaries] என இரு வகைப்படும். மொழி அகராதிகள் தனிமொழி அகராதிகளாகவோ, இரு மொழி அகராதிகளாகவோ பன்மொழி அகராதிகளாகவோ இருக்க முடியும். வெப்ஸ்ரர் அகராதி, ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி, கொலின்ஸ் அகராதி போன்றன ஆங்கிலத் தனிமொழி அகராதிகளில்

முக்கியமானவை. அதுபோன்று சிதம்பரச் செட்டியாரின் சென்னைப் பல்கலைக்கழக அகராதி, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, கோனார் தமிழ்க் கையகராதி போன்றவை தமிழ்த் தனிமொழி அகராதிகளில் குறிப்பிடத்தக்கவை. இருமொழி அகராதிகள் தற்போது பெருந்தொகையாகத் தகவல் சந்தையில் குவிந்து கிடக்கின்றன. இதைவிடவும் கலைச் சொல்லகராதிகளின் பங்களிப்புப் பாடத்துறைக்கு மட்டுமன்றி அறிவுத்தேடலுக்கும் முக்கியமானதாகும்.

### ஆண்டு நூல்கள் [Year books]

பொதுத்துறை சார்ந்தும், சில சமயங்களில் சிறப்புத் துறை சார்ந்தும் உருவாகும் அண்மைக்காலத் தகவல்களை விவரண ரீதியிலும் புள்ளிவிபர ரீதியிலும் ஆண்டு ரீதியாகத் தொகுத்துத் தருபவை ஆண்டுநூல்கள் என்கிறது அமெரிக்க நூலகச் சங்கத்தின் கலைச்சொல் அகராதி. குறிப்பிட்ட வருடத்தில் இடம்பெற்ற தகவல்களைத் தொகுத்துத் தருவதே இவற்றின் நோக்கமாகும். சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரு பொருட்துறை சார்ந்ததாக அல்லது ஒரு நாடு அல்லது பிரதேசத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக அவற்றின் தகவல்கள் இருக்கக்கூடும். ஆண்டு நூல்களைப் பொது ஆண்டு நூல்கள் சிறப்பு ஆண்டு நூல்கள் என இரு வகையாகப் பாகுபடுத்தலாம். பொது ஆண்டு நூல்கள் பொதுவாக எல்லா நாடுகளதும் அண்மைக்காலத் தகவல்களை உள்ளடக்கி வெளியிடப்படுபவை. Statemen's yearbook, Europa year book, world year book போன்றவை இவ்வகையைச் சாரும். சிறப்பு ஆண்டு நூல்கள் கல்வி சார்ந்ததாகவோ அல்லது ஒரு நாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது கலைக்களஞ்சியங்களின் அனுபந்தங்களாகவோ இருக்கலாம். Common wealth University yearbook-கல்வி சார்ந்த ஆண்டு நூலாகும்.

### வழிகாட்டிகள் [Directories]

தனிநபர்களது பெயர், முகவரி போன்ற விபரங்களையும், நிறுவனங்களது பெயர், முகவரி அலுவலர் விபரம் தொழிற்பாடுகள் போன்ற தரவுகளையும் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படும் பட்டி வழிகாட்டி எனப்படுகிறது. குறிப்பாக பொதுநூலகங்களில் வழிகாட்டுதலுடன் சம்பந்தப்பட்ட தகவல்களே அதிகம் தேவைப்படுவதனால் இவை மிக முக்கியமான உசாத்துணைவளமாகக் கருதப்படுகின்றன.

வழிகாட்டிகளைப் பின்வரும் ஆறு பெரும் பிரிவுகளுக்குள் வகைப்படுத்தலாம்.

1. உள்ளூர் வழிகாட்டிகள்: தொலைபேசி நூல்கள், நகர வழிகாட்டிகள். உள்ளூர்ப் பாடசாலைகளின் வழிகாட்டிகள், சங்கங்கள், சினிமாத் தியேட்டர்கள், சமூகக் குழுக்கள் போன்றவற்றின் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.
2. அரச வழிகாட்டிகள்: தபாலகங்கள், இராணுவ கடற்படைப் பிரிவுகள் என்பவற்றின் வழிகாட்டிகளும் உள்ளூர் மாநில நகர அரசாங்கங்களினால் ஆயிரக்கணக்கான அளவில் வழங்கப்படும் சேவைகளுக்கான வழிகாட்டிகளும் இவ்வகைக்குள் அடங்கும்.
3. நிறுவன வழிகாட்டிகள்: பாடசாலைகள், நூலகங்கள், மருத்துவ நிலையங்கள், அரும்பொருளகங்கள் போன்ற நிறுவனங்களின் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.
4. முதலீட்டுச் சேவைகள் : பொதுசன தனியார் நிறுவனங்கள் கம்பனிகளின் விபரங்களைத் தருகின்ற வர்த்தக வியாபார வழிகாட்டிகளை இது குறிக்கும்.
5. தொழிற்திறன்சார் வழிகாட்டிகள்: சட்டம் மருத்துவம், நூலகவியல் போன்ற தொழிற்திறன்சார் நிறுவனங்களின் தகவல்களை விரிவாக வழங்கும்
6. வர்த்தக வியாபார வழிகாட்டிகள்: உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், சேவைகள் பற்றிய தகவலை வழங்கும் வழிகாட்டிகள் இவ்வகைக்குள் அடங்கும்.

World of learning என்னும் கல்வி சார் வழிகாட்டி, Furgusion sri lanka directory எனப்படும் உள்ளூர் வழிகாட்டி, International foundation directory போன்றவை எல்லா நூலகங்களிலும் இருக்க வேண்டியவை.

### ஐந்தொகுதிகள் [Almanacs]

நாட்காட்டிகள், வானியல் தரவுகள் உட்பட முக்கிய தகவல்களைத் தொகுத்துத் தரும்

ஒரு வருடாந்த வெளியீடு இதுவாகும். சில சமயங்களில் குறித்த ஒரு துறை சார்ந்த புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் தருகின்ற ஆண்டு நூலாகவும் இது தொழிற்படும். ஐந்தொகுதிகளின் ஆரம்ப கால வடிவம் கோள்களின் இடமாற்றம், நீரோட்டங்களின் வேகங்கள், விடுமுறைத் தினங்கள் என்பவற்றைக் காலரீதியாகத் தொகுத்துத் தருவதாகவே இருந்தது. எமது வீடுகளில் நாம் பயன்படுத்தும் பஞ்சாங்கங்கள் இவ்வகையைச் சார்ந்தவையே. எனினும் காலப்போக்கில் இவை பயனுள்ள புள்ளிவிபரத் தரவுகளையும் உள்ளூர்,தேசிய சர்வதேச ரீதியில் இடம் பெறும் அண்மைக்காலத் தகவல்களை மட்டுமன்றி பழைய தகவல்களையும் தொகுத்துத் தரும் சாதனமாக மாறின. ஆண்டு நூல்கள் அண்மைத்தகவல்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் அதேசமயம் ஐந்தொகுதிகளோ புதிய தகவல்களை மட்டுமன்றி பழைய தகவல்களையும் உள்ளடக்குவதுடன் வானியல் சம்பந்தப்பட்ட தகவல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஐந்தொகுதிகளில் Whiteker almanac, world almanac and book of facts, Information please almanac போன்றவை முக்கியமானவை.

**வாழ்க்கை வரலாற்று நூல்கள் [Biographical sources]**

பொது நூலகங்களுக்குரிய சிறப்புத் தகவல் வளங்கள் என்ற தகுதியைப் பெறுவதில் வாழ்க்கை வரலாற்று நூல்களுக்குக் கணிசமான பங்குண்டு. மனிதன் தன்னை வடிவமைத்துக் கொள்வதற்கு அவனுக்கு மாதிரிகள் மிக அவசியமாகும். இந்த மாதிரிகளை அவனுக்கு வழங்குவது சுயசரிதை நூல்களும் வாழ்க்கைச் சரிதங்களுமே ஆகும். தன்னைப் பற்றித் தானே எழுதி வைப்பது சுய சரிதையாகும். வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களுக்கெனப் பலதரப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஐந்தொகுதிகள், வாழ்க்கை வரலாற்று அகராதிகள், அகராதிகள், வழிகாட்டிகள், கலைக்களஞ்சியங்கள், கைந்நூல்கள், செய்தித்தாள்கள், வரலாற்று நூல்கள், விமர்சனங்கள் போன்றவை வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன. மேற் குறிப்பிட்ட தகவல் வளங்களில் வாழ்க்கை வரலாற்று அகராதிகள் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களைத் தரும் முக்கிய தகவல் வளமாகக் கருதப்படுகின்றன. சர்வதேச யார் எவர், சேம்பர்ஸ் வாழ்க்கை வரலாற்று அகராதி போன்றவை மட்டுமே உடனடி உசாத்துணைப் பகுதிக்குரியவையாகக் கருதப்படும் அதே சமயம் தனிநபர் வரலாறுகள் அனைத்தும் உசாத்துணைப் பகுதியில் தனி இறாக்கையில் வாசகரின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்படல் அவசியமாகும்.

**புவியியல் சாதனங்கள் [Geographical sources]**

புவியியல் சாதனங்களில் புவியியல் அகராதிகள், வழிகாட்டி நூல்கள், தேசப்படத் தொகுதிகள் என்பன முக்கியமாகும்.

**புவியியல் அகராதிகள் [Gazetteer]**

நகரங்கள், பட்டினங்கள், சமுத்திரங்கள் ஆறுகள், மலைகள், மலைத் தொடர்கள் போன்ற புவியியல் சார்ந்த இடங்களின் அமைவிடம், அவற்றின் குடித்தொகை, பிரதேசம் சமூக பொருளாதார வரலாற்றுத் தகவல்கள் போன்றவை தொடர்பான சுருக்க விவரணம் போன்றவற்றைக் கண்டறிவதற்கான சாதனமாக இவை தொழிற்படுகின்றன. தேசப்படத் தொகுதியொன்றிற்கான சொல்லடைவை நாம் புவியியல் அகராதி என அழைக்கலாம். எனினும் தரமான ஒரு தேசப்படத் தொகுதியின் இறுதியில் தரப்பட்டிருக்கும் சொல்லடைவு ஒன்று, தரமுடியாத இடங்கள் பற்றிய அமைவிடத் தகவல்கள் நிச்சயம் இவற்றில் இருக்கும் என்பதே இவற்றின் சிறப்பம்சமாகும். பெரும்பாலான புவியியல் அகராதிகள் அகலக்கோடுகள் நெடுங்கோடுகளையும் தருவதனால் பெரிய அளவுத் திட்டத்தில் வரையப்படும் ஒரு தேசப்படத்தில் தேவைப்படும் இடத்தைக் கண்டுபிடிப்பது இலகுவாக இருக்கும்.

**வழிகாட்டி நூல்கள் [Guide books]**

தொடர்பு வழிமுறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி உலகம் பூராவும் சுற்றுலாத் துறையை வளர்த்தமையே இத்தகைய சாதனங்களின் தோற்றத்துக்குக் காரணமாய் அமைந்தது. நகரங்கள், பிரதேசங்கள், நாடுகள் பற்றிய தகவல்களைச் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு

தரும் நூல் வழிகாட்டி நூல் என்கிறது ஏ.எல்.ஏ கலைச் சொல் அகராதி. ஒரு பிரயாணி தான் சுற்றிப் பார்க்கச் செல்லும் நாட்டில் எதைப் பார்க்க வேண்டும், எங்கே உணவு கிடைக்கும், எப்படி அவ்விடத்துக்குச் செல்வது போன்ற தகவல்களைச் சுற்றுலாப்பயணிக்கு தருவதே வழிகாட்டி நூல்களின் நோக்கமாகும். இவை பொதுவாகக் கையடக்கமாகவும், கொண்டு செல்லச் சுலபமானவையாகவும் தயாரிக்கப்படுகின்றன. இவை மிக விபரமான தகவல்களைத் தரும் சாதனமாக இருப்பதனால் புவியியல் அகராதிகளை விடவும் பயன்கூடியவையாகும்.

**தேசப்படங்கள் [Maps]**

படங்களின் பௌதிக வடிவமைப்பு பலதரப்பட்ட அளவுகளிலும், வடிவங்களிலும் கிடைக்கிறது. இது முப்பரிமாணப் பூகோளப் படத்திலிருந்து இரு பரிமாண தாள் அல்லது பிளாஸ்ரிக்காலான மாதிரிவரை வேறுபடுகிறது. பூமியின் அல்லது அதன் ஒரு பகுதியின் மேற்பரப்பளவின் தட்டை வடிவப் பிரதிபலிப்பே தேசப் படங்களாகும். பௌதிக அம்சங்கள், அரசியல் எல்லைகள், சனத்தொகை, இயற்கை வளங்கள் போன்றவற்றைச் சுட்டுகின்ற பூகோளமும் தேசப் படமும் பூமியின் அம்சங்களையும் பண்புகளையும் வெளிக்காட்டும் சாதனங்களாக இருப்பினும் இவை இரண்டிற்குமிடையே பெரியளவிலான வேறுபாடுகள் உண்டு.

**வர்த்தக இலக்கியங்கள் [Trade literature]**

பொதுவாக வியாபார நோக்குடைய நிறுவனங்களினால் இலவசமாக விநியோகிக்கப்படுகின்ற , குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்கள் பற்றியும் அவற்றின் அபிவிருத்தி பற்றியும் தகவல்களைக் கொண்ட விளம்பரங்கள் , பட்டியல்கள், உற்பத்தியாளருக்குரிய சேவைகள், செய்ம்முறைகள், உற்பத்தி உபகரணங்களின் விளக்கப்படங்கள் போன்றவை இவ்விலக்கியங்களில் உள்ளடக்கப்படுகின்றன. இத்தகைய இலக்கியங்களின் முக்கிய நோக்கம் உற்பத்தியாளரின் உற்பத்திகளை விற்பதற்கு அல்லது அவர்களின் உற்பத்திகளை முன்னேற்றுவதற்கு ஆகும். தொழினுட்ப அறிக்கைகள் விலைப்பட்டியல்கள், தரவுப் பட்டியல்கள், தரவுத் தளங்கள், பராமரிப்பு வழிகாட்டிகள் போன்ற பல வடிவங்களில் இவை உற்பத்தியாகின்றன. இவை ஆரம்பத்தில் உடனடி உசாத்துணை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அப் பகுதியில் ஒழுங்குபடுத்தப்படும் எனினும் குறிப்பிட்ட நூலின் புதிய பதிப்புகள் வந்தடையும் போது பழையவை குறுங்கால எழுத்து மூலங்களாகக் கருதப்பட்டு நூல் இருப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அல்லது பருவ இதழ் இருப்புப் பகுதிக்கு மாற்றப்படுகின்றன.

## பருவ வெளியீட்டுப் பகுதி [Serial Section]

ஒழுங்கான கால இடைவெளியில், சீரான வடிவத்தில், நிலையான தலைப்புடன் கூடியதாக, பகுதிகளாகவோ தொடராகவோ வெளியிடப்படும் எந்தவொரு வெளியீடும் பருவ வெளியீடுகள் எனப்படும். செய்தித்தாள்கள், பருவஇதழ்கள், வருடாந்த வெளியீடுகள், தொடர் நூல்கள், சங்க நடவடிக்கைக் குறிப்பேடுகள், நிறுவன வெளியீடுகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. உசாத்துணைப் பகுதி போன்றே பருவ வெளியீடுகளுக்கான பகுதியும் உசாத்துணை நோக்கத்தைக் கொண்டது. இவை கால அடிப்படையில் தொடராக வெளியிடப்படுவதனால் இதன் ஒரு இதழ் தொலைந்தாலும் இவற்றின் தொடர்ச்சித் தன்மை அற்றுப்போய்விடும் என்பதால் இவை பெரும்பாலும் இரவல் வழங்கப்படுவதில்லை. குறிப்பிட்ட ஆண்டுக்கான அனைத்து இதழ்களும் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அவை ஒன்றாகக் கட்டப்பட்டு அதன் பின்னரேயே நூல் என்ற அந்தஸ்து அவற்றுக்கு வழங்கப்படுமெனினும் அவை நிரந்தர உசாத்துணைப் பகுதிக்குரிய வளமாகவே தொடர்ந்து பேணப்படும். தகவல் வளங்களுக்குள்ளேயே மிகப் பெறுமதி வாய்ந்த வளமாக இவை கருதப்படுவதும் பெரிய நூலகங்களின் நிதி ஒதுக்கீட்டில் முக்கால் பகுதி பருவ இதழ்களுக்கே செலவிடப்படுவதும் இதன் உசாத்துணைப் பெறுமதியை அதிகரித்து விட்டிருக்கின்றது.

**சிறப்பு மலர்கள்[Souvenirs]**

வாசகரின் பயன்பாட்டுக்கு உதவும் உள்ளூர் சார்ந்த முக்கிய வளமாக ஆண்டு மலர்கள் கருதப்படுகின்றன. இவை நிறுவனம் சார்ந்ததாக அல்லது தனிநபர் சார்ந்ததாக

வெளியீடு செய்யப்படலாம். ஆண்டு விழா, பொன் விழா, வெள்ளி விழா போன்ற சிறப்பு மலர்களாகவோ அல்லது நினைவு மலர்களாகவோ இவை இருக்கலாம். குறிப்பிட்ட துறை சார்ந்த நிறுவனங்களால் வருடாவருடம் வெளியாகும் ஆண்டு மலர்கள் பருவ இதழ்களாகக் கருதப்பட்டு பருவ இதழ்களுடன் சேர்க்கப்படக் கூடும். எமது பிரதேசத்தில் சமூக அறிவியல் துறை, கல்விநிறுவனம் சார்ந்து வெளியிடப்படுபவை, இந்து சமய ஆலயங்கள் சார்ந்து வெளியிடப்படும் மலர்கள் மிக முக்கிய ஆய்வு வளமாகக் கருதப்படுகின்றன. பொது ஆண்டு மலர்களில் கணிசமானவை சனசமூக நிலையங்கள், இதழியல் துறை சார்ந்தவை. இலக்கிய ஆண்டு மலர்களும் கணிசமானளவுக்குக் காணப்படுகின்றன.

**தொடர் [Series]**
பொருட்துறையில் ஒன்றிற்கொன்று தொடர்புடைய தொகுதிகள் கால அடிப்படையில் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே வெளியீட்டாளரினால், ஒரே விலையில், ஒரே வடிவத்தில், ஒழுங்கற்ற கால இடைவெளியில், தொடர்த் தலைப்புகளை நூலின் முன்பக்கத்திலோ அல்லது தலைப்புப் பக்கத்திலோ கொண்டதாக வெளியிடப்படும் தொகுதிகள்.

**பருவ இதழ்கள் [Periodicals]**
செய்தியறிக்கைகள், சஞ்சிகைகள், செய்திக்கடிதங்கள், சங்க நடவடிக்கைக் குறிப்பேடுகள் போன்ற பெயர்களில் வெளியாகும் வெளியீடுகள் அனைத்தும் பருவ இதழ்கள் என்ற பொதுப் பெயருக்குள் அடங்குகின்றன. பெரும்பாலான ஆரம்ப இலக்கியங்கள் யாவும் பருவ இதழ் வடிவிலேயே வெளியாகின்றன. அறிவியல் ரீதியான தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கான பிரதான தொடர்புச் சாதனமாகக் கருதப்படும் இவை உண்மையான ஆய்வுகளை உடனுக்குடன் அறிக்கைப்படுத்துகின்றன. இவற்றில் வெளிவரும் தகவல்கள் நூல்களில் உள்ளவற்றிலும் பார்க்கப் புதியவையாகும். பருவ இதழ்களை அவற்றின் உள்ளடக்கத்தைக் கொண்டு பொதுப்பருவ இதழ்கள் பொருட் பருவ இதழ்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். குறிப்பிட்ட ஒரு பொருட்துறை சார்ந்ததாக இல்லாமல் அரசியல், ஆக்க இலக்கியங்கள், விளையாட்டு, சினிமாச் செய்திகள், விளம்பரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி வெளிவருபவை பொதுப்பருவ இதழ்களாகும். எ-டு இந்தியா ருடே, தாயகம், மல்லிகை போன்றவை. காத்திரமான ஆக்கங்களைக் கொண்டிராது செய்தித் துணுக்குகள், பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவற்றைத் தாங்கி வரும் பருவ இதழ்கள் சஞ்சிகைகள் என அழைக்கப்படுகின்றன.

**செய்திக் கடிதங்கள் [Newsletters]**
நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பருவரீதியாகத் தாங்கிவரும் வெளியீடுகள். இவை மாதரீதியாகவோ அல்லது காலாண்டு ரீதியாகவோ வெளியிடப்படலாம்.

## அரசாங்க ஆவணப் பகுதி [Government documents section]

அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற உத்தியோக பூர்வமான வெளியீடுகள் அரசாங்க வெளியீடுகள் எனப்படும். எந்த ஒரு நாட்டிலும் ஓர் அரசாங்கம் அதிகாரபூர்வமான வெளியீட்டாளராக இருந்து அரசாங்க அறிக்கைகள், சட்டங்கள், விசேட ஆணைக்குழு அறிக்கைகள் போன்றவற்றை வெளியிடுகின்றது. பாராளுமன்ற விவாதங்கள், மசோதாக்கள், சட்டங்கள், பருவகால ஆணைப்பத்திரங்கள், பாராளுமன்றத் தொடர்கள், நீலப்புத்தகம் போன்றவை அரச ஆவணப் பகுதியில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அறிக்கைகள் [Reports]**
நடைமுறையில் இருக்கும் ஆய்வு அபிவிருத்தித் திட்டங்களின் முடிவுகளை வெளியிடுவதே அறிக்கைகளாகும். ஒரு நாட்டில் அரசாங்கத்தின் அதிகாரத்துடன் வெளியிடப்படும் நம்பகரமான, அதிகாரபூர்வ வெளியீடுகளாக இவை இருப்பதுடன் உள்ளூர், பிரதேச, தேசிய, சர்வதேசிய ரீதியாகக் குறைந்த விலையில் வெளியீடு செய்யப்படுகின்றன. பருவ இதழ்க் கட்டுரைகள் பூரணப்படுத்தப்பட்ட பணிகளையும் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பணிகளையும் மட்டுமே சேர்த்துக் கொள்ளும் அதேசமயம் அறிக்கைகளோ ஆய்வுகளின் ஒவ்வொரு

வளர்ச்சிக் கட்டத்தையும் பிரதிபலிப்பதுடன் நின்றுவிடாது இடைநிறுத்தப்பட்ட ஆய்வுப்பணிகளையும் தோல்வியில் முடிவடைந்த ஆய்வுப்பணிகளையும் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான முக்கிய தகவல் மூலமாகக் கருதப்படுகின்றன. வெளிநாட்டு அறிக்கைகளில் world development report, human development report போன்றவையும், உள்நாட்டு அறிக்கைகளில் மத்திய வங்கி அறிக்கை, குடித்தொகைப் புள்ளிவிபர அறிக்கை போன்றவையும் முக்கியமானவை.

## ஆவணக் காப்பகப் பகுதி [Archives]

ஆவணக் காப்பகப் பகுதியானது ஆய்வு நூலகங்களுக்கு மட்டுமே பொருத்தமானது என்ற தவறான கருத்துநிலை பொதுவாக எம்மிடையே உண்டு. ஒரு பிரதேசம் அமைந்துள்ள இடத்தின் சமூக கலை கலாசார, அம்சங்களைப் பிரதிபலிக்கும் இடமாகப் பொதுநூலகம் இருக்கவேண்டுமெனில் அது அப்பிரதேசத்திற்கென்றே தனித்துவமான அம்சங்களைப் பேணிப் பாதகாக்கும் இடமாகத் தொழிற்படல் அவசியமாகும்.

**ஆய்வுக்கட்டுரைகள் [Theses/Dissertations]**
வழிகாட்டுபவரின் மேற்பார்வையின்கீழ் முதுநிலைப் பட்டத்துக்காக அல்லது கலாநிதிப் பட்டத்துக்காகப் பல்கலைக்கழகத்தை அல்லது கல்வி சார்ந்த நிறுவனமொன்றைச் சேர்ந்த மாணவர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் ஆய்வின் முடிவில் எழுதப்படும் அறிக்கை. உண்மையான ஆய்விற்கான சான்றுகளை இக்கட்டுரை உள்ளடக்க வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட துறை சார்ந்த ஆய்வாளர்களுக்கு வேண்டிய முக்கிய ஆவணங்களாக இவை வடிவமெடுக்கின்றன. ஆய்வுக் கட்டுரைகள் பொதுவாக பல்கலைக் கழக நூலகங்களிலேயே பாதுகாக்கப்படுமெனினும் ஒரு பிரதேசத்தில் வாழும் அறிஞர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளின் ஒரு பிரதியைத் தமது பிரதேசத்திலுள்ள பொது நூலகத்துக்கு வழங்குவதன் மூலம் பிரதேசத்திலுள்ள அறிஞர்களது ஆக்கங்கள் பாதுகாக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு. அதே போன்று பொது நூலகம் அமைந்துள்ள பிரதேசம் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்படின் ஆய்வு செய்தவரிடமிருந்து ஒரு பிரதியைப் பெற்று அந் நூலகத்தில் பாதுகாத்தல் மிகச் சிறந்த செயற்பாடாகும்.

**சிறு நூல்கள் [pamphlets]**
நிரந்தரமாகக் கட்டப்படாத அச்சு வடிவ ஆக்கம் எதுவும் சிறுபிரசுரம் அல்லது சிறு நூல் என்ற பதத்தால் குறிப்பிடப்படுமெனினும் சர்வதேசப் பட்டியலாளர் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன்படி ஆகக் குறைந்தது 5 பக்கங்கள் உடையதாகவும் 48 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் உள்ள பருவஇதழ் அல்லாத வெளியீடுகள் அனைத்தும் இவ்வகைக்குள் அடங்குகின்றன. கட்டப்படாதபோதும் சில சிறு நூல்கள் அதிக பக்கங்களைக் கொண்டமைந்ததாகவும் நிரந்தரப் பெறுமதியுடையதாகவும் இருக்கக்கூடும். செய்தித்தாள் துணுக்குகள் முதல் அச்சிடப்பட்ட புலமைத்துவ அறிக்கைகள் வரை இவை பலதரப்பட்டவையாக அமையும். பருவ இதழ்க் கட்டுரைகள், சிறிய செயற்திட்ட அறிக்கைகள், விசேட உற்பத்திப் பொருட்களுக்கான துண்டுப்பிரசுரம் போன்றவைற்றைக் குறிப்பிடலாம். பொது நூலகமொன்று தனது பிரதேசம் சார்ந்தோ, தனது பிரதேசத்திலோ வெளியிடப்படுகின்ற அனைத்துச் சிறு பிரசுரங்களையும் பேணிப் பாதுகாக்கும் கடப்பாடுடையது.

**காப்புரிமை இலக்கியங்கள் [patents]**
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஒரு புதிய உருவாக்கத்தை அல்லது கண்டுபிடிப்பை மேற்கொள்ளவோ, பயன்படுத்தவோ, விற்கவோ அரசினால் வழங்கப்படுகின்ற பிரத்தியேக உரிமை காப்புரிமை எனி பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. ஒரு பொருளை உருவாக்குபவருக்கு அல்லது வடிவமைப்பவருக்கு அதிகூடிய இலாபத்தைத் தரக்கூடிய வகையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற, குறித்த உருவாக்கம் ஒன்றின் உற்பத்தி, வடிவமைப்புத் தொடர்பான பாதுகாப்பை எழுத்துவடிவில் வழங்கக்கூடிய வகையில் உருவாக்கப்படுகின்ற பொருளாக்க விபரக்குறிப்பே காப்புரிமை இலக்கியங்கள் எனப்படுகிறது. இவை ஒவ்வொரு நாட்டிலும்

இதற்கென உருவாக்கப்பட்ட காப்புரிமை அலுவலகங்களினால் உருவாக்கத்தின் பெயர், அது தொடர்பான சுருக்க விளக்கம், உருவாக்கத்திற்குப் பயன்பட்ட பிரயோகங்கள் தொடர்பான விபரக்குறிப்புகள், உருவாக்கத்தின் பின்னனி போன்ற விபரங்களை உள்ளடக்கி வெளியிடப்படுகிறன.

**நியமங்கள் [standards]**

ஒவ்வொரு நிறுவனமும் அதனது நோக்கங்களையும் கொள்கைகளையும் பூர்த்தி செய்வதற்கென மேற்கொள்கின்ற செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு உருவாக்குகின்ற சட்ட திட்டங்கள் அடங்கிய விபர ஏடு இதுவாகும். நவீன சமூகம் ஒன்றின் முன்னேற்றமானது நியமங்கள் இன்றிக் கடினமானது என்பதிலிருந்தே நியமங்களின் முக்கியத்துவத்தை உணர முடியும். குறிப்பிட்ட உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளை இலகுவாக்குதல் அவற்றை விநியோகித்தல் என்பவற்றுடன் இவை தொடர்புபடுகின்றன. நுகர்வோரைப் பொறுத்து அவர்களுக்கு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துபவையாக இவை உள்ளன. பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படவேண்டும், நிருபிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளினடிப்படையில் ஒரு பொருளை எவ்வாறு உற்பத்தி செய்தல் வரைவிலக்கணப்படுத்தல், அளத்தல், பரிசோதித்தல் போன்ற விபரங்களை நியமங்கள் தருகின்றன.

**பொருளாக்க விபரங்கள் [specifications]**

தனியுரிமையாகக் கருதப்படுகின்ற துறைகளின் முழுச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் முறை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடு. எ.டு சிற்ப வேலை

**வெளியிடப்படாத ஆவணங்கள் [Unpublished documents]**

ஆய்வுகூடக் குறிப்பேடுகள், நாட்குறிப்பேடுகள், கையெழுத்துப் பிரதிகள், தனிப்பட்டவர்களுக்கு எழுதப்படும் முக்கிய கடிதங்கள், நிறுவனங்களின் கோப்புகள், உள்ளக ஆய்வு அறிக்கைகள், உருவப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், நாணயங்கள் போன்ற வெளியிடப்படாத தகவல் வளங்களும் பொது நூலகங்களின் முக்கிய தகவல் வளங்களாகக் கருதப்பட வேண்டியவை.

## சிறுவர் பகுதி
## [Children section]

இப் பகுதியானது சிறப்பாகப் பொது நூலகங்களுக்கும், பாடசாலை நூலகங்களுக்குமே உரியது. நூலகச் சந்தையில் வெளியிடப்படாத சிறுவர்க்கான வண்ணம் · தீட்டுதல் சார்ந்த நூல்கள் தொடக்கம் விளையாட்டு நூல்கள், பொறிகளின் இயக்கம் சம்பந்தப்பட்ட சாதனங்கள், பாடநூல்கள், பாடவிதானத்துடன் கூடிய கட்புல செவிப்புல சாதனங்கள், கையெழுத்துப்பிரதிகள் வரை சிறுவர் இலக்கியங்களுக்குள் உள்ளடங்கும். சிறுவர்களின் பொழுதுபோக்கு, மீளுருவாக்கம், தகவல் என்பவற்றை அளிக்கக்கூடிய பிரதான வெளியீடுகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அறிக்கைகள் ,தனிப்பட்ட பரிசோதனைகள், புதிய கண்டுபிடிப்புகள், ஆய்வு அறிக்கைகளுக்கான பொருள் விளக்கங்கள் சிறுவர் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவக்கூடிய உசாத்துணைச் சேகரிப்புகள் போன்றவை இதில் உள்ளடங்கும். முன்பள்ளி, ஆரம்ப, இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தரக்கூடிய அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அவர்களின் வாசிக்கும் ஆற்றலுக்கு உதவக்கூடிய சேகரிப்புகள் என்பன இங்கு கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அடிப்படைத் தகவல்களைக் கொண்ட தனிப்பொருள்நூல்களின் பழைய புதிய பதிப்புகள், பிரதான எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பருவ இதழ்கள், சிறுநூல்கள், உசாத்துணைச் சாதனங்கள், அச்சு வடிவில் கிடைக்காத ஆக்கங்கள் என்பன இதற்குள் உள்ளடங்கும்.

## நூலுருவற்ற சாதனப் பகுதி
## [Non book materials section]

நூலுருவற்ற சாதனங்களுக்குள் மரபுரீதியான சாதனங்களான ஓவியங்கள், ஓலைச் சுவடிகள் முதற் கொண்டு இன்றைய நவீன கணினிப் பதிவுகள் வரை உள்ளடங்கும். எமது பிரதேசங்களிலுள்ள பொது நூலகங்கள்

இத்தகையதொரு கருத்துநிலைக்குப் பழக்கப்பட்டவை அல்ல. எனினும் நூலகங்களிலேயே நூலுருவற்ற சாதனங்களை அதிகம் கவனத்தில் கொள்ள வேண்டிய நூலகமாகப் பொது நூலகமே இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் தகவல் பதிவேடுகளின் உருவமைப்பு சார்ந்து காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டால் மட்டுமே மாறி வரும் தொழினுட்ப உலகுடன் இயைந்து போக முடியும்.

**ஓலைச்சுவடிகள் [Ola leaves]**

தாள்களின் கண்டுபிடிப்புக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட எழுது சாதனங்களில் ஓலைச்சுவடிகள் முக்கியமானவை. எம்மிடையே பாவனையில் இருக்கும் ஓலைச் சுவடிகள் தனித்தனி ஓலைகளில் கூர்மையான உலோகத்தினாலான எழுது கோல் கொண்டு பொறிக்கப்பட்டு அல்லது பேனாவின் மை கொண்டு எழுதப்பட்டு, பனையோலைகளின் நடுவில் அல்லது இரு முனைகளிலும் துளையிடப்பட்டு, அவற்றினூடாக நூல் செலுத்தப்பட்டு ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்ட வடிவில் உள்ளன. பழைய பெறுமதி மிக்க சித்த மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை ஓலைச் சுவடிகளாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஓவியங்கள் [Paintings]**

கலைப்பாரம்பரியத்தின் எடுத்துக்காட்டுகளாக விளங்கும் ஓவியங்கள் மிகச் சிறந்த தகவல் சாதனங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. ஓவியங்களை வரைவதற்குத் துணி, தாள், மரம், கண்ணாடி போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மேற்பரப்பு சொரசொரப்புத் தன்மை வாய்ந்ததன் காரணமாக மேற்பரப்பை வழவழப்பாக்குவதற்கு ஒட்டுப்பசை, எண்ணெய், மெழுகு அல்லது மாக்கலவை பயன்படுத்தப்படுகின்றது. ஓவியங்கள் கலப்புக் கட்டமைவைக் கொண்ட பல்வேறு இழையங்களாலானது. ஓவியங்களின் சிதைவிற்கு இவ்விழைய அடுக்குகளில் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு அடுக்குகளின் சிதைவு காரணமாக அமையலாம்.

**கேட்பொலிப் பதிவுகள் [Sound recordings]**

ஒலிப்பதிவுகள் வட்டுப்பதிவுகள் நாடாப்பதிவுகள் என இருவகைப்படும். 1887ல் எமில் பேளினர் என்ற அமெரிக்கா வாழ் ஜேர்மனியரால் கண்டுபிடிக்கப்பட்ட கிராமபோன் எனப்படும் தட்டைவட்டுக்களின் வளர்ச்சியே இன்று நாம் பயன்படுத்தும் வட்டுப்பதிவுகளாகும். ஒலிப்பதிவுகளின் அடுத்த மைல் கல் எனப்படுவது 45 rpm 331/3 rpm அளவுகளில் 1988ல் வெளிவந்த நீண்ட நேரம் இயங்கும் பதிவுகளாகும். லேசர் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குறுவட்டுகள் 1980களில் பிரபல்யம் பெறத் தொடங்கிவிட்டன. 1898ல் valdemar Poulson என்ற பொறியியலாளரால் Telegraphone என்ற பெயரில் நாடாப்பதிவு முறை பயன்படுத்தப்பட்டது. 2ஆம் உலகப்போரின் போது ஜேர்மன் பொறியியலாளர்கள் பிளாஸ்ரிக்காலான காந்த நாடாக்களை விருத்தி செய்தனர். இன்று நாம் பயன்படுத்தும் நாடாக்கள் இவ்வகையைச் சார்ந்தவை. ஆரம்ப காலத்தில் திறந்த சுற்றுகளிலான நாடாக்கள் பயன்படுத்தப்பட்டன. இம்முறைமூலம் நாடா பதிவாக்கியில் ஒலி நாடாவை கையினால் சுற்றவேண்டியிருந்தது. 1960களில் ஒலிப்பதிவுகள் கசற் வடிவில் வெளிவரத் தொடங்கிவிட்டன.

**சலனப் படங்கள் [Motion pictures]**

தகவல் வளங்களின் முக்கிய அங்கமாக கருதப்படும் இவை தற்காலத்தில் 70mm,35mm,16mm அளவுகளில் விற்பனையில் உள்ளன. 35mm அளவானது மிகப் பெருந்தொகையாக மக்கள் கூட்டத்துக்கு தியேட்டரில் போட்டுக் காட்டுவதற்கென தொழிற்திறன் சார் ரீதியில் தயாரிக்கப்படுவதாகும். அதேபோல் 70mm வடிவமும் இத்தகைய பயன்பாட்டுக்கென்றே தயாரிக்கப்படுகிறது. 16mm வடிவமைப்பே தகவல் அமைப்புக்கு உகந்ததாகும். இவை வேகம் குறைந்தவை. சிறியவை.ஒரு சுற்று கிட்டத்தட்ட ஓரிரு நிமிடங்களை மட்டுமே கொண்டவை. கேலிச் சித்திரங்கள் வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான பொழுதுபோக்கு அம்சங்களை இவை ஆரம்பத்தில் உள்ளடக்கின. 1940களிலிருந்து கல்விசார்

படங்களின் உருவாக்கத்துடன் இவை மதிப்பு வாய்ந்த ஊடகமாக அங்கீகரிக்கப்பட்டன. ஒலி,ஒளி,அசைவு ஆகிய மூன்று அம்சங்களும் இணைந்த வகையில் தகவலைத் தரும் ஒரேயொரு வடிவமாக இவை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் பராமரிக்க இலகுவானவையாகவும் பொருளாதார ரீதியில் சிக்கனமாகவும் இவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**வீடியோ பதிவுகள் [Video recordings]**

வீடியோ என்ற சொல் vision என்ற சொல்லின் முதல் இரு எழுத்தையும் Audio என்ற சொல்லின் இறுதி மூன்றெழுத்தையும் கொண்டு உருவாக்கப்பட்டதொன்று. இதனை ஒளிப்பதிவு என்று தமிழ் விளக்கம் செய்வது சாத்தியமற்றது. ஏனெனில் ஒலி, ஒளி இரண்டும் இணைந்ததே இப் பதமாகும். எனவே வீடியோப் பதிவுகள் என்ற பெயரே இங்கு பயன்படுத்தப்படுகின்றது.

**நுண்வடிவங்கள் [Micro forms]**

மரபுரீதியான பிரதியாக்க முறைகளில் மிக முக்கியமாகக் கருதப்படுவது நுண்வடிவங்கள் ஆகும். நவீன துறைகளில் இவற்றின் தேவை அதிகரித்திருப்பதுடன் நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள், அரசாங்க வெளியீடுகள் போன்றவற்றின் இடத்தை இது அதிகளவில் கைப்பற்றியிருக்கின்றது. ஆவணங்களைப் பழுதடையாமல் பாதுகாத்தல், இடத்தை மீதப்படுத்தல், தகவல் அமைப்புகளுக்கிடையிலான இரவல் வழங்கும் சேவையை ஊக்குவித்தல், உசாத்துணைச் சேவையை ஊக்குவித்தல், நிதி நெருக்கடியைக் குறைத்தல் போன்ற நோக்கங்களை நிவர்த்தி செய்வதே நுண்வடிவங்களாகும். நுண்வடிவங்களை நுண்படங்கள், நுண் தாள்கள், நுண் அட்டைகள், நுண் அச்சுகள் என நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். நூலகங்களில் அதிகம் பயனபடுத்தப்படுவது நுண் படங்களும் நுண் தாள்களுமாகும். தொடர்ச்சித் தன்மை வாய்ந்த தகவல்களை எடுப்பதற்கு நுண் படங்கள் சிறந்தவை. எனினும் ஒரு ஆவணத்தை ஒரு தாளிலேயே பிரதி பண்ணுவதற்கு உதவும் நுண் தாள்களே நூலகங்களில் புகழ் பெற்றவையாகும்.

**படத்துணுக்குகள் காட்சி வில்லைகள் [Filmstrips & Slides]**

அச்சுவடிவற்ற ஊடகங்களின் ஆரம்பகால வடிவங்களில் ஒன்றாக இவை கருதப்படுகின்றன குழுரீதியான காட்சிப்படுத்தலுக்கான ஆரம்ப கட்டங்களுக்கு இவை பொருத்தமானவையாகக் கருதப்படுகின்றன. படத்துணுக்குகள் 35mm ஒளிப்படச்சுருளில் நிலைப்படுத்தப்பட்ட படத்தொகுதியை இவை கொண்டிருக்கின்றன. காட்சிவில்லைகள் 2" × 2" அளவுள்ள கட்டங்களில் தனித்தனி ஒளிப்படச்சுருள் துண்டுகளில் எடுக்கப்படுபவை. இரண்டுமே ஒரேவகையான ஒளிப்படக்கருவியும் ஒரேவகையான படச்சுருளும் ஒரேமாதிரியான தகவலையும் கொண்டிருப்பவை. இரண்டுக்குமுரிய வேறுபாடு, படத்துணுக்குகள் தொடர்ச்சியான படச்சுருள் ஒன்றில் எடுக்கப்பட, காட்சிவில்லைகளோ தனித்தனித் துண்டுகளாக வெட்டப்பட்ட படச்சுருளில் எடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு நோக்கில் காட்சிவில்லைகளைவிட படத்துணுக்குகளே சிறந்தவை. அத்துடன் இவற்றின் விலையும் காட்சி வில்லைகளைவிட 4 அல்லது 5 மடங்கு குறைவாகும்..

**உண்மை உருவமைப்புகளும் மாதிரி உருவமைப்புகளும் [Realia& Models]**

ஒலிப்பதிவுகள், ஒளிப்பதிவுகள், ஒலி ஒளிப்பதிவுகள் என்ற மூன்று வகைக்குள்ளும் வகைப்படுத்தமுடியாத நூலுருவற்ற தகவல் வளங்களில் ஒன்றே மாதிரி உருவமைப்புகள் ஆகும். உண்மையான உருவங்களை தகவல் அமைப்பில் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் மாதிரி உருவமைப்புகள் சிறந்ததொரு தகவல் வளமாகக் கருதப்படுகின்றன.

**கணினியை அடிப்படையாகக் கொண்ட வளங்கள் [Computer based resources]**

**இணையம் [Internet]**

Inter connection network என்ற ஆங்கிலப் பதத்தின் சுருக்கமான இன்டர்நெட் எனப்படும் இணையமானது ஒரு தகவல் தொடர்பு வலையமைப்பு ஆகும். இலத்திரனியல் தபால், இணையத் தளங்கள், இணைய வர்த்தகம் என்ற முப்பெரும் வசதிகளைக் கொண்டது இணையமாகும். இதிலுள்ள இணையத்

தில் ஒரு தனி நபரோ ,நிறுவனமோ தாம் விரும்பும் செய்திகளை வடிவமைத்து உலகம் முழுவதும் பாவனைக்கு விடலாம். எழுத்து மூலத் தகவல் மட்டுமன்றி புகைப்படங்கள், உருவங்கள், ஒலிப்பதிவுகள், வீடியோப் பதிவுகள் போன்றவையும், பத்திரிகையில் வெளிவரும் செய்திகள், அறிக்கைகள், ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் இணையத்தில் பார்க்க முடியும்.

**சீடிரோம் [CD-ROM]**

லேசர் கதிர்கள் மூலம் பெருமளவு தகவல்களைச் சேமிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்படும் 43/4" விட்டமுள்ள வட்டவடிவ பிளாஸ்ரிக் தட்டு சீடிரோம் எனப்படுகின்றது. வாசிக்க மட்டுமேயான நினைவகத்தைக் கொண்ட இறு வட்டு [Compact disk read only memory] என இதற்கு பொருள் கொள்ள முடியும். இதன் சேமிப்புத் திறன் எளிமையான வார்த்தையில் கூறுவதாயின் ஒரு சீடிரோம் 3 இலட்சம் பக்கங்களைச் சேமிக்கும் திறன் கொண்டது. இந்த சீடிரோமைப் பயன்படுத்தி நூல்விபரப் பட்டியல்கள், செயற்திட்டங்கள், கணினி மென்பொருட்கள், உலகப் படங்கள் இசைத் தட்டுக்கள், கலைக்களஞ்சியங்கள், தரவுத்தளங்கள், கற்பித்தல் செயற்திட்டங்கள் வீடியோப் படங்கள் போன்றன உருவாக்கப்பட்டு வெளிவருகின்றன. இணையம் நூலகம் ஒன்றைவிட செயற்திறன் கூடியது போன்று சீடிரோம் ஒரு நூலை விடக் கூடுதல் திறனைக் கொண்டது.

**முடிவுரை**

மக்களுக்காக மக்களால் மக்களைக் கொண்டு உருவாக்கப்படும் நிறுவனமே பொது நூலகமாகும். நவீன சமுதாயத்தின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் பொதுசன நூலகங்கள் சமூகத்தின் நாளாந்த செயற்பாடுகளில் மிக முக்கியத்துவம் வகிக்கின்ற ஒரு சமூக நிறுவனமாகும். சமூகத்தின் கலை, கலாசார நிலையங்களாகச் சேவையாற்றும் இந் நிறுவனங்கள் சமூக அங்கத்தவர்களை இன, வயது, மொழி, மத வேறுபாடின்றி ஒன்றிணைக்கும் நிலையங்களாகக் காணப்படுகின்றன. இவை ஏனைய கல்விசார், விசேட நூலகங்கள் போன்று குறிப்பிட்ட வாசகர் பிரிவுக்குச் சேவை செய்வன அல்ல. சிறுவர், மாணவர், முதியவர், பெண்கள், மாற்றுவலுவுடையோர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர் போன்ற சமூகத்தின் அனைத்து மட்டத்தினருக்கும் சேவை செய்யவேண்டிய கடமைப்பாடு உடையது பொதுசன நூலகமாகும். எனவே பொது நூலகம் என்ற வகையில் இணுவில் அறிவாலயமும் தனது தகவல் வள சேகரிப்பில் சமூக உறுப்பினர்களின் பலதரப்பட்ட அறிவுச் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடிய அளவிற்கு தகவல் சாதனங்கள் இடம்பெறுமாறு கொள்கை வகுக்க வேண்டியது அவசியமாகும். இக் கொள்கை வகுப்பில் தகவல் சாதனங்களின் தரம், தொகை, வகை, வடிவம் என்பவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் பொதுசன நூலகத்தின் முக்கிய செயற்பாடுகளான வாசகருக்கான தகவல், கல்வி, பொழுதுபோக்கு, மீள் உருவாக்கம் போன்றவற்றை நிறைவு செய்ய முடியும்.

**ஒவ்வொரு புத்தகமும் என்முன்னே மக்களைப் பற்றியும், அவர்கள் ஆசாபாசங்கள் பற்றியும், அவர்கள் இதயம் பற்றியும், கருத்தோட்டங்கள் பற்றியும் அறிந்து கொள்ளத் திறந்து விடப்படும் சாளரங்கள்.**

- மக்சிம் கோர்க்கி -

# இயற்கை வைத்தியம்

*நூல்களுக்கு ஏற்படும் நோய்களில் குறிப்பிடத்தக்கது இராமபாணம், கறையான், கரப்பான் பூச்சி போன்ற பேருயிரிகளினால் ஏற்படுவது. இவற்றைத் தடுப்பதற்கான இலகு வைத்திய முறைகளில் ஒன்று.*

| | |
|---|---|
| *சூடம்* | 1 *கோப்பை* |
| *வசம்பு* | 2 *கோப்பை* |
| *கருஞ்சீரகம்* | 2 *கோப்பை* |
| *மிளகு* | 1 *கோப்பை* |
| *கராம்பு* | 1 *கோப்பை* |
| *இலவங்கப்பட்டை* | 2 *கோப்பை* |

*சூடம் தவிர்ந்த ஏனைய பொருட்களை இடித்துத் தூளாக்கிய பின்னர் கண்ணறைத் துணியொன்றில் ஒரு மேசைக் கரண்டி வீதம் வைத்து அதன் மேல் சூடம் சிறிதளவு வைத்துப் பொட்டலம் போன்று கட்டி நூல் இறாக்கை ஒன்றுக்கு ஒரு பொட்டலம் வீதம் நூல்களுக்குப் பின் பக்கம் வைத்து விடுதல் வேண்டும். இதனுடைய பாவனைக் காலம் மூன்று தொடக்கம் ஆறு மாதங்கள் ஆகும். இதனைத் தொடர்ந்து பின்பற்றுதல் கண்டிப்பாகக் கூடாது. ஒரு மழைக்காலத்தின் பின்னர் இந்த முறையைக் கைக் கொள்ளலாம்.*

*வேப்பிலை, புகையிலை, புங்கமரம், நொச்சியிலை, போன்றவற்றை நிழலில் காய வைத்து இறாக்கைகளின் பின்புறம் வைக்கலாம்.*

நன்றி :- தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்

# மாணவர் ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள்




சத்தியநாதன் வாகீசன்
கலைப் பிரிவு
இணுவில் மத்திய கல்லூரி

### வாசிப்புப் பழக்கம் எப்போது எவ்வாறு ஏற்பட்டது?

வீட்டிலிருந்து வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டது என்று என்னால் கூற முடியாது. வீட்டை விடவும் பள்ளிப் பருவத்தில் தான் வாசிப்புப் பழக்கம் கருக் கொண்டது. சிறு பராயத்திலிருந்தே பாடசாலை மட்டத்திலான பேச்சுப்போட்டிகளில் கலந்து கொண்டு வருகின்றேன். அங்கே சக போட்டியாளர் பேசும் விடயங்களில் மேலதிக தகவலைப் பெறவேண்டும் என்ற உணர்வு எனக்குத் தோன்றும் சமயங்களில், அவர்களிடமே அவர்கள் என்ன நூலில் இருந்து மேற்கோள்களைக் கையாண்டார்கள் என விசாரித்து அதைத் தேடியெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினேன். அது மட்டுமன்றிப் பாடசாலைப் புத்தகங்களில் காணப்படும் நூலாசிரியர்களின் வரலாறுகளையும், அவர்கள் இயற்றிய நூலின் சிறப்பினையும் மற்றவர்கள் வாயிலாக அறியும் போது அவர்களது புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் இயல்பாகவே எனக்குள் வளர்ந்து விட்டது என்று தான் நினைக்கிறேன்.

### பாடசாலைப் படிப்புக்கு வாசிப்பு எவ்வளவு தூரம் உதவுகின்றது?

கல்வித் திட்டத்தினடிப்படையிலான பாட நூல்களில் காணப்படும் தத்துவங்கள் வரலாறுகள் போன்றவை சில சமயங்களில் புரியாத புதிராக இருக்கும். போதிய விளக்கங்களை அவை கொண்டிராதவை போல் தோன்றும். இத்தகைய புரியாத தத்துவங்களுக்கான விளக்கங்களைப் பெறுவதற்கு எனது வாசிப்பு உதவுகின்றது. அத்துடன் வரலாறுகளை மீண்டும் மீட்பதற்கும், அவ் வரலாறுகளுடன் தொடர்புடைய ஏனைய வரலாறுகளைச் சேகரிப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றது. மேலும் கல்வி சம்பந்தமான போட்டிகளுக்குச் செல்லும் போது அங்கு கேட்கப்படும் வினாக்களுக்கு இலகுவாக விடையளிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. கல்வித் தராதரப் பொதுப் பரீட்சையில் சமூகக் கல்வியில் ஏ பிரிவில் சித்தியடைய வாசிப்புப் பழக்கமே எனக்கு அதிகம் உதவியது.

### நூலகப் பழக்கம் எப்போது எப்படி? அங்கு உங்களைக் கவர்ந்த நூல்கள் எவை?

எனது வீட்டுக்கு அருகிலுள்ள வாசிக சாலைக்கு பேப்பர் படிப்பதற்காகப் போவேன். எனது பாடசாலை நூலகம் எனக்கு அதிகம் பரிச்சயமானது. பாட நூல்கள் சமய சம்பந்தமான நூல்களை அவை ஓரளவு கொண்டிருக்கின்றன. இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையிலுள்ள நூலகத்துக்கு இடையிடையே

போவேன். அங்கு முன்புறம் அடுக்கி வைக்கப்பட்ட இந்திய சஞ்சிகைகள் என்னை மிகவும் ஈர்த்திருக்கின்றன. அங்குள்ள அமைதி, கட்டுப்பாடு என்பன என்னைக் கவருகின்றன.

**இதுவரை வாசித்த கதை நூல்களில் அதிகம் கவர்ந்த நூல்கள் எவை?**

கதைப்புத்தகங்கள் பெரிதாகப் பார்ப்பது கிடையாது. அர்த்தமுள்ள இந்து மதம் பிடிக்கும். சித்தர் பாடல்களை விரும்பிப் படிப்பேன். திருவிளையாடற் புராணம், திருமந்திரம் போன்றவற்றில் அதிக ஈடுபாடு உண்டு.

**புதிதாகத் தொடங்கப் போகும் அறிவாலயம் என்னென்ன நூல்களை வைத்திருந்தால் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதுகின்றீர்கள்?**

தத்துவ விளக்கங்கள், மாணவர்களுக்குப் புரியக்கூடிய அறிவியல் நூல்கள், வரலாற்று நூல்கள், உலகப் புகழ் பெற்ற பெரிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், எமது பண்டைய புகழ் பெற்ற காவியங்கள் போன்றவை பயனுள்ளவையாக இருக்கும் என நினைக்கின்றேன். அத்துடன் ஓரளவிற்காவது உடனடித் தகவல்களைத் தரக் கூடிய உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகளை எமக்குப் பெற்றுத் தர அது ஆவன செய்ய வேண்டும். இணைய வசதியை ஏற்படுத்தி அதன் மூலம் புதிய தகவல்களை உடனுக்குடன் பெற்றுத் தர அறிவாலயம் உதவ வேண்டும்.

**எதிர்கால இலட்சியம் என்ன? அந்த இலட்சியத்துக்கு வாசிப்பு எவ்வகையில் உதவும்?**

எதிர்காலம் என்பது எதிர்வு கூற முடியாத ஒன்று. எனினும், நல் ஆசானாக வருவதை எனது இலட்சியமாகக் கொண்டிருக்கின்றேன். வாசிப்பு என்பது ஒரு மனிதனைப் பூரணமாக்கும் செயல். அந்த வகையில் வாசிப்பு மூலம் என்னை என்னால் இயன்ற வரையில் பூரணப்படுத்துவதுடன் என் அறிவுக்கு எட்டிய அறிவின் துணை கொண்டு என்னைச் சூழ உள்ளவரையும் பூரணப்படுத்தி அவர்களையும் அவர்கள் எதிர்காலத்தினையும் சிறப்புறப் பூரணப்படுத்துவதே எனது இலட்சியம்.

**வாசிப்புப் பழக்கம் தொடர்பாக இன்றைய இளம் தலைமுறையினருக்கும் சக வயதினருக்கும் கூற விரும்புவது என்ன?**

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். ஒருவன் எவ்வளவுக்கு வாசிக்கிறானோ அவ்வளவிற்கு அவனது பொது அறிவும் திறனாய்வும் வளரும். எனவே வாசிப்பு என்பது அனைவருக்கும் இன்றியமையாததொன்று. கல்வி சம்பந்தமான விடயங்கள், உலக நடப்புகள் போன்றவற்றை வாசிப்பின் மூலமே அறிந்து கொள்ள முடியும். வாசிப்பதனால் தான் வாசிப்பால் உயர்ந்த மனிதர் பற்றியும், அவர்களால் எவ்வாறு உயர முடிந்தது என்பது பற்றியும், என்னால் அறிய முடிகிறது. ஒரு நாளில் பாடப் புத்தகம் தவிர இரண்டு மணி நேரமாவது பொதுவான வாசிப்புக்குச் செலவிடுகின்றேன்.. நாட்டு நடப்புகளை வாசிப்பதன் மூலமே எவரும் அறிய முடியும். வாசிப்பதன் மூலம் சிறந்த அனுபவம் பெறுவீர்கள். எனவே வாசிப்பதன் மூலம் உங்களை பூரணப்படுத்துங்கள்.

# நான் சந்தித்த வாசகர்

## நேசமிகு சில நினைவுகள்



திரு. க. சௌந்தரராஜன்

"சர்க்"...... "சர்க்"...... "சர்க்"......

குனிந்த தலை நிமிராமல் எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்த எனது கவனத்தை மேற்படி "சர்க்" சத்தம் கலைத்தது. மெதுவாகத் தலையை நிமிர்த்தினேன். 40' x 25' மண்டபத்தில் நிமிர்ந்து நின்ற புத்தக இறாக்கைகளின் மறைவிலிருந்து கேட்ட சத்தம் நூலகப் பொறுப்பாளரான எனக்கு நடைபெறுவதை மின் வெட்டி உணர்த்தியது. பத்திரிகைகளின் பக்கங்களில் தலையை மறைத்துக் கொண்டு ஆர்வமுடன் வாசிக்கும் வாசகர்கள் ஒருபுறம்; வண்ண அட்டைகளினூடே கவர்ச்சிமிகு அம்சங்களைக் கொண்ட சஞ்சிகைகளைக் கண் வெட்டாமல் படிக்கும் வாசகர்கள் மறுபுறம்; புத்தக இறாக்கைகளின் தட்டுக்களில் தமது பிரிய எழுத்தாளரின் சுவையான புத்தகத்தை எடுக்க முயலும் அங்கத்தவர்கள் இன்னொரு புறம்; ஒவ்வொருவரும் தமது தேடலை நிறைவேற்றிக் கொண்டிருந்த சூழலில் மீண்டும் ...... "சர்க்" ...... "சர்க்" ......

நிமிர்ந்து பார்த்து மட்டும் பிடிக்க முடியாத விடயம் என உணர்ந்து மெதுவாக எழுந்து நடந்தேன். 14 இறாக்கைகள். சிறு மண்டபம். குறுக்குமறுக்காக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தாலும் அதிலும் ஒரு சீரான தன்மையுடன் இருந்த இறாக்கைகளின் மூலையில் ஒரு சிறுவன் ...... ஒரு புத்தகத்தின் பக்கங்களை அவசர அவசரமாகக் கிழித்துக் கொண்டிருப்பதை அவதானித்தேன். நூலகச் சொத்தழிவு ஒருபுறம்; அறியாத பருவத்துச் சிறுவன் என்ற உணர்வு மறுபுறம்; அவன் முன் நின்றேன். கையும் களவுமாகப் பிடிபட்ட மிரட்சி......கண்ணில்; தப்புவதற்கு முயலும் பரபரப்புக் கால்களில்; அவனை மெதுவாகப் புத்தகத்துடன் சேர்த்து எனது அறைக்கு அழைத்து (? இழுத்து )வந்தேன்.

தந்தையின் பெயர், குடும்பப் பின்னணி......என மெதுவாக விசாரித்தேன். பாடத் தேவைக்கான கட்டுரை தயாரிக்கத், தகவல் திரட்டும் முயற்சியில் ......பக்கக் கிழிப்பு; பார்த்து விட்டதால் தோன்றிய முழிப்பு; தப்பியோடச் சுழிப்பு; மெதுவாக அவனது கையைப் பிடித்தபடியே "பயப்பட வேண்டாம்" என்று கூறினேன். ஏக்கத்துடன் கூடிய நம்பிக்கையீனமான பார்வை. மெதுவாக அவனது படிப்பு, வகுப்பு, பெயர், பாடம் எனத் தொடர்ந்த எனது கேள்விகளுக்குத் திக்கித் திணறிப் பதில்கள் வந்தன. பேச்சுத் திசை திரும்பி அவனது விளையாட்டு, வீட்டு வேலை, பொழுது போக்கு எனச் சுழன்றது. மின்சார வசதியற்ற, போக்குவரத்து வசதியற்ற கிராமத்தின் மிகச் சுருங்கிய நாட்பணி விபரங்களினூடே அவனது படிப்பு ஆர்வம் வெளிப்பட்டது. பெற்றோரின் வறுமை, அவர்களின் கல்வி அனுபவக் குறைவு, பிள்ளையின் கல்வி ஆர்வத்தைப் பூர்த்தியாக்க உதவவில்லை. மிரளும் கண்களுக்குள்ளே தவித்த அந்தப்

பிஞ்சுள்ளம் தண்டனைக்குப் பயந்து நின்ற அந்த நிலையை மாற்றினேன். கிழித்த பக்கத்தைப் பெற்று ஓரமாக வைத்து வீட்டு நூலகத்தின் தன்மையைப் பற்றிக் கூறினேன். ஒருவரின் தகவல் தேவைகளைப் பெற நூலகம் உதவும் தன்மையை அவனுக்குப் புரியும் படி கூறினேன்.

"அப்ப......ஐயா......நான் ஒவ்வொரு நாளும் வந்து இந்தப் புத்தகங்களை எடுத்துப் படிக்கலாமோ? அதுக்குக் காசு கட்ட வேண்டாமோ......?

"இல்லைத் தம்பி...... நீயாக உனக்கு இஷ்டப்பட்டபடி வந்து படிக்கலாம். சிறுவர் பகுதியிலே உங்களைப் போன்ற சிறார்களுக்கு ஏற்ற புத்தகங்கள் தாராளமாக இருக்கின்றன. நீயும் உனது வகுப்புத் தோழர்களும் வந்து பாருங்கோ...... படியுங்கோ...... பழுதாக்காமல் படிச்சுப் பழகினால் பிறகு இரவலாகப் பெற்றுப் போகலாம்.

நான் கூறக் கூற மிரண்ட கண்களுக்கு அப்பால், அறியாமல் செய்த தவறுக்குக் கவலைப்படும் நிலை தோன்றக் கண்கள் மெதுவாகத் தாழ்ந்தன.

ஆனால் இன்று...... பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டதாரியாகி, இவ்வூர்ப் பாடசாலையிலேயே கல்வி கற்பிக்கும் அவனை...... இன்று காண்கையில் கூட என்னுள் முகிழ்க்கும் சிரிப்பும் ...... அதற்கு, "போங்கோ சேர்" என்று அவன் கூறும் பதிலும், எனது நூலகத்தின் நிரந்தர வாசகன் ஒருவன் பொறுப்புள்ள குடிமகனாக முகிழ்த்த கணத்தின் நினைவுச் சின்னங்கள்.

* * * *



நான் முதல் முறையாக அம்மாவுடன் நூலகத்துக்குச் சென்றபோது அங்கு அமைதியாக இருந்ததால் எனக்கு நூலகம் பிடித்தது.

நூலகத்தில் எனக்கு விருப்பமான புத்தகங்கள் இருப்பதால் எனக்கு நூலகத்தைப் பிடித்தது.

நூலகத்தில் உள்ளவர்கள் என்னுடன் அன்பாகப் பழகுவதால் எனக்கு நூலகத்தின் மேல் ஆசை ஏற்பட்டது.

நூலகம் மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் இருந்ததால் எனக்கு நூலகத்தின் மேல் ஆசை ஏற்பட்டது.

நூலகத்தில் புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டு இருந்ததால் எனக்கு நூலகத்தைப் பிடித்தது.

நூலகத்தில் இராமாயணக் கதைகள், நீதிக் கதைகள் போன்ற அறிவான கதைகள் உள்ளதால் நூலகத்தை எனக்குப் பிடித்தது.

நூலகத்தை நான் விரும்புவதால் எனது வீட்டில் ஒரு அழகிய நூலகத்தை நான் அமைத்திருக்கின்றேன்.

செ. சர்வாண்யா
ஆண்டு 3

ஐயா......இந்தக் கிழமைச் சஞ்சிகைகள் வரேல்லையா......? "கல்லுக்குள் ஈரம்" தொடர்கதை போன கிழமை அப்பிடியான முடிவோட நிக்குது. இந்தக் கிழமை எப்ப வரும் எண்டு பரபரப்பாகக் கிடக்கு. நீங்கள் யாழ்ப்பாணம் போகேல்லியே......? புத்தகம் எடுத்து வரேல்லியே......?"

எனது பதிலை எதிர்பாராமலேயே 'படபட' வெனக் கேள்விகளை வீசும் இவளும் இந் நூலகத்தின் நெடுங்கால வாசகி. எதுவென்று இல்லை. நூல்கத்தில் இருக்கும் நூல்களில் அனைத்துத் தலைப்புகளிலும் பெரும்பாலும் இவள் வாசிக்காதவை சிலவே எனலாம். நேரம் கிடைக்கும்போதெல்லாம் வரும்போது கூடவே இன்னும் இரண்டு மூன்று தோழிகளையும் அழைத்து வருவாள். தான் படித்தது எதுவோ அதில் இருக்கின்றவற்றையெல்லாம் அவர்களுக்கு எடுத்துக் கூறி சினேகிதிகளையும் படிக்கத் தூண்டும் போக்கு.

கமலாம்பாள் சரித்திரத்தைப் படிக்கின்ற அதே ஆர்வத்துடன் புதுவை இரத்தினதுரையை நயக்கின்ற தன்மை; லாசாராவை விட்டதில்லை; புதுமைப் பித்தனை மறந்ததுமில்லை; கம்பனைச் சிலாகிக்கின்ற அதேவேளையில், ஆபிரிக்கக் கவிதைகளையும் சுவைத்திடுவாள். தான் படித்த பகுதிகளைப் பற்றி CR கொப்பியில், திகதி வாரியாகக் குறித்துக் கொண்டு வருவாள். அவளது படிப்பு, உற்சாகம் ஏனையோரையும் படிக்கத் தூண்டியது. நூலக வீதிகளில் கண்ட, "நூல்களுக்கேற்ற வாசகர். வாசகருக்கேற்ற நூல்கள்" என்ற சிந்தனையைச் செயற்பாட்டில் கொண்ட இவளைப் போன்ற வாசக இதயங்கள் ஊருக்கு இரண்டு இருந்தாலே போதும், வாசிப்பு இயக்கம் பரந்து செழிக்க......

* * * *

அலைகடலோரத்தில், வெண்மணற் பரப்புடன் விளங்கும் அழகிய எனது ஊரான ஊர்காவற் துறையில் அமைந்துள்ள பாடசாலை நூற்றுஇருபது வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. கல்விக் கண்ணைத் திறந்து வைத்தது இப் பாடசாலையின் ஆரம்பமே எனலாம். சராசரிக் கல்வியறிவைப் பெற இது பெரிதும் துணை நிற்கின்றது. பாடசாலையின் நூலகம் அத்துணை வளமுடையதல்ல. எனவே கிராமப் பொதுசன நூலகம் மூன்றாவது கண்ணாக விளங்கி வருகின்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனச் சகலரினதும் தகவல் தேடலுக்கும் இந்நூலகச் சேகரிப்புகள் உதவுகின்றன. இனப் பிரச்சனையின் நேர் விளைவான யுத்தம் கிராமியப் பாடசாலை, கிராமிய நூலகம் என்பவற்றின் பயன்பாட்டை ஒரு விதத்தில் ஊக்குவித்தது எனலாம். எனவே நூலகரான நானும், இத்தேவைப்பாட்டை உணர்ந்து சகல துறைகளிலும் நூலீட்டலை மேற்கொள்ளத் தூண்டப்பட்டேன். சுமார் 9000 வரையிலான பலதுறை நூல்களில் 1897ல் வெளியிடப்பட்ட நூல் ஒன்றும் அடங்கும். நூலக வாரச் சேகரிப்பில் பல அரியன கிடைத்தன. நூலக வாசகரில் பலர் ஆசிரியர்களாகவும் இருந்தனர். தமது அறிவையும் மாணவர்களின் தேடலையும் இவர்கள் தூண்டி, நூலகப் பாவனையை அதிகரித்தனர். அவ்வாறான வாசக இதயம் ஒன்றைப் பற்றிய நேசமிகு நினைவுகளை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இருபத்தைந்து ஆண்டு நிறைவு பெற்ற இந் நூலகத்தின் ஆரம்பக் காலங்களில் இடப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை, காரணமாக நூல்களைப் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து ஒழுங்குபடுத்த முடியவில்லை. குறைந்தளவு நிதியே நூற் கொள்வனவுக்குக் கிடைத்தது.

கிராம மக்களின் பங்களிப்பாக இறாக்கை, மற்றும் தளபாடங்கள், இருக்கைகள் செய்ய நூலகக் குழு முயன்றது. இக்குழுவில் இணைந்திருந்த மேற்படி பாடசாலை ஆசிரியர் ஒருவர் கிரமமான வாசகர். தாமே முன் வந்து நூலக அபிவிருத்திக்குப் பயனுள்ள பணிகள் பல செய்தார். இயல், இசை, நாடகம் எனப் பலவகைக் கலை நிகழ்ச்சிகளைப் பல்துறை அறிஞர்கள், கலைஞர்களின் ஒத்துழைப்புடன் தயாரித்து மேடையேற்றி, நிதி சேகரிப்புப் பணியை முன்னெடுத்தார். " மாதாந்தக் கருத்தரங்கம் என்ற நிகழ்ச்சித் தொடர் பலதரப்பட்ட கல்விமான்களின் சிந்தனைகளை நூலக மண்டபத்தில் ஒலிக்க வைத்து செயலுறு ஆர்வத்தை சிறந்தோங்க வைத்தது. எழுத்தாற்றல் பெற்றவர்கள், வரைதல் விற்பன்னர் ஒத்துழைப்புடன் மாதாந்தக் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டோம். இச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கிய அந்த ஆசிரிய வாசகர் புலம் பெயர்ந்து சென்ற நிலையிலும் கூட நூலக வளர்ச்சிக்கு உதவுகின்றார். இளைய சமுதாயத்தினரின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துமுகமாக அவர்களுக்கான அங்கத்துவப் பணத்தைத் தாமே செலுத்தி நூலகத்தின் அங்கத்துவத் தொகையைப் பெருக்குவதுடன், கிராம வரலாற்று ஆவணத் தொகுப்புக்கு ஆவன செய்து வருகின்றார். வாசிப்புப் பழக்கம் மேம்பாடடைவது ஒட்டுமொத்தக் கிராம மேம்பாட்டுக்குப் பயன் செய்யுமென்பதால் இவ் வாசகரின் முயற்சிகள் என்றும் மனதில் வைத்து எண்ணப்பட வேண்டியதொன்று.

* * * *

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், நூலகத்தின் வளங்களை மாணவர் தேடி வருவது அதிகரித்துள்ளது. நூலகத்தைப் பயன்படுத்தும் விதத்தை அறியாதவர்களும், ஆர்வத்தில் படியேறிய பின்னர் மலைத்துப் பின்வாங்குபவர்களும், எழுந்தமானமாக ஒருசில இறாக்கைகளில் பார்த்துவிட்டு தமது தேடலை நிறைவு செய்ய முடியாமல் சிரமப்படுபவர்களும், வெட்கம் காரணமாக விருப்பத்தைக் கேட்கத் தயங்குபவர்களும், நூலகத்தின் பயனைப் பெறமுடியாதவர் ஆகின்றனர். எனவே முடிந்தளவு இவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவுமுகமாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல, வாசகர்களுக்குத் தேவையான வழிகாட்டிகளும் அறிவுறுத்தல்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

அன்றொருநாள் ஒரு சிறுமி கையில் எழுதுவதற்கு கொப்பியும் பேனையும் ...... தானாகவே ஒவ்வொரு புத்தகத்தையும் எடுப்பதும், பிரிப்பதும், பின் வைப்பதும் ...... மீண்டும் தேடுவதுமாக இருந்தாள். கவனித்த எனக்கு அவளின் தவிப்புப் புரிந்தது. அருகே சென்று "என்ன தேடுகின்றீர்கள்" என்றேன். "அம்மாவைத் தேடுகின்றேன்" என்றாள். "ஏன் இங்கே வந்தவாவோ......" வந்து புத்தக இறாக்கைகளுக்குள் புகுந்திட்டாவோ...?" என்றேன். அதற்கு அச் சிறுமியின் முகத்தில் பூத்த வெட்கச் சிரிப்பு தான் கூறியதன் அர்த்தத்தை உணர்ந்ததைக் காட்டியது. "அம்மாவைப் பற்றிக் கவிதை வேணும் " " ஒப்படைக்கு......" இழுத்தாள்.

"அதுதானே பயந்து போய் விட்டேன். உங்களின் அம்மாவைப் புத்தகத்துக்குள்ளே தேடிப் பிடிக்க இயலுமே" அச்சிறுமியைக் கவிதைப் பகுதிக்கு அழைத்துச் சென்று சில புத்தகங்களை எடுத்து, பொருளடக்கப் பகுதியைப் பார்வையிடக் காட்டிக் கொடுத்தேன். பத்திரிகைத் தொகுப்புகளில்

சிலவற்றைக் கொடுத்து கவிதைப் பகுதியில் தேடச் சொன்னேன். அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஏழு எட்டுப் பக்கங்களில் அவள் தேடிய "அம்மா" கிடைத்தாள். அச்சிறுமி மீண்டும் நெளிந்தபடி என் மேசைக்கு வந்தாள். சொந்த அம்மாவைத் தேடிப் பிடித்தது போன்ற மகிழ்ச்சியில் திளைத்த அச் சிறுமியின் 'திருப்தி' தானே எனது கடமையின் நிறைவும்.

அவளின் சொந்தக் கையெழுத்தில் அவள் தேடிய கவிதை வரிகளைத் தொகுத்து எழுதிப் பாடசாலைக்கு அவள் கொடுத்த ஒப்படையின் ஒரு போட்டோப் பிரதி நூலகத்தின் சேகரிப்புகளுடன் இப்போது இருக்கின்றது. ஏனைய மாணவச் சினேகிதிகளுக்கு அதனை எடுத்துக் காட்டி மகிழ்வுறும் அச் சிறுமி இன்று தேர்ந்த ஒரு வாசகி மட்டுமல்ல...... ஏனையவர்களுக்கு நல்லதோர் வழிகாட்டியும் கூட

* * * *

நாளும் பெருகுவன புதுத் தகவல்கள் மட்டுமல்ல. நூலகத்தில் நாளும் நாம் சந்திக்கும் புதுப்புது அனுபவங்களும் தான். வாசகனின் தேடல்களும் பரந்தவை. தேடும் வளங்களும் பரந்தவை. நூலக சாதனங்களை வாசகனின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக ஒழுங்கமைப்பதில் வெற்றி காண்போமானால், ஒவ்வொரு வாசகனும் நூலக சேவையில் வெற்றி காண்பான். நூலக சேவையும் சிறப்புறும்.

## முக்கியமான மூன்றுகள்

| | |
|---|---|
| மதிக்க வேண்டியது | முதியோர், மார்க்கம், சட்டம் |
| நேசிக்க வேண்டியது | நேர்மை, தூய்மை, கடின உழைப்பு |
| போற்ற வேண்டியது | அறிவு, அழகு, பண்பு |
| பேணி வளர்க்க வேண்டியது | திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி |
| தவிர்க்க வேண்டியது | புகைத்தல், மதுவருந்தல், சூதாட்டம் |
| அடக்க வேண்டியது | நா, வேதனை, கோபம் |
| கவனிக்க வேண்டியது | பேச்சு, நடைமுறை, செயல்கள் |
| ஆதரிக்க வேண்டியது | வாக்குறுதி, நட்பு, பண்பு |
| ஒழிக்க வேண்டியது | திருட்டு, சோம்பல், பொய் |
| விரும்ப வேண்டியது | கருணை, நற்குணம், மனஅமைதி |
| வெறுக்க வேண்டியது | அகந்தை, அநீதி, வாக்குமீறல் |
| தப்பிக்க வேண்டியது | தீயஎண்ணம், பொறாமை, பிடிவாதம் |
| அஞ்ச வேண்டியது | களவு, கோள், பொய் |
| எதிர்கொள்ள வேண்டியது | கவலை, மரணம், பயணம் |
| போரிட வேண்டியது | தேசநலம், கண்ணியம், நட்பு |

# அறிவுப் பொக்கிஷம்



தட்சணாமூர்த்தி. சிவபாதம்

கன்னித் தமிழ் மொழி, கருத்துயர் ஆங்கிலம் இரண்டையும் இரு கண்களாகக் கொண்டு, சலசலப்பின்றி, மக்களோடு மக்களாக இன்றும் தமிழ் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.ஏ.ஜே கனகரட்னா அவர்கள் " ஏ.ஜே " என்ற முதலெழுத்துக்களால் பெரிதும் அறியப்பட்டவர்.

1961ல் நான் சிறுவனாக இருக்கும் போது யாழ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அவரைப் பார்த்திருக்கின்றேன். செக்கச் சிவந்த நிறத்துடன் தோற்றத்தில் மட்டுமன்றி நடையுடை பாவனையிலும் வெள்ளையரைப் போல் தோற்றமளிக்கும் அவரைக் கண்டு வியந்திருக்கின்றேன்.

1985ம் ஆண்டு தொடக்கம் நான் பணி புரியும் யாழ் பல்கலைக்கழக நூலகத்தின் நூல் அடுக்குகளில் எந் நேரமும் உலவித் திரியும் அவரைக் கண்டு பிரமிப்படைந்திருக்கின்றேன்.



அறிஞர், இலக்கிய விமர்சகர், மாக்சியக் கருத்துக்களில் ஆழ்ந்த புலமையுள்ளவர் என்றெல்லாம் மற்றவர்களால் அறியப்படும் இவரை ஓர் சிறந்த வாசகனாகவே நான் முதன் முதல் தரிசித்திருக்கின்றேன். ஒவ்வொருவரும் தத்தமது துறைகள் சார்ந்த நூல்களைத் தேடி வாசிக்கும் பண்பே இயல்பானது. அவர்களின் தேடுதலிலிருந்து அவர்களின் விடய ஆர்வத்தை ஓரளவுக்கு நாம் அறிந்து விட முடியும். இதற்கு மாறாக ஏ.ஜே யை நூல் அடுக்குகளின் ஒவ்வொரு பிரிவிலும் காணும் போது இவரது ஆர்வத் துறை எதுவாக இருக்க முடியும் என்ற குழப்பம் எனக்குள் உருவெடுத்த போது தான் இவரைப் பற்றிய தேடல் எனக்குள் கருக்கொண்டது..

இவர் பிறந்த, வாழ்ந்த சூழல் ஆங்கில மொழியைப் பேசும் சூழல். ஆரம்ப இடைநிலைக் கல்வியை ஆங்கில மொழியில் பயின்றது மட்டுமன்றிப் பல்கலைக்கழகத்திலே சிறப்புப் பட்டம் பெறுவதற்கான துறையாக இவர் தேர்ந்தெடுத்ததும் ஆங்கில மொழி தான். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியனாக இருந்து டெயிலி நியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் இருந்திருக்கின்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அப்போதைய நூலகராக இருந்த திரு. முருகவேள் அவர்களுக்கும் இவருக்கும் இருந்த கல்விப் புலம் சார்ந்த தொடர்பு இவருடன் எனக்கு மானசீகமான ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது. நூலகத்துக்கும் அப்பால் திரு. கிருஸ்ணகுமாருடன் எனக்கு இருந்த நட்பு இவருடன் வலுவான ஒரு தொடர்பை ஏற்படுத்த உதவியது.

யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் தனித்துவம் வாய்ந்த சேகரிப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் Time Literary Supplement என்ற சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற நூல்

விமரிசனச் சஞ்சிகையின் ஓரிரு வாசகரில் ஏ.ஜே குறிப்பிடத்தக்கவர். அக் காலப் பகுதியில் பல்கலைக்கழக நூலகத்துக்கு சமூக அறிவியல், ஆங்கில இலக்கியம் சார்ந்த நூல்களைத் தெரிவு செய்வதில் ஏ.ஜேக்கும் கணிசமான பங்கு இருந்தது.

வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக மாற்றும் என்ற பிரான்சிஸ் பேகனின் கருத்தை அச்சு வடிவ ஊடகங்களில் மட்டுமே பார்த்துப் பார்த்துச் சலிப்படைந்த எனக்கு அவ்வாசகம் உயிருடனும் உலவும் என்பதை மெய்ப்பித்தவர் இந்த மனிதர் தான். நன்றாக வாசிக்கும் தன்மையோ என்னவோ எந்தவொரு பொருட்துறையைப் பற்றியும் பூரணமாக விளங்கப்படுத்தும் ஆற்றல் இவரிடம் நான் கண்டு பிரமித்தது. எதையும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து ஒரு தெளிவான தீர்வைக் கூறும் இவரது அறிவு எவரையுமே ஈர்க்கக்கூடியது.

அதீத வாசிப்பும், இரு மொழிப் புலமையும் அவரைப் படைப்பாளி, மொழிபெயர்ப்பாளர், விமர்சகர் எனப் பல்துறை ஆளுமையை வளர்க்க உதவியது. எப்போது சந்திக்கச் சென்றாலும் ஒரு புத்தகக் குவியலின் முன்னே தான் அவரைக் காண முடியும்.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட வேண்டும் என்ற மகாகவி பாரதியின் கூற்றுக்கு ஏற்பப் பலதரப்பட்ட பொருட்துறை சார்ந்தும் ஆங்கிலத்தில் வெளி வரும் படைப்புகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் இவருக்குள்ள ஈர்ப்பு மற்ற எல்லாவற்றையும் விட அதிகம் என்றே கூறுவேன். கடைந்தெடுத்த நல்ல ஆங்கில நூல்கள் பற்றிய இவரது விமரிசனத்தின் தொகுப்பே இவரது மத்து என்ற தமிழ்ப் படைப்பாகும்.

ஆங்கில மொழிச் சூழலில் வாழ்ந்த ஏ.ஜே யை தமிழ் அபிமானமுள்ளவராக மாற்றிய பெருமை தனிச் சிங்களச் சட்டத்துக்கே உண்டு. அதை அவர் தனது படைப்பான மத்து என்ற நூலின் முகவுரையிலேயே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஆங்கிலம் அரச மொழியாகக் கொலுவிருந்த காலத்தில் கல்விப் பயிற்சி பெற்றவன் நான். 1956 தனிச் சிங்களச் சட்டத்தின் அநுகூலம் பிரதிகூலம் பற்றிய விசாரணை தேவையில்லை. ஆனால் அச் சட்டம் காரணமாகத் தமிழ் அபிமானம் மீதூர்தல் பெற்றவர்களுள் நானும் ஒருவன். அந்த அபிமானமே தமிழில் எழுதுதல் வேண்டும் என்ற என் முனைப்பின் ஊக்கமாகவும் அமைந்தது." என்று கூறுவதுடன் நின்று விடாது இத் தமிழ்ப் படைப்பைத் தனிச் சிங்களச் சட்டத்துக்கே அர்ப்பணம் செய்து விடுமளவுக்கு தமிழில் அபிமானம் கொண்டவர் இவர்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரண்ட வெம்மையில் எங்களுக்குக் குளிர் தரும் நிழலாக இவர் இருந்திருக்கின்றார்" என்று மத்து என்ற நூலின் பின் அட்டைப்பகுதியில் இவர் பற்றி திரு. மு. நித்தியானந்தனின் உணர்வை அனுபவிப்பவர்களில் நானும் ஒருவனாக இருக்கும் வாய்ப்பு மகிழ்வுக்குரியது என்றே கருதுகின்றேன்.

இச்சீரபூத்த செம்மல் பிணியின்றி, தமிழுக்குப் பணி செய்து நீண்டகாலம் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

# நூலகம் ஒரு பல்கலைக்கழகம்

தமிழவேள்
இ.க.கந்தசாமி



மக்கள் நல்வாழ்வுக்கு அறிவு இன்றியமையாதது. கற்றலாலும், கேட்டலாலும் பண்டைக் காலம் முதல் மக்கள் அறிவைப் பெற்று வந்தனர். வள்ளல்கள் சிலர் கல்விக்கூடங்களை அமைத்து ஆர்வம் உள்ளவர்கள் கல்வி பெற உதவினர். அறிஞர்கள் சிலர் தம் வசிப்பிடங்களில் தம்மை நாடி வருபவர்களுக்குக் கல்வியைக் கற்பித்து வந்தனர்.

வாழ்க்கை நன்கு அமையப் பொருள் வேண்டும். வயது வந்த அனைவரும் தமக்கு ஏற்ற தொழிலில் பகல் வேளை ஈடுபட்டனர். ஆர்வம் உள்ள சிலர் மாலை அல்லது இரவு வேளைகளில் தக்க அறிஞர்களிடம் கல்வி பெற்று வந்தனர். எனினும் கல்வி அறிவு இல்லாதவர்களே பலராக இருந்தனர். இவர்கள் கேள்வி வழி அறிவு பெறுவதற்குப் பல வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன. சமயச்சொற்பொழிவும், நாடகங்களும் பிரதான பங்கை வகித்தன. வண்ணைச் சிவன் கோவிலில் நாவலர் மேற்கொண்ட கந்தபுராண படன நிகழ்ச்சி செல்வாக்குப் பெற்று நாடெங்கும் பரவிற்று.

உரை நடையில் அமைந்த கந்தபுராணம், மகாபாரதம், இராமாயணம் ஆகிய நூல்கள் சில ஆலயங்களில் நாள்தோறும் படிக்கும் வழக்கம் ஏற்பட்டது. மாணிக்க வைரவர் முன்றிலில் இத்தகைய நிகழ்வு சாத்திர அம்மா எனப்போற்றப்பெறும் அம்மையார் ஆதரவில் பல ஆண்டுகள் நடைபெற்று வந்தது. ஒருவர் படிக்க ஏனையோர் கேட்டுக்கொண்டிருப்பர். இத்தகைய நிகழ்வு தனியார் வதிவிடங்களிலும் நடைபெற்றன. கடந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பகுதியில் சுருட்டுத்தொழில் பிரதான இடம் பெற்று விளங்கியது. இதற்கான தொழில் நிலையங்கள் இணுவில், தாவடி, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி முதலிய பல ஊர்களில் இருந்தன. பெரும் எண்ணிக்கையினர் இந்நிலையங்களில் நாள்தோறும் ஈடுபட்டிருந்தனர். இவர்களது பகல் நேரம் பயனுள்ளதாக இருப்பதற்காக நிலைய உரிமையாளர்கள் ஆதரவுடன் இதிகாசங்கள் படிக்கும் நிகழ்ச்சி நாடோறும் நிகழ ஒழுங்கு செய்யப்பெற்றன. உணர்வுபூர்வமாக ஆற்றல் உள்ளவர்கள் இந்நூல்களைப் படிக்க நியமிக்கப்பெற்றனர்.

மேலே குறிப்பிட்ட இவ் வழிவகைகள் மூலம் கேள்வி வழி அறிவு நாட்டில் பரவியிருந்தது. கல்விக் கூடங்களில் கற்றவர்களுக்கு ஒப்பாக இவர்கள் அறிவாற்றல் உள்ளவர்களாக விளங்கினர். அறிவு வளர்ச்சியின் அங்கமாகப் பல நாடுகளில் நூலகங்கள் அமைந்தன. இவை அறிவு வளர்ச்சிக்கு உதவியதோடு நூல்கள் அழியாமல் பாதுகாப்பதற்கும் வழிவகுத்தன. தஞ்சை நகரில் சரபோசி அரசனின் சிந்தனையால் புகழ்பெற்ற 'சரசுவதிமகால்' நூலகம் ஏற்பட்டது. இங்கு பல்துறை நூல்கள் பாதுகாக்கப்பட்டு இன்றும் இருக்கின்றன. மேலை நாடுகளில் பரந்த அளவில் பெரும் நூலகங்கள்

ஏற்பட்டன. இவைகளில் உலகம் முழுவதும் பல நூல்கள் உள்ளன. தமிழ் ஆய்விற்கு உரிய அரிய நூல்கள், ஏடுகள் இங்கு உள்ளன.

கடந்த நூற்றாண்டில் யாழ்ப்பாண நகரில் பொது நூலகம் ஒன்று அறிஞர்கள் முயற்சியால் உருவாக்கப்பட்டுப் பல நூல்கள் பாதுகாக்கப்பட்டன. இது தென் கீழ் ஆசியாவிலே சிறந்த ஒரு நூலகமாக விளங்கியது. மாறுபட்ட அரசியல் தாக்கத்தினால் இந்நூலகம் அழிவுற்றது. அமெரிக்க மிசினரிமாரின் அரிய முயற்சியால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சிறந்த நூலகம் உருவாக்கப்பட்டு அரிய நூல்கள் பாதுகாக்கப்பட்டன.

இந் நூலகங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்கள் தோறும் கிராமசபைகள், தனியார் அமைப்புக்களினதும் முயற்சியுடன் பத்திரிகைப் படிப்பகங்களை அமைத்து அறிவு வளர்ச்சிக்கு உதவின. உடுவில் கிராமசபையின் அயலில் இப்போது சந்தை நடைபெறும் இடத்தில் பெரியார் வைத்திலிங்கம் பொன்னுத்துரை, சட்ட வல்லுநர் ரீ.சி.இராசரத்தினம் முதலிய அறிஞர்களின் முயற்சியால் பத்திரிகைப் படிப்பகம் அமைந்து உதவியது. நாள்தோறும் அங்கு சென்று வந்தேன். பத்திரிகைப் படிப்பகத்தை எமது ஊரில் உருவாக்க விரும்பினேன்.

சிவகாமி அம்மன் கோவில் அருகில் வ.கா.வைரவிப்பிள்ளை அவர்களின் சுருட்டுத் தொழிலகம் வ.கா.சிவக்கொழுந்து தலைமையில் செல்வாக்குப் பெற்றிருந்தது. அவர்களின் உதவி பெற அங்குசென்று கேசரியை நாற்தோறும் வாசித்து உதவியதால் அவர்களும் உதவுவதாக தெரிவித்தனர். எமது ஆர்வத்தால் இப்பணியைச் செய்தேன். இவற்றிற்கு உதவியாகப் பெரியார் மு.கதிர்காமர் தமது நிலத்தில் சிறு பகுதியைத் தந்தார். அந் நிலத்தில் கட்டடம் அமைக்கப்பட்டுக் கிராமசபையால் பராமரிக்கப்படுகின்றது. இது சிவகாமியம்மை பத்திரிகை படிப்பகமாகும். இதே காலப்பகுதியில் இளைஞர் அமைப்புகளின் முயற்சியால் பரமானந்த வாசிகசாலை, மஞ்சத்தடி விவேகானந்த வாசிகசாலை, கந்தசுவாமி கோயில் வாசிகசாலை, பரராசசேகர விநாயகர் வாசிகசாலை என்பன அமைந்து இவ்வூர் அறிவு வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

கிராமசபை உறுப்பினராக இருந்தபோது கிராமசபை ஆதரவில் அங்கு நூலகம் அமைக்கத் தீர்மானித்து, அதற்கெனக் கட்டடம் அமைத்து, நூலகரை நியமித்து, நூல்களும் விலையாகப் பெறப் பெற்று நடைமுறைப்படுத்தப் பெற்றது.

இந்நிலையில் ஆசிரியர் இடமாற்றத்தினால் தலைநகர் சென்றபோது அங்கிருந்த அறிஞர் சிலரின் அறிவுறுத்தலினால் கொழும்புத் தமிழ்ச்சங்க வளர்ச்சிப்பணியில் ஈடுபட்டேன். நூலகப்பணியை என்னிடம் ஒப்புவித்தனர். 200 நூல்கள் இரு அலுமாரிகளோடு சிறிய அறையில் இப் பணி ஆரம்பமானது. அந்நேரத்தில் அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளினால் தமிழக நூல் வருதல் தடைப்பட்டது. தமிழகத்திலிருந்து தகுந்த நூல்களைப் பெற்றுத்தரும்படி நாட்டின் பல பகுதிகளில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் வேண்டினர். இவற்றால் அப்போது தமிழக முதல்வராக இருந்த எம்.ஜீ.ஆர் அவர்களுக்கு எழுதினேன். பரந்த உள்ளம் படைத்த அவரின் உதவியினால். பத்தாயிரத்துக்கும் மேல் நல்ல நூல்கள் தமிழ்ச்சங்க நூலகத்திற்குக் கிடைத்தன. இதனால் இந்த நூலகம் நாட்டின் சிறந்த

**நூல் அழகுகள்**

**பத்து**

- சுருங்கச் சொல்லல்
- விளங்கவைத்தல்
- படிப்போர்க்கினிமை
- நல்ல சொற்களை அமைத்தல்
- இனிய ஓசையுடைமை
- ஆழமுடைத்தாதல்
- பொருள்களை முறையுடன் அமைத்தல்
- உயர்ந்தோர் வழக்கத்துடன் மாறுபடாமை
- சிறந்த பொருளுடைத்தாதல்
- விளக்கமாய் உதாரணங்கள் கையாளுதல்

**(தொல்காப்பியம்– பொருள்: 665)**

நூலகம் ஆயிற்று. நாட்டின் அமைதியற்ற நிலையில் நாடுமுழுவதற்கும் தமிழ் ஆர்வலர்களுக்கு இந்த நூலகம் உதவியது வெளிநாட்டவர்களும் வந்தனர்.

நூலகங்கள் மிகப்பயன் உள்ளவை என்பதையும் நூலகங்கள் மூலம் கிராமங்களின் அறிவை வளர்க்கலாம் என்பதையும் தமிழக அரசு நன்கு உணர்ந்து இவற்றைச் செயற்படுத்தப் பொது நூலகத்துறை என்னும் அமைப்பை அமைத்தது. ஏனைய துறைகளைப்போல நூலகத்துறையும் தனித்துவமான துறையாகச் செயலாற்றக் கொள்வனவு செய்தல். இவற்றைத் தமிழக நூலகங்களுக்கு வழங்குதல். கிராமங்களில் நூலகங்களை அமைத்தல், இவற்றின் செயற்பாடுகளுக்கு உதவுதல், நிதியும் நிலமும் வழங்குபவர்களைக் கௌரவித்தல் போன்ற செயல்களை இந்நூலகத்துறை செய்துவந்தது. இவற்றால் அறிஞர்களும் மக்களும் பயன் பெற்றனர். தமிழக அரசின் நூல்களைப் பெறுதல் தொடர்பாக இந்நூலகத்துறையின் நோக்கங்களும் செயற்திட்டங்களும் மிகப்பலன் உள்ளனவாக இருந்தன. இதனால் இதன் பிரதி ஒன்றை இவர்களிடம் பெற்று இந்நாட்டில் செயற்படுத்தும் படி அப்போது இருந்த இந்து சமய கலாசார இராசாங்க அமைச்சரிடம் கொடுத்தேன். அவர் இதனை உவந்தேற்றுத் திணைக்களத்தில் நூலகம் ஒன்றை அமைத்ததோடு நாட்டின் பல இடங்களிலும் நூலகங்களை அமைக்க முயற்சி செய்தேன்.

கல்வி நிலையங்களில் அறிவு வளர்ச்சிக்கு உதவுவதற்காகத் கல்வி நிலையங்களில் நூலகங்களை அமைக்கவும் செயற்படவும் கல்வி அமைச்சு நிதி உதவி ஆண்டு தோறும் வழங்கியது. இதனால் பல பாடசாலைகளில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன பல இடங்களில் தனியான தாபனங்களும் நூலகங்களை அமைத்து வந்தன.

நூலகம் ஒன்று பல்கலைக்கழகம் போன்றது. பலதுறை சார்ந்த நூல்கள் இருக்கும். எமது ஊரிலும் பல பகுதிகளிலும் நூலகங்கள் இருந்து மக்கள் அறிவு

வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பது எமது விருப்பம். சிறந்த தமிழறிஞரான ஆறு. திருமுருகன் அவர்கள் மேற்குலக நாடுகள் சென்று வந்ததினால் நூலகப் பெரும் பயன் உணர்ந்து இவ்வூரில் சிறந்த நூலகம் அமைக்கத் திருவருள் வழிவகுக்கலாயிற்று. இவ்வூர் ஆர்வலர்கள் அறிஞர்கள் இவற்றிற்கு உறுதுணையாக உதவுகின்றனர். அறிவு வளர்ச்சிக்கான பலதுறை நூல்கள் இங்கு இடம் பெறும். மேலும் இந்நாட்டில் வெளிவந்த நூல்கள் பாதுகாத்தலுக்கும் இந் நூலகம் உதவும். நல்ல நிலை வளர்ச்சி பெறுவதற்கும் பயன்படுதற்கும். பயிற்சி பெற்ற ஆர்வம் உள்ள நூலகர் இருத்தல் வேண்டும். சமுதாயப்பணியாக இதனை இவர் வழிகாட்ட வேண்டும்.

இவ்வூர் அறிஞரான இரா உதயணன் அவர்கள் பின்லாந்து நாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணி செய்கின்றார். அந்நாட்டில் பழைய கலைகலாசாரங்களை வெளிப்படுத்தும் இந்நாட்டுத் தேசிய நூல், இராமாயணம் போன்ற அமைப்பு உள்ளது. பின்லாந்து அரசின் நிதி உதவியினால் இவர் இந்நூலைத் தமிழிற் பெருங்காப்பியமாக எழுதினார். இது மிகப்பெரும்பணி. இந்நூலகம் தமிழ்வளம் பெறுகின்றது. இவ்வூரும் இந்நூலால் பெருமை பெறுகின்றது. இந்நூல் வெளிவந்த போது தமிழ்ச்சங்கங்கள் இந்நூல் வெளியீட்டுக்கும் இங்குள்ள நூலகங்களுக்குக் கிடைப்பதற்கும் உதவின. இத்தகைய அரிய நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெறவேண்டும்.

இவ்வூர் வரலாற்றுக் காலம் முதல் முத்தமிழும் வளரப் பெரும்பங்களிப்புச் செய்துள்ளது. நூலகம் அமைந்தால் போதாது. நூல்களை நன்கு பாதுகாத்தலும் பயன்படுத்தலும் இன்றியமையாதன. இந்நூலகம் ஓர் ஆய்வு நூலகமாக இருத்தல் வேண்டும். இந்நூலகம் அமைய உதவிய அனைவரும் பாராட்டிற்கு உரியவர்கள்.

### நூல் குற்றங்கள்

பத்து

- கூறியது கூறல்
- மாறுபட்டுக் கூறல்
- குறைபடக் கூறல்
- மிகைப்படக் கூறல்
- பொருளில்லாமல் கூறல்
- மயங்கக் கூறல்
- இனிமையில்லாதன கூறல்
- இழி சொற்களால் புனைந்து கூறல்
- ஆதாரமின்றித் தானே ஒரு பொருளைப் படைத்தும் கூறல்
- எவ்வாறாயினும் படிப்போர் மனங் கொள்ளாதவாறு கூறல்

(தொல்காப்பியம்– பொருள்: 663)

# பொது நூலகங்கள்

## முகாமைத்துவ நோக்கும் போக்கும்



திரு.ச.தனபாலசிங்கம்

சமூகமொன்றின் அடிப்படை அறிவை வளர்ப்பதற்கு மிகவும் உந்துசக்தியாக இருக்கக் கூடியவை பொது நூலகங்களே. பாமர மக்களைப் பாவலராக மாற்றக் கூடிய சக்தி பெற்றவையாக உள்ள பொது நூலகங்களின் பணி சமூகத்தில் மகத்தான தொன்றாகும். இத்தகைய பொறுப்பு வாய்ந்த பணியை ஆற்றுவதற்கு பொது நூலகங்களின் நிர்வாகமானது சிந்தனை செயல் இரண்டிலும் திறனுள்ளதாக இருப்பது அவசியமாகும். இந்தத் திறன்களை வாசகர், நூல்கள், நூலகப் பணியாளர் என்ற மூன்று அம்சங்களின் அடிப்படையில் நோக்குவது பொருத்தமானது.

### வாசகரை இனங்காணும் திறன்

பொது நூலகத்தைப் பொறுத்த மட்டில் பலதரப்பட்ட வாசகர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவர். நிர்வாகத்திற்கு இது பாரிய பிரச்சனையாக இருக்கலாம். நூலக வாசகர்களை பஸ் பயணிகளாகவும், நிர்வாகியை நடத்துனராகவும் பார்த்தால் பல்வேறுபட்ட தன்மையான பயணிகளைச் சந்திப்பது போல் நூலக நிர்வாகியும் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த வாசகர்களைச் சந்திக்கிறார்.

பொது நூலக வாசகர்களைப் பொறுத்தவரை ஆறிலிருந்து அறுபது வரை எனக் கொள்ளலாம். பிரதேச சிறார்களிலிருந்து மிக வயது முதிர்ந்தோர் வரை அனைவரும் நூலகத்தைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் பல வகைப்பட்ட இரசனையுடையவர்களாக இருப்பதை அவதானிக்கலாம். ஆரம்பக் கல்வியறிவை மட்டும் கொண்ட சிலர், இடைநிலைக் கல்வியை கொண்டோர், இலக்கிய ரசனையுடையவர்கள், விஞ்ஞான விந்தைகளை மட்டும் அறியும் விருப்புடையோர், விவசாயம் மற்றும் தொழில்சார் துறைகளை அறிய விரும்புவோர், வரலாற்றை மட்டும் ஆராய விரும்புவோர் எனப் பலவகையினரைப் பொதுநூலகத்தில் சந்திக்கலாம். நூலகத்திற்கு மாணவர்கள் மிக முக்கிய வாசகர்கள் ஆவர். அவர்களது ஆற்றலை வளம்படுத்துவதன் மூலம் நல்லதொரு சமூகத்தினை அப்பிரதேசத்தில் வளர்த்தெடுக்க முடியும். பல்வேறு வகைப்பட்ட வாசகர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் அவர்களின் தேவைகளில் மிக முக்கியமானவற்றை அறிய முடியும். அவற்றிற்கான முக்கிய நூல்களை நூலகத்திற்கு வரவழைப்பதன் மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

சாதாரணமாக ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் அக்கிராமத்தின் பொருளாதாரத் துறை சார்ந்த உற்பத்தியிலீடுபட்ட பின்னர் தனது ஓய்வு நேரத்தில் உலகப் புதினங்களை அறிய

கிராமவாசி விரும்புவான். அக் கிராமவாசி வாசிக்கத் தகுந்த வகையிலான, அவனால் புரிந்து கொள்ளக்கூடிய இலகு மொழியில் அமைந்த வாசிப்புச் சாதனங்களை அவனுக்கு வழங்கும் போது அவனால் நன்கு கிரகித்துக் கொள்ள முடிகிறது. இதன் மூலம் அவன் தனது ஆற்றலை மேம்படுத்தக் கூடிய கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ள முடிகிறது. வாழ்க்கைக்குத் தேவையான புதிய நடைமுறைகள், சுகாதாரம், நோய்த்தடுப்பு, கல்வி போன்ற விடயங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படுகிறது. தனது கிராம கலாசாரத்திலிருந்து ஏனைய கலாசாரங்களை அறிய முடிகிறது. இவ்வாறான அறிவாற்றலை வளம்படுத்த கிராமத்திற்குப் பொது நூலகம் அவசியமாகிறது. பொது நூலகம் உழைத்துக் களைத்து போயுள்ள கிராமவாசிகளின் ஓய்வு நேரத்தை நல்ல வழியில் செலவழிக்கவும், அதே நேரம் அவனது ஆற்றல் வளம்படவும் வழிவகுக்கின்றது. எனவே பொது நூலகத்திற்குப் பிரதேச வாசிகளை உள்வாங்கக் கூடிய விதத்தில் தொழில்படவேண்டிய கட்டாய தேவை உண்டு.

### வாசகரைத் தக்கவைக்கும் திறன்

எவ்வாறு பிரதேசவாசிகளை நூலகத்தின் நிரந்தர வாசகராக மாற்றலாம் எனச் சிந்திக்கவேண்டிய பொறுப்பு நிர்வாகியினுடைய கடமையாகும். உழைத்துக் களைத்துப் போய் வீடு செல்லும் ஒருவர் நூலகத்தைப் பார்த்ததும் ஏதாவது வாசித்துவிட்டுச் செல்ல எண்ணி நூலகத்திற்குள் தனது அழுக்கு உடையுடன் நுழையலாம் அப்போது நூலக நிர்வாகி அவரை அன்புடன் அணுகி அவரது விருப்பை நிறைவேற்ற உதவவேண்டுமே ஒழிய அவனது தோற்றத்தைக் கொண்டு தடைசெய்தல் கூடாது. நூலகத்திற்கு வரும் போது அழுக்குடன் வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை ஆற அமர அவர் ஒழுங்கான வாசகராக அடிக்கடி நூலகத்தைப் பயன்படுத்தத் தொடங்கும் கட்டத்தல், அவரது பாணியில் எடுத்து சொல்லுவதன் மூலம் நூலகச் சட்டதிட்டத்தை அமுல்படுத்தலாம். பொதுமகனைப் பொறுத்தளவில் வேறு தேவைக்கு செல்லும்போது நூலகத்தைப் பயன்படுத்த விரும்பலாம். அப்போது பத்திரிகை எடுத்து வெளியில் வாசித்து வீட்டு வாசலில் எறிந்து விட்டும் செல்லலாம். இதனைக் கட்டுபடுத்த வேண்டும். ஆனால் அப்பொதுமகன் கட்டுப்பாட்டின் காரணமாக நூலகத்திற்கு வராமலிருப்பதற்கு அனுசரணையாகக் கூடாது. எனவே பிரதேச மக்களுடன் சேர்ந்து ஒத்துப் போவதன் மூலம் அவர்களை நூலகத்தைப் பயன்படுத்த தூண்ட முடியும்.

சிறுவர்களை நூலகத்திற்கு வரவழைக்க இன்னுமொரு வழி கதை, அபிநயபாட்டு போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துதல். இதற்காக மாஸ்டர் சிவலிங்கம் போன்ற நடிப்போடு கதையை விளங்கப்படுத்தக் கூடியவர்களை ஏற்பாடு செய்யலாம். அவர்களது நடிப்புடன் கூடிய செய்கை பிள்ளைகளை மிகவும் கவரக்கூடியது. இதன் மூலம் பல சிறுவர்களை நூலகத்திற்கு வரவழைக்க முடியும். சனிக்கிழமைகளில் இதை ஏற்பாடு செய்வது மிகவும் பொருத்தமாகும்.

நூலக வாசர்களை ஒன்று சேர்த்து வாசகர் வட்டம் ஒன்றை உருவாக்கலாம். அதன் மூலம் பிரதேச மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் புதிய

விடயங்களுக்கான கருத்தரங்குகள் விவாதங்கள் நடத்தலாம். குறிப்பாக விவாத மேடை நடாத்தும் போது அதிகளவு வாசகர்கள் பங்குபற்றுவார்கள். விவாதங்கள் அனைவரையும் கவரக்கூடியதாக இருத்தல் வேண்டும். விவாதத்தில் ஈடுபடுபவர்கள் மக்களைக் கவரக்கூடியவர்களாக இருந்தால் நூலகத்திற்கு அதிகளவு வாசகர்கள் வருகை தரவாய்ப்புகள் உண்டு.

இதே போன்று கலைக் கண்காட்சிகள், புத்தகக்கண்காட்சிகள் ஏற்பாடு செய்வதனாலும் அதிகளவு வாசகர்களை நூலகத்திற்கு வரவழைக்கலாம். வாசகர்களுக்குத் தேவையான நூல்கள் நூலகத்தில் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்த இவை உதவும்.

**தகவல் வளங்களை இனங்காணும் திறன்**

நூலகத்திற்கு தேவையான சாதனங்கள் சேர்க்கப்படும் போது பிரதேச வாசிகளின் தேவையறிந்து தான் சேர்க்கப்படல் வேண்டும். தரமான நூல்கள், சாதனங்களைச் சேர்க்க வேண்டுமென்ற நோக்கோடு பிரதேசவாசிகள் பயன்படுத்த விரும்பாதவற்றைக் கொள்வனவு செய்தால் அர்த்தமற்றதாகிவிடும். பலர் ராணி கொமிக்ஸ் விரும்புவாகள். ஆனால் அது தரமான சஞ்சிகை இல்லை என்பதற்காக தடைசெய்தால் பிரதேசவாசிகள் தமது ரசனைக்கு ஏற்ற நூல்கள் இல்லையென நூலகத்திற்கு வராமல் விடுவர். எனவே அவர்களது ரசனைக்கேற்ற நூல்களைச் சேர்ப்பதுடன் தரமான நூல்களையும் சேர்ப்பதால் காலப்போக்கில் தரமான நூல்களை வாசிப்பதற்கு பழக்கப்பட்டு விடுவார்கள். இதே போன்று சஞ்சிகைகள் பருவவெளியீடுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

நிர்வாகிக்குக் கிடைக்கும் நிதி போதாமலிருக்கலாம் கிடைக்கும் நிதியைக் கொண்டு பிரதேசவாசிக்கு தேவையானவற்றை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

**தகவல் வளங்களைத் தெரிவு செய்யும் திறன்**

பொது நூலகத்திற்கு நூலைத் தெரிவு செய்தே பெற்றுக் கொள்ள வேண்டும். மக்களின் தேவை என்ன என்பதை அவர்களிடம் கோரி அதனடிப்படையில் நூல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் அவர்களிடம் இருந்து அவ்வாறு கோரிக்கை கிடைக்காது. எனவே நூலக நிர்வாகி தனது ஆற்றலைப் பயன்படுத்தி நூலக வளங்களைப் பயன்படுத்துவோரைப் பற்றி மேற்கொண்ட ஆய்வைக் கொண்டு தேவையான நூல்களைத் தெரிவு செய்யலாம்.

பொதுவாக நூலகத்திற்கு எல்லோரும் விரும்பி வாசிக்கக்கூடியதும் இலகு மொழி நடையுடையதும் நல்லறிவை தரக்கூடிய தகவல்களை வழங்கக் கூடியதுமான நூல்களைத் தெரிவு செய்ய வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுடன் உரையாடி அவர்களது கல்வித் தேவைக்கான நூல்களை தெரிவு செய்யலாம்.

**தகவல் வளங்களை ஒழுங்குபடுத்தும் திறன்**

பெறப்படும் நூல்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்தி வைப்பதன் மூலம் விரைவாக வாசகருக்கு வழங்க வாய்ப்புகள் உண்டு. அத்துடன் வாசகர்களாலும் நூலைத் தெரிவு செய்ய வழிவகுக்கின்றது. எனவே நூல்களை ஒழுங்கு முறையில்

பகுத்து ஒழுங்குபடுத்தலாம். பொதுவாக பாடரீதியாக ஒழுங்குபடுத்தினால் வாசகனால் இலகுவில் நூலைத் தெரிவு செய்ய முடிகிறது.

வாசகர் நூலகத்தில் தனக்குத் தேவையான நூல் இருக்கின்றதா என அறிய உதவக்கூடியது பட்டியலாகும். இந்தப் பட்டியல் தயாரிப்பதற்கு சிறிய நூலகங்களுக்கு வசதிகள் குறைவாகும். ஆனால் நிர்வாகி தனது ஆற்றலை பயன்படுத்தி தாள்களில் அல்லது பால்மாப்பெட்டிகளை அட்டைகள்போல் வெட்டி தனது நூலக வாசகர்கள் கோரும் தகவல்களுக்கு அமைவாக பட்டியலைத் தயாரித்து தனது மேசையில் அடுக்கி வைத்தால் அவர்களது தேவையை விரைவாக வழங்க முடியும்.

நூலகத்திற்கு வரும் பத்திரிகைகளைக் காலையில் பார்வையிட்டு அன்றைய முக்கிய செய்திகளின் தலையங்கங்கள், சுருக்கங்களை வாகர்களுக்கு தெரிவிக்கும் வகையில் விளம்பரப்பலகையில் தினமும் எழுதி வைத்தால் அவற்றை வாசிப்பதற்காக வாசகர்கள் நூலகத்திற்கு வருவார்கள் இதன் மூலம் உலக விடயங்களை அவர்கள் அறிய வாய்ப்பளிக்கப்படுகின்றது.

பிரதேச மக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்து வைக்கும் பழக்கவழக்கங்கள் குறைவானவர்கள். நூலகங்களில் தினமும் கிடைக்கும் முக்கிய விடயங்களைத் தெரிவு செய்து கத்தரித்து ஒட்டுப் புத்தகங்கள் தயாரித்து வைக்கலாம் கட்டுரைகளை பொருள்வாரியாக வெட்டி ஒட்டி பொருள்வாரிப் புத்தகங்களை சேகரித்து வைக்கலாம். இவை மக்களின் ஆற்றலை வளம்படுத்த, நல்ல தகவல்களை வழங்க உதவும்.

## தேசியப் பொக்கிஷம்

சமூகம் மற்றும் வரலாற்றின் பல்வேறு காலகட்டத்தின் செய்திகளை உணர்த்த கலைப் பொருட்கள் முக்கியமானவை. அவற்றின் முக்கியத்துவம் கலைக்கண்ணோட்டத்தில் மட்டுமல்ல. மனிதனின் அறிவினைச் செம்மைப்படுத்துவதிலும் காணப்படும். அன்றைய பாத்திரங்கள், கருவிகள், ஓவியங்கள், அலங்காரப் பொருட்கள் ஆகியவை மனித வளர்ச்சியை அறிய உதவுகின்றன. இவைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சம காலத்தியக் கலைப் பொருட்களும், அண்மைக்கால மாதிரிகளும் மனித வளர்ச்சியைப் பற்றி நமக்கு உணர்த்துகின்றன. பல்வேறு காலகட்டங்களில் மனிதனின் வளர்ச்சியை எடுத்தியம்பும் இத்தகைய அரிய சேகரிப்புகளை, நல்ல முறையில் தொடர்ந்து பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மனித வளர்ச்சியின் பரிணாமத்தை எடுத்துக் கூறும் சான்றுகளாதலால் இவை தேசிய பொக்கிஷங்களாகும். எனவே இவை பாதுகாக்கப்பட வேண்டியவை.

ஒ.பி. அகர்வால்
நிர்வாக இயக்குனர், தேசிய கலைப்பொருட்கள் பராமரிப்புக்கான ஆய்வு நிறுவனம். லக்னோ

**நூலகத்தை வழிநடத்தும் திறன்**

நல்ல நூலக சேவை வழங்கவேண்டுமாயின் நூலகத்திற்கு நல்ல நிர்வாகம் இருக்க வேண்டும். நூலகத்திற்கு ஒரு முகாமையாளர் இருத்தல் அவசியம். ஆனால் அம் முகாமையாளர் தன்னிஷ்டமாக தொழிற்படாமலிருப்பதற்கு நல்லதொரு ஆலோசனைச் சபை இருத்தல் வேண்டும். இச்சபை அவருக்கு அபிவிருத்தி சார்பான ஆலேசனைகளை வழங்கலாம். இச் சபையில் பிரதேச கல்விமான்களும், பாடசாலைகள் ஏனைய கல்வி நிறுவனங்களின் தலைவர்களும் உள்ளடக்கப்பட்டு இருக்கலாம். முகாமையாளராக தொழிற்படுபவர் நூலக அபிவிருத்தியிலும், சமூக அபிவிருத்தியிலும் நல்ல ஈடுபாடுடையவராக இருப்பதுடன் நல்ல கல்வியறிவுடையவராகவும் இருப்பது அவசியம். அத்துடன் பிரதேச வாசிகளிடையே நன்மதிப்பை பெற்றவராக அல்லது பெறமுயற்சிப்பவராக இருத்தல் வேண்டும்.. இவ்வாறு இருந்தால்தான் நல்ல நூலக சேவையை வழங்க முடியும். நிர்வாகிக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களை பிரதேச வாசிகள் தெரிவிக்கலாம். ஆனால் அக்குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை என்பதை அவர்கள் உணரக்கூடியதாக நாம் பழக வேண்டும். நூலகர் ஒருவர் இடமாற்றப்பட்ட போது பொதுமக்களும் அதிகாரிகளும் அவரை வரவேற்காமல் திரும்பிப் போகும்படி முயற்சிகள் எடுத்தனர். ஆனால் அவர் திரும்பிப் போகாமல் அந்நூலகத்தின் பொறுப்புக்களை ஏற்று, அந்நூலகத்தை மீள ஒழுங்குபடுத்திப், பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முயற்சி செய்து, நூலகத்தினை முன்னிருந்த நிலையிலிருந்து பலபடி முன்னேற்றி ஒழுங்கு முறையான நூலகமாக மாற்றியமைத்த பின்னர் அவர் இடமாற்றம் பெற்றபோது அவரை வெளியேற விடாது வாசகர் முதல் அதிகாரிகள் வரை தடுத்து அவரின் இடமாற்றத்தை ரத்துச்செய்ய முயற்சித்தார்கள் என்றால் நிர்வாகி மக்களுடன் சேர்ந்து அவர்கள் அபிவிருத்தியில் செய்த பங்களிப்பைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுவே நூலக சேவைக்கு அவசியப்படுவதுடன் நூலகத்தைப் பயன்படுத்துவோரை அதிகரிக்கவும் அவர்களின் ஆற்றலை வளர்க்கவும் உதவும்.

மேலும் நிர்வாகி நூலகத்திற்கு வரும் நூலையோ, சஞ்சிகையையோ மேலோட்டமாக வாசித்து வைத்தால் அவற்றுள் இருக்கும் விடயம் யாருக்கு அவசியப்படும் என்பதை அறியலாம். நூலக வாசகர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒவ்வொரு வாசகரும் என்னென்ன வகையான ரசனையுடையவர் என்பதை அறிந்து அவருக்கு விரும்பும் நூலை வழங்க முடியும்.

**தாய் நிறுவனத்துடன் அனுசரித்துப் போகும் திறன்**

நூலகமானது ஒரு தாய் நிறுவனத்தின் ஒரு அங்கமாகவே தொழில்படும். அத்தாய் நிறுவனத்துடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியும். குறிப்பாக நூலகத்திற்கு நிதி ஏற்பாடு செய்வதற்குத் தாய் நிறுவனத்தில் தயக்கமான நிலையே காணப்படும். நூலக நிர்வாகி தாய் நிறுவனத்துடன் நல்ல உறவை வைத்திருந்தால், நூலகத்திற்குத் தேவையானவற்றை அவற்றின் அவசியம் பற்றி எடுத்துச் சொல்வதன் மூலம் தேவையான நிதியை தேவையின் முக்கியத்துவம் கருதி தாய் நிறுவனம் ஏற்பாடு செய்து வழங்கும். புதிய புதிய செயல்பாடுகளை முன்னெடுத்துச்

செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். இதன் மூலம் நல்லதொரு நூலக சேவையை மக்களுக்கு வழங்க முடியும்.

**நூலகப் பணியாளரை வழிநடத்தும் திறன்**

பொது மக்களுக்கான சேவைகள் தனி மனித முயற்சியின் மூலம் நிறைவேற்றப்படுவது சாத்தியமில்லை. அனைத்து அலுவலரதும் கூட்டு முயற்சியின் மூலமே நல்தொரு நூலக சேவையை ஆற்ற முடியும். நூல்கள் யாவும் வாசிப்பதற்கே. நூலகத்திற்கு வரும் நூல்கள், ஆவணங்கள், ஏனைய வாசிப்புச் சாதனங்களை வாசிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். நூலைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென அலுமாரிகளில் பூட்டி வைப்பது அல்லது ஒருவரே பொறுப்பாக இருக்க வேண்டும் என ஏனைய நூலகப் பணியாளர்கள் நூல்கள் வழங்குவதை தடுத்து வைத்தல் போன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு நூலைத் தேவைப்படுபவருக்கு தேவைப்படும் நேரத்தில் வழங்கி உதவி செய்தல் அவசியம். தேவை ஏற்படின் சட்டதிட்டங்களுக்கு விதிவிலக்காகவும் நூல்களை வழங்கி வாசிப்பினை ஊக்குவித்தல் வேண்டும்.

**தனித்துவமாக முடிவெடுக்கும் திறன்**

நூலக அபிவிருத்திக்கு தாய் நிறுவனத்ததையே நம்பியிருக்காமல், நலன் விரும்பிகள் மூலம் நல்ல அபிவிருத்திப் பணிகளைச் செய்யலாம். இதற்கான செயல்திட்டங்களைத் தயாரித்து உதவி செய்பவர்களுக்கு வழங்கினால் அதற்கென அவர்கள் நிதி ஏற்பாடுகளைச் செய்து உதவிகள் செய்வர். நூல்களை அன்பளிப்பாக வழங்குமாறு கோரலாம். அன்பளிப்புச் செய்வோருக்கு தேவையான நூல் பட்டிகளை வழங்குவதன் மூலம் நல்ல நூல் சேகரிப்பை உருவாக்கலாம். ஆனால் நலன் விரும்பிகள் தமது பழைய நூல்களைத் தரும் போது மிக அவதானமாகக் அவற்றினைக் கையாள வேண்டும். பூச்சி அரித்த காலங்கடந்த பழைய நூல்களையும் வழங்கும் போது அவற்றினை நூலகத்திற்கு உள்வாங்காது கழித்து விடலாம். இதனால் பூச்சிகளிடமிருந்து நூலக நூல்களைப் பாதுகாக்க முடியும். அத்துடன் பயனற்ற நூல்கள் இடத்தை நிறைத்து வைப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆவணமாக்கல் சேவை பொது நூலகங்களுக்கு அவசியமாகிறது. மிக முக்கிய வெளியீடுகள், கலை, கலாசார, பண்பாடு பற்றிய நூல்கள் சிறுபிரசுரங்கள், துண்டு பிரசுரங்கள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பது மிக அவசியமாகும். இது எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் அத்தியாவசியமாகும்.

பொது நூலகங்களில் முன்னெடுக்கப்படும் சேவைகள் மக்கள் நலனில் பெரும் அக்கறையுடையன. இச்சேவைகளால் சமுதாயத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் பொது நூலக சேவை சமூக அபிவிருத்திச் சேவையாகின்றது.

# இல்லத்தரசி ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள்--------

திருமதி ரதி கனகலிங்கம்



வாசிப்பு ஒருவனை முழு மனிதனாக்கும் தன்மையுடையது. வாசிப்பதனால் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. அதிலும் தத்துவ முத்துக்கள் போன்ற புத்தகங்கள், படிப்பினையூட்டக் கூடிய நாவல்கள், கதைகள், கருத்துச் செறிந்த ஆக்கபூர்வமான புத்தகங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. நல்ல கருத்துச் செறிந்த புத்தங்களை நல்ல நண்பர்களுக்கு ஒப்பிடுவது நூற்றுக்கு நூறு பொருந்தும். கண்ணதாசன் எழுதிய புத்தகங்கள், டாக்டர் உதயமூர்த்தியின் புத்தகங்கள், சாண்டில்யனின் நாவல்கள், ஓசோவின் புத்தகங்கள் போன்ற பலதும் என் மனத்தைக் கவர்ந்தவையே. புரட்சிகர சிந்தனையைக் கொண்ட சுவாமி விவேகானந்தரின் புத்தகங்கள், காந்தியின் சத்தியசோதனை போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்கள் படிப்பினையூட்டக்கூடிய, நல்ல விளைவைக் கொடுக்கக் கூடிய கதைகள், கவிதைகள் போன்றனவும் வாசிப்பதில் அதிக விருப்பம் உண்டு.

வாசிக்கும் போது அறிவு தெளிவடைகின்றது. பூரண திருப்தி உண்டாகின்றது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் நல்ல புத்தகங்களை வாசிக்கவே விரும்புகின்றேன். அதில் கிடைக்கும் சந்தோசம் வேறெதிலுமே இல்லை. மற்ற வேலைகளைத் தள்ளிப் போட்டாலும் வாசிக்கப் புத்தகம் கிடைத்துத் தள்ளிப் போட்டதாக எனக்கு ஞாபகமே இல்லை எனலாம். இதிலுள்ள முக்கியத்துவம் என்னவெனில் தரமான எழுத்தாளர்களையும், தரமான புத்தகங்களையும் மட்டுமே அதிகம் விரும்புகின்றேன். எத்தனையோ அறிஞர்களின் புத்தகங்களை வாசிக்கும்போது மிக மிக மகிழ்ச்சியடைகின்றேன். அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்போது தவறாமல் முதல் வேலையாகக் கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு வாசிக்கத் தொடங்கி விடுவேன். நித்திரையைக் கூட நிறுத்தி விடுவேன், வாசிப்பதற்காக – –

வாசிப்பு என்னை அப்படியே நிறுத்தி வைக்கின்றது. அந்தச் சக்தி நல்ல கருத்தை வலியுறுத்தும் ஒரு புத்தகத்துக்கே உண்டு என்று தான் சொல்வேன். வாசிக்கும்போது தனிமையும் மௌனமுமே பெரிதும் உதவியாக இருக்கின்றன. வாசிக்கும் பொழுது புத்தகத்தின் எழுத்துக்கள் என்னுடைய கண்களையும் மனத்தையும் ஒருங்கே கட்டிப் போட்டுவிடுகின்றன. அதேசமயம் துண்டிக்க முடியாத ஒரு ஆர்வத்தையும் அப்புத்தகங்கள் எனக்குள் ஏற்படுத்திவிடுகின்றன. சிலசமயம் நாம் வாழ்க்கையில் அறிந்த, அறிந்திராத அனுபவங்களைக் கூட உதாரணங் காட்டி அறியத் தருகின்றன. நல்ல புத்தகங்கள் கிடைத்தால் மற்றவர்களுக்கும் கொடுத்து வாசிக்கும் பண்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.. இப்படிச் செய்வதால் பலர் நல்லவர்களாகவே மாறிவிடுவார்கள், மாறியும் இருக்கின்றார்கள் என்பதும் என் அனுபவத்தில் கண்ட உண்மை.

சிந்தனையைத் தூண்டக் கூடிய நல்ல அறிஞர்களின் புத்தகங்கள் சாதாரண மனிதர்களையே சிறந்த மனிதர்களாக மாற்றும் வல்லமை கொண்டவை. சமுதாயத்தையே

மாற்றியமைக்கக்கூடிய வல்லமை கொண்டவை சில புத்தகங்கள். சத்தியம், தர்மம் என்பவற்றை எவராலுமே அழிக்க முடியாது என்ற உண்மையை வலியுறுத்தி நிற்கும் வல்லமை நல்ல புத்தகங்களுக்கு உண்டு. எப்படிப் பார்த்தாலும் நல்ல புத்தகங்கள் மனிதனுக்கு நன்மையையே செய்யும் என்பது எனது அசைக்க முடியாத கருத்தாகும். தீய மனிதர்களைக்கூட திருந்தி வாழச் சந்தர்ப்பம் கொடுக்கும் தன்மை பல நல்ல புத்தகங்களுக்கு உண்டு. உதாரணத்துக்குக் கண்ணதாசன் எழுதிய அர்த்தமுள்ள இந்து மதம் என்ற புத்தகத்தில் ஓரிடத்தில் "சுதர்மம்" என்ற கருத்துக்குச் சொன்ன விளக்கத்தை வாசிக்கும் எவரும் மறந்துங்கூடக் கெட்ட மனிதர்களாக மாற மாட்டார்கள் என்றே நம்புகின்றேன்

வாசிக்காத நேரங்களில் நிறைவு, மகிழ்ச்சி சுவாரஸ்யம் அனைத்தும் குறைந்தது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. சோம்பல் உணர்வு ஏற்படுகின்றது. வேகமாக செயற்பட முடியாத ஒரு சோர்வும் இடையிடையே தெரிகின்ற மாதிரி ஓர் உணர்வு. ஏதோ இழந்து விட்டோம் என்பது மாதிரியும் நல்ல நட்பை இழந்து விட்டது போலவும் கூடச் சில சமயம் உணர முடிகின்றது. எதையாவது வாசித்துக் கொண்டிருப்பது மனதுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தவல்லது என்பதை வாசிக்கப் புத்தகம் இல்லாத நேரங்களில் தான் அதிகம் உணர முடிகின்றது. வாசிக்க இன்னும் புத்தகங்கள் இருக்கின்றன என்னும் போது தான் வாழ்க்கையில் பிடிப்பும் மகிழ்ச்சியும் கூடுதலாக இருப்பதை உணர முடிகின்றது. வீட்டு வேலைகளை ஆர்வத்துடனும் வேகமுடனும் செய்ய மனம் வருகின்றது. எப்படியும் ஏதோ ஒரு விதத்திலாவது எனக்கு நல்ல புத்தகங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. குறைவில்லாமல் கிடைக்கின்றன. இது நான் செய்த பாக்கியம் என்றே கூற வேண்டும்.

நான் ஒரு இல்லத்தரசியாக இருப்பதனால் வீட்டு வேலைகளையும் பிள்ளைகளையும் கவனிப்பதற்கு நேரம் போதாமல் இருப்பினும் கிடைத்த நேரத்தில் வாசிப்பதையே அதிகம் விரும்புகின்றேன். சிறு வயதிலிருந்தே எனக்கு வாசிப்பதில் தான் அதிகம் விருப்பம். அதில் நன்மையும் இருக்கின்றதென்றே கருதுகின்றேன். எனது பிள்ளைகளுக்கு அதை ஊட்டியிருக்கின்றேன். ஒவ்வொரு தாய்மாரும் தமது பிள்ளைகளுக்குச் சிறு வயதிலிருந்தே நல்ல புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கப் பழக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள் போன்றவற்றை இளமையிலேயே விலக்கி வாழ இவர்கள் கற்றுக் கொள்வார்கள். இதற்கு ஒவ்வொரு தாய்மாரும் தாம் முதலில் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.. புத்தகங்கள் வாசிக்கும் பொழுது ஒருமுறை பதிந்து விட்டால் பிறகு மறக்கவே முடியாது. ஒவ்வொருவரும் நல்ல நூல்களைப் படிக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்குக் கொஞ்ச நேரத்தையாவது ஒதுக்க வேண்டும். அப்போது தான் நாம் வாழும் இச் சமூகம் புண்ணிய பூமியாக மாறி எல்லோரும் சமத்துவத்தையும் சந்தோசத்தையும் வேகமாக அனுபவிக்க முடியும். வாசிக்காத நாட்கள் வீணாகிய நாட்களுக்குச் சமன் என்பதே எனது கருத்தாகும்.

## வாசிக்கும்போது----------

- மிகவும் மகிழ்ச்சியான மனோநிலை உண்டாகின்றது.
- நம் கற்பனைக்கும் சில சமயம் சிந்தனைக்கும் கூடச் சந்தர்ப்பம் இருக்கின்றது.
- எம் மனதிலும் மனமாற்றங்களை ஏற்படுத்த உதவுகின்றது.
- ஒரே முடிவாக ஒரு கருத்தைச் சொல்ல வரும்போது அதை வாசிக்கும் எம்மையும் அதே கருத்துக்கு இணங்க வைக்கின்றது. சில சமயம் முரண்படவும் செய்கின்றது.
- ஒரு அனுபவமோ அல்லது படிப்பினையோ இது தான் என உணர வைக்கின்றது.
- பல தெரியாத, தெரிந்த விடயங்களையும் வழிவகைகளையும் கோடிட்டுக் காட்டுகின்றது.
- மௌனத்தையும் அடக்கத்தையும் ஆளுமையையும் பெற முடிகின்றது.
- ஒருவித எதிர்பார்ப்பையும் ஆவலையும் தூண்டுகின்றது.
- ஒருவித பிடிப்பையும் இரசிக்கும் தன்மையையும் வளர்க்கின்றது.
- ஆர்வத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கின்றது.
- எழுத்துத் துறையில் எம்மையும் ஈடுபட வைக்கின்றது.
- ஞாபக சக்தியை மேலும் வளர்க்கின்றது.
- முன்னெச்சரிக்கையையும் வளர்த்து விடுகின்றது
- முடிவில் திருப்தியும் சந்தோசமும், நன்றியுணர்வும் கிடைக்கின்றது.

# இணுவைத் திருவூர் அறிவாலயம்



திருமதி . வானதி. பரமேஸ்வரன்.

"நூலகம் என்பது நூல்களைச் சேகரித்து வைக்கும் இடம் என்பதுடன் வாசிப்பதற்கும், உசாத்துணைக் கருத்துக்களைப் படிப்பதற்கும், அண்மைக் காலத்தகவல்களை உடனே பெறுவதற்குமாக அறிவு சாதனங்களை முறைப்படி ஒழுங்கு படுத்தி வைத்திருக்கும் நிலையம் ஆகும்" என்பது அறிஞர்கள் கூற்று. மனித அறிவுக் கருத்துக்களைத் தாங்கி நிற்பவை நூல்கள் எனும் அறிவுரைக்கிணங்க நூலகங்கள் "அறிவுக் கையளிப்பு நிலையங்கள்" எனக் கல்வி அறிஞர்கள் கூறுகின்றனர்.

மனித அறிவுக் கருத்துக்களைப் பரிமாற்றப் பயன்படும் ஊடகம் மொழி. மொழி தோன்ற முன் ஆதி மனிதன் சைகை மூலம் தனது கருத்துக்களைப் பரிமாறினான். மொழி தோன்றியவுடன் "வாய்மொழி" யாகப் பரப்பப்பட்ட கருத்துக்கள் எழுத்துக் கலை அறிமுகத்துடன் நூல்கள் வாயிலாகப் பரிமாறப்பட்டன.

ஆரம்பத்தில் நூல்கள் களிமண் தகடுகள், தோல், மரப்பட்டை, ஓலைச்சுவடிகள், உலோகத்தகடுகள், புற்கள், கற்கள், மெழுகேடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்டுப் படிக்கப்பட்டன. இவ்வாறு உருப்பெற்ற நூல்கள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டு "ஆரம்பகால நூலகம்" உதயமாயிற்று.

இவ்வகையாக, காகிதம் கண்டுபிடிக்க முன்னரே நூலகங்கள் தோன்றின. கோயில்கள், மடாலயங்கள், அரண்மனை போன்ற இடங்களில் இந்நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தன. காகிதக் கண்டுபிடிப்பு, அச்சுக்கலை அறிமுகம், அறிவியலின் வளர்ச்சி, சனப் பெருக்கம், தொழிநுட்ப வளர்ச்சி போன்ற காரணிகளால் காகிதங்களில் எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட நூல்கள் உதயமாகிப் பெருக்கம் அடைந்தன. அத்துடன் அறிவியலின் வளர்ச்சியால் மனிதனது அறிவைத் தேக்கி வைக்கப்பட்ட நூல்கள் கொடுத்து வாங்கப்பட்டன. இவ்வகையில் தற்கால நவீன நூலகங்கள் வளர்ச்சியடைந்தன.

அறிவியலில் வளர்ச்சி, பெருக்கம் போன்ற காரணிகளினால் அறிவு சாதனங்கள் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள், கட்புல, செவிப்புல சாதனங்கள், கணினி, இணையம், போன்ற பல உருவங்களாக வெளிவந்துள்ளன. எனவே நவீன நூலகங்களின் வளங்களாக நூல்களுடன், சஞ்சிகைகள், பத்திரிகைகள், கட்புல செவிப்புல சாதனங்கள், கணினி, இணையம் எனப் பலவகை அறிவு சாதனங்கள் காணப்படுகின்றன.

நூலகத்திற் சேர்த்தற் பிரிவு, வாசிப்புப் பிரிவு, உசாத்துணைச் சேவைப்பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு, சிறுவர் பிரிவு, மட்டைகட்டும் பிரிவு, அரும்

சுவடிகள் காப்பகம், கட்புல செவிப்புல சாதனப்பிரிவு, கணினிப்பிரிவு, களஞ்சியப்பிரிவு போன்ற பல பிரிவுகளில் சேவைகள் நடைபெறுகின்றன. நூலக சேவையை அடிப்படையாகக் கொண்டு நூலகங்கள்

1. தேசிய நூலகம்
2. பொது நூலகங்கள்.
3. கல்வி நிறுவன நூலகங்கள்.
4. சிறப்பு நூலகங்கள். என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பாரம்பரியமானதும் அறிவுபூர்வமிக்க விழுமிய சேவையும் உடைய நூலக வரிசையில் இணுவைத் திருவூர் அறிவாலயம் பொதுநூலகம் என்னும் வரையறையில் தனது சேவையை ஆற்ற ஆரம்பிக்கின்றது. பொது நூலகங்கள் என்பவை மக்களின் நலன் கருதிச் சேவை செய்யும் நூலகங்களாகும். அரச, தனியார் நூலகங்களாக இவை செயற்படுத்தப் படுகின்றன. இலவசக் கல்வி வசதி வேண்டும் என்ற கருத்து சர்வதேச ரீதியில் உணரப் பட்டதை அடுத்துப் பொது நூலகசேவையும் உதயமாயிற்று. இதன் பயனாக எழுத்தறிவு உள்ள மனிதர் யாவர்க்கும் பயன்தரும் வகையில் பொது நூலகசேவை விரிவு படுத்தப்பட்டுள்ளது. தகவல் இன்றைய சமுதாயத்தில் தேசிய மூலமாகக் கொள்ளப்படுகின்றது. எனவே இன்றைய பொது நூலகமும் சமூகத்தின் நலனிற்கும், முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

அறிவாலயம் என்ற பெயரைச் சூடியிருக்கும் இணுவில் பொது நூலகமானது சில கட்டுக் கோப்பான பண்புகளைத் தன்னகத்தே கொண்டு பல இலட்சியங்களையும் நிறைவேற்ற உள்ளது. பொதுசன நூலகம் கல்வி ரீதியாகவும், சமூகவியலின் ஊடாகவும் மக்களின் கலாசாரம் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளிலும் நேரடியாகவும் நெருக்கமாகவும் தொடர்பு கொண்டுள்ளது. இவ்வகையில் இந்நிறுவனமும் நூலகசேவை, அரும்பொருட்காட்சியகம் போன்ற சேவைகளினால் ஒன்றிணைந்து செயற்படுகின்றது.

அரும்பொருட்காட்சியகம் எனும் போது தொல்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் நிலையம் ஆகும் என அறியப்படுகின்றது. பண்டைக்காலத்தில் நம் முன்னோர் வாழ்ந்த விதங்களையும், பாவித்த பொருட்கள், கலைகள் என்பவற்றையும் ஆராய்ந்தறியும் விஞ்ஞானம் தொல்பொருளியல் ஆகும். தொல்பொருளியலுக்குப் பாவிக்கப்பட்ட அனைத்துச் சாதனங்களும் தொல்பொருட்கள் அதாவது அரும் பொருட்கள் எனப்படும். பழைய ஏடுகள், நூல்கள், அரிச்சுவடிகள், பழங்கால மக்கள் பாவித்த சகல பொருட்கள், கல்வெட்டுக்கள், கலைகள், இலக்கியங்கள் யாவும் அரும்பொருட்கள் ஆகும். இவ்வரும்பொருட்களின் பெறுமதி உணரப்படாத இடங்களில் இவை சிதைந்து போகின்றன.

நம் முன்னோரின் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் மூலங்களாக விளங்குவன தொல்பொருளியல் மூலம் கிடைத்த அரும்பொருட்கள் ஆகும். எனவே இவ்வரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்து நம் மக்களும் வருங்கால சந்ததியினரும் அரும்பொருட்கள் வாயிலாக நமது கலாசாரப் பாரம்பரியங்களை எல்லாம் தெரிந்து கொள்ளும் படி காட்சிப் படுத்திச் சேவை செய்தல் அரும்பொருட் காட்சியகத்தின் பிரதான குறிக்கோள் ஆகும். அரும்பொருட்காட்சியகத்தின்

மூலம் சமயம், கலைகள், மானுடம், பண்பாடு, மொழி, வரலாறு, இலக்கியம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி செய்யவும், அவற்றின் வியத்தகு பண்புகளையும், தொன்மையையும் அறியவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

நூலகம், அரும்பொருட்காட்சியகம் எனும் இரு அரும் பெரும் சேவைகளினாலும் இணைந்த "இந்த நிறுவனம் தகவல் நிலையம், கலாசார மையங்கள், ஆவணமாக்கல் நிலையம், தகவற் தளம், அறிவுக்களஞ்சியம், தகவல் ஆய்வு மையங்கள் போன்ற பல தன்மைகளில் நம்மக்களுக்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் சேவையை வழங்கும்" என்பது இதை உருவாக்க முனைப்புக் கொண்டுள்ள அறிஞர்களின் அபிவிருத்தியை நோக்கிய பிரதான குறிக்கோள் ஆகும்.

தமிழ் ஆவணங்கள் பல மறைந்து போயுள்ள இக் காலகட்டத்தில் இந் நிறுவனத்தின் வருகையானது தமிழ்த் தேசியச் சுவடிகள் காப்பகம் எனும் ஆவணமாக்கல் நிலையம் உருவாக வழிகோலும் என்பதும் கண்கூடு.

இவற்றுடன் நூல்களை அரங்கேற்றும் நிலையம், நூல் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நிலையம், நூல்கள் வெளியீடும் நிலையம், ஆய்வரங்கு, கருத்தரங்கு நிலையம், கற்றலுக்கான மூலவள நிலையம் போன்ற பல்துறை நிலையமாகவும் இந்நிறுவனம் விரிவு பெற்றுச் சேவையை வழங்கும்" என்றும் தெளிவாகின்றது.

சமய, சமூக, பண்பாட்டு, அறிவியல், நிலையமாக விளங்கும் இந்நிறுவனத்தின் வளங்களையும், குறிக்கோள்களையும் பாதுகாத்து இதன் தன்னல மற்ற தூய சேவையைப் பெற்று நாம் யாவரும் பயன் பெறுவோமாக.

***உடன் உதவியவை.***



1. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
2. சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் நூலகம் திறப்பு விழாச் சிறப்பு மலர்.


**நூலகவியல்**
**பஞ்சசீலக் கொள்கைகள்**

- நூல்கள் பாவனைக்கே
- நூலுக்கேற்ற வாசகர்
- வாசகருக்கேற்ற நூல்
- வாசகர் நேரம் பேணுக
- நூலகம் வளரும் ஓர் உயிரி


# அறிவு வழங்கும் அமுத சுரபிகள்

"சைவப் புலவர்"
சண்முகலிங்கம் முகுந்தன்



புவனி போற்றும் மனிதத்தைப் படைக்க,
அவப் பொழு துகளை ஆக்கத் திறனாய் ஆக்க,
தவப் பயன் போல உதித்தவை நூலகங்கள்!

மேன்மை அறிவை மேதினியில் பரப்பி
சான்றோர் பலர் எம்முன் சரளமாய் நடமாட
வான் புகழாய் வையகத்தில் வாழ்பவை நூலகங்கள்!



சுற்றும் புவியில் சுதந்திர அறிவு பெற,
சற்றும் தளரா வண்ணம் சாதனையாய் !
கற்று வருவோரை அறிவு ஆழியில் முத்தெடுக்க,
ஆற்றுப் படுத்தும் ஆலயங்கள் - நூலகங்கள்!

புத்தகங்களைப் பேணும் பொக்கிஷப் பேழையாய்
வித்தைகளை முகமனின்றி விருந்தளிக்கும் பந்தியாய்!
எத்தகைமையுமின்றி எல்லோரும் ஏ ற்றமாய்,
சுத்த அறிவுச் சூரியராய் வாழவைப்பவை நூலகங்கள்!

படைப்பாளியும் வாசகனும் குலவி மகிழ ம் பாலமாய்
மடை திறந்த வெள்ளமாய் அறிவுபரப்பி- முதனூல் முதல்
கடை நூல் வரை காத்திரமாய் பேணும் கண்ணியத்தை
எடை போட முடியுமா?, அமுதசுரபி அல்லவா நூலகங்கள்!

பன்மொழி நூலும் பன்மத நூலும் பாங்காய் சேர்ந்து
என்னிலம் மீதிலும் சம உரிமை எழிலாய் வாழ
வன்மைகள் வடிகட்டி தக்க வாழ்விற்கேற்பதாய்
கன்னல் சுவையாய் கலாநிதிகளோடும் கலந்திருப்பவை நூலகங்கள்!

தற்கால அநாகரீகப் போக்குகளை, அவதிகளை,
சற்றே அடக்க சடுதியாய் சாதனை படைக்க!
உற்ற துணையாய் கல்விக்கு என்றும் உரமாய்,
முற்றும் பயனுடைய முழு மை ஆலயங்கள்-நூலகங்கள்!

எத்தனை பயன்கள் நூலகத்தால் எமக்கு
அத்தனையும் எம்மை அறிவுச் சூரியராய் !
இத்தரை மீதில் இன்பமாய் வாழ வைக்க
புத்தொளி பெற்று நூலகங்கள் மேலும் புவனியில்

தோன்ற வேண்டும்! இவ்வகையில் தோன்றினால்
தேன் தமிழ் செழிக்கும்! முதுமைகள் பெருமையாகும்!
சான்றோர் உதயமாவர் சகத்தில் சமாதானம் வரும்
மேன்மைப் பழக்கங்கள் மீண்டெழு ம் அவதிகள் அடங்கிடும்

புண்ணியப் பேறென புவனி போற்றும் நூலகத்தை,
திண்ணிய குணமுடை பல் திறமைச் சான்றோர்
விண்ணுயர் இனுவையில் விரும்பித் தோற்றினர் !
எண்ணி மகிழ்கிறேன். மேலும் ஏ ற்றமுற வளர்க !
கண்போல காப்போம் கருத்துடன் இணைப்போம்
திண்ணிய நெஞ்சரின் சேவைக்கு கரம் கொடுப்போம் !

# சீலம் பேணும் உள்ளம்.... தெய்வம் தேடி... வருகிறது...

திரு. குமாரசாமி சண்முகநாதன்

*ஆலயங்கள் ஏனையா ...*
*அபிஷேகங்கள் ஏனையா ...*
*கோலங்கள் கொடிகள் ஏனையா ...*
*கோட்டு முழக்கம் ஏனையா ...*
*சீலம் பேணும் உள்ளத்தை*
*தெய்வந் தேடி வாராதோ ?*

பாரசீகக் கவிஞன் உமர்கய்யாமின் கருத்தைக் கவிமணி தமிழில் தந்தது இது. "ஒழுக்கம் விழுப்பம் தரலால்" – "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" இது வள்ளுவம். விழுப்பம் தான் தெய்வந் தேடி வரும் – கருமம்.

ஒழுக்கம் என்பது பாரம்பரிய வழிமுறைகளைப் பேணுவதால் வளர்வது. தெய்வந் தேடி வரும் தகைமை. 'சீலம்' தரும். ஒழுக்கவியல் என்பது "**Ethics**' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். இது கிரேக்க மொழியின் "**Ethos**" என்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது. இச் சொல் வழக்கு – **Custom** அல்லது சம்பிரதாயம் – **Tradition** என்னும் பொருளைச் சுட்டி நிற்கும். ஒழுக்கம் என்ற சொல்லைக் குறிப்பிடும் '**Moral**' என்ற ஆங்கிலப்பதமும் '**Mores**' என்ற இலத்தீன் வேர்ச் சொல்லில் இருந்து பிறந்ததே.



ஆகவே 'சீலம்' – ஒழுக்கம் என்பது சம்பிரதாயம் என்பதையே குறிக்கும். நாம் ஒழுக்கம் என்று கருதுவது நாட்டுக்கு நாடு இனத்திற்கு இனம், மதத்துக்கு மதம் வேறுபடும். ஒரு குறிப்பிட்ட சமூகம் உயர்வாகக் கருதும் ஓர் ஒழுக்கச் செயலை வேறொரு சமூகம் மிக இழிவாகக் கருதுகின்றது.

ஆகவே ஒரு சமூகத்தால் பாரம்பரியமாகப் பின்பற்றப்படும் உயர்ந்த விழுமியம் சார்ந்த செயலே 'சீலம்' எனப்படும். மூத்தோரிடம் இருந்து கையளிக்கப்படும் – தலைமுறை தலைமுறையாகப் பேணப்படும் – நன்மையளிக்கும் செயல்களே சீலம் எனப்படும். கல்வியின் தலையாய நோக்கங்களுள் ஒன்று பாரம்பரியம் பேணுவது. அது தான் விழுப்பம் தருவது. **"Education without culture is of no value"** – பண்பாடில்லாத கல்வி பெறுமானமற்றது என்கிறார் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர்.

தெய்வத்தை நம்மால் தேட முடியாது. ஏனெனில் யோகர் சுவாமிகள் காசியிலிருந்து எமக்குத் தந்த செய்தி "காசி விஸ்வநாதனை எங்கெல்லாமோ தேடியலைந்து இறுதியில் காசிக்கு வந்து அவனை என்னுள்ளே கண்டு கொண்டேன்" என்றார். விமானத்தளத்தை நோக்கி விமானம் கீழிறங்கி வருமேயன்றி தளம் விமானத்தைத் தேடிச் செல்வதில்லை. விமானத்தளம் சீராக இருந்தால் மட்டுமே விமானம் தளம் இறங்கும். தெய்வம் எம்மைத் தேடிவரும் வகையில் எம்மை நாம் சீலமுடையவர்களாக்குவது தான் எமது பணி.

நமது வேதங்கள் முன்வைக்கும் உயரிய சீலங்கள் இவை தான்.

*மாத்ரு தேவோ பவ!*
*பித்ரு தேவோ பவ!*
*ஆச்சாரிய தேவோ பவ!*
*அதிதி தேவோ பவ!*

"மாதா, பிதா, குரு, அதிதி இவர்களைத் தெய்வமாக மதிக்கும் செய்கையால் நீ சீலம் பேணு" என்பதே. இந்த நான்கு பேரும் தெய்வங்கள் எனப்படுவார்கள். ஏனெனில் இவர்கள் எம்மைத் தேடி வருபவர்கள். இவர்கள் எம்மை நாடி வந்து எம்மிடம் கையளிப்பது உயர்ந்த செயல்களையேயாகும். இவர்களைத் தெய்வமாகக் கருதித் தாயைக் 'கோயில்' ஆக, தந்தையை 'மந்திரம்' ஆக, ஆசானைத் 'தீபம்' ஆக, அதிதியைப் 'பிரசாதம்' ஆக நாம் நடாத்தும் பூசையே சீலம் பேணும் பூசையாகும். ஆலயம், அபிஷேகம், கோலம், கொடிகள் எல்லாம் சீலத்தை அடைவதற்கான வழிமுறைகள், அதாவது அநுட்டானங்களே அன்றி அவை தெய்வம் ஆகா, அவை சீலம் ஆகா இவை வெறும் கருவிகளே — கோஷங்களே — வெறும் வேஷங்களே. மனிதனுக்கு நன்மை பயக்க வல்ல வழியைக் காட்டுகின்ற செயல் தத்துவமே ஒழுக்கவியல் ஆகும். நன்மை 'Goodness' தான் தெய்வம். சீலம் பேணும் போது நன்மை நம்மைத் தேடி வருகின்றது. பொய்யாது ஒழுகும் போது நாம் தெய்வமாகின்றோம். எவ்வாறு பொய்யாது ஒழுகுவது? வேதங்கள் கூறிய, தாய், தந்தை, ஆசான், அதிதி இவர்களைப் பேணு. இவர்களைப் பேண மறுக்கும் போது அனைத்து நன்மைகளும் இழக்கப்படும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றது அவர்கள் தான். எமக்குச் சீலத்தைத் தருபவர்கள் என்பதனாலேயே. நாம் வாழவேண்டிய வழிமுறையான சீலத்தை வடிவமைப்பவர் எம் ஆசான். எந்தச் சமூகம் மாதா, பிதா, குரு மூவரையும் கருத்திற் கொள்ளவில்லையோ அந்தச் சமூகம் தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொள்கின்றது. பழையன பேணல், புதியன புகுதல் ஆகிய இரண்டும் ஒருங்கு சேர நிகழ வேண்டும்.. பழையன எம்மால் கழிக்கப்படக் கூடாது. அவை தாமாகவே கழியும்.. எமது முன்னோர் தந்த நம்பிக்கை, சமயப் பழக்கவழக்கங்களை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும். நாம் மதம் மாறக்கூடாது. எமது மதம் மாதா, பிதா, குரு காட்டியவற்றைப் பின்பற்றி வாழ்வது. அது எமது தனித்துவமான செயல்களேயாகும். ஆனால் இங்கே ஒரு கொடிய மத மாற்றம் நிகழுகின்றது. அதாவது மாதா பிதாவை மதிக்காத தீவிர போக்கு வளர்கின்றது. குரு உதாசீனம் எமக்குப் பரிச்சயமாகின்றது.

எமது வீடுகளிலே 'தலைவாசல்' இருந்தது. மறைந்து போகின்றது. இன்று தலைவாசல் விருந்தினர் மண்டபம் **'Reception Hall'**. அன்று வீடு விளங்க விருந்தினரை வரவேற்று உபசாரம் செய்யும் தலைவாசல் அது. இது எமக்கு அருங்காட்சிப் பொருளாக மாறிவிட்டது. எங்கள் வீடுகளிலே 'குதிர்' இருந்தது. அப்பன் குதிருக்குள் என்பது முது மொழி 'குதிர்' என்பது நெற்களஞ்சியம். நெல்லைச்சேகரித்து வைக்கும் களஞ்சியம். எங்கள் அப்பன், தந்தையின் சம்பாத்தியம் குதிருக்குள்ளே இருந்து எமக்கு அன்னமிட்டது.

எங்கள் வீதிகளிலே 'சுமைதாங்கி' இருந்தது. அது வழிப்போக்கர்கள் தலைச்சுமையைத் தாமே இறக்கி வைத்துக் களைப்பாறிய பின்னர் தாமே தலையில் ஏற்றிச் சுமக்க உதவிய தர்மத் தொண்டின் அடையாளம். இதனை நிழலிட்டு நின்றது கிளை பரப்பிய ஆலமரம். ஆலமரத்தின் அருகில் ஒரு நீர்த்தடாகம். அது பல படிகளைக் கொண்டது ஒருபுறம். மறுபுறம் பசுக்கூட்டம் தாகம் தீர்க்கும் வகையில் இருந்தது. தாகம் தீர்த்த பசுக்களுக்கு ஏற்படும் சொறிவைத் தீர்க்க பக்கத்தே பல ஆவுரோஞ்சிக் கற்கள். இவையெல்லாம் தர்ம கைங்கரியங்களாக எம்மிடையே பழமையில் கிடந்தன. புதுமையில் சுமைதாங்கி விளம்பரக் கரும்பலகையாகி உறுமுகிறது. ஆவுரோஞ்சிக் கல் தேவை இல்லை. ஏனெனில் பசுக்களெல்லாம் பசுமையான நாவுரஞ்சும் அறுசுவை உணவிற்காக உயிர்த்தியாகம் செய்யப்பட்டு விட்டன.

பசு வளர்த்துப் பால் கறந்து, பசு உறவாடும் இடம் கால் மிதித்துப் பாவையர் பசுமையான குணங்களைப் பெற்றனர். அவர்கள் பெற்ற பிள்ளைகள் தாயைக் கோயிலாகக் கொண்டு, தந்தையை மந்திரமாக்கி, ஆசானை அன்பால் ஆராதித்து ,அதிதியைத் தெய்வமாகத் தேடி வரவழைக்கும் சீலம் பேணினர்.

நாம் நமது வருங்காலச்சந்ததிக்கு எந்த நல்லவைகளைக் கொடுத்தோம்? நாங்கள் மதம் மாறிவிட்டோம். தெய்வந்தேடி வரும் சீலம் பேணாது, 'ஓலம்' போடும் ஒலி பெருக்கி நிற்கின்றோம் சோகம் தான் பிறக்கிறது.

'அருங் காட்சி அகம்' ஒன்று எமது ஊருக்கு வேண்டும். ஏன் தெரியுமா? பட்டையும், பட்டைக்கல்லும், வில்லுவண்டியும் விந்தையான காட்சிப் பொருளாக வைத்து நினைவூட்டப் போகிறோம். ஓலையால் செய்த 'பட்டை' தண்ணீர் கோலத் தானே சுழன்று நீரேற்றும் **(Pumping)** தொழில் நுட்பம் எம்மிடம் இருந்தது. வில்லு வண்டி குதிரை பூட்டி வேகமாக இழுப்பது. பயணம் செய்பவருக்கு இதமாக இருக்க **'Shock Absorber'** செய்யும். இது அருங்காட்சியகத்தில் மறந்து போகாத ஞாபகமூட்டும் சின்னமாகின்றது. தலைவாசல், சுமைதாங்கி, சத்தகம், காம்புச்சத்தகம், எழுத்தாணி, ஏடு, பெட்டகம், திருநீற்றுக்குடுவை, பாக்குவெட்டி, பாக்குரல், உறி இவைகளை அருங்காட்சியகத்தில் வைத்து நூதனப் பொருளாகப் பார்க்கப் போகிறோம். பழையவர்கள் பண்பாடு, பழக்கவழக்கம், சீலம் இவைகளைப் புதிய சந்ததியிடம் கையளிக்க முடியாத பலவீனமான

சூழ்நிலையில் 'அருங்காட்சிப்' பொருளாக்கும் எமது கையாலாகாத் தனத்திற்கு இதைத்தவிரச் சான்று வேண்டுமா? அது செய்தாலும் பரவாயில்லை. ஓரளவு நிம்மதி.

ரமண மகரிஷி கோவணத்துடன் தரிசனம் தந்தவர். இணுவில் கந்தசாமி கோயில் மஞ்சத்தைச் சுற்றி எங்களின் குழந்தைகள் கோவணத்தோடே வளையம் உருட்டின காலத்தை நினைத்து ரமண மகரிஷியை வழிபட்ட காலம் ஒன்று இருந்தது. கோவணமும் வளையமும் அருங்காட்சியகத்தில் வைக்கலாம். வளையம் உருட்டுகின்ற காட்சியை எவ்வாறு நினைவு படுத்த முடியும்?. கோவணம் கட்டுகிற உடற் கூற்று விஞ்ஞானத் தொழில்நுட்பம் 'ஓதம்' வராமற் பாதுகாக்கும் உபாயம் என்று எனது தந்தையார் சொன்னது எனக்கு இப்பொழுதும் பசுமையாக நினைவிலிருக்கின்றது.

பழைய ஆலயங்கள் எல்லாம் புதிய வடிவம் பெறுகின்றன. மந்திர உச்சாடனம், தெய்வ சித்தம் வாய்த்தவர்களது உபாசனை, அவர்களது பாத தீட்சை இவைகளால் பழைய ஆலயங்கள் தெய்வீக உயிர்ப்புப் **'Divine Vibration'** பெற்றிருந்தன என்று அனுபவம் வாய்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

அனுபவத்தை யார் கேட்கிறார்கள். பழையவர்களின் அனுபவ சித்தாந்தத்தை, அனுபூதி ஞானத்தை ஏளனம் செய்வதுதானே புதுமை படைப்பதாக விளங்குகிறது.

'சீலம்' என்பது பல பரிணாமங்களைக் கொண்டது. திரிபுண்டரீகம், உத்தூளனம் இவை திருநீறு பூசும் நெறி என்று நாவலர் சைவ வினாவிடையில் விளக்கம் தந்தார். இப்படிப் பட்டை பூசுகிற, திருநீறு பூசும் சீலத்தைப் பேணும் தலைமுறை மறைகிறது. நெற்றியில் திருநீற்றைச் சுட்டி வைக்கிற தலைமுறை எழுகிறது. வாணவேடிக்கை இல்லை; சிகரம், சப்பறம் இல்லை; ஆனால் வரிசையாக ஒலிபெருக்கிகளைப் பூட்டிச் செவிப்பறைகளைச் சிதறடிக்கும் ஒலி மாசடைதல் **(Sound Pollution)** பக்தி வெளிப்பாடாக வளர்ந்து விட்டது.

'எல்லாம் சிவன் செயல்' என்பது மறந்து எல்லாமே தலைகீழாக 'எல்லாமே யமன் செயல்' என்றாகிவிட்டது. சுதந்திரம் பெற வழி – எல்லாம் சிவன் செயல் என்று புரிவது என்று யோகர் சுவாமிகள் சொன்னார். ஆனால் எல்லாரும் சுதந்திரம் வேண்டுகிறார்கள். சுதந்திரம் பெற வழிமுறை யோகர் சுவாமி சொன்னது தான் என்றால் கேட்பார்களோ?

எல்லாம் சிவன் செயல் என்பவன் ஞானி. கடவுளைத் தொல்லைப்படுத்தக் கூடாது. கடமையைச் சரியாகச் செய்ய, எல்லாம் சரியாக நடக்கும் என்று எண்ணுபவன் ஒழுக்க சீலன். அவன் "பிரேமை" தெய்வீக அன்புடையவன். தெய்வந் தேடும் தகைமை அடைந்தவன். ஐயோ இது எங்கே போய் முடியப் போகிறதோ? நாங்கள் அழிந்து போகப் போகிறோம். என்று நினைப்பவன் – அஞ்ஞானி. என்று பரமஹம்சர் ஞானிகளை வகைப்படுத்தினார். எங்களுடைய பாரம்பரியத்தை, பழைய மரபுகளை

முழுதாகப் பேணி நடக்க வேண்டும். எங்கள் இல்லங்களிலே வைத்து எங்கள் முதியோர் பராமரிக்கப்பட வேண்டும் வணங்கப்பட வேண்டும் முதியோரை அருங் காட்சியகத்தில் வைக்கிற மாதிரி முதியோர் இல்லங்கள் உருவாக்கக் கூடாது.

"அப்பனும் அம்மையும் தங்கமே தங்கம்
அகத்தினிலே வாழுகிறார் தங்கமே தங்கம்"

இது தான் சீலம் தெய்வத்தை நாம் நோகக்கூடாது. தெய்வத்தை நாம் தேடக்கூடாது. தெய்வம் எம்மைத்தேடி வரக்கூடியவாறு எமது வாழ்க்கை வட்டத்தைச் சீர் செய்ய வேண்டும். **(Love All, Serve All)** – யாவரிடத்தும் அன்பு செய்து, யாவருக்கும் சேவை செய்து வாழும் உயரிய சீலம் பேண வேண்டும். "சைவப் பள்ளிக்கூடத்திலே, தேவாரம் பாடக்கூடாது. கண்டபடி பிரார்த்தனை என்று நேரத்தை வீணாக்கக் கூடாது. படிக்கிற நேரத்தை பாழ் படுத்துகிறார்கள் – என்று கல்வியிலே கரிசனை காட்டுகின்ற – நடிப்புத் தலை தூக்குகிறது. தடிப்புத் தாண்டவமாடுகிறது.

தாயினும் நல்ல தலைரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்

என்று தான் ஒழுக்கசீலர்களை ஞானசம்பந்தப் பெருமான் திருகோணமலைப் பதிகத்திலே காட்சிப்படுத்தினார். இப்பதிகம் பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் இருக்கிறது. ஆனால் சமய பாடத்தில் 'A' எடுத்தால் சரியாம், 'கற்ற பின் நிற்க அதற்கு தக' –என்று சொல்பவர் கல்விமான் என்று கொள்ளப்படாத காலம் இது.

சீலம் பேணப்பட யார்? யார்? காரண கர்த்தாக்களாக வேண்டும். குருவே 'துணை' என்று ஏடு தொடக்கவில்லை. எப்படிக் குருபக்தி ஒழுக்கசீலமாகும்? வணக்கத்துக் குரியவர்கள் யாரென்பது தெளிவில்லை. யார் யாரோ வணங்கப்படுகிறார்கள். எல்லாரும் வணங்குகிறார்கள் 'வழிபடுவோனை வல்லறிதீஇயே – என்று புறநானூறு கூறுகிறது. அதாவது வழிபடுவோன் – நன்கு அறியப்படவேண்டும். தெளிவைப் பெற வேண்டும்.

தெய்வந்தேடி வருகிறது. அவதாரங்கள் தவறாமல் நிகழுகின்றன. சீலம் பேணுபவர்கள் இலை மறை காயக இருக்கிறார்கள். மரக் கொப்பெல்லாம் காயாக காட்சி தந்து பழமாகக் கனிய வேண்டும் என்பது தான் நல்ல உள்ளங்களின் பிரார்த்தனை. பிரார்த்தனை ஒரு போதும் வீணாகாது. **'Pragers Move The Mountain'** – பிரார்த்தனை மலையையும் அசைக்கும் என்பது. மலைப்பிரசங்கம். சும்மா மலைக்காதீர்கள், சீலம் பேணும் உள்ளத்தைத் தெய்வந்தேடி வரப்போகிறது. சந்திக்கத் தயாராகுங்கள்... சந்தர்ப்பம் இது நல்ல சந்தர்ப்பம்.

# தகவல் யுகத்தின் இணையற்ற கண்டுபிடிப்பு

- நித்திலன் -

இது கணினி யுகம். கணினி இல்லாவிடின் கல்வி உலகம் இல்லை. அறிவியல் விரிவாக்கமும் இல்லை. இன்று நவீன உலகில் புகுந்திருக்கும் நாம் மனித வளத்தினைப் பாவித்து, வேளைப்பளுவைக் குறைத்து, வேலைகளை விரைவாகவும், அழகாகவும் நிறைவேற்றும் நோக்கில் மனித தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகக் கண்டுபிடித்த எத்தனையோ கண்டுபிடிப்புகளில் முக்கியமானது கணினி. இவ்வாறு உருவாக்கப்பட்ட கணனிகள் ஆரம்பத்தில் ஒரு அறையின் அளவுக்குப் பெரிதாகவும் (பலர் உள்ளே நின்று வேலை செய்யலாம்) பின் தொழில் நுட்பம் வளர்ச்சியடைய இலகுவாகக் காவிச் சென்று பயன்படுத்தக் கூடிய வகையில் உருவமைப்பில் மெல்ல மெல்லச் சிறிதாகி, இன்று உள்ளங்கையிற்குள் அடங்கக் கூடிய வகையில் உருப்பெற்றுள்ளன.

இனி வரும் காலங்களில் மனித சமுதாயத்தின் பெரும்பாலான தேவைகளை இக் கணினிதான் பூர்த்திசெய்யப் போகிறது என்பது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்று. ஆகவே அப்படிப்பட்ட கணினியைப் பற்றி நாம் அனைவரும் அறிந்திருப்பது, கற்றிருப்பது எமது எதிர்காலத்திற்கு நல்லது. இக்காலத்தில் எமது மண்ணில் உருவாகியிருக்கும், உருவாகி வரும் கணினிப் பயிற்சி நிலையங்கள், கணினி விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் அதிகரிப்பு இதைத்தான் உணர்த்தி நிற்கிறது.

கணனியைக்- கடிதம் எழுதுவதற்கும், கட்டுரை எழுதுவதற்கும், புத்தகம் அச்சடிப்பதற்கும் உதவும் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்திய மனித சமூகம் தகவல் யுகம் ஒன்றிற்குள் காலடி எடுத்து வைத்த கையுடனேயே கணினியைப் பயன்படுத்திக் கடிதம் அனுப்பவும், வர்த்தகம் செய்யவும், உடனுக்குடன் உலகின் எந்த மூலையிலும் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்ளவும் இயலக் கூடிய நிலைக்கு வளர்ந்து நிற்கின்றது. இந்த வளர்ச்சி நிலையையே நாம் இன்ரநெற் உலகம் எனக் குறிப்பிடுகின்றோம்.

இணையம் என்பது பொய்யும் மெய்யும் இரண்டறக் கலந்த மாய உலகம் எனப்படுகின்றது. நாடு, மொழி, மதம், இனம், அரசியல் தடைகள் அனைத்தையும் தாண்டித் தனி உலகமாக இயங்குகின்றது இணையம். இதன் சிறப்பு யாதெனில் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பயன் பெறக்கூடிய வகையில் இதனுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதனைப் பயன்படுத்திச் சாதாரண பொதுமகன் ஒருவர் தினசரிகளை, சஞ்சிகைகளை உடனுக்குடன் படிக்கலாம்; பழையகால இலக்கியங்கள், இதிகாசங்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவற்றினை அறியலாம்; சிறுவர்கள் கணினியில் விளையாடலாம், விளையாடக் கற்றுக் கொள்ளலாம், கதை நேரம் கேட்கலாம்; மாணவர்கள் அவர்களுடைய பாடசம்பந்தமான நூல்கள், அறிவுக்குப் பயனுள்ள தகவல்கள், மற்றும் இலக்கண, இலக்கியங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்; அனைவரும் வானொலி கேட்கலாம்; தொலைக்காட்சி பார்க்கலாம்; கடிதம் அனுப்பலாம்; விரும்பிய பொருட்களை வாங்கலாம், விற்கலாம்.

## இணையம் என்பதற்கான சரியான விளக்கம் ---

Inter connection Network என்ற சொற்றொடரிலிருந்து பிறந்ததே Internet எனப்படும் இணையமாகும். இது உருவாக்கம் பெற்றது இவ்வாறு தான். கணினி என்பது உங்களில் பெரும்பாலானோருக்கு அறிமுகமானதொன்று. இரண்டு கணினிகளைத் தேவை கருதி ஒன்றுடனொன்று இணைத்துப் பணியாற்றும்போது அது வலையமைப்பு [Network] எனப்படுகின்றது. ஒரு நிறுவனத்துக்குள்ளேயே பல கணினிகளை வலையமைப்பினூடாக ஒன்றிணைக்கும் போது அது உள்ளூர் பிரதேச வலையமைப்பு [Local Area Network] எனப்படுகின்றது. இதுவே ஒரு பிரதேசத்திலுள்ள பல நிறுவனங்களின் கணினிகள் வலையமைப்பினூடாக ஒன்றுடனொன்று இணைக்கப்படும்போது அது பிரதேச வலையமைப்பு எனப்படுகின்றது. அதேசமயம் ஒரு நாட்டிலுள்ள அனைத்துக் கணினி வலையமைப்புகளும் ஒன்றுடனொன்று இணைக்கப்படும்போது அது பரந்த பிரதேச வலையமைப்பு [Wide Area Network] எனப்படுகின்றது. அதுபோன்று ஒவ்வொரு நாட்டினதும் வலையமைப்புகள் ஒன்றுடனொன்று இணைக்கப்படும் செய்முறையே இணையம் எனப்படுகின்றது.

### பயனுள்ள சில இணையத்தள முகவரிகள்

**வயது அடிப்படையில்**

பெண்களுக்கு www.covergirl.com
குழந்தைகளுக்கு www.kidsmahal.com
ஆய்வாளருக்கு www.libraryspot.com

**பொருட்துறைகளின் அடிப்படையில்**

விளையாட்டு www.khel.com
www.criketnet.com
www.olympics.com
உடல்நலம் www.lealtibrary.com
பயணம் www.travell.in.com
குழந்தை பராமரிப்பு www.babycare.com
நகைச்சுவை www.oofun.com
பெண்கள் www.covergirl.com
www.clearsil.com
வேலைவாய்ப்பு www.job.com
www.computerworks.com
www.carreershop.com
www.bankjobs.com

**தமிழ்ச் சஞ்சிகைகள்**

ஆனந்த விகடன் www.vikatan.com
குமுதம் www.kumudam.com
கல்கி www.kalkiweekly.com

**செய்தித்தாள்கள்**

வீரகேசரி www.ccom.lk/virakesari
தினக்குரல் www.thinakkural.com
தினகரன் www.thinagaran.lk
உதயன் www.uthayan.com

## இணையத்துடன் இணைந்து கொள்வதற்கு----

இணையத்துடன் இணைந்து கொள்வதற்கு எமக்குத் தேவைப்படுவது மூன்று முக்கிய அம்சங்களாகும். அவை

1. கணினி

எமக்கு தேவையான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும் வேண்டிய தகவல்களைப் பதிவதற்கும் கணனித்திரை உதவும். மனிதருக்கு மூளை போன்று கணினிக்கென இருக்கிறது மத்திய செயற்பாட்டு மையம். கணினியை இயக்குவதும், நாம் வழங்கும் தகவல்களைச் சேமித்து எமக்குத் தேவை ஏற்படும் போது வழங்குவதும் இதன் செயற்பாடுகளில் பிரதானமானதாகும். இதிலுள்ள உடனே வாசிப்பதற்கான நினைவகத்தின்(RAM) கொள்ளளவு குறைந்தது 128 MB

ஆகவும் கணினியின் வேகம் 2.0GB ஆகவும் இருந்தால் மட்டுமே இணையத்துடன் எவ்வித சிரமமுமின்றி இணைந்து கொள்ள முடியும். தகவல்களைக் கணினியினுள் செலுத்துவதற்கும், இலகுவான முறையில் சில விடயங்களைக் கையாள்வதற்கும் விசைப்பலகை பயன்படுகின்றது. எமது வேலைகளை இலகுவாக நிறைவேற்றுவதற்குச் சுட்டி பயன்படுகின்றது. பாட்டுக் கேட்பது உட்பட ஒலி வடிவில் எதையும் நாம் பெற உதவுவது ஒலிபெருக்கி. கணினியில் எமக்குத் தேவையென நாம் கருதும் தகவல்களை அச்சுரு வடிவில் பெற அச்சுப் பொறி உதவுகின்றது. படங்களைக் கணனியில் பதிவு செய்து தேவைக்கேற்றவாறு பயன்படுத்த ஒளிப்பட பதிவாக்கி உதவுகின்றது..

2. தொலைபேசி இணைப்பு

3. தொலைபேசிக்கும் கணனிக்கும் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு உதவும் நெற் காட் எனப்படும் இணைய அட்டை, கேபிள், மற்றும் கேபிளை இணைப்பதற்கான கிளிப் என்பன.

## இணையத்தின் பிரதான வசதிகள்

1. இ – கொமர்ஸ் எனப்படும் மின்னியல் வர்த்தகம்
2. இ – மெயில் எனப்படும் மின்னியல் தபால்
3. வெப் எனப்படும் இணையத் தளங்கள்

### மின்னியல் வர்த்தகம்

இணையத்தில் எதிர்காலத்தில் அதிக தாக்கத்தை விளைவிக்கக்கூடியதும், பெரும் இலாபத்தை அளிக்கக்கூடியதுமான தொழினுட்பம் எது வென 2001ம் ஆண்டு நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்துக் கணினி உலகின் முதன்மை நிறுவனமான மைக்றோ சொவ்ற் நிறுவனத்தின் உரிமையாளர் பில் கேற்ஸிடம் கேட்டபோது அவர் அளித்த பதில் மின்னியல் வர்த்தகம் என்பதே. தகவல் தொழினுட்பத் துறையில் உயர்நிலை வகிக்கும் நாடுகளின் முதலீட்டின் பெரும்பகுதி இ – வர்த்தகத்துக்கே செலவிடப்படுகின்றது. புத்தகமோ, சீடீக்களோ, நகை நட்டுக்களோ, சாப்பாட்டுச் சாமான்களோ வீட்டிலிருந்து கொண்டே இணையத்தினூடாக வாங்கவோ, விற்கவோ முடியும்.

### மின்னியல் தபால்

ஆரம்பகாலத்தில் ஒருவருக்கோ அல்லது ஓரிடத்திற்கோ வேறு பிரதேசத்திற்கோ, வேறு நாட்டிற்கோ தகவலைத் தெரியப்படுத்துவதாயின் அதற்கான காலம், செலவு என்பன அதிகமாவும், குறிப்பிட்ட தினத்தில் சேர்க்க முடியாத நிலைகளும் காணப்பட்டன. அவற்றினை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல புதிய புதிய பரிமாறல் நடைமுறைக்கு வந்தன. அதாவது கால் நடை தொடக்கம் …. ரயில், கப்பல், விமானம்…… புதிய பரிமாறல்களின் உச்ச வெளிப்பாடே இந்த இலத்திரனியல் தபால். இவற்றின் செயற்பாடு அளப்பரியது, செய்தியையோ அல்லது படங்களையோ உரிய வடிவில் குறித்த நேரத்தில் உரியவர்களுக்குத் தெரிவிக்க முடியும்.

இதற்கு அதிகளவு நேரத்தை வீணாக்கத் தேவையில்லை, தகவல் உரியவர்களிடம் சென்றடைந்திருக்குமோ என்றெல்லாம் யோசிக்கத் தேவையில்லை. அனுப்பிய சில நிமிடங்களிலேயே தகவல் கிடைத்ததற்கான பதிலையும் பெறமுடியும். இதன் மூலம் செய்தியினைப் பரிமாறுவதற்கு மொழி ஒரு தடையல்ல. தெரிவிக்க வேண்டிய தகவலைத்

தமிழில் வடிவமைத்து எங்களுடைய **E-mail** முகவரியினூடாக தகவல் சேரவேண்டியவர்களின் முகவரிக்கு அனுப்பி அதற்கான பதிலையும் உடனே பெறக்கூடியதாக இருக்கும்.

**இணையத்தளங்கள்**

இணையத்தின் நூலகம் எனப்படக்கூடியளவுக்கு பலதரப்பட்ட தகவல்களையும் சேமித்து வைத்திருப்பது இணையத் தளம் எனப்படுகின்றது. நூல்களை வாசிப்பது நாகரீகமற்றது என்ற கருத்து மெல்ல மெல்ல உருவாகும் காலம் இது. புத்தகப்பூச்சி என்ற சொல்லுக்குப் பதிலாக இணைய ----? என்ற புதிய சொல்லைத் தேடும் காலத்தை எமக்கு உருவாக்கி இருப்பது இணையத் தளங்களின் அதிகளவான பயன்பாடு என்றே கூற முடியும்.

உலகெங்கிலுமுள்ள நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், தனிப்பட்ட நபர்கள் போன்றோர் தத்தமது விபரங்களை இணையத்தில் தங்களுக்கெனத் திறந்துள்ள ஒரு பிரிவில் பதிந்து வைத்திருப்பார்கள். இப்பக்கங்களே இணையத் தளங்கள் எனப்படுகின்றது.

இணையத் தளங்கள் என்பதைக் கிட்டத்தட்ட ஒரு நூலகம் என்றே கூற முடியும். சாதாரணமாக ஒரு நூலகத்தில் எமக்குத் தேவையான நூலின் ஒரு பிரதி மட்டுமே இருக்கும். இதையும் யாராவது இரவல் பெற்றுச் சென்று விடுவர். அல்லது இன்னொரு வாசகர் நூலத்திலேயே வைத்துப் படித்தக் கொண்டிருப்பர். இந் நிலையில் நாம் அதைப் பயன்படுத்த முடியாமல் இருக்கும். இணைய நூலகத்தில் ஒரு நூலை எத்தனை பேர் வேண்டுமென்றாலும் படிக்கலாம்.

எமக்குத் தேவையான ஒரு நூலைத் தேடுவதற்குக் கால் கடுக்கப் பேருந்துக்குக் காவல் இருந்து, வேர்த்து விறுவிறுக்க நூலகத்துக்குள் நுழைந்து, அங்கு தேடிக் களைத்து, அங்கே இல்லாத போது இன்னொரு நூலகத்துக்கு அலைந்து--- இணையத் தளம் என்னும் நூலகத்தில் இவ்வாறு சிரமப்படத் தேவையில்லை. எமக்கு விரும்பிய நூலை இலகுவில் தேடி எடுக்கலாம். ஓரிடத்தில் அமர்ந்து கொண்டே நாம் விரும்பிய நூலை விருப்பப்படி பார்க்கலாம்; படிக்கலாம்; குறிப்பு எடுக்கலாம்; விரும்பினால் ஒளிப்படப் பிரதி எடுத்துக் கொண்டு செல்லலாம்; இன்னும் பல தகவல்களை ஒலி, ஒளி வடிவில் பயன்படுத்தலாம்.

எரிமலை, சூரியன், ஆனந்தவிகடன், யூனியர் விகடன், பதிவுகள், கல்கி, அரும்பு, மங்கையர் மலர், கனையாளி, தாயகம், மகிழ்இனி போன்றவை இணையத்தினூடாகப் படிக்கக் கூடிய சஞ்சிகைகளில் சிலவாகும். உலகத் தமிழர், தென்றல், பி.பி.சி தமிழோசை போன்றவை இணையத்தினூடாகச் செய்தி வழங்கும் வானொலிகளில் சில. உதயன், வீரகேசரி, புதினம், தினக்குரல், ஈழமுரசு, சுடரொளி, தினகரன், தினத்தந்தி, விடுதலை போன்றவை இணையத்தினூடாகப் பார்க்கப்படக்கூடிய பத்திரிகைகளில். சில. ரி.ரி.என், தமிழ், தீபம், சிகரம், சக்தி தொலைக்காட்சி போன்றவை இணையத்தினூடாக நாம் பார்க்கும் தொலைக்காட்சி சேவைகளில் சில.

# நாம் இதைச் செய்வோமா?

திரு. மு. சின்னராசா

நூலகர் ஒருவரின் ஆதங்கம்------------

ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும் அடிப்படைக் காரணிகளில் கல்வி முக்கியமானது. சிறுவயது முதற் கல்வியில் நாட்டம் கொண்டு படித்து முன்னேறிய ஒரு சமுதாயம் பண்பட்ட சமுதாயமாகத் திகழும் என்பது நம்பிக்கை. தனி மனிதனை அல்லது சமுதாயத்தை முதன்மைப்படுத்தும் சாதனமே கல்வியாகும். இக் கல்விக்கான வளங்களை அளிக்கும் நிறுவனங்களாக நூலகங்கள் திகழ்கின்றன.

நூலகம் என்பது என்ன என்பது தொடர்பாகச் சமூகத்தில் இன்னமும் தெளிவாக உணரப்படாத நிலை காணப்படினும் கூட அதன் தேவை, அது வழங்கும் சேவை என்பன சமூகத்தில் இன்றியமையாத பணியாகப் பரிணாமம் அடைந்துள்ளதை ஓரளவிற்கு அவதானிக்க முடிகின்றது. நூலகங்களைத் தேடி வாசகர் சென்ற காலம் கடந்து வாசகனைத் தேடித் தகவல் வளங்கள் செல்கின்ற நிலையினை எம்போன்ற வளர்முக நாடுகளிலும் காண முடிகின்றது. நூலகம் என்னும் நிறுவன அமைப்பு பத்திரிகைகளையும் நூல்களையும் வெறுமனே பார்ப்பதற்கு மட்டுமல்ல அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் நிறையவே உண்டு என்னும் உணர்வு சமூகத்தின் மத்தியில் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ள து.



நூலகத் துறையில் ஏறக்குறைய 28 வருட அனுபவம் எனக்கு. நான் கண்ட வாசகர்கள் பலர். பெரும்பாலானோர் பல்கலைக்கழகக் கல்வி முடித்தும் கூட நூலைத் தேடி வருவதைச் சலிப்புள்ள விடயமாகத்தான் கருதுகின்றனர். நூலை எங்கு, எப்படித் தேடுவது என்று தெரியாமல் அல்லாடுகின்றனர். இப்படியானவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் என்றால் வாசகர் பக்கத்தில் எங்கோ பிழை இருக்கின்றது என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் பெரும்பாலானோருக்கு இதுவே நடைமுறை என்றால் தவறு வேறெங்கோ இருக்கின்றது என முடிவெடுத்து அதற்கான காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் மனம் இறங்கியது.

சமூக மேம்பாட்டுக்கு அறிவு அவசியமென்றால், இந்த அறிவைத் தருபவை நூல்கள் என்பது சரியென்றால் இவர்கள் இப்படிச் சலிப்படையக் காரணமென்ன என்ற தேடல் எனக்குள் பிறந்தது. எல்லாவற்றுக்கும் அடிப்படை வாசிப்புப் பழக்கமே என்பதை உணர்ந்த போது ,வாசிப்புப் பழக்கம் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டப்பட வேண்டும் என்பது புரிந்தபோது எல்லாவற்றையும் விட

சிறுவர் நூலகத்தின் அளப்பரிய பங்கு புரியத் தொடங்கியது.

**வாசிப்புப் பழக்கத்தின் அவசியம் தொடர்பான உணர்வுகள் இவை – – –**

வாசிப்புப் பழக்கம் என்பது பிறவிப் பண்பு அன்று. அது தொடரும் பழக்கத்தினால் பெறும் பண்பாகும். ஆகவே தான் சிறுவயதிலிருந்தே வாசிக்க ஆரம்பித்தல் சிறப்புடையது. அறிவுத் தேடலின் ஆரம்ப காலமாகச் சிறுவர்களின் வாசிப்புப் பழக்கம் காணப்படுகின்றது ".இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற ஆன்றோரின் முதுமொழிக் கிணங்கச் சிறுபராயத்தில் இருந்தே அவர்களின் இரசனைக்கு ஏற்ற கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களை ஆரோக்கியமான சமூக அங்கத்தவராக மாற்ற வேண்டியது சிறுவர் நூலகங்களின் தலையாய கடமையாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெற்றோர்கள் பிள்ளைகளை நூலகப் பாவனை தொடர்பாக நெறிப்படுத்துவது போன்று வளர்முக நாடுகளில் நெறிப்படுத்தல் காணப்படுவதில்லை. குழந்தைப்பருவம் முதற் கொண்டு குமரப்பருவம் வரையான சிறுவர்களின் அறிவுத் தேடலுக்கான நுழைவாயில்களாக சிறுவர் நூலகங்கள் விளங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**பெற்றொரின் பங்களிப்புத் தொடர்பான புரிதல்கள் இவை—**

பெற்றோர்கள் தாம் நூலகங்களுக்குச் செல்லும் போது தமது சிறார்களையும் அழைத்துச் சென்று அவர்கள் விரும்பும் நூல்களை வாசிக்கும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும். அறிவுக்கான ஆரம்ப உந்துதல் எதுவும் இல்லாத சிறுவர்களை வாசிப்புப் பழக்கத்துடன் இணைப்பதானது நிலாவைக் காட்டி உணவு ஊட்டுதலையும் விடக் கடினமானது. இதைவிடவும் கிராமிய வாழ்க்கை வட்டத்திலே அடைபட்டு வாழும் மக்களுக்கு அறிவுத் தேடல் மிகக் குறைவு அல்லது இல்லை. அதுபோல் நூலகச் சேவையும் மிக அரிதாகவே இருந்துள்ளது. ஆனால் இந்தக் கருத்துநிலையிலிருந்து மாறவேண்டிய நிர்ப்பந்தத்தை இன்றைய கல்வியமைப்புக் கொண்டு வந்திருப்பது மகிழ்வுக்குரிய தொன்றாகும். வாசிப்புப் பழக்கத்தைச் சிறார்கள் மட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய தேவைக்கு இன்றைய கல்வித்திட்டமும் அவர்களைத் துரத்தி நிற்பதைப் பார்க்க முடிகின்றது. சுமக்க முடியாத சுமைகளுடன் கல்வி நிறுவனங்களுக்குச் செல்பவர்கள் கற்றலின் மேலதிக தேவைக்காகச் சலிப்புடனாவது நூலகங்களை நாடுவது தவிர்க்க முடியாததாக மாறியிருக்கின்றது.

**சிறுவர் நூலகங்கள் பற்றிய கனவுகள் இவை – – –**

பாலர் கல்வி முதற் கொண்டு பாடசாலைக் கல்வி வரை சிறுவர்கள் தமது அறிவினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு வாசிப்புப் பழக்கம் இன்றியமையாததாக விளங்குகின்றது. எனவே சிறுவர்களது வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டக் கூடிய வகையில் சிறுவர் நூலகங்கள் பணி புரிய வேண்டியது தலையாய கடமையாகும் தகவல் வளங்களைத் தேடிவரும் பாவனையாளருக்குத் தேவையான தகவல்களை வழங்கும் பணியில் தேசிய மட்டத்திலிருந்து கிராமம் வரை நூலகங்கள் எம்மிடையே உண்டு. இவற்றில் சிறுவர் நூலகங்களுக்கு இருக்கும் பொறுப்பு ஏனையவற்றையும் விட அதிகமானது.

**சிறுவரை நூலகம் நோக்கி இழுப்பதற்கான யுக்திகள் இவை—**

- கவர்ந்திழுக்கும் கட்டடம்
- கவரக் கூடிய சித்திரங்கள்
- அச்சமூட்டாத, அன்பாக, பாரபட்சமற்ற முறையில் சிறுவர்களை அணுகும் நூலகப் பணியாளர்கள்
- நூலகத்தை அதிகம் பயன்படுத்தும் சிறுவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டங்கள்
- விரும்பிய இடத்தில், விரும்பிய நிலையில், விரும்பியபடி படிக்கக்கூடிய சூழல்
- சிறுவர்களைக் கவரக்கூடிய படத் துணுக்குகள், காட்சி வில்லைகள், கணினி விளையாட்டுக்கள் போன்ற கட்புல ஊடகங்கள்
- ஆரம்ப வகுப்பு வரை இலவசமாக நூலகத்தைப் பயன்படுத்த அனுமதி அல்லது வசதியற்ற சூழலில் உள்ள பிள்ளைகளுக்கென இலவச அங்கத்துவம்
- சிறுவர் வாசிப்பு வட்டங்களின் உருவாக்கம்

**சிறுவருக்குப் பொருத்தமான நூல்கள் பற்றிய தேடல்கள் இவை—**

இவர்களுக்கு உதவுபவை பார்த்துக் கற்றலுக்கான நூல்களே. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பதனை உணர்ந்து நல்ல தலைவர்களை உருவாக்கக்கூடிய வகையில் சிறுவர் நூல்களைக் கொள்வனவு செய்தல் அவசியமாகும்.. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறுவர் கலைக்களஞ்சியங்கள், தேசப்படங்கள், அகராதிகள், துணுக்குகள் போன்றவற்றைச் சிறுவர்கள் தாமே தேடியெடுத்துப் படிக்கும் வகையில் அவர்களுக்குத் தூண்டலை ஏற்படுத்த வேண்டியது நூலகர் கடமையாகும். சிறுவர்க்குரிய நூல்கள் பெரிய எழுத்துக்களைக் கொண்டவையாகவும் சிறுவர்களைக் கவரக் கூடிய ஓவியங்கள் படங்கள் என்பவற்றை உள்ளடக்கியவை யாகவும் இருத்தல் சிறந்தது. அறிவுசார் நீதிக் கதைகள், விஞ்ஞான தொழினுட்ப விடயங்களை உள்ளடக்கிய வெளியீடுகள், பெரியார்களுடைய வாழ்க்கை வரலாறுகள், சித்திரங்கள், விளையாட்டுத் துறை சார்ந்த நூல்கள் போன்றவை மிகவும் முக்கியமானவை. அடிக்கடி அவர்கள் விரித்துப் படிக்கும் போது நூலின் கட்டு விட்டுப்போகும் வாய்ப்பு அதிகம் என்பதால் தடித்த அட்டை போட்டுக் கட்டப்பட்ட நூல்களாகப் பார்த்து வாங்குதல் அவசியமாகும். நூலகர்கள் மட்டுமன்றி நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள் அனைவரிடமும் சிறுவர் நூல்களின் அமைப்புத் தொடர்பாகத் தெளிவான பார்வை இருத்தல் அவசியமாகும். இத்தகைய நூல்கள் பொதுவாக விலை கூடியவை என்பதனால் எமது பிரதேசத்தில் உருவாக்கப்படும் நூல்களில் பெரும்பாலானவை இத்தகைய அம்சங்களைக் கவனத்தில் கொள்வதில்லை.

இது கணினி யுகம். அபிவிருத்தியடைந்த நாடுகளில் வீட்டு விளையாட்டுப் பொருளாகக் காணப்படும் கணினி எம்போன்ற வளர்முக நாடுகளில் அதனைப் பார்ப்பதற்குக் கூட சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. கணினியும் அதனுடன் தொடர்புடைய விளையாட்டுக்களும் பொழுதுபோக்கு அம்சங்களும் வசதி படைத்த சிறுவர்களுக்கு வீட்டிலோ, கணினிப் படிப்பு நிலையங்களிலோ கிடைக்கக் கூடியவையாக இருக்கின்றன. இன்று ஓரளவுக்கு விரிவாக்கம் இடம் பெறுகின்ற

போதிலும் அது சகல மட்டத்திலும் குறிப்பாகக் கிராமிய மட்டத்தில் விரிவாக்கம் செய்யப்படுவது மிகவும் குறைவாகவே காணப்படுவது குறிப்பிட்டுக் காட்டக் கூடிய ஒரு அம்சமாகும். சமூகத்தின் அனைத்து மட்டச் சிறுவர்களையும் போய்ச்சேரும் வாய்ப்புச் சிறுவர் நூலகங்களில் ஏற்படுத்தப்படும் கணினி வசதிகளாலேயே சாத்தியப்படும்.

**நூலகர்களின் நடத்தை தொடர்பான ஆதங்கங்கள் இவை – –**

தொழிலும் எனது தனிப்பட்ட ஆர்வமும் இணைந்து சனசமூக நிலையம் தொடக்கம் பல்கலைக்கழக நூலகம் வரை நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நூலகங்களுக்குள் நுழைந்து நூலகப் பணி தொடர்பாக அறியும் வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

நூல்களைத் துடைத்து அடுக்கிப் "பளிச"சென வைத்திருக்கும் நூலகங்கள் எம்மிடையே சர்வசாதாரணமாக எங்கும் இருப்பவை. இவ்வாறு இருப்பது சாதாரண ஒருவரைப் பொறுத்து , அழகும் நேர்த்தியும் மிக்க சிறந்த நூலகம் என்ற பார்வையை ஏற்படுத்தி அதற்குப் பொறுப்பான நூலகருக்கு ஒரு மானசீக வாழ்த்தைத் தெரிவிக்கக் கூடும். நூலுக்கும் வாழ்வு உண்டு. அது வாழ வேண்டும். வாழ்வில் ஏற்றம், இறக்கம் வீழ்தல், நிமிர்தல் போன்று நூலுக்கும் உண்டு. பொருத்தமற்றவர் கரங்களில் அகப்பட்டுச் சின்னா பின்னப்படுவதும், சிலசமயங்களில் பொருத்தமானவர் கரங்களுக்குச் செல்லும் போது அங்கேயே வாழ்ந்து அனுபவித்து இறந்துவிட மாட்டோமா என்று ஏங்குவதும் நூலுக்கும் இருக்கும். துடைத்து அடுக்கிய அலங்காரப் பொருளாக இருப்பதற்கு உயிர்ப்புள்ள நூலெதுவுமே சம்மதிக்காது.

"சில பாடசாலை நூலகங்களில் நீண்ட காலம் கை படாமல், யாரும் சீண்டாமல் அநாதரவாகக் கிடந்த நூல்கள் அனைத்தும் நூலக வாரம் கொண்டாடப்பட்டபோது புளிக்காப்புச் சார்த்திய குத்துவிளக்குகள் போன்று பளிச்செனத் துடைத்து அடுக்கப்பட்டன. அண்மையில் போய்ப் பார்த்தபோது. மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி நிலை தான்.

"சின்னப் பிள்ளைகள் புத்தகம் பார்க்க முடியாது. பெரிய அக்கா அண்ணாமார் தான் பார்க்கலாம். இப்போது உங்களுக்குப் பாடவேளை இல்லை என்றால் வெளியே போய் விளையாடுங்கோ! அல்லது என்னவாவது செய்யுங்கோ!" இது நூலகவியலில் அடிப்படைப் பட்டம் பெற்ற பின்னரும் கூட நூலகர் ஒருவரின் உதட்டிலிருந்து வெளி வந்த பொன்மொழி.

நூலகப் பணி முக்கியமானது. நாம் பெற்றுக் கொள்ளும் ஊதியத்தை விடவும் உயர்வான பணி இது. பசிக்கு உணவு வழங்குவதை விடவும் அறிவுப் பசிக்கு வழிகாட்டுவது பெரிது என்பது கிராமியச் சூழலின் வசதியீனங்களுக்கு மத்தியில் அறிவுத் தேடலுக்கு கஷ்டப்பட்ட எனது அனுபவத்தின் வெளிப்பாடு . எனது கிராமத்தில் ஒருசில சனசமூக நிலையங்களே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நூலகசேவையை ஆற்றுகின்றன. கிட்டவாக உள்ள பிரதேசசபை நூலகத்துக்குச் செல்வதாயின் மூன்று மைல் தூரம் நடக்க வேண்டும். நடந்து களைத்துப் போய்ச் சேரும்போது அறிவுப்பசி மெல்ல அடங்கிவிடும்..மனது வாசிக்க மறுத்துவிடும். இந்த நேரம் பார்த்து "நீங்கள் கேட்கும் புத்தகம் இப்போது எடுக்க முடியாது. இப் பகுதிக்குரிய ஆள் வரவில்லை" என்றால் எப்படி இருக்கும்?

"புத்தகத்தை மட்டும் தொடாதீர்கள். குழப்பினால் அடுக்க முடியாது. எதுவென்றாலும் சொல்லுங்கள். நான் எழுதித் தருகின்றேன்" என விரட்டும் புண்ணியவான்களும் புண்ணியவாட்டிகளும் கூட இப் புனிதப் பணியில் இருக்கத் தான் செய்கின்றார்கள்.

சிறுவர் நூலகங்கள் தொடர்பாகக் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் நூல் தெரிவு. இது ஒரு அறிவுசார் செயற்பாடு. வியாபார நோக்குடன் நூல் சந்தையில் குவிந்திருக்கும் எண்ணற்ற தரமற்ற நூல்களுக்குள்ளிருந்து தரம் வாய்ந் நூல்களைத் தெரிவு செய்தல் முதலாவது பணியென்றால் அந்தத் தரம் மிக்க நூல்களுக்குள்ளிருந்து எமது பிரதேசம், எமது சமூகச் சூழல், என்பவற்றுக்குப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுப்பது அடுத்த சிரமம் வாய்ந்த பணியாகும். எமக்குப் பொருத்தமான நூல்களைத் தெரிந்தெடுத்த பின்னர் நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சம் எமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் எமக்குப் பொருத்தமானவற்றில் எவ்வளவை வாங்கலாம் என்பது. பணம் கொடுத்து வாங்காமல் அன்பளிப்பு மூலம் வாங்க முடியுமா என்ற வழி வகைகளைக் கண்டறிவது அடுத்த பெரும் பணி. ஆனால் எம்மிடையே நடப்பது? நூலைத் தெரிவு செய்ய எம்மிடையே அறிவு போதாது. அறிவை வளர்த்துக் கொள்ளவும் நாம் விரும்புவது குறைவு. நூலகச் சேவையைச் சேவையாகப் பார்க்காமல் தொழிலாகப் பார்க்கும் தன்மை எம்மிடையே அதிகம். அதிகாரப்போட்டி காரணமாகவோ, எமது அசமந்தப் போக்கு காரணமாகவோ ஆண்டு இறுதி வரை அசையாமல் இருந்து வீட்டு நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பிப் போகக் கூடாது என்ற நல்லெண்ணத்தினாலோ, நிதியைச் செலவழித்தே தீரவேண்டும் என்ற அதிகாரிகளின் கட்டளையினாலோ புத்தகக் கடையில் நுழைந்து கிடைத்தவற்றை யெல்லாம் அள்ளி வரும் நிலையே நமது நடைமுறை.


பூட்டிய நூலகத்தைக்கூட வாசகனின் அவசரம் புரிந்து மீண்டும் திறந்து எடுத்துக் கொடுத்த சேவையாளர்களையும் தரிசித்திருக்கின்றேன். ஹர்த்தால் என்று தெரியாமல் நீண்ட தூரம் பயணித்து வரும் வாசகனை இன்முகத்துடன் கூட்டிச் சென்று புத்தகம் கொடுத்தவர்களை என் தொழிலுக்குப் பெருமை சேர்ப்பவர்களாக எண்ணி மானசீகமாக அவர்களை இன்றும் வணங்கி வருகின்றேன். ஆனால் ஓரிரு எடுத்துக் காட்டுகள் மட்டும் சமூகத்தை முன்னேற்றிவிட முடியாது. கூட்டு முயற்சியில் சாதிக்கப்பட வேண்டியவற்றில் அறிவுத் தேடலுக்கு உதவும் பணியும் உள்ளடங்கியுள்ளது என்பதை நாம் உணர்ந்தோமானால் எமது தொழிலுக்கு நாம் பெருமை சேர்த்தவர்களாவோம்.

# இணுவையூரில் ஓர் அறிவாலயம்

'சிவநெறிச்செம்மல்'
வை.அநவரதவிநாயக மூர்த்தி

செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் இணுவையூரில் கந்தசுவாமி கோயில் முன்றிலில் "இணுவில் அறிவாலயம்" என்ற அறிவியல் கூடம் அமைக்கப்பட்டு வருவது அறிந்து, அந்த மண்ணிலே பிறந்து, வளர்ந்த அடியேனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் தொன்று தொட்டு வளர்ந்து வரும் இந்தப்புண்ணிய பூமியில் அறிவாலயம் அமைவது மிகவும் பொருத்தமானதே. பொது நூலகம், அரும் பொருட் காட்சியகம் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இவ்வறிவாலயம் இணுவைத் திருவூரில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல, ஏனையோருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைய வேண்டும் என்பதே அடியேனது பிரார்த்தனை. இந்த அரும்பெரும் நற்பணியில் தம்மை அர்ப்பணித்துள்ள இணுவில் திருவூர் ஒன்றிய ஆட்சிக்குழுவினருக்கு அடியேனது மனப்பூர்வமான நல் வாழ்த்துக்கள்.



இந்தச் சந்தர்ப்பத்தில், அறிவாலயத்தில் பிரதானமாக அமையவிருக்கும் நூலகத்தைப் பற்றிப் பொதுவான சில கருத்துக்களை அன்பான வாசர்களுடன் பகிர்ந்து கொள்ளப் பெரிதும் விரும்புகின்றேன். ஆதியில் மக்களிடையே கருத்துப்பரிமாற்றங்கள் உரையாடல் மூலம் நடைபெற்று வந்தன. காலப் போக்கில் தத்தம் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்துவதற்கு இலை முதலிய கருவிகளைப் பயன்படுத்தித் தாம் எழுத விரும்பியதை எழுதியும், ஓவியமாகத் தீட்டியும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தி வந்தார்கள். அதன் பின்னரே, ஏடும் எழுத்தாணியும் நூல்கள் எழுதுவதற்கும் தகவல் பரிமாற்றங்களுக்குமெனப் பாவனையில் வந்தன.

*'மாலை வடி வேலவர்க்கு*
*வரிசையாய் நான் எழுதும்*
*ஓலை கிறுக்காச்சுதடி — கிளியே என்*
*உள்ளமும் கிறுக்காச்சுதே'*

என்று முருகன் கிளிக்கண்ணி எவ்வளவு அழகாக அந்தக் காலத்தில் காதற் கடிதம் ஓலையில் எழுதப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. எழுத்தாணி முனையில் எத்தனையோ காவியங்களும், புராணங்களும் உருப்பெற்றிருக்கின்றன என்பதை நினைக்கும்போது எமக்கே ஆச்சரியமாக இருக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக அச்சிடும் கலை தோன்றியதும் ஏடும் எழுத்தாணியும் மறைந்து அச்சகங்களில் நூல் பற்பல உருவாகின. சில நூல்கள் படிப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கும், வேறு சில நூல்கள் அறிவூட்டுவனவாக விளங்கும், மற்றும் சில நூல்கள் எங்களை வளம்படுத்தி வாழ்வின் உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். இத்தகைய நூல்களே நூல் நிலையத்தை அலங்கரிக்க வேண்டும்.

தற்காலத்தில் நமது அறிவு வளர்ச்சிக்காக, பல தரப்பட்ட சாதனங்கள் இருக்கின்றன. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், திரைப்படங்கள், போன்றவை வாயிலாக நாம் பல கருத்துக்களைத் தெரிந்து கொள்கின்றோம். ஆனால் இச்சாதனங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், நூல்கள் மூலம் அறிவை வளர்த்துக் கொள்வதே சாலச் சிறந்தது. நூல்களை எமக்கு உற்ற நண்பனாகக் கருதித் தோழமை உணர்ச்சியுடன் பழகி வருவோமேயானால் நாம் தனிமையில் இருக்கின்றோமே என்று கவலைப்படத் தேவையில்லை. நாம் வாசிக்கும் சிறந்த நூல்கள் நமது மனதைப் பண்படுத்துவதோடு எமது வாழ்வின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக்கேற்ப வாசிப்புப் பழக்கத்தை இளமைப் பருவத்திலிருந்தே நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்த நல்ல பழக்கம் வாழ் நாள் முழுவதும் நிலைத்து நிற்கும். "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு. தற்போது, பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, பெற்றோராகிய நாம் பிள்ளைகளின் நலன் கருதி அதற்கேற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களையும் ஊக்கப்படுத்திவிட வேண்டும். கல்வியறிவை வளர்ப்பதற்குப் பல தரப்பட்ட நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். இதற்குரிய முதன்மை பெற்ற இடமாக விளங்குவது நூலகமேயாகும். எமது இளைய தலைமுறையினர், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டும் வாசிப்பதோடு நின்று விடாமல் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்களை நன்றாக வாசித்து அறிவைப் பெருக்க வேண்டும். வளர்ந்து வரும் இச்சமுதாயத்தினருக்கு நூலகத்தின் பங்களிப்பு அவசியம் வேண்டற்பாலது.

நூலகம் பல செயற்பாடுகளைக் கொண்டதாக அமைய வேண்டும். வாசிப்புப் பகுதி, நூல் இரவல் கொடுக்கும் பகுதி, இலக்கியம், கலை கலாசாரப் பகுதிகள், கணினித்துறை, விளையாட்டுத்துறை போன்ற பல பிரிவுகள் உள்ளடக்கப்பட்டதாக இருக்க வேண்டும். சிறுவர்களுக்குப் பிரத்தியேகமான ஒரு நூலகம் இருப்பது சிறப்புடையது. அவ்வாறு சிறுவர்களுக்குத் தனி நூலகத்தை

உருவாக்க முடியாவிட்டால் நூலகத்தின் ஒரு பகுதியை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். சிறுவர்களின் தரத்திற்கேற்ப நூல்கள், சஞ்சிகைகள், பொழுது போக்கு அம்சங்கள் கொண்ட சிறுவர் இலக்கியங்கள் இந்தப்பிரிவில் இடம் பெறுவது விரும்பத்தக்கது. இத்தகைய நூல்கள் சிறுவர்களின் உள்ளங்களைப் பக்குவப்படுத்துவதோடு எதிர்காலத்தில் அவர்களின் சிறந்த நல்வாழ்வுக்கு வழி அமைத்துக் கொடுக்கும்.

வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைவாணியின் திருக்கரங்கள் ஒன்றில் ஏடு இருப்பதைக் காணலாம். மற்றக்கரத்தில் செபமாலை இருக்கின்றது. மற்ற இரண்டு கரங்களும் வீணையை மீட்டிக் கொண்டேயிருக்கின்றன. இதன் தத்துவத்தை ஆழ்ந்து சிந்திப்போமானால் ஏடு பயனுள்ள கல்வியைக் கற்க வேண்டும் என்பதையும் செபமாலை கற்றவைகளைத் தியானம் செய்ய வேண்டும் என்பதையும், வீணையை மீட்டல் கற்றவற்றைத் தினந்தோறும் அப்பியாசம் செய்து வரவேண்டும் என்பதையும் எமக்கு அறிவுறுத்திக் கொண்டிருப்பது புலனாகும். சகல கலைகளுக்கும் தெய்வமாக விளங்கும் கலைமகளே தமது திருக்கரத்தில் ஏடு ஏந்திய வண்ணம் படித்துக் கொண்டேயிருப்பதனால் நாங்களும் அந்த அறிவுத் தெய்வத்தைப் பின்பற்றி எமது அறிவை அபிவிருத்தி செய்வதற்கு எக்காலமும் படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தவே தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் நீதிச் சுரங்கமாக விளங்கும் தமது ஆத்திசூடியில் "நூல் பலகல்" என்று சுருக்கமாகக் கூறிப்போந்தார்.

மிகச் சிறந்த நூல்களை நாம் படிக்கும் போது நமது மனம் அவை எடுத்துரைக்கும் கருத்துக்களில் ஆழமாகப் பதிந்து விடுகின்றது. அத்துடன் எமது மனம் விரிவடைந்து எதனையும் உண்மை நோக்கத்தோடு காணும் ஆற்றலைப் பெறுகின்றது. சுருங்கக் கூறின் எமது மன நலத்தை உயர்ந்த நூல்கள் பேணி வளர்க்கின்றன. எனவே நாம் இத்தகைய நூல்களை நாட வேண்டிய இடம் நூலகமே ஆகும்.

சோழர் மரபில் வந்த சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி ஈழநாட்டின் வடபகுதியை அரசு புரிந்து வருங்கால் தன் இராசதானியாகத் தலை சிறந்து விளங்கிய நல்லூர் என்னும் சீர் பெறு நகரில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவினான். தென்னிந்தியப் புலவர்களும் அத் தமிழ்ச்சங்கத்தில் பங்குபற்றியதோடு பல நூல்களை ஆக்கித் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தினர். அந்த நூல்கள் யாவும் சிங்கையாரியச் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்ட 'சரஸ்வதி மகாலயம்' என்னும் பெயருடைய நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டன. இந்த நூலகத்தில் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஏட்டுப்பிரதிகள், ஆவணங்கள் மற்றும் இங்கு வெளிவந்த நூல்கள் யாவும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. பரராசசேகரன், செகராசசேகரன் போன்ற தமிழ் மன்னர்கள் தாமே நூலாசிரியர்களாக விளங்கித் தமிழ் மக்களின் பாரம்பரிய மண்ணில் நூலகத்தை நிறுவித் தமிழ் மணம் கமழச் செய்தனர்.

பண்டைய தமிழகத்தில், கோயில் சூழலில் நூலகங்கள் இருந்தமையை — அந்நூல்களை பக்தர்கள் வாசித்துப் பயன் அடைந்தமையை நாம் அறிவோம். சமயச் சடங்குகளை நடாத்திய கோயில்கள் நூல் அறிவை வளர்த்து மக்கள் ஒழுக்கத்தைப் பேணிவந்தன. என்பது சைவசமய

வரலாறாகும். இந்த வகையில் இந்நூலகம் இணுவில் கந்தசுவாமி கோயில் சூழலில் அமைந்துள்ளமை தெய்வ சித்தமே. இந்நூலகம் கோயில் சூழவுள்ள மக்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டி அவர்களின் சிந்தனைகளை நல்லாற்றுப்படுத்தும் நற்பணியில் ஈடுபட எங்கள் குல தெய்வமான கந்தப் பெருமானைச் சிரந்தாழ்த்தி இறைஞ்சுகின்றேன்.

## மரப் பொருட்களைப் பாதுகாப்போம்.

- எப்போதும் மென்மையான பிரஷ் கொண்டு மரப் பொருட்களைச் சுத்தம் செய்யுங்கள்.
- மரம் வெப்பத்தை அரிதில் கடத்தும் என்பதால் இரும்பு அலுமாரிகளை விட அவற்றைச் சேமித்து வைப்பதற்கு மர அலுமாரிகளே சிறந்தவை.
- மரச் சாமான்களுக்கு மிகப் பெரிய எதிரி பூச்சி வகையாகும். இவற்றில் கறையான்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றைக் காப்பதற்கு பேகோன், டிடிரி போன்ற பூச்சி கொல்லிகள் உகந்தவை
- சில வகை வண்டுகள் மரத்தைத் துளைத்துச் செல்லக் கூடியவை. கண்களுக்குப் புலப்படாவண்ணம் மரத்துக்குள்ளேயே வசித்துக் கொண்டு சிறிது சிறிதாக மரத்தை அரித்துப் பொடிப் பொடியாக்கிவிடும் தன்மை இவற்றுக்குண்டு. இதற்கு 1 பங்கு காபன்-டை-சல்பேற்றுடன் 4 பங்கு காபன் டெட்ராகுளோரைட் கலந்த இரசாயனக் கலவையைக் கொண்டு இவற்றை வெற்றிகரமாக ஒழித்துவிடலாம்.
- மரச் சாமான்களைப் பளிச் சென்று புதிதாகத் தோற்றமளிக்கச் செய்யும் பொருட்டு அவற்றுக்கு வருடாவருடம் வண்ணப்பூச்சு அடிக்கலாம். இது பூச்சிகளிலிருந்தும் பாதுகாப்புத் தரும்.
- 45-65% விகித ஈரப்பதனே மரப் பொருட்களுக்கு உகந்ததாகும்.

# வருமுன் காப்போம்

திருமதி மைதிலி விசாகரூபன்



"நூலகத்தில் வேலையென்றால் மிகவும் சுகம். அங்கு வேலை ஏதும் இராது. வீட்டிலேயிருந்து களைத்துப் போய்ப் போனாலும் அங்கு ஓய்வாக இருக்கலாம், தூங்கலாம் !"

இது இன்றும் நூலகத்திலே வேலை செய்பவர்கள் பற்றிய, எமது சமூகத்தின் பொது அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்திலிருந்து சற்று வேறுபட்டிருந்தது எனது அபிப்பிராயம்.

"நூலகத்தில் வேலையென்றால் எனக்குத் தேவையான புத்தகத்தை நானே வைத்திருக்கலாம். அங்கேயே எனது "ரியூற்" வேலை மற்றும் ஏனைய வேலைகளை முடித்துவிடலாம்."

பூரண ஓய்வான வேலையென்பதாக அன்று எனது மனநிலை இருந்தது. என்றாலும் இவ்வபிப்பிராயத்திலும் ஒரு சிறு இடர் இருந்தது. எந்தப் புத்தகத் தட்டில் என்ன இருக்குமென்று தெரியாது. எந்தப் புத்தகத்தை எடுத்தால் தேவையான விடயத்தைப் பெறலாம் என்றும் தெரியாது. குளத்தில் நீந்தி மீன் பிடிப்பது போன்று தேவையானதைத் தேடித் தேடி ஓய்ந்து போகாமல் "ஸ்பொட்" டாகத் தேடித் தேவையானதை எடுத்துவிட்டால் எவ்வளவு நல்லது.--! இவ்வளவு புத்தகக் குவியலுக்குள்ளும் எனக்குத் தேவையானதை எப்படி நிறைவு செய்வது?. என்பது பெரிய யோசனையாகவே இருந்தது.

நூலகம் என்பது புத்தகம் குவிக்கப்பட்ட இடமாக எனக்குத் தென்பட்டதே தவிர பகுப்பாக்கம், பட்டியலாக்கம் என்ற பதப்பிரயோகங்கள் தெரியவே தெரியாது. இந்த மனநிலையுடன் இருந்த நேரத்தில் தான் நூலகவியல் படிப்புப் பற்றிய செய்தி உதயன் பத்திரிகையில் வந்திருந்தது. அந்த மனநிலையும் இந்தச் செய்தியும் என்னை இத் துறைக்குள் இழுத்துவிட்டன. இந்த நூலக அறிவியல் மிக ஆழம்மிக்கது என்பதை அடிப்படைக் கற்கையே மிகத் தெளிவாக உணர்த்தியது. இந்தத் துறையுடன் எனக்கு ஏற்பட்ட அந்த இணைப்புத் தான் இன்றுவரை தொடர்ந்து நிற்கிறது. அன்று இணைந்ததிலிருந்து இன்றுவரை பத்து ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. அதற்குள் எனக்குக் கிடைத்த பல்வேறு சாதகமான சந்தர்ப்பங்கள் என்னை இத் துறையில் ஆழமாகக் கால் பதிக்க வைத்துவிட்டன.

நூலகம் தொடர்பான எனது அன்றைய அபிப்பிராயத்திலும் பார்க்க இன்றைய அபிப்பிராயத்தில் முற்றிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதைப் பிரக்ஞை பூர்வமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடிகிறது. நூலகம் என்பது நூல்களின் இருப்பிடம் .அது புத்தகங்கள் அடுக்கி வைப்பதற்கான ஒரு பிரத்தியேக அமைவிடம் .அந்த வகையில் இது ஒரு சேமிப்புக்குதம் என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டு அது மனித அறிவின் எழுத்துநிலைப்பட்ட சேமிப்பு. அது மனித அறிவின் ஒழுங்கமைப்பு என்ற சீரிய சிந்தனை ஏற்படச் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது வருத்தத்திற்குரியதே.

வருமுன் காப்போம் என்ற கட்டுரைத் தலைப்புக்கும் எனது இந்த அறிமுக உரைக்கும் என்ன சம்பந்தம்?. ஆரம்பத்தில் எனக்கிருந்த சிந்தனையைப் போன்றே பெரும்பாலான வாசகர்களும் கிட்டத்தட்ட நூலகப் பணியில் ஈடுபடும் அனைவரும் இத்தகையதொரு மனப்போக்கிலேயே நூல்களை அணுகுகின்றனர். கையாளுகின்றனர். நூல்களை உயிருள்ள ஜீவனாகப் பார்க்காது சடப் பொருளாக நோக்கும் இந்தச் சிந்தனை தான் நூல்கள் பழுதடைவதற்கான பிரதான காரணமாகும். எம்முன்னே இயங்கும் பெரும்பாலான நூலகங்களில் நூல்களை வாங்கிப் போடும் அளவுக்கு அவற்றைப் பராமரிக்கும் தன்மை மிகக் குறைவு. அல்லது இல்லை என்றே கூற முடியும். நூல்கள் பற்றிய கருத்துநிலையில் ஏற்படும் மாற்றம் அவற்றின் பராமரிப்புத் தொடர்பாகக் கவனம் எடுப்பதற்குத் தானாகவே இட்டுச் செல்லும். அதற்கு எனது அனுபவம் சிறிதளவாவது உதவ வேண்டும்.

நூலகம் ஒரு வளரும் உயிரி என்கிறார் நூலகவியலின் தந்தையான கலாநிதி எஸ். ஆர் இரங்கநாதன். "உயிருள்ளது உயிரி". விறகு ஆலையில் விறகைக் குவித்து வைப்பது போல, அல்லது பார்மசியில் மருந்துகளை அடுக்கி வைப்பது போல அல்லாமல் நூல்களை உயிர்ப்புடன் எண்ணும் மனோபாவம் வேண்டும். உயிருள்ள உடலுக்கு வருத்தம் ஏதும் வந்து விடாமல் பாதுகாத்தால் தான் உடலும் உயிருள்ளதாகும். அல்லது அதனைப் பிணமென்போம். மனித உடம்புக்கு வருத்தம் வராமல் வருமுன் காக்கப் பல வழிகளிலும் முயல்கின்றோம். இந்த வருமுன் காத்தல் தனியே மனித குலத்துக்கு மட்டும் தானா? வேண்டாம் – – ! "சுத்தம் சுகம் தரும்" என்பதில் எம் அனைவருக்கும் நம்பிக்கையுண்டு. சுத்தப்படுத்தல் நூல்களுக்கும் உயிர் தரும் அல்லவா?

வளரும் உயிரியான நூலகத்துக்கும் சுத்தமும் சுகாதார வசதிகளும் மிகவும் அவசியமானவை. நூலகம் ஒன்றை அமைக்கத் திட்டமிடும்போது அதன் காற்றோட்டம், வெளிச்சம், அமைதி, தூய்மை முதலான சுகாதார நலன்களையும், வெப்பம், ஈரப்பதன், மழை முதலான இயற்கை அம்சங்களையும் கருத்தில் கொண்டு நூலகத்தைத் திட்டமிடுவது அடிப்படையான வருமுன் காத்தல் செயற்பாடாகும்.

ஒரு மனித உயிருக்கு எவ்வெவ் வகைகளிலிருந்தெல்லாம் பாதுகாப்பின்மை வருமோ அவ்வகைகளிலெல்லாம் ஆவணங்களுக்கும் பாதுகாப்பின்மை வரும். காலநிலை மாறுதல்கள், நேரடியான வெளிச்சம், தூசி, அழுக்கு, சிற்றுயிர் ஜந்துக்கள், மனித நடத்தைகள் என்பன நூலக ஆவணங்களுக்குப் பாதுகாப்பின்மையையும், கூடவே அவலட்சணத்தையும் ஏற்படுத்துகின்றன. இவற்றால் நூல்கள் அவலட்சணப்படும்போது அவற்றின் உயிர்ப்புக்கு ஊறு ஏற்படுகின்றது. இவற்றிலிருந்து பாதுகாக்க நூலகர்கள் முன்னேற்பாடு செய்தல் அவசியம். நூல்கள் பழுதடைந்து விட்டால் என்ன செய்வது – – –? இருப்பிலிருந்து நீக்கிவிடுவது (நூல்நீக்கம்) தானே! என உடனே நூலகர்கள் முடிவெடுத்தல் தவறு. நூலீட்டலும், நூல் நீக்கமும் நூலகச் செயற்பாடுகளின் இரு கண்கள் எனப்படுகின்றன. அவசரப்பட்டு நூலகத்திலிருந்து நூல்களை நீக்காமல் உயர்ந்த பட்சம் அவற்றைப் பாவனைப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

நூலக ஆவணங்களின் பாதுகாப்பிற்கும், பராமரிப்புக்கும் பல்வேறு வழிமுறைகள், நுட்பங்கள் கொள்கை ரீதியாகக் கூறப்படுகின்றன. நூலகர்கள் அவற்றை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கும் போது நிதி பெரும் பிரச்சினையாகிவிடுகின்றது. எனவே அவர்கள் சும்மா

இருந்து விடுகின்றனர். இதன் காரணமாகவும் ஆவணங்கள் பாதுகாப்பை இழந்துவிடுகின்றன. நூலின் முன் ஒற்றை பின் ஒற்றை கிழிந்தாலே அதனை நூல் இருப்பிலிருந்து நீக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்தது என நினைப்பது நூலகத் துரோகமாகும். கிழிந்த நூல்களை மாவுப்பசை பூசி ஒட்டி வைத்துப் பாதுகாக்க முனைவதும் தவறு. இச் செயல் குளிக்கப் போய்ச் சேறு பூசிய கதை போலாகி விடும்.! எலி, பூச்சிகள், நுண்ணுயிரிகள் முதலானவற்றை நூல்களே கவர்ந்திழுக்கச் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அப்போது என்னதான் செய்வது?

பாதுகாத்தல் என்பது வருமுன் காத்தல் – ஆவணங்கள் சேதமுறா வண்ணம் எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள், வந்த பின் பார்த்தல் – பாதிப்புக் குள்ளானவற்றைச் செப்பனிடுதல் என இருவகைப்படுகின்றது. வருமுன் காத்தல் நடவடிக்கை தொடர்பாக இத்துறை சார்ந்த ஆவணங்கள் கூறும் வழிமுறைகளில் இலகுவானதும், சிக்கனமானதுமான வழி முறைகளில் சில.

- நூல் அலுமாரிகளைச் சுவர்களிலிருந்து கணிசமானஅளவு இடைவெளியில் தள்ளி வைத்தோ அல்லது சுவர் இல்லாத இடங்களில் வைத்தோ கறையான்களிலிருந்து பாதுகாக்கலாம்.
- மண்ணிலிருந்து கட்டடத்துக்குள் நுழையக்கூடிய துவாரங்கள், வெடிப்புக்கள், பிளவுகளைக் கூடியவரை திருத்துவதன் மூலம் கறையான்களிலிருந்து பாதுகாக்கலாம்.
- நூலகக் கட்டடத்திற்கு அத்திவாரம் போடும்பொழுது மரவேர்கள், கிளைகள் போன்றவற்றை முற்றாக அகற்றுவதுடன் கறையான் புற்றுக்களையும் கூடுகளையும் பூச்சிகொல்லி மருந்துகளைப் பாவிப்பதனூடாக முற்றாகத் துப்புரவு செய்வதன் மூலம் கறையான் தடுப்பை மேற்கொள்ளலாம்.
- கொங்கிறீற் தளம் சரியான முறையில் போடப்படின் கறையான்கள் நுழைவது சாத்தியமன்று. எனினும் சுவர்க்கரையோரங்களிலிருந்து அவை நுழையக்கூடும். இவ்விடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்தலாம்.
- கறையான் புற்றின் மத்தியில் துளையிட்டு அதற்குள் 30% செறிவுள்ள ஆசேனிக் தூளைப் (Arsenic trioxide) போட்டுப் புற்றை அடைத்து விடுவதன் மூலமும் கறையானை அழிக்கலாம்.
- கட்டடத்தின் மரங்களுக்கிடையிலான பகுதிகளில் உறையும் கறையான்களை அகற்றத் தார் பூசலாம். இந்தியாவில் தேவதாரு மரத்தில் செய்யப்பட்ட தளபாடங்கள் கறையான் எதிர்ப்புத்தன்மையுள்ளவையாக இனங்காணப்பட்டுள்ளன.
- பூச்சி உருண்டைகள், கர்ப்பூரங்கள் வாசனைத் திரவியங்கள் அடங்கிய பொட்டலங்களை இறாக்கைகளில் வைப்பதன் மூலம் கரப்பான்கள் கறையான்கள் போன்ற பேருயிரிகளைத் தடுக்கலாம்.
- பேகோன் எனும் கிருமிநாசினியைப் பயன்படுத்தியும் கரப்பான்களை அழிக்கலாம். ஆனால் இது கையினால் தொடுதலோ சுவாசித்தலோ ஆபத்தானதாகையால் இதனை மிகவும் கவனமாகக் கையாளுதல் அவசியம்.

- அறைகளில் உலர்தன்மையைப் பேணுவதன் மூலம் ஈரலிப்பைத் தடுக்கலாம். போதிய காற்றோட்ட வசதிகள் வழங்கப்படுதல் அவசியம்.
- ஒளி மட்டம் எவ்வளவு குறைவாகப் பேணப்பட முடியுமோ அவ்வளவுக்கு நல்லது. சூரிய ஒளியின் நேரடித் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் யன்னல்களுக்குத் திரையிடலாம்.
- உபகரண வசதிகள் அற்ற சிறிய நூலகங்கள் நேரடி ஒளியிலிருந்து தவிர்த்தல், அதி குறைந்த ஒளி மட்டத்தைப் பேணுதல், ஒளித்தெறிப்பு, புற ஊதா மட்டம் என்பவற்றைக் குறைத்தல் போன்ற இலகுவான வழிமுறைகளைக் கையாளலாம்.
- அட்டைப்பெட்டிகள் பேழைகள் என்பவற்றில் பெறுமதிமிக்க சாதனங்களை வைத்துப் பாதுகாப்பதன் மூலம் மாசடைந்த காற்றிலிருந்து பாதுகாக்க முடியும்.
- தூசியிலிருந்து பாதுகாக்க நாளாந்த சுத்தம் மிகச் சிறந்த வழிமுறையாகும். குளிரூட்டல் முறையும் பயனுள்ளது.
- சோடா, சவர்க்காரம் போன்றவற்றின் மூலம் அழுக்கை அகற்றலாம்.
- பாவனையாளர் கல்வித் திட்டங்கள் மூலம் நூல்களைப் பயன்படுத்தும் வாசகர், நூல்களைக் கையாளும் வாசகர் போன்றோர் நூல்களுக்கு இழைக்கக்கூடிய பாதிப்புகளை இல்லாமல் செய்யலாம்.
- புதிய நூல்களை உடனுக்குடன் நூலகத்துக்கு ஏற்ற வகையில் மீள கட்டுவதன் மூலமும் அதிக பாவனை காரணமாக நூல்கள் கிழிவதைத் தடுக்கலாம்.

நூல்களின் பாதுகாப்பு என்பது நூலக வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே பயன்பட்டு வரும் சொல்லாயினும் பாதுகாப்பு என்னும் கருத்துநிலையில் அன்றும் இன்றும் கணிசமான மாற்றங்கள் உண்டு. அதாவது அன்றைய பாதுகாப்பு நூல்களை வாசகரின் பயன்பாட்டுக்கு அனுமதிக்காத பாதுகாப்பு. இன்றைய பாதுகாப்பானது நூல்கள் அனைத்தும் பாவனைக்கே என்ற எண்ணத்தினடிப்படையிலான பாதுகாப்பாகும்.


இன்று ஆவணப்பாதுகாப்பில் பல்வேறு தொழினுட்ப முறைகள் வளர்ந்து வருகின்றன. எனினும் ஆவணப்பாதுகாப்பில் ஈடுபடும் நூலகர் ஆவணத்தின் தன்மை, பாதிக்கும் காரணிகள், கட்டுப்படுத்தும் முறை, செப்பனிடும் முறை, பக்க விளைவுகள் போன்றவற்றைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

ஆவணப்பாதுகாப்புத் தொடர்பாக எத்தனையோ வழிமுறைகளைப் பற்றிச் சிந்தித்தாலும், பக்க விளைவு மற்றும் செலவு இன்றி இலகுவாக மேற்கொள்ளக்கூடிய ஒரு இலகுவான நடைமுறை உண்டு. அதாவது நூல்கள் கிழிந்து போகாமலும், அதே வேளை தூசிபடாமலும் பாதுகாத்தலே அது. தூசி, அழுக்கு என்பவற்றை நாளாந்தம் கருத்திலெடுத்துத் துப்புரவு செய்தல். இதைச் செய்வதன் மூலம் ஊறு வருமுன் காக்கலாம். சுருங்கக் கூறின் நூலகத்தில் சுத்தம் பேணினால் நூல்களின் உயிர்ப்புக்கு உத்தரவாதம் வழங்கலாம்.

# நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்





நல்ல நல்ல நூலகங்கள் நம்மறிவு வளர்த்துவிடும்
கல் கல் எனக் கூறி நம் கவனம் ஈர்த்து விடும்
நன்னூல் பல கொண்டு நாம் படிக்கத் தூண்டி விடும்
பாடப் பரப்பினிலே பதித்த எம் மனத்தை – வாழ்க்கை
ஓடத்தின் துடுப்புகளாய்ப் பீடத்தில் ஏற்றி வைக்கும்
நல்ல நல்ல நூலகம் தான் நல்லறிவு நிலையங்கள்!



இனிக்கும் கதைகளும் இனிய நற் கவிதைகளும் – கண்
பனிக்கும் வரலாறும் மற்றும் பொது விடயங்களும்,
குன்றின் மேற் குத்துவிளக்காய், வாழ்வில் முன்னேறக்
குவலயத்துக் கொளி கொடுக்கும் மனிதராய் நாம் மாற,
அரும் புதையல் அறிவை அற்புதமாய் வழங்கும்
நல் அறிவுக் களஞ்சியமே நாம் படிக்கும் நூலகங்கள்!

அறிவுக் கடலுக்குள் அழகுச் சிப்பி பொறுக்கும்
சிறுவன் நான் !
நூலகத்தால் பெற்ற நற் பயன்கள் கூறுகின்றேன்
பொது அறிவை நான் வளர்த்தேன் பொது அறிவுப் புத்தகத்தால்!
பெரியோரின் சுயசரிதை பெற்று நான் வாசித்தே
கற்றேன் பல விடயங்கள் கரை காண வாழ்க்கையிலே!
சோவியத்தின் தொழிலாளர், போராட்டம், வரலாறு,
வீரனவன் சுயசரிதை படித்தேன் ! ருசித்தேன் நான்!
நாளிதழ்கள், சஞ்சிகைகள் ,நானிலம் புகழ் நாவல்கள்,
பொழுதைப் போக்கிடும் புதிய பல புத்தகங்கள்,
வாய் விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைப் புத்தகங்கள்,
சிந்திக்க வைத்திடும் சீரிய புத்தகங்கள்,
பகை வென்ற அரசர் கதை, குகை வாழ் மனிதர் கதை,
கலைகளின் களஞ்சியங்கள் கண்டேன் நான் நூலகத்தில்!
கற்றதால் அறிந்தேன் பல, பெற்றேன் நான் பெருஞ் செல்வம்.!






நூலகங்கள் சென்றதால் நுண்ணறிவு நான் பெற்றேன்!
பாடசாலை பொது இடங்கள் , பல இடத்தில் நூலகங்கள்!
வற்றாச் சுனையூற்றில் சற்றே சில குறைகள்!
குறைகள் இருந்தால் தான் நிறைகள் உண்டாகும்!
சிறைக்குள் இருந்தால் தான் சுதந்திரத்தின் தரம் தெரியும்!.
வாய் விட்டுச் சொன்னால் தான் தவறுகள் திருந்திடலாம்!



பாடசாலை எமதில்,
ஒன்றுக்கு இரண்டாய் உண்டு இரு நூலகங்கள்.
ஒன்று சிறுவர்க்கு மற்றையது வளர்ந்தோர்க்கு.
சிந்தனைக்காய் இருந்த சிறுவர் நம் நூலகம்
சிதைந்து போய் இன்று சீரழிந்து கிடக்கிறது.
எமக்குப் பின் வந்த சிறிய எம் சோதரர்கள்
புத்தகம் படிக்கவென எங்குமே செல்வதில்லை.


இப்போ நாம் படிப்பது வளர்ந்தோர்க்கானதில்.
சிந்தனையை விரிவாக்கும் கற்பனை பல சுமந்து
சென்றோம் நாம் அங்கு – வரவேற்க யாருமில்லை!
இரவல் வாங்க ஒரு அட்டை கிடைத்தது.!
இன்பமாய் தெரிவு செய்ய அனுமதியும் கிடைத்தது!
இருந்தும் என்ன?
நூலகத்திற்கெனத் தனியோர் பாடமில்லை.
நடக்காத பாடநேரம் நடந்திடுவோம் அதை நோக்கி!
வளர்ந்தோர்க்கானதில் போதாது இடவசதி!
இரு வகுப்புக்கதிகமாய் இருக்க முடியாது அவ் விடத்தில்
சிறியதன் நூலகர் பெரியதில் தூங்குகின்றார்!
பெரியதன் நூலகர் தம் கடமைதனைப் புரிகின்றார்!
எனினும் அவர் சில தவறுகள் புரிகின்றார்!
சிலசில வேளைகளில் நூலகக் கதவுகள்
முன்னறிவித்தல் இன்றி மூடியிருப்பதும்,
இடவசதியின்மையால் வேறு நேரம் வருமாறு
விதிமுறை மீறி வெளியனுப்பி வைப்பதுவும்,
வேடிக்கை போன்று வாடிக்கையாயின.
நூதனமான சம்பவம் ஒன்றினால்





நூலக ஆர்வம் குறைந்ததும் மெய் தான்!
புத்தகம் ஒன்று இடமாற்றி வைத்ததால்
மொத்த வகுப்பையே வராமல் தடுப்பேனென
சித்தங் கலங்க ஒரு முறை மிரட்டி விட்டார் நூலகர்
நூலகத்தை நாடும் எம் மனக் கதவும் கூட,
நாளாக நாளாக இறுக மூடிக் கொண்டனவே!
வாசிக்கும் விருப்பம் மட்டும் ஊற்றாகிப் பாய்கிறதே!.

ஊரிலுள்ள நூலகத்தில் ஊக்கமுடன் போவதற்கு
உண்டு பல பிரச்சினைகள்!
இரவல் வாங்கும் அட்டை பெறும்
நிபந்தனைகள் குறைய வேண்டும்!
கிராம சேவகர், அதிபர், மற்றும் சில பெரியோர்
கையெழுத்துப் பெறும் கட்டுப்பாடு தளர வேண்டும்!.
கட்டணத்தைக் குறைக்க வேண்டும் !
மாணவரின் கற்றலுக்கு உதவ வேண்டும்!



குறைகள் இல்லா இடங்களில்லை!
குறைகள் இல்லையேல் நிறைவுமில்லை!
குற்றம் கூறுவதென் வேலையும் இல்லை!
சுற்றம் அறியச் செய்தல் தவறுமில்லை!



சிறப்புகள் பலவுண்டு, குறைகளும் சிலவுண்டு!
சிலகாலம் செல்வதற்குள் திருத்தப்படுமாயின்
நிச்சயம் சீராகும்! குறைகள் நிறைவாகும்!.
திட்டமிட்டுச் செயற்பட்டால்
வெற்றிகளும் உண்டாகும்!
நிச்சயம் நன்மை உண்டாகும் என்று
நம்பிக்கையுடன் நாம் காத்திருப்போம் என்றும்.!

"பாவெல் கர்ச்சாகின்"
தரம் – 9
யாழ். இந்துக்கல்லூரி

## வாசகர் சேவையில் தனித்துவம் பெறும்
# பாடசாலை நூலகம்

இணுவில் இந்துக் கல்லூரி என்ற பெயரில் இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் சைவப் பிரகாச வித்தியாசாலை 1864 ஆம் ஆண்டு அதாவது இற்றைக்கு 141 ஆண்டுகளுக்கு முன்னர் ஆறுமுகநாவலரால் நிறுவப்பட்ட பெருமைக்குரியது. இலங்கைத் தீவில் வயதில் மூத்த சைவத் தமிழ்ப் பாடசாலையாக விளங்கும் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அடுத்த மூத்த பாடசாலையென்ற வரலாற்றுப் பதிவு பெற்ற பெருமைக்குரியது. தமிழ்ச் சைவப் பாடசாலைகளே அருமையாகக் காணப்பட்ட அந்தப் 19ஆம் நூற்றாண்டில் அயலூர்களான தாவடி, சுதுமலை, சங்குவேலி, மானிப்பாய், உடுவில், சுன்னாகம், உரும்பிராய், கோண்டாவில் போன்ற கிராமங்களிலிருந்தும் தேடி வந்த மாணவர்களுக்குக் கல்விக் கண் திறந்து கொண்டிருந்த பாடசாலை இது. அன்றிலிருந்து இன்று வரை ஏராளமான சமயச் சான்றோரை, இலக்கிய மேதைகளை, நாடக இசைக் கலைஞர்களை உருவாக்கி வரும் பெரும் பண்பாட்டு ஊற்றுக் கண்ணாக விளங்கும் பெருமையும் இதற்குண்டு. இயற்றமிழ் ஆசிரியர் அ.க. வைத்திலிங்கம் பிள்ளை, பண்டிதர்களான இ. திருநாவுக்கரசு, நா. இராசையா, சரவண முத்து, ச.வே. பஞ்சாட்சரம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் போன்ற பெரியோர்கள் இங்கு தமது கல்வியைப் பெற்றவர்களே. இப் பாடசாலை பழம் பெருமை வாய்ந்த சமய, தமிழ் இலக்கியங்களைக் கொண்ட சிறிய ஒரு நூலகத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது என்று இங்கு படித்த அறிஞர்கள் கூறுகின்றனர்.

காலங்காலமாக நூலுணர்வு நிரம்பப் பெற்ற அறிஞர்களையும், வாசித்தமையால் பூரண மனிதராகப் பெயர் பெற்ற பெரியோர்களையும் தாங்கிய இணுவில் மண்ணின் நூல் உணர்வு இன்றும் தன்னியல்பை இழக்கவில்லை என்பதை நிரூபணமாக்கிய பெருமையில் இப் பாடசாலைக்கும் கணிசமான பங்குண்டு. 2003ஆம் ஆண்டில் வலிகாமம் வலய மட்டத்தில் சிறந்த நூற்சேகரிப்புக்கான பரிசையும், 2004ஆம் ஆண்டில் சிறந்த பாடசாலை நூலக வரிசையில் 3ஆம் இடத்தையும் பெற்று இணுவில் மண்ணுக்குப் பெருமை சேர்த்த பாடசாலையாக நிமிர்ந்து நிற்கிறது இணுவில் இந்துக் கல்லூரி. இதை மனதில் கொண்டு அங்கு நூலகர்களாகக் கடமையாற்றும் **திருமதி பாமினி ஜீவசங்கரதும், செல்வி ஞானலோகினி சிவராசாவினதும்** அனுபவ அறிவு நூலக அபிவிருத்தியை முன்னெடுக்க உதவும் என்ற நம்பிக்கையில் அவர்களின் நூலகம் சார்ந்த மனப்பதிவுகள் இங்கு அச்சுருவம் பெறுகின்றன..

### நூலகம் சார்ந்தவை

2000ஆம் ஆண்டு வரை நூல்கள் யாவும் சிறிய ஓர் அலுமாரியிலேயே வைத்துப் பேணப்பட்டு வந்துள்ளன. இவை பெரும்பாலும் அன்பளிப்புகளே. 2002இற்குப் பின்பே வாசகரின் பயன்பாடு கருதி நூல்கள் யாவும் பிரிக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டன. 2001இல் "பொப்லெப்"

(POBLEP)திட்டத்தின் கீழ் நூலகக் கட்டடம் ஒன்று அமைத்து, நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்ட பின்னரே நூலகப் பயன்பாடு என்பது நடைமுறைக்குச் சாத்தியமான தொன்றாக மாறியது. நூலக வளர்ச்சிக்கென 50,000 ரூபா பாராளுமன்ற உறுப்பினரான திரு. ரவிராஜ். அவர்களால் வழங்கப்பட்டமையும், ஓய்வு பெற்ற உப அதிபர் செல்வி கி. இராமலிங்கம் அவர்கள் 3,500 ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தமையும் குறிப்பிடத்தக்கன என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

**வாசகர் சார்ந்தவை**

575 மாணவர்களைத் தற்போது உள்ளடக்கியிருக்கும் இணுவில் இந்துக் கல்லூரியின் நூலகத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 294. பொது விடயங்களை வாசிப்போரே இங்கு கூடுதலாக உள்ளனர். தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் தான் பொது அறிவை நாடி வருகின்றனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர். துறை சார்ந்து பார்க்கும் போது கலைத் துறையைத் தேர்ந்தெடுத்தவர்களே கூடுதலாக நூலகத்தைப் பயன்படுத்துகின்றனராம்.

இது ஒரு ஆரோக்கியமான மாற்றம். மொத்த வாசகர் தொகையில் கிட்டத்தட்ட 50% .ஆனோர் நூலக வாசகராக இருப்பது போற்றுதற்குரிய தொன்றாகும். குமரப்பருவத்தின் தேடல்கள் பாலுணர்வை உந்தும் இலக்கியங்களை நோக்கி வழிப்படுத்தப்படாது பொது அறிவை நோக்கி வழிப்படுத்தப்படுவது சமூகத்தினை ஆரோக்கியப் பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியது.

**நூல்கள் சார்ந்தவை**

நூல்கள் சார்ந்து நோக்கும் போது தமிழ் மொழி, இலக்கியம், சமயம், பொது விடயங்கள் சம்பந்தமான நூல்களே இங்குண்டு. இப் பாடசாலையானது 1சி தரத்திலுள்ளதால் அதாவது கலைப்பிரிவும் வர்த்தகப் பிரிவுமே உயர்தரத்துக்குப் போதிக்கப்படுவதனால் பாடசாலையின் நோக்கத்தை ஈடு செய்வதற்கேற்ற பொருத்தமான தகவல் சாதனங்களை இவை கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்..

**நூலின் தரங்கள் ஐந்து**

- கருமூலம் கொண்டவை **[Seminal Materials]**
- ஆய்வுப் பொருள் கொண்டவை **[Research Materials]**
- விளக்கம் தருபவை **[Expository Materials]**
- தொடக்க நிலையிலுள்ளவை **[Elementary Materials]**
- அறிக்கை நிலைப் பட்டவை **[Reporting Materials]**

**நூலக அபிவிருத்தி சார்ந்தவை.**

தற்போதைய பாடத்திட்டம் மாணவரை மையப்படுத்தியதொன்று என்பதனால் ஒப்படைகள், சஞ்சிகைகள் தயாரிக்கும் பொருட்டு நூலகத்தைப் பயன்படுத்தியே ஆக வேண்டும் என்ற தேவை உண்டு. ஒருமுறை நூலகத்துக்குள் தமது தேவை கருதித் தானும் நுழைந்து விட்டால், அங்கு சரியான நூல்களும் நூல்களுக்கான வழிகாட்டுதல்களும் இருக்குமாயின் தொடர்ந்தும் நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வு வாசகர்கள் மத்தியில் ஏற்படும். மாணவர்கள் மட்டுமன்றி மாணவர்களை வழிப்படுத்தும் பணி தமக்கு உண்டு என உணரும் ஆசிரியர்களும், பாடசாலை சார்ந்த பொது அறிவுப் போட்டிகளில் பாடசாலை முன்னிடம் வகிக்க வேண்டும் என விரும்பும் எவரும் நூலகத்தைப் பயன்படுத்தப் பின் நிற்க மாட்டார்கள் எனக் கூறும் இவர்கள் நூலக அபிவிருத்தி சார்ந்து பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை நூலக வாரம் அனுஷ்டித்து வாசகரின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதுடன் பாடசாலை நூலகத்தையும் வளப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். நூலக வாரம் என்பது பாடசாலை மாணவர்களதும் ஆசிரியர்களதும் நூலுணர்வை அதிகரிக்க உதவும் செயற்பாடு மட்டுமன்று. அது பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரிடமும் நூலகம் தொடர்பான அடிப்படை உணர்வை ஏற்படுத்தவல்லது. எனவே எமது பாடசாலையும் கூட நூலக வாரம் அனுஷ்டிப்பதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டதாக இருக்கின்றது.

நூலக வாரச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக 2004இல் சிறந்த வாசகரும், ஆசிரியரும், கவிஞருமான திரு. சோ. பத்மநாதன் அவர்களை அழைத்து வாசிப்பின் அவசியம் பற்றி எம்மாணவர்களுக்கு உரையாற்றுவதற்கு ஒழுங்கு செய்தோம்.

பாடசாலை நூலக வாரத்தின் போது வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் பொருட்டும் வாசிப்புவீதத்தை அதிகரிக்குமுகமாகவும் வகுப்பு ரீதியில் மாணவர்களுக்கான சஞ்சிகைப் போட்டியொன்றை நடத்தி ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை என்ற மூன்று பிரிவுகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினோம். அதுபோன்று அதிக அங்கத்தவர்களைக் கொண்ட வகுப்புகளுக்கும் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தோம். இதுமட்டுமன்றி மாணவர்கள் தமது பிறந்தநாள் பரிசாக நூல்களை அன்பளிப்புச் செய்யும் வழக்கத்தையும் ஊக்குவித்து வருகின்றோம்.

**நூலகத்தின் தேவை சார்ந்தவை.**

நூலகத்தின் தேவை தொடர்பாக இவர்களின் கருத்து என்னவெனில் இனி வரும் காலங்களில் நூலகத்தின் வளர்ச்சிநிலையைக் கருத்தில் கொண்டு செயலாற்றும் போது மாணவர்களுக்கான போதிய இடவசதியை எமது நூலகம் கொண்டிருக்கவில்லை. எனவே நூலகக் கட்டடம் ஒன்றின் தேவை மிக முக்கியமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். நூல்களின் தேவையும் அதிகரித்து வருகின்றது. இவ்விடயங்களில் பாடசாலை நிர்வாகம் மட்டுமன்றி வெளிநிலை உதவியும் தேவைப்படுகின்றது.

# வாழ்வோர் வாழ வளமளிக்கும் நூலகம்

பண்டிதை
திருமதி.த.மகாலிங்கம்

மக்களை மக்களாக வாழ வழிகாட்டுவது கல்வி. மானிட வாழ்விலே தேடற்கரிய பெருஞ் செல்வமாக விளங்குவதும் கல்வியே. கல்வி என்பது கல்லுதல், தோண்டுதல் என்னும் பொருளைத் தரும். அதாவது கற்போரின் உள்ளுணர்வைத் தூண்டி உள்ளார்ந்த அனுபவங்களை வெளிக்கொணர்வது கல்வி. உள்ளத்து உணர்வு தூண்டப்படுவதனால் கலைவளம் கவின் வளமாய் பிரவாகிக்கின்றது. இந்தப் பிரவாகத்தினால் உருவாவனவே நூல்கள். அறிஞர்களின் நுண்மாண் நுழைபுலனால் உருவான நூல்களைத் தன்னகத்தே கொண்டு பெருமை பெறுவதே நூலகம். ஆலயம் ஆண்டவனின் உறைவிடம். நூலகம் கலைமகளின் வதிவிடம். இரு இடமும் உள்ளே செல்வாரை மிளிர வைப்பனவே.

மக்களை மக்களாக வாழ வழிகாட்டுவது கல்வி. மானிட வாழ்விலே தேடற்கரிய பெருஞ் செல்வமாக விளங்குவதும் கல்வியே. கல்வி என்பது கல்லுதல், தோண்டுதல் என்னும் பொருளைத் தரும். அதாவது கற்போரின் உள்ளுணர்வைத் தூண்டி உள்ளார்ந்த அனுபவங்களை வெளிக்கொணர்வது கல்வி. உள்ளத்துணர்வு தூண்டப்படுவதனால் கலைவளம் கவின் வளமாய் பிரவாகிக்கின்றது. இந்தப் பிரவாகத்தினால் உருவாவனவே நூல்கள்.



அறிஞர்களின் நுண்மாண் நுழைபுலனால் உருவான நூல்களைத் தன்னகத்தே கொண்டு பெருமை பெறுவதே நூலகம். ஆலயம் ஆண்டவனின் உறைவிடம். நூலகம் கலைமகளின் வதிவிடம். இரு இடமும் உள்ளே செல்வாரை மிளிர வைப்பனவே.

ஒரு மைக்கண் கற்ற கல்வி எழுமைக்கும் ஏமாப்பளிக்க வல்லதே. எனவேதான் வள்ளுவர் இன்னும் துலக்கமாக

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என அழகாக, அளவாக ஆணித்தரமாக எடுத்தியம்பிச் செல்கின்றார். பாடசாலைக் கல்வியானது ஒரு வரையறைக்கு உட்படுத்தப்பட்டுப் போதிக்கப்படுகின்றது. கற்போர்க்கு உலகியல் ரீதியாக மேலும் அனுபவக் கல்வியும் கிடைக்கிறது. இதற்கு அடுத்த படியாக மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது நூலகமே. இவை யெல்லாம் மக்கள் கற்க வேண்டிய நூல்களைக் கற்றுக் கற்றபடி ஒழுக வழிகாட்டுவனவே. மேலும் பாடசாலைக் கல்வியானது ஒரு பருவத்தோர்க்கு என்ற வரையறையோ காலவரையறையோ அற்றது. அனைவரும் கல்விபெற வாய்ப்பளிப்பது. இந்த வாய்ப்பைக் கற்போர் அருமையான வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

வாசிப்பே ஒரு மனிதனை முழு மனிதனாக்கவல்லது என்பது முடிந்த முடிபு; அனுப உண்மை.

மக்கள் கற்கவேண்டிய நூல்களைக் கற்று அதனால் சிறந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்திற்காக பாடசாலை நூலகங்களும், பொது நூலகங்களும் பெரும்பணியாற்றுகின்றன. வாழ்க்கைச் செலவு வளர்ந்து கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்திலே எல்லோராலும் எல்லா நூல்களையும் விலை கொடுத்துப் பெற்றுப் படிக்கமுடியாது. இந்த நிலையிலே எல்லோரதும் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் நூலகங்களே கைகொடுத்து உதவுகின்றன என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இன்னும் உயர் கல்வித்துறையைக் கற்போருக்கு உரிய நூல்களைச் சொந்தமாகப் பெற்றுக் கொள்வது மிகமிகக் கஷ்டம். இந்த நிலையில் நூலகங்களே அவர்களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

மேலும் நூலகத்திற்கு நாம் சென்றால் அங்கே பிளேற்றோ, ரூசோ, சோக்கிரட்டீஸ் போன்ற தத்துவ ஞானிகளுடைய சிந்தனைகளையும், கம்பர், வள்ளுவர், ஔவையார் போன்ற இலக்கிய மேதைகளுடைய படைப்புக்களையும், சம்பந்தர், அப்பர் போன்ற சமய ஞானிகளுடைய தோத்திரங்களையும், சித்தாந்த ஞானிகளின் தரிசனங்களையும், மகாத்மாகாந்தி, பாரதியார் போன்ற சமூக முற்போக்காளர்களின் வழிகாட்டல்களையும், வானியலாளர்களுடைய ஆய்வுகளையும், சமூகத்திடையே கருவூலங்களைப் பெற்று எழுதும் முற்போக்கு எழுத்தாளர்களுடைய ஆக்கங்களையும், இன்னும் எத்தனை எத்தனையோ துறைசார்ந்த, மொழிசார்ந்த வல்லுநர்களுடைய படைப்புக்களையும், சீர்திருத்தக் கொள்கைகளையும். தரிசனங்களையும் நாம் காணமுடிகிறது. படிக்கமுடிகிறது. பரீட்சையிலே சித்திபெற முடிகிறது. அறிவை வளம்படுத்தி, வாழ்வை மெருகூட்ட முடிகிறது. அரிசிப் பொரியொடு திருவாரூரும் என்பர். அதுபோல பொழுது போவதோடு அறிவும் வளரும் .

நமது வாழ்வு வளம் பெறுவதற்காகத் தமது முன்னோர் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு படைத்து வைத்த அரும்பெரும் கருவூலங்களைக் கொண்ட நூலகங்களை எமது உயிரெனப் பேணிப் பாதுகாத்தல் நமது கடமை. பயன்பெறுவது நமது உரிமை. அரும்பெருங்கருவூலங்கள் உலகில் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் தேடிக்கொண்டு வந்து நூலகத்திலே நிறைத்தல் எமது சேவை. நம்போல நம் பின்னவரும் பயன்பெறும் வண்ணம் பாதுகாப்பது நமது பொறுப்பு.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பது அறிவாமாகலின் நூல்களின் உள்ளே பொதிந்திருக்கும் உண்மைக் கருவூலங்களை ஆய்ந்து, எமக்கு ஏற்றன பெற்று வாழ்வை வளம் படுத்த வேண்டும். எனவே நூலகத்தின் பயன்பாடுகளை உணர்ந்து, கற்க வேண்டிய நூல்களை நூலகங்களிலே தேடிப்பெற்றுக் கற்று எம் வாழ்வைச் செம்மைப்படுத்துவோமாக.

# அறிவாலயம் வழிகாட்டுமா?

—மாதங்கி—



அவளது சூழலில் மெல்ல மெல்ல உருவாகிக்கொண்டிருக்கும் அறிவாலயக் கட்டிடத்தை ஏறிட்ட போது இதுவே அவளுள் எழுந்த முதல் வினாவும் ஆதங்கமும் கூட. ஏனெனில் அவளுக்கு நினைவு தெரிந்த காலம் முதல் அவளுக்குத் தெரிந்ததெல்லாம் படிக்கும் பிள்ளைகள் கண்டபுத்தகங்களும் வாசிக்கக் கூடாது கெட்டுப் போவார்கள் என்பதே. அறிவு சார் நூல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வசதிகள் குறைந்த சூழல் ஒன்றில் கிடைக்கும் ஓரிரு நாவல்கள் கூட மூத்தவர்களால் பார்வையிட்ட பின்பே தரப்படுவதும், எம்மில் பலர் அதையே கௌரவமாக எண்ணுவதும் அதைவிட ஒரு படி மேலாகச் சென்று எவ்வளவோ ஆர்வமிருந்தும் நாவல்களே வாசிக்காதோருக்கு கிடைக்கும் ஒரு வித "மதிப்பை"த் தக்கவைப்பதற்காகவே வாசிப்பதைத் தவிர்த்துக் கொள்வதும், இரண்டும் கெட்டான் நிலையில் பாடப்புத்தகங்களுக்குள் மறைத்து வைத்து வாசிப்பதுமாகவே கழிந்தன எமது இளவயதுப் பருவத்தின் சுவாரஸ்யமான பக்கங்கள். இந்த வரன் முறைகளைத் தாண்டி எதிர் கொள்ளும் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சனைகள், மன அழுத்தங்களின் வெளிப்பாடு, காத்திரமான புத்தகங்கள் சொல்லும் வாழ்க்கை, பிரச்சனையை படிப்பினையாக ஏற்றுக்கொள்ளாது அதிலேயே வீழ்ந்து மூழ்கிவிடும் மனப்போக்கு – – –! இதன் விளைவு – –! வாசிக்க ஒதுக்கும் சொற்ப நேரத்திலாவது இறுக்கமான மனநிலையைத் தவிர்க்க நினைக்கும் சமூகத்தின் வாசிப்பு ஆர்வலர்கள் மத்தியில் கிளிப்பிள்ளைப்பாடம் சொல்லும் ரமணிச்சந்திரனுக்கே வரவேற்பு அதிகம். அவள் பார்க்கும் சமூகத்தில் இந்தப் போக்கு அன்றும் இன்றும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாதது என்னவோ உண்மை தான்.

புத்தகப் பூச்சிகளாக மட்டுமே இருந்து கொண்டு பரீட்சையில் கட்டுரைகள், கதைகள், கவிதைகளை மனனம் செய்து ஒப்பிக்கும் போதும், பேச்சுப் போட்டிகளில் திண்டாடும் போதும் கற்றலில் எங்கோ பிழை இருப்பதை உள்ளுணர்வு எச்சரித்தாலும் பரந்து பட்ட அறிவை வளர்க்க வேண்டும் என்ற ஆசிரியர்களின் வாய்ப்பாடான ஒப்புதலாலும் சரியான திசைப்படுத்தல் இன்மையாலும் இறுக்கமான வாழ்க்கையின் நேர அட்டவணையாலும் பாடசாலைக்காலம் பொதுவாக எல்லோருக்கும் திண்டாட்டத்திலேயே கடந்துவிடும். ஒரு கட்டத்தில் ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது என்ற உண்மையை நடைமுறையில் உணர்ந்த போது சஞ்சிகைகள், பக்கம் குறைந்த நாவல்கள், அறிவியல் துணுக்குகள், சிந்தனைத்துளிகள் இவையே ஆரம்பத்தில் கவர்ந்தன. வாசிக்கும் பொறுமையோ, பழக்கப்படுத்திக் கொள்ளாத வாசிக்கும் ஆற்றலோ கட்டுப்புத்தகங்களைக் கண்டு எட்டவே நின்று கொள்ளத் தூண்டும்.

இத்தகைய மனோநிலை அவள் அந்த ஆசிரியையின் வீட்டுடன் பரிச்சியம் ஆகுமுன்னர் வரைக்கும் தான். அங்கு அவள் வைரமுத்துவைப் பலமுறை சந்தித்திருக்கிறாள்! அந்த வைரவரிகளால் உரமேறிய "அந்தப் பழைய பனை ஓலைகளினால்" இதமாக காற்று

வாங்கியிருக்கிறாள்! சாண்டில்யனின் கடல்புறா, ஜலதீபத்திலும் ஆசைதீரக் கடல்உலா வந்திருக்கிறாள்! 'சிவகாமியின் சபதத்திற்காக' த் தானும் வாதாவி மீட்கச் சென்றதாகவே உணர்ந்திருக்கின்றாள்! வந்தியத் தேவனைச் சந்திப்பதற்காகவும், ஆதித்தகரிகாலனின் மர்ம மரணத்தைக் கண்டறியவும், காணும் போதெல்லாம் 'பொன்னியின் செல்வனை' ப் புரட்டியெடுத்த சம்பவங்கள் அதிகம். பரந்த நோக்கோ, அறிவியல் தேடலோ, அறிவுப் பசியோ தூண்டப்படாது குறுகிய சிந்தனைப்போக்கில் பார்க்கும் போது பல பாகங்களைக் கொண்ட பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், ஜவனராணி போன்ற மிக அற்புதமான, வாசகனை கட்டிப்போடும் வரலாற்று நாவல்களாயினும் சரி, மகாத்மாகாந்தி, சேகுவேரா போன்ற முன்னோடிகளின் வாழ்க்கை வரலாறாயினும் சரி வெறும் காகிதக் கட்டுக்கள் தான் என்பது அவள் பின்நாளில் அறிந்த உண்மை.

மேத்தாவின் கவிநடையில் பல தடவை தடுக்கி வீழ்ந்ததாலேயே இவளுக்கு மேத்தாவைப் பிடித்துப் போயிற்று. மேத்தாவின் 'நினைத்ததில் நெகிழ்ந்தவை' இனை நினைத்துப் பலமுறை மகிழ்ந்திருக்கிறாள். சுஜாத்தாவின் 'ஏன், எதற்கு, எப்படி' இனை வாசித்து முடித்த போது யார்?, எங்கிருந்து?, எப்படி? என்பது இயல்பாய் எழுந்த தேடல். அதில் சுஜாத்தா ஆண்பால் என்று கண்டு கொண்டதே அப்போது ஒரு கண்டு பிடிப்புத்தான். வாசந்தி, இந்துமதி, ஜானகிராமன், சிவசங்கரி இவர்களின் சிறுகதைகளை ஆரம்பத்தில் கதைகளாக மட்டுமே வாசித்தாலும் போகப்போக அவற்றில் வரும் பாத்திரப்படைப்புக்களின் குணவியல்புகள், அந்தந்தச் சமூகத்தின் வாழ்க்கைமுறை, சமூகப்பின்னணி, சடங்குகள், சம்பிரதாயங்களை அறிந்து கொள்வதும் நடைமுறை வாழ்க்கையுடன் ஒப்பீட்டுப் பார்ப்பதும் வழக்கமாயிற்று. வாழ்க்கையை நடந்து கடக்கவைக்கும் இவர்களுக்கும் கற்பனைவானில் மிதக்கவிடும் ரமணிச்சந்திரனுக்கும் வெகுதூரம் என்பது இவளது தனிப்பட்ட கருத்து.

சிரித்திரன் சுந்தர், சபா. ஆனந்தர் இவர்கள் அவளது சமூகத்தின் சுற்றும் காற்றாடிகளே. ஏனெனில் தமதூர்ப் படைப்பாளிகள் என்ற அந்த உண்மையை அறியாமலேயே இவர்களின் படைப்புக்களால் நிதம் இதமான காற்றுவாங்குவோர் அதிகம். அதே போன்று அர்த்தநாரீ இன் 'வளரிளம் பருவம் எனும் விசித்திர உலகில்' தன்னைத்தான் நிறுத்திப்பார்த்த போதும் கவிஞர் ச. வே இன் 'சிறுவர் பாடல்கள், சிறுகதைத் தொகுதி' இல் இலயித்துப் போன போதும் எம்மிடையே வலம் வரும் இவர்களுக்கு வெளியில் கிடைக்கும் ஓர் தனியிடம் எம்மத்தியில் அந்தளவிற்கு எட்டப்படாது போனது ஏன்? இவர்கள் முற்றத்து மல்லிகைகள் என்பதனாலா? அல்லது கடைநிலைமட்டம் வரை மல்லிகையின் சுகந்தம் பரவும் வாய்ப்பை இதுவரை எமக்கு ஏற்படுத்தித் தராததினாலா? என்பது அவளைக் குடைந்த கேள்விகள்.

வாசிப்பு ரசனை இல்லாதநிலையில் இருந்து ஒரு நூலகத்தினுள் தொலைந்து போகுமளவிற்கு நடமாடும் ஒரு குட்டி நூலகம் சாதித்தது. இவ்வாறான குட்டி நூலகங்கள் சாதிக்கக் கூடியதைப் பலபேரது எதிர்பார்ப்பின் மத்தியில், பிரமாண்டமான எடுப்பில், எம்மத்தியில் எழுந்து நிற்கும் அறிவாலயம் சாதிக்குமா? மாணவர்களும் வயதானவர்களும் கூடும் வாசிகசாலையாகத் தன்னைக்குறுக்கிக் கொள்ளாது சகல மட்ட வாசகனுக்கும் அறிவுப்பசியை, தேடலைத் தூண்டாதவரைக்கும் வீதிக்கொரு நூலகம் அமைத்தாலும் அவை வெறும் கட்டிடங்களாகவும் புத்தகங்கள் காகிதக் கட்டுக்களாகவுமே இருக்கும்.

கண்டதும் கற்கப்பண்டிதன் ஆவான் என்றுதான் நாம் அறிகிறோம், 'Good books are good friends , Reading makes the full man' என்றுதான் ஆங்கிலமும் நம்புகிறது.'ஒவ்வொரு நல்ல புத்தகங்களை வாசித்து முடிக்கும் போதும் நான் ஒரு நல்ல நண்பனை கண்டுகொண்டதாகப் பூரிப்படைகிறேன்' என்றான் யாரோ. ' Tell about your friend I tell who are you' என்பது போன்று பரந்துபட்ட வாசிப்பு ஆற்றல் உள்ள ஒருவனையும் நாம் எடைபோடமுடியும். இந்தச் சிந்தனைத் தெளிவு சமூகத்தின் மேல் மட்டத்தில் ஏற்படவேண்டும். அங்கு மாற்றம் ஏற்படுமானால் அது இளையோர் மத்தியில் இயல்பாகவே மாற்றத்தைக் கொண்டுவரும். இதனைச்சாதிக்க எம்மத்தியில் அறிவாலயம் இடம்பிடிக்கவேண்டும். இடம் பிடிக்குமா?

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | அதை நழுவ விடாதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | அதைச் சென்று முடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விடுகதை | அதை விடுவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | அதில் ஈடுபடுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | அதை வென்று காட்டுங்கள் |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | அதை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போட்டி | அதில் வெற்றி பெறுங்கள் |
| வாழ்க்கை ஒரு கலை | அதை அழகுபடுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு வேதனை | அதைத் தாங்குங்கள் |
| வாழ்க்கை ஒரு சவால் | அதை எதிர் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதற்கு மனந் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சனை | அதற்குத் தீர்வு காணுங்கள் |

தொகுப்பு: அம்பிகா

# இணையம் எனும் நூலகம்
## உள்ளும் புறமும்

தி. சேந்தன்,

### கணினி வலையமைப்பு நிர்வாகி ஒருவரின் அனுபவங்கள்

*"பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையைச் சிறப்புப் பாடமாக எடுக்கும் மாணவ மாணவியர் தமது ஆய்வுக் கட்டுரைக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இணையத்தை அதி கூடுதலாகப் பயன்படுத்துகின்றனர். தரம்மிக்க வண்ண லேசர் அச்சுப் பொறி வசதி இருப்பதன் காரணமாகத் தமக்குத் தேவைப்படும் ஓவியங்கள், படங்கள் போன்றவற்றை உடனுக்குடன் பதிவாக்கிச் செல்கின்றனர். மருத்துவமனையில் தொழில் புரியும் மருத்துவர்கள் தமது தொழில் சார் உயர் கல்விக்கான தகவற் தேவையை எமது இணையச் சேவையூடாகப் பூர்த்தி செய்கின்றனர். இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள மருத்துவ ஆய்வு நிறுவனங்களின் ஆய்வு வெளியீடுகள் அச்சுருவம் பெறமுன்பே இணையத் தளத்திற்கு வந்து விடும் வாய்ப்பு இருப்பதனால் அண்மைக்காலத் தகவலைப் பெறுவதற்கான சிறந்த வழிமுறையாக இந்த இணையச் சேவையைக் கருதுகின்றனர். சம்பள மாறுதல்கள், வேலை நியமனம் தொடர்பான உடனடித் தகவலைப் பெறுவதற்கு அரச உத்தியோகத்தவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். பத்திரிகைகள் பார்ப்பதற்கு மட்டுமன்றி அவற்றுக்கெனத் தொகுத்த தகவல்களை மின் அஞ்சல் ஊடாக அனுப்பவெனச் சில ஊடகவியலாளர் வருகின்றனர். கல்வி சார் நிர்ப்பந்தமோ, தொழில் சார் நிர்ப்பந்தமோ இன்றி அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே நோக்குடன் கலைக்களஞ்சியங்கள், சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் என்பவற்றைப் பார்க்கவெனவும் கணிசமான பகுதியினர் வருகின்றனர்."*



இன்ரநெற் என்பது இளைஞர்களின் பொழுதுபோக்கு மையமாக ஆரவாரப்படும் இன்றைய நாட்களில் மேற்கூறிய அறிவு சார் செயற்பாடுகள் அனைத்தும் நடப்பது எங்கே? என்று ஆச்சரியப்படுபவர்களுக்கு ஆச்சரியம் தரத் தக்க பதில் என்னவென்றால் "இது நடப்பது யாழ்ப்பாண மாநகரசபைப் பொது நூலகத்தில் என்பதே". கலாச்சாரப் பேரழிவுக்கு உட்பட்ட போதிலும் அதிலிருந்து மீண்டு, தகவல் தொழில்நுட்ப உலகுடன் ஈடுகட்டக் கூடிய தகவல் அமைப்பாக மெல்ல மெல்லத் தன்னையும், தனது தரத்தையும் மேலே உயர்த்திக் கொண்டு வரும் யாழ் பொது நூலக செயற்பாட்டின் ஒரு அம்சமே இந்த இணையச் சேவையாகும்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டு மாசி மாதம் தொடங்கப்பட்ட இணையச் சேவையானது. நூலகத்தின் மேல் மாடியின் வலது புற மண்டபத்தில் 10 கணினிகளுடன்

தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவைப் பூர்த்தி செய்வதற்குள் தனது சேவையை இந்தளவுக்கு விரிவாக்கியிருப்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதொன்றாகும்.. கிட்டத்தட்ட 35,000 பாவனையாளர்களைப் பதிவு செய்திருக்கும் இந் நூலகத்தின் இணையச் சேவையைப் பயன்படுத்துவோர் நாளாந்தம் சராசரியாக 50 – 60 பேர் வரையாகும்.

தரவு (Data), தகவல் (Information) என்பன மனிதனின் அன்றாட வாழ்விலும் மனித நாகரீகத்திலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாகும். விஞ்ஞான, தொழில்நுட்ப இயந்திரங்களும் பொறிமுறைகளும் வளர்ச்சியடைவதற்கு முன்பிருந்தே தகவல்கள் அதுவும் "சரியான தகவல்" என்பது தீர்மானம் எடுப்பதில் முக்கிய பங்கு எடுத்துவருகிறது.

சாதாரணமாகப் பெறப்படும் தரவுகளைச் சரியான தகவல்களாக உருவாக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு படிநிலையாகத்தான் கணினிகள் உருவாகின.

வலுக்குறைந்த, தனித்தனியாகத் தொழிற்படும் கணினிகளை ஒன்றிணைத்து அவற்றின் வளங்களையும் அவை கொண்டுள்ள தகவல்களையும் ஒன்று சேர்ப்பதால் அவற்றின் பயனைப் பன்மடங்கு அதிகரிக்கலாம் எனும் எண்ணக்கருவில் உதித்தது தான் கணினி வலையமைப்பு.

பல கணினிகளை வலையமைப்பு மூலம் ஒன்றிணைப்பதால் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. அவற்றின் துணை உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகள் பங்கிடப்படுகின்றன. உதாரணத்திற்கு பிரதி செய்யும் இயந்திரம் ஒன்று ஒரு கணினியில் மட்டும் இணைக்கப்பட்டிருப்பினும் கணினி வலையமைப்பு மூலம் எந்தக் கணினியிலிருந்தும் அவ்வியந்திரத்தைத் தொழிற்படுத்த முடியும்.

உலகளாவிய கணினி வலையமைப்புத் தான் இணையம் எனப்படுகின்றது. உலகின் ஒவ்வொரு மூலையிலும் தனித்தனிக் கணினிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களை வேறு ஒரு கணினி மூலம் பெற்றுக் கொள்ளும் ஒரு அற்புத முறையாக இணையத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததனால் மனித குலம் அடைந்த பயன் அளவிட முடியாதது.

இதற்கெனப் பாரிய பொருட் செலவில் கட்டடங்களை அமைக்க வேண்டிய தேவை இல்லை. புத்தகங்களை வாங்கிப் போட வேண்டிய தேவை இல்லை. பலரின் கடுமையான உழைப்பின் மூலம் செயற்படும் நூலகங்களில் கிடைக்கும் பலனை, பெறுபேற்றை விட இணையத்தின் பயன்பாடு மலிவானதும், வசதியானதும், தரமானதுமாக அமைகின்றது.

பல கணினிகளை ஒன்றுடன் ஒன்று தொலைத் தொடர்புத் தொழில்நுட்பத்தின் மூலம் இணைப்பதனால் எமக்கு விரும்பிய இடத்தில் இருந்தவாறே வேறு எங்கோ உள்ள ஒரு கணினியில் சேமிக்கப்பட்டுள்ள அரிய தகவலை ஒரு சில நொடிப் பொழுதில் பெற்றுக்கொள்ள முடியும்.

பல்வேறுபட்ட அறிஞர்களினால், முகம் அறியாத படைப்பாளிகளினால் வேறுவேறு நிலைகளில் உருவாக்கிச் சேமிக்கப்பட்ட ஆக்கம் ஒன்றை எமக்கு விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில் இருந்து எந்தவிதப் பிரயாணச் சிரமமோ, அலைச்சலோ இன்றிப் பெறுவது என்பது ஒரு அரிய வரப்பிரசாதம் என்பது வெளிப்படை உண்மை.

சாதாரண நூலக நடைமுறையைப் பார்த்தால் எமக்குத் தேவையான தகவல்

எந்த நூலில் இருக்கிறது, அந்த நூல் எந்த நூலகத்தில் உள்ளது, அந்நூல் நிலையத்திற்கு எப்படிச் செல்வது, அவர்களின் நடைமுறைகள் எப்படி என்பனவற்றை அறிவதே ஒரு பெரிய சிக்கலான விடயம். சரியான நூலகத்தைச் தேடிச் சென்றாலும் குறிப்பிட்ட நூலை வேறு ஒருவர் எடுத்துச் சென்றிருப்பார். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அளவு பிரதிகளே கையிருப்பில் இருக்கும். அவை கூட நாளடைவில் பழுதடைந்து பாவனைக்கு உதவாது போய்விடலாம். ஆனால், இணையத்தில் சேமிக்கப்படும் தகவல்களை எத்தனை பேர் வேண்டுமானாலும் ஒரே நேரத்தில் வாசிக்க முடியும். பல பாவனையாளர்களினால் ஒரே நேரத்தில் அணுகப்படக்கூடிய தொழினுட்ப முறை பயன்படுத்தப்படுவதனால் எவரதும் இடையூறும் இன்றி ஒருவர் தனக்குத் தேவையான ஆக்கத்தை வாசித்துப் பயன் பெறமுடியும்.

இணையத்தில் தகவல்கள் எவ்வாறு வெளியிடப்படுகின்றன? அதற்கான செலவைப் பொறுப்பேற்பது யார்? பயனாளியிடமிருந்து கட்டணத்தை எவ்வாறு வசூலிப்பது? என்பன இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமான அம்சங்களாகும்.

அச்சுருவிலான புத்தகய வெளியீட்டை விடவும் இணையத்தில் வெளியீடு என்பது மிகவும் இலகுவானது. இணைய வலையமைப்பில் இணைந்துள்ள ஒரு கணினியில் எமது ஆக்கங்களைச் சேமித்துவிட்டு அதற்கென்று ஒரு முகவரியை உலகளாவிய இணைய நிறுவனத்திடம் (World Wide Web Consortium) பெற்றுவிட்டால் அந்த முகவரியில் இருந்து யாரும் எமது ஆக்கங்களைப் பெறமுடியும். சாதாரண முறையில் வெளியிடப்படுகின்ற தகவல்களை

### ஒளிப்பட சாதனங்கள் பாதுகாப்பு

- ஒளிப்படங்கள் நுண்வடிவங்கள் இரண்டுமே வெள்ளிப்பூச்சுப் பசையை அடிப்படையாகக் கொண்டவை. தாள்களுக்கு பயன் படுத்தப்படும் பாதுகாப்பு முறைகளை இதற்குப் பயன்படுத்தமுடியாது.. எ-டு வெளிறச் செய்யும் செய்முறை படங்களிலுள்ள வெள்ளிப் பசையை அழித்துவிடும்.
- மதுசாரத்தில் பஞ்சைத் தோய்த்து படங்களைச் சுத்தம் செய்யலாம். எந்தவொரு வெளுப்புத் திரவமும்[Peroxide] படங்களைப் பாதிக்கும்
- ஒளிப்படங்கள் 40% Rh இல் நிரந்தரமாகச் சேமிக்கப்படல் வேண்டும்
- ஒளிப்படங்களை அமிலத் தன்மையற்ற தாளுறைகளில் பாதுகாத்தல் வேண்டும்.
- ஒளிப்படங்களைத் திரும்ப ஒரு தடவை திரவத்தில் போட்டு அதிலுள்ள அமிலத்தை நீரால் கழுவுவதன் மூலம் நல்ல பலனைப் பெறலாம்.
- வண்ணப்படங்களிலுள்ள விம்பங்கள் 10-30 வருடங்களில் அழியுமாதலின் சில்வர் பூச்சு முறையில் உருவான படங்களே விரும்பத்தக்கது.
- நுண்வடிவங்கள் 12-22சி வெப்பநிலையிலும் 15-35 வீத ஈரப்பதனிலும் பாதுகாக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொன்றும் தனித்தனி தாள்களில் பொதி செய்யப்படல் சிறந்தது. நுண்படங்களாயின் தாள் சுருள்களிலும் நுண் தாள்களாயின் தாள் உறைகளிலும் சுற்றப்படல் வேண்டும்.
- அலுமினியம் அல்லது துருப்பிடிக்காத உலோகப் பேழைகளில் பாதுகாக்கப்படல் வேண்டும்

கட்டணம் இன்றி பாவனையாளர்கள் வாசிக்க முடியும். இப்படியான இணையத்தளங்களில் விளம்பரதாரரின் விளம்பரங்களை உள்ளடக்குவதன் மூலம் செலவை ஈடுகட்டலாம்.

பாதுகாப்பான இணையத் தளங்களை உருவாக்கினால் பாவனையாளர்கள் தமது கடன் அட்டைகள் மூலம் இலத்திரனியல் வழிமுறையில் இதற்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும். ராய்ட்டர், வீரகேசரி, விகடன் போன்ற இணையத் தளங்களிற்குக் கட்டணம் செலுத்தி உறுப்பினராகாத யாரும் அவற்றைப் பார்வையிடவோ தகவல்களைப் பெற்றக்கொள்ளவோ முடியாது.

பக்கங்கள் சேர்ந்து நூல்கள் ஆகின்றன. நூல்கள் ஒன்று சேர்ந்தால் நூலகமாகின்றது. குறிப்பிட்ட தகவலைத் தேடும் ஒரு வாசகன் நூல் நிலையத்தை நாடுகின்றான். தனது தேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய சுரியான புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கென்று சில திறன்கள் இருக்க வேண்டும். நூலகங்களிலும் வாசகனின் தேடலை இலகுவாக்கக் கூடியவாறான நடைமுறை அம்சங்கள் சரியாக இருந்தால்தான் வாசகர்கள் சரியான பயனைப் பெற முடியும், நூல்களும் வீணே தேங்கி இருக்காது. மக்களிற்குச் சரியான பயனை கொடுக்க முடியும். ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நூலகமானது தன்னை நாடிவரும் வாசகனின் தேடலை ஓரளவு தீர்த்துவைக்க முடியும். ஆனால் அதற்காக வாசகன் நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டிவரும். பெருமளவு நேரத்தையும் செலவழிக்க வேண்டிவரும்.

ஆனால், இணையத்தளங்களில் உள்ள தேடல் பொறிகள் நாம் நினைத்த கருப்பொருள் அல்லது பாடம் எந்தெந்த இணையத்தளங்களில் உள்ளது என்பதனை நொடிப் பொழுதில் தந்துவிடும். இதனால் எந்தச் சிரமமும் இன்றிக் குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் எமக்குத் தேவையான பாடத்தை அல்லது விடயத்தை இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், அரிய நூல்கள், குழந்தைகளிற்கான ஆக்கங்கள், நவீன விஞ்ஞான வெளியீடுகள், அரசாங்க அறிக்கைகள், பரீட்சைப் பெறுபேறுகள், பாட நூல்கள் மட்டுமன்றி தனிப்பட்டவர்கள் பற்றிய விபரங்களையும் இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமன்றிச் செய்திகளையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும். முக்கியமாக எழுத்துருவில் மட்டுமன்றி படங்களாகவும், சலனச் சித்திரங்களாகவும், ஒலி ஒளி வடிவிலும், ஒளிப்படங்களாகவும் தகவல்களைத் தருவதில் இணையத்திற்கு நிகர் ஏதுமில்லை.

கண்ணுக்குத் தெரியாத உலகின் பிரமாண்டமான நூல் நிலையமாக உருவகிக்கக் கூடிய இந்த இணையத்தைச் சரியான முறையில் பயன்படுத்துபவர்கள் ஒரு சிலர்தான். பலர் அதை ஒரு பொழுதுபோக்கு அம்சமாக, கிளி ஜோசியம் பார்ப்பதற்கும், அரட்டை அடிப்பதற்கும், ஆபாசப்படங்கள் பார்ப்பதற்கும், சினிமாப் படங்களைப் பார்ப்பதற்கும் மலினமான கட்டுரைகளைப் படிப்பதற்குமே பயன்படுத்துகிறார்கள். இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு முழுக்க முழுக்க அறிவுத் தேடலுக்கான நுழைவாயிலாக இணையத்தைப் பயன்படுத்தும் வாசகர் சமூகத்தை வளர்த்தெடுப்பதை இப் பொது நூலகம் தனது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருக்கின்றது.

*"இணையத்தை மலினப் படங்களுக்காகவும் தகவல்களுக்காகவும்*

*பயன்படுத்த வேண்டும் என்ற பெரு விருப்புடன் எம்மை அணுகிய வாசகர்கள் பலர். வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு அதற்கு நாம் ஒத்துக் கொண்டிருப்போமாயின் கிட்டத்தட்ட ஐந்நூறுக்கும் மேற்பட்ட இணைய வாசகர்களை நாம் பெற்றிருக்க முடியும் என்பதுடன் குறைந்தது 50 கணினிகளாவது இதற்குத் தேவைப்பட்டிருக்கும். எம்மிடம் தற்போது இருக்கும் வாசகர்களில் பெரும்பாலானோர் அறிவுத் தேடலுக்காக மட்டும் இணையத்தைப் பயன்படுத்துபவர்கள். இணையத்தைப் பயன்படுத்துவதற்கு தனிப்பட்ட வசதி செய்து தருமாறு எம்மிடம் அணுகிய வாசகர்கள் கூட உண்டு".*

*இணையப் பாவனை தொடர்பாக இங்கு குறிப்பிடக் கூடிய அம்சங்களில் ஒன்று பொழுதுபோக்கு அம்சங்களைத் தேடும் வாசகர் சமூகத்தை ஊக்குவிக்காத வகையில் நாம் மேற்கொண்ட ஒழுங்கமைப்பு ஆகும். இங்கு யாரும் மற்றவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தக் கூடிய படங்களையோ தகவல்களையோ இரகசியமாகப் பார்க்க முடியாது. ஏனைய இணைய மையங்களில் தனித்தனிக் கூடுகளுக்குள் தாம் விரும்பிய படங்களையோ, தகவல்களையோ பார்க்கக்கூடிய வசதி இருப்பதனால் இங்கும் இந்தக் கட்டமைப்பை மாற்றி தத்தமக்கென பார்க்கும் வகையில் ஒழுங்கமைப்பை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தவர்களும் எம்மிடையே உண்டு. இணையப் பாவனை தொடர்பாக வாசகர் சார்ந்து இனங் காணப்படும் இன்னோர் அம்சம் இங்கு இணையத்தைப் பயன்படுத்துபவர்களில் கணிசமானோர் பெண்கள் என்பதாகும். வெளியே உள்ள இணையத் தள மையங்களை அதிகம் பயன்படுத்துபவர்கள் ஆண்களாக இருப்பதும் தமக்கு சங்கடத்தை ஏற்படுத்தக் கூடிய படங்களை கணினித் திரையில் சேமித்து விட்டுச் செல்லும் போக்கு இருப்பதும் காரணமாக அங்கு செல்வதற்கான தூண்டலை தமக்கு ஏற்படுத்தவில்லை என இவர்கள் தெரிவிக்கின்றனர்.*

"தீபத்தின் ஜோதியில் திருக்குறள் படித்தால் அது தீபத்தின் பெருமையன்றோ அந்தத் தீபத்தினால் ஒரு நெஞ்சத்தை எரித்தால் தீபமும் பாவமன்றோ" என்பது போல் இணையத்தைத் துர் நோக்கத்திற்காகவோ, மலினமான தேவைகளை நிறைவு செய்யவோ பயன்படுத்துபவர்களை மட்டும் கருத்திலெடுத்து இணையம் எமது சமுதாயச் சீர்கேடுகளிற்கு வழிவகுக்கின்றது என்று கூறுபவர்கள் கண் இழந்த குருடர்களாகத்தான் இருக்கவேண்டும்.

உலகம் தோன்றிய காலத்திலிருந்து எந்த விடயத்தையுமே நல்ல நோக்கத்தோடு அணுகுபவர்களும் தீயநோக்கத்தோடு அணுகுபவர்களும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இணையத்தை அறிவுத் தேடலிற்காகவும், வர்த்தக நோக்கிலும் உணர்வுகளைப் பரிமாறவும் பயன்படுத்துவதற்கு இளைய சமுதாயம் பழகிக் கொள்ள வேண்டும். வீணே எமது நேரத்தையும் வளத்தையும் செலவளித்து இணையத்தைப் பயனற்ற முறையில் பயன்படுத்துவதனால் மற்றவர்களிற்கு வீணே தகவல் பரிமாற்ற நெரிசல் ஏற்படுத்துவதோடு தொலைத் தொடர்பு சார்ந்த தேசிய வளங்களையும் வீணடிக்கிறோம் என்பதனை இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# நூலகர் நூலகர் என்கின்றீர் நுவலும் நூலகர் யாரையா ?

நடமாடும்

இந்திய நூலகவியல் அறிஞர் திரு.வே. தில்லநாயகம் அவர்களின் மேற் சொல்லப்பட்ட கவிதை வரிகளுக்கு உயிர் கொடுக்கக் கூடிய ஒருவரை அறிவாலயம் சிறப்பு மலரை அலங்கரிப்பதற்குத் தேட மனது தீர்மானித்து, தேடிப் பலனேதுமற்றுக், களைத்து, வெறுமையில் முடிவுறத் தயாரானபோது மனதில் ஏற்பட்ட திடீர் ஒளிக்கீற்றில் வியாபித்து நின்றவர் திரு.ஆ. சபாரத்தினம் அவர்கள். ஆசிரியத் தொழிலில் நெடுங்காலம் நிலைத்திருந்து ஓய்வு பெற்ற இவருக்கும் நூலகத் தொழிலுக்கும் என்ன தொடர்பு?

15 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலில் நூலகத் தொழிலுக்குள் நான் நுழைந்த காலத்தில் நூல் அடுக்குகளினூடே குடுகுடுவென ஓடித் திரியும் இவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கின்றேன். நூலகத்தின் உண்மையான வாசகர் யார், இடையிடையே எட்டிப் பார்க்கும் வாசகர் யார் என்ற தேடலில் முனைப்புற்றிருந்த அந்தக் காலத்தில் நூலகத்தில் என் கண்ணில் அடிக்கடி பட்ட ஓரிருவரில் திரு.ஆ. சபாரத்தினம் ஒருவர். இவர் தொடர்பான வெறும் அவதானிப்புத் தேடலாக முனைப்புப் பெற்றதைத் தவிர்க்க முடியவில்லை. எனவே காண்பவர் அனைவரிடமும் இவரைப் பற்றிய தகவலைத் தேடுவதில் கவனம் சென்றது. அதிருஷ்டவசமாக எனக்குக் கீழ் சிறிது காலம் பயிலுனராகப் பணிபுரிந்த அவரது பேர்த்தி முறையானவரின் உதவியுடன் நான் பெற்றுக் கொண்டவை இவை.

"நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சைவ ஆசாரமிக்க குடும்பத்திலிருந்து வந்தவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தவர். அரிவரி வாத்தியாராக ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கி 33 வருடங்கள் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கு வரலாற்றாசிரியராகத் தொடர்ந்திருந்து அதிபராக உயர்ந்து ஓய்வு பெற்றவர். வரலாறு, சமயம் போன்ற துறைகளில் புத்தகம் எழுதுபவர். தான் வாசித்து மற்றவர்களுக்கும் கொடுப்பது மட்டுமன்றி மற்றவர்கள் கேட்கும் புத்தகங்கள் எங்கிருந்தாலும் அதைத் தேடியெடுத்துக் கொடுக்கும் பண்பு கொண்டவர். சிறு பிள்ளை என்றாலும் கூட மதித்து, அந்தஸ்து பேதமின்றி அனைவருக்கும் உதவும் மனப்பாங்கு கொண்டவர். புத்தகங்களுடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டவார். புத்தகம் இன்றிச் சபாரத்தினம் இல்லை."

நூலகம்

உண்மை தான்! எமது சமூகத்தில் நூலகம் பற்றியும் நூலகத்தின் உண்மையான வாசகர் பற்றியும் பேச விழையும் எவரும்:

"எந்த நேரமும் புத்தகமும் கையுமாகத் திரிபவர்; ஆங்கிலம், தமிழ், வடமொழிப் புலமையுடையவர்; லத்தீன் மொழியில் ஓரளவு பரீச்சயம் உடையவர்; சிறு வயதிலேயே எழுத்துத் துறையில் நுழைந்து கலை, இலக்கியம் வரலாறு, மொழிபெயர்ப்பு போன்ற துறைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதியவர்; காந்தியச் சிந்தனைகளிலும் அகிம்சையிலும் நம்பிக்கையுடையவர் ;சொல்லும், செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டுபவர்; தீண்டாமையைச் சிறு வயதிலிருந்தே எதிர்த்தது மட்டுமன்றிச் சாதி பேதம் இன்றி எல்லா மாணவர்களையும் வீட்டுக்கு அழைத்து இலவசக் கல்வி வழங்கியவர்"



என்றெல்லாம் போற்றப்படும் இவரை மறந்து வீட்டுப் பேசமுடியாது. இத்தகைய பெருமைகளைச் சுமந்து கொண்டும் "தலைப்பாரமின்றித" திரியும் வல்லமை பெற்ற இந்த அறிஞர் 76 அகவையைக் கடந்த பின்னரும் எறும்பு போல் மிகவும் சுறுசுறுப்புடன் இருந்தும், நடந்தும், படுத்தும், என்றும் புத்தகமும் கையுமாக நம்மிடையே உலா வருபவர்.

இவரை நூலகத்தின் ஒழுங்கான வாசகராக மட்டும் பார்த்த மனம் சற்று முன்னேறி எழுதுவதற்காக வாசிப்பவரா? வாசிப்பதால் எழுதுகின்றாரா? என்ற ஆய்வுக்கு இட்டுச் சென்றமைக்கு இன்னொரு காரணம் வெளிநாட்டுப் பேராசிரியர் ஒருவருடன் இவரை எந்நேரமும் காணக்கூடியதாக இருந்தமையே. இவர் பற்றி மற்றவர்கள் என்ன கூறுகின்றார்கள் என்று அறியும் ஆவலில் அச்சு வடித் தகவலை நோக்கி தேடல் மீண்டும் தொடர்ந்தது.

*"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன், நுண்மாண் நுழைபுலமுடையோன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோன், நடமாடும் பல்கலைக்கழகம் என்றெல்லாம் கூறக்கூடிய ஒருவர் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றால் அவர் கரம்பனூர் திரு ஆ. சபாரத்தினம் அவர்களே. இவர் மேடையில் ஏறிப் பிரசங்கம் செய்வதில்லை. ஆனால் வாழ்ந்து காட்டுவதன் மூலமே சமுதாயத்தைத் திருத்தலாம் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர். இவர் போன்றவர்கள் ஆயிரத்தில் ஒருவரே இருக்க முடியும்"*

என்கின்றார் இவரின் மாணவர்களில் ஒருவரும் மூத்த எழுத்தாளருமான திரு காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்.

*"சிறு வயதில் இவர் சிறந்ததோர் பேச்சாளர், பேச்சால் அனைவரையும் கவர்ந்து தனக்கென ஒரு தனித்துவமான கூட்டத்தை வைத்திருந்தார். எந்நேரமும் புத்தகமும் கையுமாகக் காணப்படும் இவர் சிறந்ததொரு நாடக அறிஞராகவும் அறியப்படுகின்றார்"*

என்கிறார் இவரின் நண்பரும் இலக்கிய வட்டத் தலைவருமான த. பரமானந்தம் அவர்கள்.

*"இனிமையானவர், அமைதியான சுபாவமுடையவர், மரபு இலக்கியத்தில் மட்டுமன்றி நவீன இலக்கியத்திலும் பாண்டித்தியம் பெற்றவர், மேனாட்டு*

*இலக்கியப் பரிச்சயம் இவருக்கு நன்றாகவே உண்டு என்பதை மல்லிகையில் இவர் எழுதிய கட்டுரைகள் நிருபிக்கின்றன"*

என்கிறார் இவருக்குக் "காவல் நகரோன்" எனப் புனை பெயரிட்ட இன்னொரு நடமாடும் நூலகமான திரு ஏ.ஜே. கனகரட்னா அவர்கள்.

*"1958ம் ஆண்டு ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் இலங்கை வரலாறு, உலக வரலாறு, வரலாற்றில் இலக்கியம் சமயம், அரசியல், அறிவியல் எனப் பல வீடயங்களைக் கற்பித்தவர் இவர். இவரின் மூலமாகத்தான் மகாத்மா காந்தி, டால்ஸ்டாய், அரவிந்தர், தாகூர் போன்று மேலும் பலரை அறிந்து கொண்டேன். நூலகத்தில் புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவர் இவரே"*

என்கின்றார் இவரது இன்னோர் மாணவரும் நவீன சிந்தைகளைக் கொண்டவர் என அறியப்படுபவருமான திரு ஜீவகாருண்யம்.

*"என் இனிய நண்பரான ஆசிரியரும் நூலகருமான திரு சபாரட்னம் அவர்களுக்கு அந்த மறக்க முடியாத சில அனுபவங்களுக்காக நன்றி செலுத்த விரும்புகின்றேன். மிகக் கடினமான சூழலில் கூட எனக்கு உதவ அவர் பின் நின்றதில்லை. போர்க் காலச் சூழல் ஏற்படுத்திய தடைகளைக் கடந்தும் ஒரு துவிச் சக்கர வண்டியில் நாம் இருவரும் அனைத்தையும் சாதித்தோம். எம்மைச் சுற்றி எறிகணைகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருக்கும்போது அவர் மிர்சியா இலியாட்சின் ஆக்கம் தொடர்பாக தனது மதிப்பீட்டை வழங்கிக் கொண்டிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக தனது சொந்த உதாரணத்தின் மூலம் சைவத்தின் மிகச் சிறந்த அம்சங்களை எனக்கு உணர்த்தினார். அவற்றை அவர் தமது நீண்ட வாழ்க்கையினூடாக தம் உள்ளத்தில் ஒன்றிணைத்திருக்கின்றார்"*

2002ல் உப்சாலாவில் வெளிவந்த "குடியேற்ற காலத்துக்கு முற்பட்ட தமிழகத்திலும் ஈழத்திலும் பௌத்தம்". என்ற நூலின் முகவுரையில் மேற் கண்டவாறு குறிப்பிடுகின்றார் உப்சாலாப் பல்கலைக் கழகத்தின் சமயங்களின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் பீற்றர் சால்க் அவர்கள்.

*"அவர் ஒரு குடத்திலிட்ட விளக்கு, சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரை அவர் ஒரு ஊரறியாப் பேரறிஞர். தமது ஆத்ம திருப்திக்காகக் கற்று இலைமறை காயாக வாழும் ஒரு சில அறிஞர்களுள் சபாரத்தினமும் ஒருவர்"*

என்கிறார் யாழ் பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரான திரு சுசீந்திரராசா அவர்கள்.

அறிஞர் என்பதை அப்பட்டமாகக் காட்டிய ஊடகங்கள் அறிஞரானதற்கான அடித்தளத்தை மட்டும் காட்டாமல் விட்டது ஏன் என்று மனதிற்குள் எழுந்த வினா இவரிடம் நேரடியாகவே அணுகும் தூண்டலை ஏற்படுத்தியது. இந்த அடிப்படையில்

**இத்தனை பெருமைக்கும் பின்னணி ----**

"சிறு வயதிலிருந்து எனக்கு இருந்த வாசிப்புப் பழக்கமே என்னை மற்றவர்கள் அறியும் நிலைக்கு உயர்த்தியது. வெறும் கல்வித் தகைமை மட்டும் இருந்திருந்தால் நானும் ஆசிரியத் தொழிலுடன் என்னை மட்டுப்படுத்திக் கொண்டு சமூகத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்திருப்பேன். வாசிப்புப் பழக்கம் எனக்குக் கிடைத்த அரிய சொத்து என்றே எண்ணுகின்றேன்".

**வாசிப்புப் பழக்கத்தை உங்களுக்கு ஏற்படுத்தியவர்கள் -----**

வாசிப்புப் பழக்கத்துக்கு முதல் அடியிட்டவர் எனது தாய் தான். தன் பிள்ளைக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊட்ட வேண்டும் என்ற அறிவியல் நோக்கில் அவர் எதையும் செய்யவில்லை. அவர் தன்னையறியாமலேயே செய்த மகத்தான பணி கதை சொல்லுதல். நாள்தோறும் கதை சொல்லும் அந்தப் பழக்கமே எனது வாசிப்புக்கு அடிகோலியது என்றே நான் நினைக்கின்றேன்.

கிராமத்தில் நான்காம் வகுப்புப் படிக்கும் போதே தட்டுத் தடங்கலின்றி விரைந்து வாசிப்பதைப் பார்த்த ஆசிரியர் வித்துவான். இ. பொன்னையா அவர்கள் ஏழாம் வகுப்பு மாணவர்களுடைய 'பாண்டவர் லீலை' என்ற பாடநூலை என்னைக் கொண்டு வாசித்துக் காட்டுவார். அப்போதிருந்தே பொழுது போகாத நேரங்களில் வீட்டிலிருந்து இலங்கை நாவல்களை வாசிக்கத் தொடங்கிவிட்டேன். புதுப்புது வெளியீடுகளான சுத்தானந்த பாரதியின் யோகசித்தி, திருமந்திர விளக்கம் போன்றவற்றை அவர் படிக்கும் போது நான் பின்புறமாக நின்று எட்டி எட்டிப் பார்ப்பேன். படிக்க விருப்பமா என்று கேட்பார். ஆம் என்று தலையாட்டுவேன். ஓரிரவு மட்டும் தான் தருவேன் என்பார். 300 பக்கம் என்றாலும் குப்பி விளக்கில் இரவிரவாகப் படித்து முடித்துவிட்டுக் கொடுத்து விடுவேன். ஆறாம் வகுப்பில் கணித பாட ஆசிரியர், சுத்தானந்த பாரதியார் மொழி பெயர்த்த இளிச்ச வாயன், ஏழை படும்பாடு போன்ற பிரெஞ்சு நாவல்களைத் தந்தார். வாசிக்கும் பழக்கம் கூடியது. ஆனந்த போதினி, ஆனந்த விகடன், பின்னர் கல்கி, கலைமகள் போன்றவற்றை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

1944ல் நான் புனித அந்தோனியார் கல்லூரியில் 8ஆம் வகுப்புப் படித்த காலத்தில் ஆங்கில இலக்கியம் படிப்பித்த ஆசிரியரான வி.அரசன் "வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்கும், பேச்சு ஆயத்த நிலையில் வைத்திருக்கும், எழுத்து சரியாக நுட்பமாகச் சிந்திக்க வைக்கும்"என்ற பிரான்ஸிஸ் பேகனின் வாசகத்தைக் கத்திக் கத்திச் செவிகளில் திணித்துவிட்டார். பெரும்பாலும் எமது முதல் பாடவேளை ஒழுக்க அறிவியலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும். அப்பாடவேளையில் பெரிய பெரிய தொகுதிகளாக உள்ள சிறுவர் கலைக்களஞ்சியம், புக் ஒவ் நொலேட்ஜ் போன்றவற்றில் ஒவ்வொரு தொகுதியாகக் கொண்டு வந்து ஒரு பாட வேளைக்கு ஒரு விடயம் என்ற அடிப்படையில் எமக்கு ஒவ்வொன்றாக வாசித்து விளக்குவார். எத்தனை வேலைகளுக்கிடையிலும் படுக்கப் போகுமுன்னர் பத்து நிமிடமாவது ஒரு புத்தகம் வாசித்துவிட்டுப் படுக்க வேண்டும் என்பார்.

என்னுடன் படித்த நண்பர் திரு.இ.கிருஷ்ணபிள்ளை அவர்கள் நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும், உண்டும், என்றும் புத்தகங்களுக்கிடையில் இருக்க வேண்டும் என என்னை ஊக்கப்படுத்துவார். இச் சூழலால் வாசிக்கும் பழக்கம் மேலும் கூடியது. ஒருவரிடம் நூல் இருந்தால் 5 மைல் தூரம் நடந்து போய் என்றாலும் இரவல் வாங்கிப் படிக்கும் அளவுக்குப் புத்தகத்தில் ஒரு வேட்கை உருவாகியது.
1947இல் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சுமார் 20 கண்ணாடி அலுமாரிகளில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. விஞ்ஞானம் கணிதம் போன்றவற்றைக் கண்ணாடிக்குள் பார்த்தும் பிறவற்றை கையிலெடுத்துப் பொருளடக்கத்தைப் பரிச்சயம் செய்தும் கொள்வேன். நான் படிக்காத பாடமானாலும்

அவற்றில் என்னென்ன நூல்கள் இருக்கின்றன என்று அவர்களுக்குக் காட்டிக் கொடுக்குமளவிற்கு நினைவு கூர்மையாக இருந்தது.

**நூலகப் பழக்கம் எங்கே எப்போது----**

“தற்போதைய யாழ். மாநகரசபைப் பொது நூலகம் 1951ஆம் ஆண்டு முற்றவெளி நகர மண்டபத்துக்குக் கிழக்கே வாடி வீட்டுக்குத் தெற்கிலுள்ள கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கிக் கொண்டிருந்த காலத்திலேயே அங்கத்தவராகச் சேர்ந்து விட்டேன். அன்றிலிருந்து இன்று வரை இந்த நூலகத்தில் அங்கத்தவராக இருக்கின்றேன். 1960–64 இலண்டன் பேராதனைப் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்குப் படிக்க இது உதவியது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் கைலாசபதி போன்றோருக்குத் தேவையான கிடைத்தற்கரிய நூல்கள் கூட இங்கு பெற்றுக் கொடுத்துள்ளேன். ஐசக் தம்பையா, கு. வன்னியசிங்கம் போன்றோரின் நூற்றொகுதிகளைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. 1965இல் சரித்திர நூல்கள் எழுதும் போது சிறிதும் அனுபவமில்லாத எனக்கு இங்குள்ள நூல்களே கை கொடுத்துதவின. நூலகம் எரிந்தபோது வேறு எவரையும் விட அதிகம் கவலைப்பட்டவன் நான் தான்”. என்று இன்றும் அதே கவலையுணர்வுடன் கடந்த காலத்தை நினைவு கூருகின்றார் இவ்வறிஞர்.

**சிறந்த நூல்கள் எங்கே எத்துறையில்-**

தனது பழைய மதிப்பைக் கணிசமாக இழந்து விட்டபோதும் கணினி போன்ற நவீன துறை சார்ந்த புதிய நூல்கள் மட்டுமன்றி சிறந்த கலை நூல்களையும் கொண்டிருக்கின்றது யாழ்.மாநகரசபைப் பொது நூலகம். வரலாற்றுத்துறை சார்ந்த முக்கிய புத்தகங்களை கொண்டிருக்கின்றது யாழ். பல்கலைக்கழக நூலகம். என தனது கருத்தைக் கூறுகின்றார்

**வாசிப்புப் பழக்கம் தற்போது அருகி வருகின்றமைக்கு----**

வாசிப்புப் பழக்கம் ஒன்றில் வீட்டிலிருந்து அல்லது படிப்பிக்கும் ஆசிரியரிடமிருந்து தான் பிள்ளைக்கு ஊட்டப்பட வேண்டும். நடைமுறையில் வாசிப்புப் பழக்கத்துக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளாமலேயே தனது படிப்பை முடித்துவிட்டு பெற்றோராகவோ அல்லது ஆசிரியராகவோ மாறும் பண்பு இச் சமூகத்தில் இருக்கும் வரை இந்த பலவீனம் தொடர்ந்து நிலை கொள்வது தவிர்க்க முடியாதது.

இருபதாவது வயதிலேயே தன்னுடன் கூடப் படித்தவர்களால் Voracious reader எனப் புகழப்படுமளவிற்குத் தீவிர வாசிப்புக்காரராக இருக்கும் இவர் வாசகர் மட்டுமல்லர். இவரது நடவடிக்கைகளை மிகக் கூர்ந்து அவதானிக்கும் எவரும் மற்ற எல்லாத் தொழில்களையும் விட நூலகத் தொழில் இவருக்கு மிகப் பொருத்தமானது என்று அறுதியிட்டுக் கூறுமளவிற்கு நூலகரால் கூடச் செய்ய முடியாத எத்தனையோ உதவிகளை இவரிடமிருந்து பெற்ற பெரியவர்கள் மிக அதிகம். தனக்குத் தேவைப்படும் நூல்களை விடப் பிறருக்குத் தேவைப்படும் நூல்களைத் தேடி அலையும் பண்பு தான் இவரிடம் அதிகம். 74 அகவையைத் தாண்டிய பின்னரும் கூட எறும்பு போன்று மிகவும் சுறுசுறுப்பாக நூலக இறாக்கைகளுக்குள் நூல் தேடித் திரியும் இவரைப் பார்த்தால் புரியும், இவர் தேடும் நூல்களில் பெரும்பாலானவை இவருக்கு வேண்டிய எவரினதோ அறிவுத் தேடலுக்கு உதவப்போகின்றன என்று. சுவீடன் பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சார்க் அவர்களுக்குத் தேவைப்படும்

பெரும்பாலான நூல்களை எங்கிருந்தாலும் தேடி எடுத்து உதவுவதில் முன்னிற்பவர் இவர் என்பது இன்று நாம் நேரே கண்டுணரும் ஒன்று. நல்லதோர் வாசிப்புப் பழக்கமே நல்லதொரு நூலகராகவும் இயங்கும் ஆற்றலைக் கொடுத்திருக்கின்றது.

உங்களின் இறுதி இலட்சியம் எது வென வினவியபோது பொ. கைலாசபதியின் சிந்தனைகள் என்ற 700 பக்க நூலுக்கு குறிப்பு விளக்கம் எழுதி அதை வெளியிடுவதே தனது பெருவிருப்பம் என்கின்றார்.

நூலகத் துறை சார்ந்த இவரது பங்கு அளப்பரியது. மாணவப் பருவத்திலேயே நாரந்தனை இளைஞர் சங்கத்தை அமைத்து 23 சஞ்சிகைகளை இந்தியாவிலிருந்து தருவித்து வாசிகசாலை ஒன்றைப் பத்து ஆண்டுகள் வரை நடத்தியவர். கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்கு கணிசமான பங்களிப்பு வழங்கியவர்.

யாழ்ப்பாணப் பொது நூலகராக இருந்த கலாநிதி வே.இ. பாக்கியநாதனிடமும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நூலகராக இருந்து பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் நூலகப் பொறுப்பாளராக இருந்த திரு.ஆர். தம்பையாவிடமும் நூலகவிஞ்ஞானம் படித்திருக்கிறார். அக்காலத்தில் பரீட்சைக்கு தோற்றிய 17 பேரில் தாம் மட்டுமே சித்தியடைந்ததாகக் கூறுகிறார். கீழைத்தேச நூலகவியலின் தந்தை எனப் போற்றப்படும் எஸ்.ஆர். இரங்கநாதன் யாழ். பொது நூலகத்தின் வடிவமைப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்கும் பொருட்டு இங்கு வந்திருந்தபோது அவரை நேரில் சந்தித்து உரையாடி தான் பிறந்த மண்ணுக்கே அழைத்துச் சென்று அங்கு அனைவருக்கும் ஒரு விரிவுரையையும் ஒழுங்குபடுத்தி மூன்று மணி நேரம் அவருடன் கழித்ததையும் அவரின் அறிவை நினைத்துத் தான் பிரமித்ததையும் பெருமையுடன் நினைவு கூறுகின்றார்.

சுவீடன் உப்சாலாப் பல்கலைக்கழகத்தின் சமயங்களின் வரலாற்றுத் துறையில் மூன்று மாதம் தங்கியிருந்து பேராசிரியரின் தொகுப்புக்களைச் சுவீடன் முறையிலான நூலக விஞ்ஞான முறையிலான பகுப்பாக்க முறையில் ஒழுங்குபடுத்தியவர். நூலகத் துறை சார்ந்து இவர் ஆற்றிய மாபெரும் பணியாக நாம் கருதக் கூடியது யாழ்ப்பாணத்தில் வெளி வந்த சமயம் சம்பந்தமான நூல்கள், கட்டுரைகள் போன்றவை தொடர்பாக இவர் தொகுத்த 150க்கும் மேற்பட்ட ஆக்கங்களுக்கான குறிப்புதவு நூல் விபரப் பட்டியலாகும். 1986ல் இவரால் தொடங்கப்பட்ட இப் பணியானது தற்போது தான் அச்சுருப் பெறுவதற்கான ஆயத்த நிலையில் இருக்கின்றது. இதைத் தொகுப்பதற்கு யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம், யாழ். பல்கலைக் கழக நூலகம் மட்டுமன்றி தனிப்பட்டவர்களது வீட்டில் வைத்துப் பேணப்படும் நூல்களும் பயன்படுத்தப்பட்டாக இவர் சொல்கின்றார்.

நடமாடும் இந்த நூலகம் ஒரு நூலகத்தையே நிர்வகிக்கும் வாய்ப்பு இல்லாது போனது இந்தச் சமூகத்தின் இழப்பு என்பது நிதர்சனமான உண்மை.

# இணுவை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் பெண்கள் கல்லூரி நூலகம்

திருமதி.காஞ்சனமாலா - உதயகுமாரன்

"ஆண் ஒருவனுக்கு அளிக்கும் கல்வி
தனிமனிதனுக்குரிய கல்வி.
பெண்ணுக்கு அளிக்கும் கல்வியோ முழுக்
குடும்பத்துக்கும் அதன் மூலம்
சமூகத்துக்கும் அளிக்கும் கல்வி"

என்ற உயரிய சிந்தனையை அடித்தளமாகக் கொண்டு 1913ம் ஆண்டு சேர். பொன். இராமநாதன் அவர்களால் சைவப் பின்புலம் மிக்க இணுவை மண்ணில் உருவாக்கப்பட்டதே இராமநாதன் கல்லூரியாகும். சமய ஞானத்துடன் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பாண்டித்தியம் பெறும் வகையில் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட முதல் இந்து மகளிர் கல்லூரி என்ற பெருமையையும் இது பெறுகிறது. 1963ஆம் ஆண்டில் இப் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது

யாழ்ப்பாணத்திலே 1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்துக்கு அடுத்தபடியாக அதிக நூல்களைக் கொண்ட நூலகம் என்ற பெருமை இராமநாதன் கல்லூரி நூலகத்துக்குண்டு. இந்த நூலகமானது 7651 நூல்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது என்று 1974ம் ஆண்டு வெளியிடப்பட்ட வைர விழா மலரின் வாயிலாக அறியக் கிடக்கிறது. அது மட்டுமன்றிப் பெரும் பாலான பாடசாலைகளில் இன்றும் நூலகத்துக்கெனத் தனியான பாடவேளை ஒதுக்காத துர்ப்பாக்கிய நிலையில் அக் காலத்திலேயே 8 –12ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கென ஆசிரியர் மேற்பார்வையில் ஒரு பாட நேரம் நூலகப் பாவனைக்கென ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் அறியக் கிடக்கிறது. இராமநாதன், லீலாவதியால் எழுதப்பட்ட இராமயணம் என்ற ஆங்கில நூல், இராமநாதன் பற்றி வைத்திய லிங்கம் எழுதிய ஆங்கில நூல்கள், கலைக்களஞ்சியங்கள், புவியியல் நூல்கள், வரலாற்று நூல்கள், சமய, தமிழ் இலக்கியங்கள் போன்ற நூல்கள் அதிகம் இருந்ததாகவும், ஆரம்பத்தில் என்.பீ பிள்ளை என்பவர் நூலகராக இருந்தார் என்றும் இவர் மிகவும் கண்டிப்பானவர் மட்டுமன்றித் திறமையான முறையில் நூலகத்தை நிர்வகித்தார் என்றும் கூறுகின்றார் இங்கு உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சிவசோதி கந்தசாமி அவர்கள்.

எண்ணிலடங்கா அறிஞர்களை உருவாக்கிய பெருமை இந் நூலகத்துக்குரியது என்பதை இந் நூலகத்தைப் பயன்படுத்தி இன்று பலதரப்பட்ட துறைகளிலும் தமது திறமையை நிரூபித்துக் கொண்டிருக்கும் பெரியோர்கள் அறிஞர்களைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியும். இங்கு ஆசிரியராக இருக்கும் அறுபது பேரில் அரைவாசிக்கு மேல் இப் பாடசாலையின் பழைய மணவியர். திருமதி யோ.இராசரத்தினம், திருமதி ஞா. சோமசுந்தரம், திருமதி. பு. சச்சிதானந்தம், திருமதி. சி. குமாரசுவாமி போன்றோர் இங்கு மாணவியராக இருந்து ஆசிரியராக மாறி,

அதிபராக உயர்ந்து ஓய்வு பெற்றவர்கள். இவர்கள் நூலகம் தமது கல்வி வளர்ச்சியில் பங்காற்றிய விதம் பற்றி அடிக்கடி பெருமையுடன் குறிப்பிடுவார்கள். நூலகம் பற்றி எழுதும்போது இணுவில் மண்ணில் பிறந்து இணுவில் மகளிர் கல்லூரியான இராமநாதன் கல்லூரியில் படித்து நூலகத்துறையில் தமது சுவடுகளைப் பதித்துக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக நூலகர்களான திருமதி. இ.கருணானந்தராஜா, திருமதி. ஸ்ரீகாந்தலட்சுமி , திருமதி. த. ஸ்ரீதரன், பொது நூலகத் துறையில் கடமையாற்றும் திருமதி. வா. பரமேஸ்வரன், திருமதி ர. கருணாநிதி போன்றோரைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதுபோன்று நிர்வாகத் துறையில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபராக இருந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பதிவாளராக இருக்கும் திருமதி. மைதிலி சோமசுந்தரம், மருத்துவ சேவையில் யாழ் வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர் ஜெயந்தி, கல்வித் துறையில் தேசியக் கல்வி நிறுவகத்தில் இருக்கும் வி. மீரா, யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர். திருமதி ஜெயராஜா – – – இப்படிப் பலதரப்பட்ட துறைகளிலும் தடம் பதிக்கக் கூடிய பல பெரியோர்களை உருவாக்கிய பெருமை இக் கல்லூரி நூலகத்துக்கு உண்டு.

இத்தகைய பழமை வாய்ந்ததும் பெருமை வாய்ந்ததுமான நூலகம் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் போர்ச்சூழலின் போது மிகவும் பாதிக்கப்பட்டு அங்கிருந்த பெரும்பாலான நூல்கள் அழிந்து விட்டன. கடைசியாக இராணுவத் தளபதியாக இருந்த திரு. சர்மா என்ற அதிகாரி நூல்களின் மதிப்பையும் பெறுமதியையும் உணர்ந்த ஒருவராக இருந்தமையால் எஞ்சியிருந்த நூல்களை இறாக்கைகளில் ஒழுங்குபடுத்திப் பக்குவமாக அடுக்கி வைத்து நாம் பாடசாலைக்கு வந்தபோது எம்மிடம் ஒப்படைத்தார் என இங்கு ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி பத்மநாதன் கூறுகின்றார்.

பின்னர் 1990ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட நூலகக் கட்டடத்தில் கல்வித்திணைக்களத்தின் வலி. தெற்குக் கோட்ட வலயம் இயங்குகின்றது. நூல்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையாலும் நிரந்தர நூலகரின்மையாலும் தொடர்ச்சியான சேவையை வழங்க முடியாமல் விடுதியின் ஒரு புறத்தில் இயங்குகின்றது. போர்ச்சூழலின் போது பாதிக்கப்பட்ட நூல்கள் இன்றும் ஈடாடிய நிலையில் இறாக்கைகளில் அடுக்கிப் பாதுகாக்கப்படுகின்றன.

1998இல் தற்போதைய அதிபர் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் எடுத்த முயற்சியின் பலனாக நிரந்தர நூலகராக நியமனம் பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந் நூலகத்துக்கு முதன்முதல் வந்து பார்த்தபோது நூல்கள் அடுக்கப்பட்ட விதம், இறாக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்ட விதம், நூலகம் பூட்டி வைக்கப்பட்ட நிலை அனைத்தும் சேர்ந்து இந்த வேலையே தேவைதானா என என்னை எண்ண வைத்தது உண்மைதான். நூலகத்தின் பதிவேடுகள் அனைத்துமே அழிந்து விட்டன எனினும் 1999இல் நூலக உத்தியோகத்தராக இருந்த திருமதி குயின்ஸ்ரன் டிவினியாவின் உதவியுடன் நூல்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தினோம். தொடர்ந்து நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், கல்வித்திணைக்களத்தினர் உதவியுடன் கிட்டத்தட்ட 1800 புதிய நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்துள்ளன.பண்பாடு, விளக்கு, ஞானச்சுடர், நல்வழி, சமாதான நோக்கு போன்ற சஞ்சிகைகளையும் கொள்வனவு செய்கிறோம். தற்போது

செல்வி சிவாஜினி வேலும் மயிலும் என்பவர் ஆசிரிய நூலகராகப் பதவி வகிக்கின்றார்

தற்போதைய கல்வித் திட்டம் ஆரம்பப் பிரிவுக்கு விளையாட்டுடன் கூடிய கல்வியையும், மேற்பிரிவுக்குத் தேடிக் கற்கும் கல்வியையும் வலியுறுத்துவதனால் தகவல் தேடுதலில் ஊக்கமும் ஆக்கமும் பிறந்துள்ளன. எமது கல்லூரியில் ஆசிரியர்களை விடவும் மாணவர்களே நூலகத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர். அட்டைப் பதிவு முறையைப் பயன்படுத்தி 2004ல் 61 மாணவர்கள் நூல்கள் இரவல் பெற்றுச் சென்றுள்ளனர். குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்கள் பாடவிதான செயற்பாட்டுடன் இணைந்த செயற்திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டும், மற்ற மாணவர்களை விடவும் தாம் புதிதாக ஏதாவது எழுதிவிடவேண்டும் என்ற ஆவலிலும் நூலகத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர். இடைத்தர வகுப்பு மாணவர்கள் பாடவிதான நூல்களைப் பாவிப்பதிலும் விட கதைப்புத்தகங்கள், விடுகதைகள், கவிதைகள், புராணக் கதைகள் என்பவற்றையே ஓய்வு நேரங்களில் வாசிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மாணவர்களை வாசிக்கத் தூண்டும் பொருட்டும் நூலகப் பயன்பாட்டை மேம்படுத்தும் பொருட்டும் பல செயற்திட்டங்களை மேற்கொள்கின்றோம்.

- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குத் தனியாக நூலகம் அமைக்கப்பட்டுப் பகுதித் தலைவரின் பொறுப்பில் இயங்குகின்றது. ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தமக்குக் கிடைக்கும் நேரத்தில் மாணவரை அங்கு அழைத்துச் சென்று வழிகாட்டுகின்றனர்.
- இடைத்தர, மேற்பிரிவு மாணவருக்கு கண்காட்சிகள், போட்டிகளை நடாத்துதல், கதை கூறல், நூலக வாரம் போன்ற செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்கிறோம்.
- 2004ஆம் ஆண்டு ஆசிரியர், மாணவர்களுக்குள் சிறந்த வாசகரைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கியிருக்கின்றோம். நூலக வார நிகழ்வில் சிறந்த ஆசிரியராக திரு. கா. சாந்தநாதன் என்பவருக்கும், சிறந்த மாணவ வாசகராக இடைத்தர வகுப்பு மாணவி செல்வி பிலிசியாவிற்கும், உயர்தர வகுப்பு மாணவி செல்வி கலைச்செல்வி என்பவருக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தோம்.

நாடு வளம் பெற ஏடுகள் சிறக்க வேண்டும். என்பது அறிஞர்கள் கண்ட கோட்பாடு. ஏடுகள் சிறக்க நூலகம் வளத்தால் பெருகவேண்டும். பாடசாலை நூலகம் ஒரு மனிதனின் அடிப்படை வாசிப்புத் தளமாக அமைகிறது. எனவே படிப்போருக்குப் பயன் தரும் வகையில் தகவல்களைப் பகுத்தும் தொகுத்தும் வைப்பது நூலகத்தின் கடமையாகும். பல்கிப் பெருகி வரும் நூல் வெளியீடுகள், பருவ இதழ்கள், அறிவேடுகள், சிற்றேடுகள், கையேடுகள், கட்டுரைகள் எனத் தகவல் வளங்களின் பெருக்கம் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எண்ணற்றவையாக உள்ளன. காகிதத்திலிருந்த நூலகம் மெல்ல மெல்ல நுண்வடிவங்கள், சீடீரோம்கள், இணையத் தளங்கள் எனப் புதிய தொழினுட்பம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில் எமது கல்லூரி நூலகம் நிரந்தர இடமும், அடிப்படை வசதியும் இன்றி இருப்பது வேதனைக்குரியதொன்று.

# "புத்தகங்களே எனது நண்பர்கள்"
# தந்தை ஒருவரின் வாசிப்பு அனுபவங்கள்



சுவாமி விவேகானந்தர் அவர்களின் ஞான தீபம் பத்துத் தொகுதிகள், மகாத்மா காந்தி நூல்கள் 12 தொகுதிகள், தாகூரின் கீதாஞ்சலி, உலகச் சிந்தனையாளர்களின் 11 தொகுதிகள், முத்துசுவாமி தீட்சிதர், தியாகராயர் ஆகியோரின் கீர்த்தனைகள், பகவத் கீதை, புகழ் பெற்ற மேற்கோள்கள், கலியாணசுந்தரனாரின் பெண்ணின் பெருமை...... அத்தனையும் புத்தம் புதிதாக வாங்கியது போன்று ......

திரு.இ.திருச்செல்வம்

இணுவில் அறிவாலயத்துக்கான அன்பளிப்புகளைச் சுமந்து வந்து சேர்க்கும் திரு. சிவலிங்கம் ஐயா அவர்கள் ஒரு தடவை கொண்டு வந்த அன்பளிப்புப் பெட்டியைப் பிரித்த போது அதற்குள் இருந்த இத்தனை அரிய நூல்களும் இந்த நூல்களுக்குச் சொந்தக்காரரை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டின. அமைதியும், சாந்தமும் நிரம்பிய இந்த மனிதருடனான சந்திப்பு "வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்" என்ற வாசகத்தின் அர்த்தத்துக்கு அர்த்தம் சேர்ப்பது. இவரது அனுபவங்கள் இந்தச் சமூகத்துக்கு அவசியம் தேவையானவை.

### உங்களைப் பற்றி-----

நான் ஒரு சாதாரண மனிதன்.வயது 63. ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தை. பத்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி விட்டு, 35 வருடங்களுக்கு மேலாகப் புடைவைக் கடையில் ஊழியனாகத் தொழில் புரிந்து இன்று வீட்டில் இருக்கிறேன். புத்தகங்களைப் படிப்பதும் ,அவற்றை வாங்கிப் பாதுகாத்து வைப்பதும் எனது பழக்கம்.

### வாசிப்புப் பழக்கம் உருவானது பற்றி-------

சிறு வயதில் பொழுது போக்குக் கதைகள், துப்பறியும் நாவல்கள், சினிமாச் செய்திகள் என்று கண்டதையும் படிப்பேன். புத்தகம் படிக்கும் எனது ஆவலைக் கண்டு சாதாரண சுருட்டுத் தொழிலாளியாக இருந்த எனது தகப்பனாரே எனக்கு வேண்டிய அனைத்துப் புத்தகங்கள் சஞ்சிகைகளையும் வாங்கி வந்து தருவார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நான் படித்த காலத்தில் யோகேந்திரன் என்ற எனது நண்பன் "உந்தப் பொழுதுபோக்குப் புத்தகம் எல்லாம் படிப்பதை விட்டு இதை ஒருதரம் படித்துப் பார்" என்று மு.வரதராஜனின் "அல்லி" என்ற புத்தகத்தை அறிமுகப் படுத்தினான். எனது பதினேழாவது வயதில் நான் படித்த அந்தப் புத்தகம் எனக்குள் பாரிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியது. இருளில் இருந்து வெளிச்சத்துக்கு வந்தது போன்று ஒரு உணர்வு......தொடர்ந்து பல காலம் "மு.வ" வின் பைத்தியம் ஆட்கொண்டிருந்தது.. பின்னர் மகாத்மா காந்தி, விவேகானந்தர் என்று ஞானிகளின் உபதேசங்களை நாடி மனம் ஓடியது. அத்துடன் படிக்கும் நூலிலிருந்து பிடித்தமான பகுதிகளை எழுதி வைக்கும் பழக்கமும் ஏற்பட்டது. கிருபானந்த வாரியாரின் பிரசங்கங்களை விரும்பிக் கேட்டதன் ஊடாகச் செவி வழி அறிவையும் பெற்றுக் கொண்டேன்.

### வாசிப்பைத் தூண்டியவர் பற்றி-------

நான் சிறு பிள்ளையாக இருந்தபோது எனது தகப்பனார் புராண இதிகாசக் கதைகள், வள்ளுவர், பட்டினத்தார் போன்ற ஞானிகளின் உபதேசங்கள், பஞ்ச தந்திரம், விவேக சிந்தாமணி போன்ற நூல்களில் பொதிந்து கிடக்கும் நீதி வாக்கியங்கள் போன்றவற்றை மிகவும் சுவைபடச் சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு மூலையில் இருந்து படித்துக் கொண்டிருக்கும் போது கூட அவரது கதைகளே எனது மனத்தை ஈர்க்கும். சாதாரண சுருட்டுத் தொழிலாளியாக இருந்த அவர் நாம் விடும் தவறுகளைக் கூட

இக்கதைகளிலிருந்து மேற்கோள் காட்டியே திருத்துவார். இதுவே அறிவை அறிவதற்குப் படிக்க வேண்டும் என்ற எனது எண்ணத்துக்கான அடித்தளம்..

**நூலகப் பழக்கம் தொடர்பாக ----**

இணுவில் பரமானந்த நூலகத்தில் 1962ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு அங்கத்தவராகவும், அதன் நூலகப் பொறுப்பாளராகவும் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கடமையாற்றியிருக்கின்றேன். பொதுவாக வார இறுதிநாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே நூலகம் திறக்குமென்பதால் எனது கடை வேலையுடன் இதனையும் செய்யக்கூடியதாக இருந்தது. இங்கு பல அறிஞர்களின் புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதுமட்டுமன்றிப் புத்தகங்களை வாசிப்பவர்களின் மனநிலைகள், அவர்களின் குறைபாடுகள் பற்றிய அனுபவமும் கிடைத்தது. யாழ் பொது நூலகத்திலும் அங்கத்தவராக இருந்து பல புதிய நூல்களைப் படித்திருக்கின்றேன்.

**நீங்கள் அன்பளிப்புச் செய்த இப் புதிய நூல்கள் தொடர்பாக---**

இவை புதிய நூல்கள் அல்ல! நான் தந்துள்ள மகாத்மா காந்தி நூல்கள் 1967இல் 7ரூபா 75 சதத்துக்கு வாங்கியவை. விவேகானந்தரின் ஞானதீபம் வாங்கியதும் கூட ஒரு சுவையான அனுபவம். அக்காலத்தில் தர்ம சக்கரம் என்ற சஞ்சிகையில் விவேகானந்தரின் தொகுப்பு வெளியிட இருப்பதாகவும் ஆரம்பத்தில் பணம் கட்டுபவர்களுக்கு சலுகை வழங்க இருப்பதாகவும் ஒரு செய்தி படித்தேன். அதனடிப்படையில் தொகுதி 6ரூபா 50 சதத்துக்கு வாங்கியவைதான் நீங்கள் பார்க்கும் இந் நூல்கள். கடந்த வருடம் இந்தியா சென்றிருந்த போது ஒரு பெட்டி நிறைய புத்தகம் தான் வாங்கி வந்தேன். அதிலொன்று தான் இந்த தியாகராஜர் கீர்த்தனைகள்.நல்ல நூல்களைப் படிப்பதுடன் மட்டும் நின்று விடாது நல்ல நூல்கள் எங்கிருந்தாலும் வாங்கி வந்து புத்தக அலுமாரியில் பாதுகாத்து வைப்பதும் எனக்கு ஒரு பழக்கமாகி விட்டது.

**வாசிப்பு உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்-------**

சிறு வயதிலிருந்தே எனக்குள் குடி கொண்டிருந்த தாழ்வு மனப்பான்மையை, வாழ்க்கை பற்றி எனது பயத்தை நீக்கியது எனது வாசிப்புத் தான். எவ்வளவோ படித்தும் கூட சிறு பிரச்சினைகளுக்கும் மனம் உடைந்து விடும் பெரிய மனிதர்களைப் பார்த்திருக்கின்றேன். அந்தஸ்து மிக்க தொழிலில் இருந்தும் குறுக்கு வழியில் எதையும் அடையும் மனோபாவம் உள்ளவர்களைப் பார்த்து மனம் நொந்திருக்கின்றேன். வறுமையிலும் செம்மையாக வாழ, குடும்பப் பிரச்சினைகள் கழுத்தை நெரித்தபோதும் அதனைத் துணிவுடன் எதிர்கொள்ள இந்த அறிவு நூல்களே எனக்குத் துணை நின்றன.கால் கடுக்க நாள் முழுவதும் புடைவைக் கடையில் நின்று களைத்து விழுந்து வீட்டுக்கு வரும் எனது களைப்பை ஆற்றும் வல்லமை இந்தப் புத்தகங்களுக்கே உண்டு. "நாள்தோறும் வாழ்க்கையில் உணர்ந்தவைகளை நாட்குறிப்பில் எழுதி வைக்க வேண்டும் அது வாழ்க்கையில் திருந்துவதற்குச் சிறந்த வழி" என்ற வரிகளை "மு.வ" வின் "அல்லி" யில் வாசித்த அந்தப் 17வது வயதிலிருந்து தொடங்கிய "டைரி" எழுதும் பழக்கம் இன்று வரை நீடிக்கிறது.. குறைந்த சம்பளமும், ஓய்வற்ற வேலையும், கடும் சொற்களும் ஏற்படுத்தும் மன வேதனை, வீட்டின் அர்த்தமற்ற செயற்பாடுகள் ஏற்படுத்தும் கடுங்கோபம், அத்தனையையும் பக்கம் பக்கமாக டைரியில் எழுதுவதன் மூலமே தீர்த்துக்கொள்வேன். கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, பின் அதன் விளைவுகளுக்காக வருத்தப்பட்டு மீண்டும் மீண்டும் ஒரே வட்டத்துக்குள் நிற்கும் வாழ்க்கையிலிருந்து மீட்டுத் தரும் இதுவும் வாசிப்பால் விளைந்த பெரிய நன்மை என்றே நினைக்கிறேன்.

# அறிவின் திறவுகோல்

திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா

தகவல் மிக முக்கியமானது. கருத்துள்ளதும் கிடைப்பவருக்குப் பயனுள்ளதுமான எதுவும் தகவலாகும். பரம்பரை பரம்பரையாக நூலகங்கள் முக்கிய தகவற் களஞ்சியங்களாகச் செயற்பட்டு வருகின்றன. தகவல் சாதனங்களைச் சேகரித்தல், கட்டுப்படுத்தல், பாதுகாத்தல், ஒழுங்கமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தகவல்களை மீளப்பெறுவதிலும் வாசகர்களின் தேவைக்கேற்ப அவற்றை அளிப்பதிலும் நூலகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

பலதரப்பட்ட ஆவணங்களையும் பதிவேடுகளையும் மனிதன் முதன் முதலில் ஆக்கிய காலத்திலேயே அவற்றை ஒழுங்கமைக்கும் முறைகளில் முக்கிய ஆர்வம் கொண்டிருந்தான். நூலகத் தகவல் சேவையைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஒழுங்கமைத்தலுக்குக் கையாளப்பட்ட முக்கியமான சிறந்த முறையே பகுப்பாக்க முறையாகும். பகுப்பாக்கமென்றால் "ஒரு தகவலைப் பெறவிரும்பும் ஒருவருக்கு மிகவும் உபயோகமான முறையில் நூல்களை அல்லது வேறு சாதனங்களை இறாக்கைகளில் முறைப்படி ஒழுங்கமைத்தலும், பட்டியல், அட்டவணைப் பதிவுகள் ஆகியவற்றை முறையாக ஒழுங்கமைத்தலுமாகும்" என வரையறுக்கலாம். இதனுடைய முழு நோக்கம் வாசகர் மிகச் சுலபமாகத் தமக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதாகும்.



நூலகச்சேர்க்கையில் உள்ள நூல்களிலும் ஏனைய ஆவணங்களிலும் சேகரித்து வைக்கப்பட்டிக்கும் அறிவின் முழுப்பலனையும் வாசகர்கள் முழுமையாகப் பெறுவதனை இலகுவாக்கும் ஒரு கருவியே நூற்பகுப்பாக்கம் ஆகும்.

பகுப்பாக்கம் என்பது ஒரே விதமான அல்லது தமக்கிடையே ஏதாவது பொதுவான தன்மையைக் கொண்டுள்ள பொருட்களை ஒன்றாக்குதல் என்னும் பொருள் கொண்டது. வேறுவகையில் கூறினால் பகுப்பாக்கம் ஒத்த ஆவணங்களை ஒன்று சேர்த்து ஒவ்வாத ஆவணங்களிலிருந்து அவற்றைப் பிரிப்பது மட்டுமல்லாமல் ஒரு பிரிவிலுள்ளவற்றையும் அவை ஒத்திருக்கும் அளவைக் கொண்டு அவற்றை ஒழுங்கு செய்கின்றது. சுருங்கக்கூறின் பகுப்பாக்கம் அறிவின் திறவுகோல். ஆவணங்கள் சிறந்த முறையில் பகுக்கப்படாவிட்டால் ஒரு குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான நூலை நூலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள அதிக நேரம் செலவாகும். நூலகத்திலுள்ள நூல்கள் அவற்றின் அளவுகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் அது பார்ப்பதற்கு அழகாக இருக்குமே தவிரக் குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றிய நூலையோ நூல்களையோ மீளப்பெறுவது மிகக் கடினமாகும். எனவே நூல்களின் முழுப்பலனைப் பெறுவதற்கு அவற்றைப் பொருள்வாரியாகப் பகுத்தல் செய்வதே

மிகச் சிறந்த முறை என்பது நீண்டகாலமாக அவதானிக்கப்பட்ட விடயமாகும். கடந்த கால, நிகழ்கால, கூடிய அளவிற்கு எதிர்கால நூல்களையும் ஏற்கனவே உள்ள ஒழுங்கு சிதையாமல் ஒழுங்கு செய்யக் கூடிய சிறந்த முறை பகுப்பாக்கமாகும்.

கருத்துக்களினதோ, நூல்களினதோ, விஞ்ஞான மாதிரிகளினதோ சேர்க்கைகளின் முழுப்பலனை ஒருவர் பெற வேண்டுமாயின் அவை சீரான முறையில் ஒழுங்கு படுத்தப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். சாதனங்களை அவற்றில் காணப்படும் பொதுவான தன்மைகளுக்கு ஏற்றவாறு வகுப்புகளாகப் பகுக்க வேண்டும். தொடர்புள்ள விடயங்கள் உள்ள நூல்களை வேறாகவும், தொடர்பற்ற விடயங்களைக் கொண்ட நூல்களை வேறாகவும் பிரிக்க வேண்டும். ஆயினும் இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நவீன முறைகள் கூட முழுமையான வெற்றியை அளிக்கவில்லை. நூல்களென்பன மனிதனின் கருத்துக்கள் எழுத்துருவில் வடிக்கப்பட்ட உருவங்களாகும். இக்கருத்துக்கள் சிலசமயங்களில் சிக்கலானவையாகவும் இருக்கும். ஒரு நூலில் பலவிடயங்கள் விவாதிக்கப்பட்டிருக்கலாம்.

நூலகம் ஒன்றில் பகுப்பாக்கம் பின்வரும் வகைகளில் இன்றியமையாததாகின்றது.

- நூலகமொன்றின் வெற்றிகரமான இயக்கத்திற்குப் பகுப்பாக்கம் இன்றியமையாதது.
- இரவல் வழங்கப்பட்ட நூல் மீண்டும் நூலகத்தை அடைந்து அதனுடைய சரியான இடத்தை இலகுவில் அடைவதற்குப் பகுப்பாக்கம் அவசியம்.
- புதிய நூலொன்றை நூலகம் பெற்றுக் கொள்ளும்போது அதேதுறையைச் சேர்ந்த ஏனைய நூல்களின் மத்தியில் அந்நூல் சரியான இருப்பிடத்தை எடுப்பதற்குப் பகுப்பாக்கம் அவசியம்.
- நூலகர் நூல்களின் இருப்பை அறிவதற்கும், இருப்பெடுப்பைத் திறம்படச் செய்வதற்கும், எத்துறை பலவீனமானதோ அத்துறைக்கான புதிய நூல்களை சேர்க்கையில் அதிகரிப்பதற்கும் பகுப்பாக்கம் வழிவகுக்கின்றது.
- புதிய நூல்களை நூலகம் விளம்பரம் செய்ய வழிசமைக்கும் அதேசமயம் தேவையற்ற மிகப்பழைய பதிப்புக்களை இருப்பிலிருந்து களைவதற்கு நூலகருக்கு பகுப்பாக்கம் கை கொடுக்கின்றது.
- சரியான நூலைச் சரியான வாசகருக்கு வழங்க நூலகருக்கு உதவுகிறது
- நூலகர், துறைசார் அறிவுடையோர் நூல்விபரப்பட்டியல்கள், நூல் அட்டவணைகள், பட்டியல்கள் தயாரிப்பதற்கும் பகுப்பாக்கம் வழி செய்கின்றது.
- இரவல் வழங்கப்படும் நூல்களின் புள்ளி விபரத்தை நூலகர் சேகரிப்பதற்குப் பகுப்பாக்கம் உதவி செய்கின்றது.

ஒரு நூலை நாம் பொதுவாக இரு முறைகளில் பகுப்பாக்கம் செய்யலாம்.

1. பரந்த பகுப்பாக்கம்.
2. நுண்ணிய பகுப்பாக்கம்.

பரந்த பகுப்பாக்கம் என்பது ஒரு நூலுக்கு அது கூறும் விடயத்தைப் பொறுத்துப் பொதுவான அல்லது மேலெழுந்த வாரியான ஒரு பகுப்பெண்ணை வழங்குதலைக் குறிக்கும். நுண்ணிய பகுப்பாக்கம் என்பது ஒரு நூலுக்கு அது கூறும் விடயத்தைப் பொறுத்து விடயத்தின் சிறப்பம்சத்தினை வெளிக்கொணரத்தக்க வகையில் நுணுக்கமான ஒரு

பகுப்பெண்ணை வழங்குவதாகும். பரந்த பகுப்பாக்கம் சிறந்ததாக வாதிடுபவர்கள் நுண்ணிய பகுப்பாக்கம் சிலவேளைகளில் சில சிறப்பம்சங்களைக் கூறும் அத்தியாயங்களைக் கொண்ட பொதுவான நூல்களை வெவ்வேறிடங்களுக்குக் கொண்டு செல்வதாகக் கூறுவர். அதேசமயம் அவற்றை ஓரிடப்படுத்தலையும் அது செய்கின்றது என்பதையும் ஏற்றுக்கொள்வர். இத்தகைய நூலகங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரிய நூல்களை நுண்ணிய பகுப்பாக்கம் செய்வது பொருத்தமானது. துரிதமாக வளர்ச்சியடையும் நூலகங்களில் நுண்ணிய பகுப்பாக்கம் அவசியம். பழைய ஆலய நூலகங்கள் அதனை ஒத்த நூலகங்களில் பரந்த பகுப்பாக்கம் போதுமானது. ஏனெனில் அங்குள்ள நூல்களின் தொகை மாற்றமடையாதென்பதுடன் அவை பூரணமானதொரு நூற்தொகையையும் கொண்டிருக்கும்.

பரந்த பகுப்பாக்கமானது பெரும்பாலும் பொழுது போக்குச் சம்பந்தமான நூல் தொகுப்புக்கள், காட்சிக்கு வைக்கும் நூல்கள், பாடசாலை நூலகங்கள் ஆகியவற்றுக்குப் பாவிக்கப்படுகின்றது. பொதுசன நூலகங்களில் வாசகர் வாசிக்கும் பகுதிக்கும் இது உகந்தது எனலாம்.

இந்நூலக பகுப்பாக்கத்தைச் செய்வதற்குப் பல அறிஞர்கள் தம்மாலான திட்டங்களை வகுத்துள்ளார்கள். இவை எல்லாவற்றிலும் மெல்வில் தூயி என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தூயி தசாம்சப் பகுப்பாக்கத் திட்டமே உலகில் மிகப்பெருமளவில் பாவிக்கப்படும் ஒரு பகுப்பாக்க முறையாகும். அறிமுகம் செய்யப்பட்ட ஏனைய பகுப்பாக்கத் திட்டங்கள் பின்வருமாறு –

- அனைத்துலக தசாம்சப் பகுப்பாக்கம்
- கோலன் பகுப்பாக்கம்
- காங்கிரஸ் நூலகப் பகுப்பாக்கம்
- பிளிஸ் நூலகப் பகுப்பாக்கம்
- நூல்விபரப் பகுப்பாக்கம்
- பொருட் பகுப்பாக்கம்
- விரிவாக்கப் பகுப்பாக்கம்
- சர்வதேசப் பகுப்பாக்கம்

இவை அனைத்திலும் ஒவ்வொரு குறைவம்சங்கள் இருப்பதாலும், பொதுவாகப் புதுப்பிக்கும் நடைமுறை கடைப்பிடிக்காமையாலும் இவை கீழைத்தேய நாடுகளில் அதிகமாகப் பின்பற்றப்படவில்லை. ஒரு பகுப்பாக்கத் திட்டம் புதிய பதிப்புருவை அடையாவிட்டால் அது உலகின் விஞ்ஞான ஓட்டத்தின் அறிவை ஏற்றுச் செயற்பட முடியாதென்பது உறுதி. புதிய அறிவைப் பகுப்பாக்கத்திட்டமொன்று உள்வாங்கக் கூடிய வழியைக் கொண்டிருப்பதற்கு அது கட்டாயமாகப் புதுப்பிக்கப்படவேண்டும். இதற்குத்தவறின் அதனால் சிறந்ததொரு பகுப்பாக்கமாகச் செயற்படமுடியாது. இந்த வகையில் தூயி தசாம்சப் பகுப்பாக்கத் திட்டம் பத்து ஆண்டுகளுக்கு ஒருதடவை புதுப்பிக்கப்படுவதனால் இன்று அது உலகில் 135இற்கு அதிகமான நாடுகளில் பாவனையிலுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் இதனை 95% மான பொதுப்பாடசாலை நூலகங்களும் 25% மான கல்லூரி, பல்கலைக்கழக நூலகங்களும் 20% மான விசேட நூலகங்களும் உபயோகிக்கின்றன. 1873ஆம் ஆண்டு மெல்வில் தூயி என்பவரால் இயற்றப்பட்டு 1876இல் 44 பக்கங்களைக் கொண்டு 1ஆம் பதிப்பாகப் பாவனைக்கு வந்த இப்பகுப்பாக்கத்திட்டம் இன்று 4

தொகுதிகளாக வளர்ந்துள்ளமை அறிவின் வியாபக வளர்ச்சியைப் பிரதிபலித்து நிற்கின்றது. இவ்வாறான தூயி தசாம்சப் பகுப்பாக்கத் திட்டம் மூலம் நூல்களை நாம் எவ்வாறு இலகுவாகப் பகுப்பாக்கம் செய்யலாம் என்பதை நோக்குதல் பொருத்தமானது.

ஒரு நாட்டில் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் எனப் பலதரப்பட்ட நூலகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தாம் அமைக்கப்பட்டதற் கேற்பச் சேவை செய்கின்றன. இவற்றின் நோக்கங்களுக்கு ஏற்ப இவற்றின் சேவைகள் வேறுபடுகின்றன. இவற்றுக்கு ஏற்பவே இவற்றின் நூற் சேகரிப்புகளும் அமைகின்றன. எனவே ஒரு நூலகத்தின் நோக்கம், சேவை என்பவற்றுக்கு அமையவே நூல்களும் பகுப்பாக்கம் செய்யப்பட வேண்டும். ஒரு நூலகத்தை அவை வழங்கும் சேவை, நோக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் வேறுபட்ட இன்னொரு நூலகத்தின் சேர்க்கையுடனோ அவற்றை வாசகருக்குப் பகுத்து வைக்கும் பணியுடனோ ஒப்பிடுதல் தவறானது. பொது நூலகங்களில் காணப்படும் சேகரிப்புகளுக்கு ஆழமான பகுப்பெண்கள் அவசியமானவை அல்ல. சிறுவர் முதல் வயோதிபர் வரை கல்வியைத் தொடர வழிசமைக்கும் இந்நூலகம் தன்நோக்கில் ஆராய்ச்சி நூலகமன்று. ஆனால் வளர் கல்வியை அதாவது ஏற்கனவே உள்ளவற்றைக் கொண்டு புதியன படைக்கும் திறன் மிக்க ஆராச்சியாளர்களை வாசகராகக் கொண்டு இயங்கும் பல்கலைக்கழக நூலகங்களுக்குரிய சேகரிப்புகளுக்கு ஆழமான பகுப்பாக்கம் அவசியம். ஆனால் பாடசாலை நூலகங்களுக்கு அவ்வாறான பகுப்பாக்கம் அவசியமில்லை. சிறப்பு நூலகங்கள் நூல்களிலும் பார்க்க அறிக்கைகள், பருவஇதழ்களையே தமது சேர்க்கையாகக் கொண்டு இயங்குவன. அவற்றுக்கு அவை கொண்டுள்ள விடயம் தொடர்பான பகுப்பெண்கள் போதுமானவை.

நூலகங்களின் சேர்க்கைகளைப் பகுப்பாக்கம் செய்வதற்கு முன் கட்டாயமாக அவற்றை நாம் புரட்டி முக்கிய விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். நூல்களின் தலைப்பைக் கொண்டு ஒரு போதும் பகுப்பாக்கம் செய்வதற்கு முனையக்கூடாது. நூலின் அட்டையில் காணப்படும் தலையங்கத்திற்கும் நூலின் தலையங்கப் பகுதிகளில் காணப்படும் தலையங்கத்திற்கும் சிலசமயம் வேறுபாடு காணப்படுதல் கூடும். நூலின் தலைப்பை அவற்றின் உபதலைப்புக்கள் மேலும் விளக்குவனவாய் அமையும். நூலின் தலைப்பைக் கொண்டு நூலைப் பகுக்க முடியாதவிடத்து நாம் வேறு சிலவிடயங்களைக் கருத்தில் கொள்ளலாம்.

நூலின் முகவுரை, அறிமுகம் என்பவற்றை வாசிப்பதனூடாக ஓரளவிற்கு எந்த வாசகர்களைக் கருத்தில் கொண்டு, யாருடைய தேவையைப் பூர்த்திசெய்ய நூல் எழுதப்பட்டுள்ளதென்பது தெரியவரும். நூலின் முகவுரை அல்லது அறிமுகம் சில சமயம் அந்நூலை நன்கு வாசித்த ஒருவரால் எழுதப்பட்டிருக்கும். அவர் கட்டாயமாக அதற்குரிய வாசகர் யார் என்பதைத் தெளிவுபடுத்தியிருப்பார். சில சமயங்களில் ஆசிரியரே தனது நூல் எத்துறை சார்ந்ததெனக் கூறியிருப்பார். அண்மைக்காலங்களில் அநேகமான நூல்கள் அங்கிகள் (Jackets) உள்ளவாய் வெளிவருகின்றன. இவற்றின் உட்பக்கத்தில் நூலாசிரியர், நூல் உள்ளடக்கம் பற்றிய குறிப்புக் காணப்படும். இதனை நன்கு

வாசித்து நூலின் உள்ளடக்கத்தை நாம் புரிந்து கொள்ளலாம். இவற்றை விட நூலின் பொருளடக்கம் நூலின் உள்ளடக்கத்தை வெளிக்கொணர்ந்து நூல் எத்துறை சார்ந்தது என எடுத்துக்கூறும். இவை அனைத்திலுமிருந்து நூலைப் பகுக்க முடியாத விடத்து நூலாசிரியர் எத்துறை சார்ந்தவரென்பது உதவியாக அமையும். இந்த இடத்தில் பாரதியார் இலக்கிய வாதி என்ற காரணத்துக்காக அவரது அரசியல் கட்டுரைகளை இலக்கியத்தில் ஒழுங்கு செய்ய முடியாதென வாதிடுபவர்களும் உள்ளனர். பாரதியார் அரசியல் கட்டுரைகள்தான் எழுதியுள்ளார் என்பது உறுதியானபின் அவர் எத்துறை சார்ந்தவர் என்பது அவசியமற்றது. பாரதியார் பலதரப்பட்ட விடயங்களிலும் கட்டுரைகளை எழுதி அவற்றைத் தொகுத்தவிடத்து எந்தத்துறையிலும் அதனைச் சேர்க்கமுடியாத இடத்தில் மட்டும் அவரது நூலை இலக்கியவாதி என்ற ரீதியில் இலக்கியத்தில் ஒழுங்கமைப்பது தவறானதன்று. மேற்குறிப்பிட்ட இரு விடயங்களும் வேறுபட்டவை. இவற்றிலிருந்து எதில் ஆசிரியர் துறைசார்ந்த பகுப்பெண் வழங்கலாமென்பது வெளிப்படையாகின்றது. எமக்கு நூல் எத்துறை சார்ந்ததென்பது உறுதியானபின் ஆசிரியர் பற்றிய விளக்கம் அவசியமானதன்று.

கல்வி உளவியல் என்ற நூலுக்கு எண் வழங்கும் போது அதனைக் கல்விக்கு மட்டும் வழங்குவது தவறானது. காரணம் கல்வி உளவியல் என நாம் அட்டவணையைப் புரட்டிப் பார்க்கவேண்டும். கல்வி என்ற பரந்த விடயத்தின் கீழ் அதனுடன் தொடர்புபடுத்தி அதன் பகுதியான உளவியலையும் நாம் பார்க்க வேண்டும். இதில் சிலவேளை கல்வி – 370, கல்வி உளவியல் 371.5 எனக் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு இல்லாதவிடத்து உளவியல் என்ற பதத்தின் கீழும் கல்வி எனக் குறித்து எண் வழங்கப்பட்டிருக்கும். இதற்குத் தூயி தசாம்சப் பகுப்பாக்கம் வகுக்கப்பட்டிருக்கும் முறையே காரணமாயமைகிறது. தூயி தசாம்சப் பகுப்பாக்கத்தில் அடிப்படை வகுப்புக்கள் பாரம்பரியக் கல்வி உள்ளடக்கங்களின் படி (Disciplines) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பகுப்பாக்கப் பகுதிகளும் அதன்படியே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஒரு விடயத்திற்கு அட்டவணையில் ஓரிடம் மட்டும் ஒதுக்கப்படவில்லை. உதாரணமாக:- திருமணம் (Marriage). இது ஓரிடத்தில் மட்டும் இடம்பெறமுடியாது. இசை – Music, தத்துவம் - Philosophy, சமூகவியல் - Sociology, சட்டம் - Law போன்ற பல்வேறு disciplines க்குக் கீழ் இடம்பெறக் கூடும். "திருமணச் சடங்குகள்" என்ற நூலுக்குரிய எண் 781. 587 (20th ed). திருமணம் சம்பந்தமான தர்ம சாஸ்திர முறைகள் 173 தத்துவத்திலும் , சட்டகருத்துக்கள் (Legal aspects of Marriage) 346.016 இல் சட்டத்தின் கீழும் இடம்பெறுகின்றன இவற்றுக்கான எண்களை அட்டவணையில் கண்டு கொண்டே நூல்களைப் பகுக்க வேண்டும் உதாரணமாக:- Legal aspects of Marriage என்பது பகுப்புத் திட்டத்தில்

Marriage

**Customs**

**Law**

Philosophy

என இடம்பெற்றிருக்கலாம் அல்லது

**Law**

**Marriage** என

அமைந்திருக்கலாம். ஒன்றிலில்லாவிட்டால் மற்றொரு விடயத்தில் Discipline ஆக வரலாம். பின்னர் எண்ணுள்ள நிரல்களில் இவ்வெண்ணைக் கண்டு அதிலிலுள்ள

விபரங்களை வாசித்து அவை நாம் கருதும் கருத்துக்களாயின் குறிப்பிட்ட நூலுக்கு அவ்வெண்ணை வழங்கலாம். அல்லாதவிடத்துச் சரியான எண்ணைத் தேடி நூலுக்கு வழங்கவேண்டும். ஒருபோதும் அட்டவணையில் நாம் பார்க்கும் எண்ணை நூலுக்கு வழங்குதல் கூடாது. நிரைகளில் வாசித்துப் பொருத்தமானதாயின் மட்டுமே எண் வழங்கப்படலாம்.

ஒரு நூல் இருவிடயங்களை அதாவது இருபாடங்களைக் கொண்டதாயிருக்கும்.
உதாரணம்
Enzymes
இதற்கு 581.19 Biophysics Bio Chemistry of Plants என்பதுடன் 574.191 – 574.192 வரையான எண்ணை இணைத்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே Enzymes க்கு எண் ஆக 581.1925 வழங்கவேண்டியுள்ளது. இவற்றை நாம் அட்டவணையை உபயோகித்து நிரைகளைப் பார்த்து அதிலுள்ள அறிவுறுத்தலின்படி வழங்க வேண்டும். நூல்களை முதலில் இனங் காண வேண்டும். கண்டபின்னரே அட்டவணையைப் பாவித்து எண்களை இட்டுக்கொள்ளலாம்.

இருபாடங்கள் அல்லது இரு விடயங்கள் (Subjects) ஒன்றிலிருந்து மற்றொன்று குறைவுபடாத முறையில் இருக்கும் நூலுக்கு முதல் காணப்படும் விடயத்திற்கு எண்ணை வழங்குங்கள். உதாரணமாக "ஒளியும்,ஒலியும்" என்ற நூலில் ஒளி,ஒலி இரண்டும் ஒரே பாடத்திற்குரியவை. அதாவது இரண்டும் பௌதீகவியல் சார்ந்தவை. எனவே முதல் பாடத்திற்குரிய எண்ணை வழங்குவதால் ஒழுங்கமைப்பில் இரண்டும் 530ஐச் சார்ந்தே இடம் பெறும். எனவே 530 என்ற குடும்பத்திலிருந்து வேறுபட்டுச் செல்ல வாய்ப்பில்லை. ஆனால் இந்துமதமும் பௌத்தமும் என்ற எதிர்க்கணியமான நூலுக்கு எண் வழங்கும் போது நாம் அவ்வாறு வழங்குவதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒப்பீட்டு ரீதியான, மதசார்பான நூல்களுக்கு அப்பகுதியில் தனியாக ஒரு எண் வழங்கப்பட்டுள்ளது. பௌத்த மதம் சார்பான கருத்துக்கள் கூடவாயினும் சரி இந்துமதக் கருத்துக்கள் கூடவாயினும் சரி ஒரு இடத்திற்கே செல்லவேண்டும். இரு வேறுபட்ட மதங்கள் தொடர்பான சகலநூல்களும் Comparative Religion என்ற பகுதியிலுள்ள எண்ணில் பகுக்கப்படலாம். இதனால் அவை முற்றிலும் வேறான வேறுமத நூல்களுடன் அமிழ்ந்திப் போவது தவிர்க்கப்படுகிறது.

"தென்னாசியாவின் பொருளாதார அபிவிருத்தி: இலங்கை சார்ந்த சிறப்பாய்வு".என்ற நூலின் பொருட்துறை பொருளாதார அபிவிருத்தி ஆகும். இதில் தென் ஆசியாவிலுள்ள பல நாடுகளும் ஆராயப்பட்ட போதும் இலங்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான எண்ணே வழங்கப்படவேண்டும். இதில் நூலின் தலையங்கம் வேறு உபதலையங்கம் வேறு. ஆனால் உபதலையங்கத்தைக் கருத்தில் எடுத்தே நூலைப் பகுக்க வேண்டியுள்ளதென்பதை இதன் மூலம் காணக்கூடியதாயுள்ளது.

நூற்பகுப்பாக்கத்திலும் சில வரன்முறைகள் பகுத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்துறைகளை உடைய நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதெப்படி எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது பகுப்பாளர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட

பொருட்துறைகளை உள்ளடக்கிய நூல்களைப் பகுப்பாக்கம் செய்யும் போது பிரதம முக்கியத்துவம் பெறும் பொருட்துறையை மனதில் கொள்ளவேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்துறைகளைக் கொண்டு அதேசமயம் இரண்டும் ஒன்றிற்கொன்று குறிப்பிடக்கூடிய தொடர்பற்ற பொருட்துறைகளையுடைய நூல்களைப் பகுப்பாளர் பகுப்பாக்கம் செய்யும் போது எண்ணிக்கையில் அதிகாரத்தில் சிரேஷ்ட கணிப்பில் கூடிய பொருட்துறையை மனதில் கொள்ள வேண்டும். முக்கியத்துவமோ அல்லது எண்ணிக்கையிற் கூடாதவாறு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்துறைகளையுடைய நூலாயின் உதாரணமாக இந்துசமயம், யூதசமயம், இஸ்லாம் சமயம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நூலாயினும் அந்நூல் குறிப்பிட்ட ஒரு பரந்த பாடத்தின் கிளையாக இருப்பினும் அதற்குப் பரந்த பகுப்பெண்ணை வழங்கலாம். உதாரணமாக

இந்துசமயம் 294.5
யூத சமயம் 296
இஸ்லாம் சமயம் 297

எனவே இந்நூலுக்கு 290 எண்ணாக வழங்கப்படலாம். இரண்டு பொருட்துறைகளையுடைய ஒரு நூலில் உள்ள பொருட்துறைகள் இரண்டிலும் எதற்கும் முக்கியத்துவம் வழங்கப்படாத விடத்து அட்டவணையில் எந்தப் பாடம் முதல் இடம் பெறுகின்றதோ அதன் எண்ணை வழங்க வேண்டும்.

ஒரு பொதுவான தலைப்பின்கீழ் உதாரணமாக இயற்கை வரலாறு என்ற பொருட்துறையில் பாறைகள், கனிப் பொருட்கள் பற்றி ஆராயுமிடத்து அது கூடுதலாகத் தாவரங்கள், மிருகங்கள் பற்றிய ஆராய்ச்சியாயிருப்பின் அதனை விஞ்ஞானத்தின் கீழேயே பகுப்பாக்கம் செய்ய வேண்டும்.

இதேபோலவே இரு அம்சங்களைக் கொண்ட நூல்களும் உதாரணமாக Engineering & Scientific Principles கொண்ட ஒரு Electric dynamic புத்தகம் விஞ்ஞானப் பிரிவில் பகுப்பாக்கம் செய்யப்பட வேண்டும். சில சமயம் அது அடிப்படையில் பொறியியல் சார்ந்ததாயின் அத்துறையில் பகுக்கப்படலாம்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அம்சங்களைக் கொண்ட ஒரு பாட நூல் எதற்கு முன்னுரிமை கொடுத்துள்ளதோ அதில் பகுப்பாக்கம் செய்யப்படவேண்டும். சில பொருட்துறைகளில் அப்படியான நூல்கள்கூட எந்த எண்ணில் இடப்படவேண்டும் என அட்டவணையில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கும். இவ்வாறான முக்கியத்துவம் முன்னுரிமை வழங்கப்படாத, ஏற்றுக் கொள்ளத்தக்க அறிவுறுத்தல்கள் இல்லாதவிடத்து பகுப்பாளர் தன் நூலகத்திற்கு ஏற்ற தேவையான அம்சத்தைக் கருத்தில் கொண்டு பகுப்பாக்கம் செய்யலாம். இவை எதுவுமே இல்லாத பட்சத்தில் எந்த அம்சம் அட்டவணையில் முதலிடம் பெறுகிறதோ அதற்கு முன்னுரிமை வழங்கிப் பகுப்பாக்கம் செய்யலாம்.

வாழ்க்கை வரலாறு சம்மந்தமான நூல்களைப் பகுப்பாக்கம் செய்யும் போது பொது நூலகங்கள் பகுப்பாக்கத்திட்டத்தில் அமைந்த பகுதியைப் பாவித்துப் பகுப்பாக்கம் செய்யலாம். ஆனால் பல்கலைக்கழக நூலகங்கள் போன்ற ஆராய்ச்சி நூலகங்கள் வாழ்க்கை வரலாற்றாளர் எந்தத் துறையைச்

சார்ந்தவரோ அத்துறை எண் வழங்குவதனை நடைமுறையாகக் கொள்ளலாம். எந்தத் துறையிலும் ஈடுபாடற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்கு மட்டும் 920 எண் வழங்கலாம். ஆராய்ச்சி நூலகங்களில் அவ்வவ்துறை ஆக்கங்களுடன் வாழ்க்கை வரலாறு இடம் பெறுவதால் ஆராய்ச்சிக்கு இலகுவானதாக அமையும்.

பகுக்கப்பட வேண்டிய நூலின் விடயம் தீர்மானிக்கப்பட்டு சார்பு அட்டவணையில் பார்க்கப்பட்டபின் நிரைகளில் சரிபார்க்கப்படவேண்டும். சார்பு அட்டவணை, அடிப்படையில் D.D.C யிலுள்ள பதங்களுக்கான அட்டவணையாகும். தேடப்படும் பதம் அட்டவணையில் காணப்படா விட்டால் பகுப்பாளர் விரிவான பதத்தைத் தேடவேண்டும்.. 2ஆம் பதிப்பு manual இல் கஷ்டமான பகுதிகளைப் பகுப்பாக்கம் செய்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவதுடன் தொடர்பான எண்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பதென்பதையும் அது விபரிக்கின்றது.

பகுப்பாக்கம் செய்வதற்குப் பகுப்பாக்கத் திட்டங்களில் பல வழிமுறைகள், அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைத் தீர்க்கமாகப் படித்துக் கொண்டால் பகுப்பாக்கம் இலகுவானதாய் அமையும். நாம் தேடிப்போகும், தீர்மானிக்கும் எண் சரியானதாய் அமையாதவிடத்துக் கூட இதனிலும் வேறு எண் இதற்குப் பொருத்தமானது என வழிகாட்டல்கள் இருக்கும். நூற் பகுப்பாக்கத்திற்கு நூல்களைப் பற்றிய அறிவு அதிகமாக இருக்கவேண்டும். இவற்றை நாம் அன்றாடம் பகுத்தல் செய்யும் நூல்கள் மூலம் அவற்றின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். உதாரணமாக உசாத்துணை நூல்களில் அதிகமானவை McGraw Hill வெளியீட்டாளர்களால் வெளியிடப்படுபவை. விஞ்ஞான நூல்களுக்கு கூட இவ் வெளியீட்டாளர் பிரசித்தமானவர்கள்.

இவற்றைக் கருத்தில் கொள்ளும் போது நாம் சரியான பாதையிலிருந்து தவறமுடியாது. இதன்மூலம் கொடுக்கப்பட்ட எண் சரியாயிருக்கும் என்ற நம்பிக்கையுடையவர்களாய் நாம் இருக்கலாம். வாதிடலாம். அடுத்து மேலைத்தேயப் புனைகதைகள் வேறு இலக்கிய ஆக்கங்களைப் பொறுத்தவரை ஆசிரியர்களை எத்தேசத்தவர் என இனம் காணவேண்டியுள்ளது. இவற்றுக்கு

Companion to English Literature
French Literature
American Literature

இப்படியான நூல்களை நாம் உசாவிக் கொள்ளலாம். இவர்களை நாம் சரியாக இனம் கண்டு கொண்டால் அந்தந்த இலக்கியங்களுக்குரிய எண்ணுடன் அவற்றின் வடிவத்திற்கும் எண்ணைச் சேர்த்து வழங்கிக் கொள்ளலாம். இது இலகுவானது.

எனவே தொகுத்துப் பார்க்கும் போது நூல்களை முதலில் அவை கலை சம்பந்தமானவையா, விஞ்ஞான நூல்களா, தொழில்நுட்ப நூல்களா என இனங் காணவேண்டும். அதன்பின் அவை எத்துறைசார்ந்தவை எனக் கண்டு கொண்டால் அத்துறையில் அவற்றை இட்டுக்கொள்ளவோ ஆழமாகப் பகுப்பெண்ணை வழங்கவோ முடியும்.

நூல் ஒழுங்கமைப்பு முறைகள் நூலகத்துக்கு நூலகம் வேறுபட்டவை எனினும் பெரும்பாலான நாடுகளில் இன்றும் பாவனையில் இருப்பது தூயி தசமப் பகுப்புத் திட்டமாகும். இப்பகுப்புத் திட்டத்தின் பலவீனங்களில் முக்கியமானது இது கீழைத்தேச வெளியீடுகளுக்கான பொருத்தமான ஒழுங்கமைப்பை இதன் ஆரம்பப் பதிப்புகளில் கொண்டிருக்காமையே. ஆயினும் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு முன் 1971ல் வெளியிடப்பட்ட 18 ஆவது பதிப்பிலேயே கீழைத்தேச வெளியீடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க விரும்பும் நூலகங்களுக்கான அறிவுறுத்தல்களை இது உள்ளடக்கிய போதும் கூட இதன் பயன்பாடு பெரிதும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.இதனைக் கருத்தில் கொண்டு எமது பிரதேசம், மொழி, பொருட்துறைகள் என்பவற்றுக்கு இத் திட்டம் தரும் முன்னுரிமைகளினடிப்படையில் சில மாற்றங்களுடன் தூயி தசமப் பகுப்புத்திட்டத்தின் 22ஆம் பதிப்பை இணுவில் அறிவாலயம் அறிமுகப்படுத்தத் தீர்மானித்திருக்கின்றது. கீழைத்தேச இலக்கியத்துக்கு முன்னுரிமை அளிக்க விரும்பும் நூலகங்களின் பாவனை கருதியும் ஆங்கில மூலப் பகுப்புத்திட்டத்தினால் அவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டும் தமிழ் மூலத்திலான தூயி தசம பகுப்புத்திட்டத்தின் 22ஆம் பதிப்பின் பரந்த பகுப்புத் திட்டம் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## 000 - கணினி அறிவியலும் பொது ஆக்கங்களும்
## Computer Sc. Information &General works

001 அறிவு Knowledege
004 கணினி அறிவியல் Computer science
005 கணினிச் செய்நிரலாக்கம் Computer programming
006 விசேட கணினி முறைகள் Special computer methods
010 நூல்விபரப்பட்டியல் Bibliography
020 நூலக தகவல் அறிவியல் Library & Information Science
030 பொதுக் கலைக்களஞ்சியங்கள் General Encyclopaedias
031 தமிழ்க் கலைக்களஞ்சியங்கள் Tamil Encyclopaedias
032 ஆங்கிலக் கலைக்களஞ்சியங்கள் English Encyclopaedias
050 தொடர் வெளியீடுகள் Serials
051 தமிழ்ப் பருவ இதழ்கள் Tamil periodicals
060 பொது நிறுவனங்கள் General organizations
069 அரும்பொருட் காட்சியகவியல் Museology
070 செய்தி ஊடகங்கள், வெளியீட்டுத் துறை News media & Publishing
070.4 ஊடகவியல் Journalism
080 பொதுச் சேகரிப்புகள் General collections
090 கையெழுத்துப் படிகளும் அரிய நூல்களும் Manuscripts & Rare books

## 100 மெய்யியலும் உளவியலும் Philosophy & Psychology

101-9 நியம உப பிரிவுகள் standard sub divisions
110 பௌதீக அதீதம் Metaphysics
120 அறிவாராய்ச்சியியல், காரணம் Epistemology,Causation & Humankind
130 ஒத்த உளவியலும், மாயமந்திரமும் Parapsychology and occultism
133.5 சோதிடவியல் Astrology
133.6 கைரேகை சாத்திரம் Palmistry
135 கனவுகளும், மரபுசார் பாரம்பரியங்களும் Dreams and the mystic traditions
138 அங்கசாஸ்திரம் Physiognomy
140 விசேட மெய்யியல் துறைகள் Specific philosophical school
150 உளவியல் Psychology
153 உளச் செய்முறைகளும், விவேகமும், mental processes & Intelligence
155 வேறுபாட்டுளவியலும், அபிவிருத்தி உளவியலும் Differential and developmental Psychology
156 ஒப்பீட்டுளவியல் Comparative psychology
158 பிரயோக உளவியல் Applied psychology
160 அளவையியல் Logic
170 ஒழுக்கவியல் Ethics
180 புராதன மெய்யியல் Ancient philosophy
181 கீழைத்தேய மெய்யியல் Eastern philosophy
181.4 இந்திய மெய்யியல் Indian Philosophy
181.49 சைவ சித்தாந்தம் Saiva Philosophy
189 இடைக்கால, மேலைத்தேய மெய்யியல் Medieval western philosophy
190 நவீன மேலைத்தேய மெய்யியல் Modern western philosophy

## 200 சமயம் Religion

| | |
|---|---|
| 201-9 | நியம உப பிரிவுகள் |
| 210 | சமய மெய்யியலும் சமயக் கோட்பாடுகளும் Philosophy & theory |
| 220 | இந்து மதம் Hinduism. Sacred books |
| 221 | வேத இலக்கியங்கள் vedic literature |
| 221.1 | பிராமணங்கள் Brahmanas |
| 221.2 | ஆரணியங்கள் Aranyas |
| 221.3 | உபநிடதங்கள் Upanishad |
| 222 | இதிகாசங்கள் Ithigasas |
| 222.1 | பாரதம் Maha bharathas |
| 222.2 | இராமாயணம் Iramayanas |
| 223 | புராணங்கள் Puranas |
| 224 | தர்ம சாத்திரங்கள் Dharmasastras |
| 230 | இந்து மதமும் இந்துக் கோட்பாடும் Hinduism & Hindu theology |
| 231 | சைவம் Shivaism |
| 232 | வைஷ்ணவம் Vishnuism |
| 233 | சாக்தம் Shaktaism |
| 234 | காணபத்தியம் Ganapataism |
| 235 | கௌமாரம் Shanmukaism |
| 236 | சிறு தெய்வ வழிபாடுகள் Others |
| 240 | இந்து, ஒழுக்க, பக்தி இறையியல் Hindu, moral & devotional theology |
| 241 | இந்து ஒழுக்கம் Hindu ethics |
| 242 | பக்தி இலக்கியம் Devotional literature |
| 248 | இந்து வாழ்வியல் Hindu life |
| 248.3 | இந்து வணக்கங்கள் Worship |
| 248.4 | இந்துத் திருமண முறைகள் marriage Ceremonies |
| 249 | குடும்ப வாழ்வில் இந்து சடங்குகள் Hindu observance in family life |
| 250 | இந்துக் கோவில்கள்(தல புராணங்கள்) Hindu temples |
| 251 | சைவக்கோவில்கள் Shiva Temples |
| 252 | வைஷ்ணவக் கோவில்கள் Vishnu Temples |
| 253 | அம்மன் கோவில்கள் Sakti Temples |
| 254 | பிள்ளையார் கோவில்கள் Ganapathy Temples |
| 255 | முருகன் கோவில்கள் Shanmuka Temples |
| 256 | ஏனையவை Others |
| 260 | சமூக, மற்றும் மதகுரு சார்ந்த இறையியல் Social and ecclestical theology |
| 263 | சமய வழிபாட்டுக்குரிய நாட்கள், காலங்கள், இடங்கள் Days, times & places |
| 264 | பொது வழிபாடு Public worship |
| 265 | புனிதச் சடங்குகள், பிற கிரியைகள், சட்டங்கள் Sacraments, other rites, & acts |
| 268 | சமயக்கல்வி Religious education |
| 270 | பக்தி இயக்கங்கள் Reformed Hinduism |
| 271 | பிரமசமாஜ் Brahma samaj |
| 272 | ஆரிய சமாஜ் Arya-samaj |
| 273 | இராமகிருஷ்ண இயக்கங்கள் Ramakrishna movements |
| 274 | நவீன மத இயக்கங்கள் Neo Hinduism |
| 275 | சமயப் பணிக்களுக்கான சங்கங்கள் Associations for religious work |

280 இந்திய சமயங்கள் Religions of Indic origin
281 பௌத்த சமயம் Buddhism
282 சமண சமயம் Jainism
284 சீக்கியம் Sikhism
290- ஏனைய சமயங்கள் Others
291 கிறிஸ்தவம் christianity
292 கிரேக்க உரோம சமயம் (Greek and Roman) religion
293 ஜெர்மன் சமயம் Germanic religion
295 பார்சி சமயம் Zoroastrianism (Mazdaism, Parseeism)
296 யூத சமயம் Judaism
297 இஸ்லாமியமும், அவற்றின் கிளைகளும் Islam and religions derived from it

**300 சமூக அறிவியல்கள் social sciences**

301 - சமூகவியலும் மானுடவியலும் Sociology & anthropology
301.7 எழுத்தறிவற்ற சமூகங்கள் Non literate society
302 சமூக ஊடாட்டம் Social interaction
302.23 தொடர்பு ஊடகங்கள் Media
303 சமூகச் செய்முறைகள் Social processes
303.3 தலைமைத்துவம் Leadership
303.38 பொதுசன அபிப்பிராயம் Public opinion
303.4 சமூக மாற்றங்கள் Social changes
303.6 முரண்பாடுகள் Conflict
303.62 சமூகக் குழப்பங்கள் Civil disorders
303.64 உள்நாட்டுப் போரும் புரட்சியும் Civil war & revolution
304 சமூக நடத்தைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் factors affecting social behaviours
304.6 சனத்தொகை Population
305 சமூகக் குழக்கள் Social groups
305.3 ஆண்களும் பெண்களும் Men & women
305.4 பெண்கள் Women
305.52 உயர் வர்க்கம் Upper class
305.55 மத்தியதர வர்க்கம் Middle class
305.56 கீழ் வர்க்கம் Lower class
305.8 குறிப்பிடத்தக்க இனங்கள் Specific races
306 பண்பாடும் நிறுவனங்களும் Culture & institutions
306.8 திருமணமும் குடும்பமும் Marriage & family
307 சனசமூகங்கள் Communities
310 பொதுப் புள்ளிவிபரத் தொகுப்புகள் Collection of general statistics
314 ஐரோப்பியப் பொதுப் புள்ளிவிபரவியல் General statistics of Europe
315 ஆசியப் பொதுப் புள்ளிவிபரவியல் statistics of Asia
316 ஆபிரிக்கப் பொதுப் புள்ளிவிபரவியல் statistics of Africa
317 வட அமெரிக்கப பொதுப் புள்ளிவிபரவியல் statistics of North America
318 தென் அமெரிக்கப் பொதுப் புள்ளிவிபரவியல் statistics of South America
319 பிற பகுதிகளின் பொதுப் புள்ளிவிபரவியல் statistics of other parts of world
320 சமூக அறிவியல் Political science

320.01-09 நியம உப பிரிவுகள் Standard sub division
320.9 அரசியல் சூழலும் நிலைமைகளும் Political situation & conditions
320.91-99 நாடுகள் ரீதியான அரசியல் சூழல்கள் பிரதேச அட்டவணை 2ஐ இணைக்குக
321 அரச, அரசாங்க அமைப்புக்கள் systems of governments & states
322 சமூகக் குழுக்களுடன் அரசின் தொடர்புகள் Relations of state to organised groups
322.1 மத அமைப்புகள் Religious organizations
322.2 தொழிலாளர் அமைப்புகள் Labour organisations
323 குடியுரிமையும் அரசியல் உரிமையும் Civil & political rights
324 அரசியல் செய்முறை Political process
325 சர்வதேசக் குடிப்பெயர்வும் காலனித்துவமும் International migration & colonisation
326 அடிமைத்துவமும், விடுதலையும் Slavery and emancipation
327 சர்வதேசத் தொடர்புகள் International relations
327.2 இராஜதந்திரம் Diplomacy
327.3-9 நாடுகளுக்குரிய வெளிநாட்டு உறவுகள் Foreign relations of specific nations
328 சட்டவாக்கம் Legislation
330 பொருளியல் Economics
331 தொழிற் பொருளியல் Labour economics
332 நிதிப் பொருளியல் Financial economics
333 நிலப் பொருளியலும் சக்திப் பொருளியலும். economics of land & energy
334 கூட்டுறவு நிறுவனங்கள் Cooperatives
335 சோஷலிசமும் அது தொடர்பான முறைகளும் Socialism & related systems
336 பொது நிதியியல் Pubic finance
337 சர்வதேசப் பொருளாதாரம் International economics
338 உற்பத்தி Production
339 பேரினப்பொருளியல் Macro economics & related topics
340 சட்டவியல் Law
341 தேசங்களின் சட்டம் law of nations
342 அரசியலமைப்புச் சட்டமும், நிர்வாகச்சட்டமும் Constitutional & administrative law
343 இராணுவ, வரி, வர்த்தக மற்றும் கைத்தொழில் சட்டம் Mititary, tax, trade & industrial law
344 தொழிலாளர்,சமூகம், கல்வி மற்றும் கலாச்சாரச் சட்டம் Labour, Social,education & cultural law
345 குற்றவியல் சட்டம் Criminal law
346 தனியார் சட்டம் Private law
347 குடிசார் நடைமுறையும் நீதிமன்றும் Civil procedure & courts
348 சட்டங்கள், வழக்குகள், சட்டதிட்டங்கள் Laws (Statutes), regulations, cases
349 விசேட அதிகார எல்லைகளுக்கான சட்டம் Law of specific jurisdiction
350 பொது நிர்வாகமும் இராணுவவியலும் Public administration & Military science
351 பொது நிர்வாகம் Public administration
355 இராணுவ அறிவியல் Military science
360 சமூகப் பிரச்சனைகளும் சேவைகளும் Social problems & services
364 குற்றவியல் Criminology
365 குற்றவியல் நிறுவனங்கள் Penal institutions
366 சங்கங்கள் Associations

368 கப்புறுதி Insurance
370 கல்வி Education
371 பாடசாலைகளும் செயற்பாடுகளும்: விசேட கல்வி schools & their activities: special education
372 ஆரம்பக் கல்வி Elementary education
373 இடைநிலைக் கல்வி Secondary education
374 முதியோர் கல்வி Adult education
375 பாடவிதானம் Curriculums
378 உயர் கல்வி Higher education
379 பொதுக் கல்விக் கொள்கை Public policy in Education
380 வணிகம், தொடர்பாடல், போக்குவரத்து Commerce,communication &Transportation
381 வணிகம் commerce
384 தொடர்புகள், தந்தித் தொடர்பு communication ,Telecommunication
388 போக்குவரத்து; தரைப் போக்குவரத்து Transportation;Ground transportation
390 சடங்குகள், ஒழுக்க ஆசாரங்கள், நாட்டாரியல் Customs,etiquette & folklore
398 நாட்டார் வழக்கியல் Folklore

## 400 மொழி Language

400.1-9 நியம உப பிரிவுகள்
401 மொழியியல் Linguistics
410 தமிழ் மொழி Tamil language
410.1-9 நியம உப பிரிவுகள்
411 தமிழ் எழுத்து வடிவங்கள் Writing systems and phonology
411.1 தமிழ் எழுத்து வடிவங்கள் Writing systems
412 தமிழ் சொற்பிறப்பியல் Etymology of Tamil language
413 தமிழ் அகராதிகள் Dictionaries of Tamil language
413.1 சிறப்புத் தமிழ் அகராதிகள் Specialized dictionaries in Tamil
413.2 ஆங்கில தமிழ்மொழி அகராதிகள் Bilingual dictionaries
415 தமிழ் இலக்கணம் Structural systems (Grammar) of tamil language
418 பிரயோக மொழியியல் Standard usage of the tamil language
418.02 தமிழ் மொழிபெயர்ப்பு Translation to and from other languages
420 நியம ஆங்கில மொழி standard English
421-9 தமிழ் மொழியில் உள்ளவாறு பிரிக்கவும்
430 ஜெர்மன் மொழிகள் Germanic (Teutonic) language German
440 பிரஞ்சு மொழிகள் Romance languages French languages
450 இத்தாலிய மொழிகள் Italian, Romanian, Rhaeto-Romanic languages
460 ஸ்பானிய மொழிகள் Spanish and Portugages languages
470 லத்தீன் மொழிகள் Latin languages
480 கிரேக்க மொழிகள் Hellenic languages Classical Greek
491 இந்தோ – ஐரோப்பிய செல்டிக் மொழிகள் Indo – European and Celtic lang.
491.2 சமஸ்கிருதம் Sanskrit
491.48 சிங்கள மொழி Sinhalese

## 500 அறிவியல் science

501-9 நியம உப பிரிவுகள்
510 கணிதம் Mathematics

512 அட்சர கணிதம் Algebra
513 எண் கணிதம் Arithmetic
516 கேத்திர கணிதம் Geometry
520 வானவியல் Astronomy
530 பௌதிகவியல் Physics
531 திண்ம நிலையியக்கவியல் Solid Mechanics
532 திரவங்களின் நிலையியக்கவியல் Mechanics of fluids
533 வாயுக்களின் நிலையியக்கவியல் Mechanics of gases
534 ஒலியியலும் அதனுடன் தொடர்பான அதிர்வுகளும் Sound and related vibrations
535 ஒளியியல் light (Optics) and paraphotic phenomena
536 வெப்பவியல் Heat
537 மின்னியலும், இலத்திரனியலும் Electricity and electronics
538 காந்தவியல் Magnetism
539 நவீன பௌதிகம் Modern physics
540 இரசாயனவியலும் அதனுடன் இணைந்த துறைகளும் Chemistry & allied Sciences
541 பௌதிக இரசாயனம், Physical chemistry
543 பகுப்பு இரசாயனவியல் analytical chemistry
546 அசேதன இரசாயனம் Inorganic chemistry
547 சேதன இரசாயனம் organic chemistry
550 புவிசார் அறிவியல் Earth science
560 புராதன உயிரியல் Paleontology
570 வாழ்க்கை அறிவியல்கள் உயிரியல் Life sciences; Biology
572 உயிர்த் தொழினுட்பவியல் Bio technology
580 தாவரவியல் Botany
590 விலங்கியல் Zoology

600 தொழினுட்பவியல் **Technology**

601-9 நியம உப பிரிவுகள் Standard sub division
610 மருத்துவமும் சுகாதாரம் Medicine & Health
611 மனித உடற்கூற்றியல், கலனியல், உயிர்த்தசைமவியல் - Human anatomy, cytology, & Histology
612 உடற்றொழிலியல் Human physiology
613 தனிநபர் சுகாதாரமும் பாதுகாப்பும் personal health & safety
614 நோய் மூலமும் தடுப்பு முறைகளும் Incidence & prevention of disease
615 மருந்தியலும், நோய் மாற்றலும் Pharmacology and therapeutics
616 நோய்கள் Diseases
617 அறுவைச் சிகிச்சை Surgery
618 பெண்ணோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம், மூப்பியல் Gynecology, obstetrics, paediatrics & geriatrics
620 பொறியியலும் அதனுடன் இணைந்த செயற்பாடுகளும் Engineering & allied operations
630 விவசாயவியலும் தொழினுட்பங்களும் Agriculture & related technologies
633 தானியப் பயிர்கள் Field plantation crops
634 பழப் பயிர்ச்செய்கை, காட்டியல் Orchards, fruits, forestry
635 தோட்டப் பயிர்கள் Garden crops (Horticulture)

636 மிருக வளர்ப்பு Animal husbandry
637 பாலும் பாற் பொருட்களும் Dairy and related products
638 புழுப் பூச்சி வளர்ப்பு Insect culture
639 வேட்டை, மீன்பிடி, பதப்படுத்தல் Hunting, fishing & conservation
640 வீடும் குடும்ப முகாமைத்துவமும் Home & family management
641.5 உணவும், பானமும் Food and drink
642 சமையல் கலை meal & Table service
646 தையல், உடை, தனிநபர் வாழ்க்கை Sewing, clothing, personal living
647 பொது வீட்டு முகாமைத்துவம் Management of Public household
648 வீட்டுப் பராமரிப்பு Housekeeping
649 குழந்தைப் பராமரிப்பும், இல்லப் பேணலும் Child rearing and home care
650 முகாமைத்துவ, மற்றும் துணைச் சேவைகள் Management & auxiliary services
657 கணக்கியல் Accounting
658 பொது முகாமைத்துவம் General management
660 இரசாயனப் பொறியியல் Chemical engineering
670 உற்பத்தி Manufacturing
680 சிறப்புப் பயன்பாட்டுக்கான உற்பத்திகள் Manufacture for specific uses
690 கட்டடங்கள் Buildings

## 700 நுண் கலைகளும் அலங்காரக்கலைகளும்
## Fine & Decorative arts

701-9 நியம உப பிரிவுகள் standard sub division
710 குடிமக்களுக்கான தரையமைப்புக் கலை Civic and landscape art
720 கட்டடக் கலை Architecture
730 பிளாஸ்ரிக் கலைகள்; சிற்பக்கலை Plastic art; sculpture
740 வரைதலும் அலங்காரக் கலையும் Drawings & Decorative art
750 ஓவியமும் ஓவியக் கலையும் Painting & paintings
760 வரைபுக் கலைகள்; அச்சுக் கலை Graphic arts; Print making
770 ஒளிப்படவியல், ஒளிப்படங்கள், கணினிக் கலைகள் Photography; computer art
780 இசை Music
790 புத்தாக்க, நிகழ்வுக் கலைகள் Recreation & Performing arts
791 பொதுக்கலை நிகழ்ச்சி Public performances
792 அரங்கு (மேடை நிகழ்ச்சி) Theater (Stage presentations)
793 உள்ளக விளையாட்டுக்களும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் Indoor games and amusements
794 திறமையுடன் கூடிய உள்ளக விளையாட்டுக்கள் Indoor games of skill
795 பணய விளையாட்டுக்கள் Games of chance
796 மெய் வல்லுநர் உடற்பயிற்சி விளையாட்டுக்களும், வெளிப்புற விளையாட்டுக்களும் Athletic and outdoor sports and games

## 800- இலக்கியம் Literature

801-9 நியம உபபிரிவுகள்
801.94 இலக்கிய விமரிசனம் Literary Criticism
810 தமிழ் இலக்கியம் Tamil literature
811 தமிழ்க் கவிதைகள் Tamil Poetry
811.1 சங்கக் கவிதைகள்

811.6 நவீன கவிதைகள்
812 தமிழ் நாடகம் Tamil Drama
813 தமிழ் நாவல்கள் Tamil Fictions
813.01 தமிழ்ச் சிறுகதைகள் Tamil Short stories
814 தமிழ்க் கட்டுரைகள் Tamil Essays
815 தமிழ்ச் சொற்பொழிவுகள் Tamil Speeches
816 தமிழ்க் கடிதங்கள் Tamil Letters
817 தமிழ் நகைச்சுவை Tamil rumours
818 தமிழ் இலக்கியத் தொகுப்புகள் Tamil Collections
819 ஏனையவை
820-890 வரையான இலக்கியங்களை தமிழ் இலக்கியத்திலுள்ளவாறு வடிவமைக்கவும்
820 ஆங்கில இலக்கியம் English Literature
830 ஜேர்மன் மொழி இலக்கியம் German Literature
840 பிரெஞ்சு மொழி இலக்கியம் French Literature
850 இத்தாலிய மொழி இலக்கியம் Italic Literature
860 ஸ்பானிஸ் மொழி இலக்கியம் Spanish Literature
870 போர்த்துக்கேய இலக்கியம் Portuguese Literature
880 கிரேக்க மொழி இலக்கியம் Greek Literature
890 ஏனைய மொழிகளின் இலக்கியங்கள் Literature from other languages
891 கிழக்கு இந்தோ, ஐரோப்பிய செல்டிக் மொழிகள் East Indo - European and Celtic languages
891.2 சமஸ்கிருத இலக்கியம் Sanskrit
891.48 சிங்கள இலக்கியம் Sinhalese
894.82 ஆந்திராக்குழு இலக்கியம் Andhra group
894.827 தெலுங்கு இலக்கியம் Telugu
895 சீன திபெத்திய மொழிகள் Sino – Tibetan Languages
895.1 யப்பானிய மொழி இலக்கியம் Chinese
895.6 சீன மொழி இலக்கியம் Japanese
895.7 கொரிய மொழி இலக்கியம் Burmese
895.8 பர்மிய மொழி இலக்கியம் Chinese
895.9 தென்கிழக்காசியாவில் உள்ள பிற மொழி இலக்கியங்கள் Other languages
896 ஆபிரிக்க மொழி இலக்கியம் African languages
897 அமெரிக்க பூர்வீக மொழி இலக்கியம் American aboriginal languages
898 தென் அமெரிக்க பூர்வீக மொழி இலக்கியம் South Amer.aboriginal languages
899 பிற மொழி இலக்கியம் Other languages

## 900 வரலாறும் புவியியலும் **History & Geography**

900-9 நியம உப பிரிவுகள் Standard sub division
909 பொது உலக வரலாறு General world History
910 பொதுப் புவியியல் - பிரயாணம் General geography & Travel
911 வரலாற்றுப் புவியியல் Historical geography
912 தேசப்படத் தொகுதி, வரைபுகள், திட்டங்கள் Atlases, maps, charts, plans
913 புராதன உலகின் புவியியலும், பிரயாணமும் Geography of and travel in ancient world
914 ஐரோப்பிய புவியியல், பிரயாணம் Europe
915 ஆசியப் புவியியல் பிரயாணம் Asia

916 ஆபிரிக்க புவியியல், பிரயாணம் Africa
917 வட அமெரிக்க புவியியல், பிரயாணம் North America
918 தென் அமெரிக்க புவியியல், பிரயாணம் South America
919 ஏனைய உலகப் புவியியலும் - பிரயாணம் Other areas
920 வாழ்க்கை வரலாறு Biography, genealogy & insignia
(அந்தந்தப் பாடத்துறைகளுடன் வாழ்க்கை வரலாற்றை இணைக்கவும்)
929 குலமரபு, பெயர்கள், சின்னங்கள் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையோர்.
930 புராதன உலகம் History of ancient world
940 ஐரோப்பிய வரலாறு History of Europe
941 ஸ்கொட்லாந்தும், அயர்லாந்தும் Scotland and Ireland
942 பிரித்தானிய தீவுகள் - இங்கிலாந்து British Isles England.
943 மத்திய ஐரோப்பா, ஜேர்மனி Central Europe Germany
944 பிரான்ஸ் France
945 இத்தாலியக் குடாநாடு Italy
946 ஐபீரியக்குடாநாடு ஸ்பெயின் Iberian Peninsula Spain
947 கிழக்கு ஐரோப்பா சோவியத் யூனியன் . Eastern Europe, Soviet Union
948 ஸ்கண்டிநேவியா Scandinavia
949 பிற ஐரோப்பியப் பகுதிகள் Other parts of Europe
950 ஆசிய வரலாறு History of Asia
951 சீனாவும் அதன் அயலிலுள்ள பகுதிகளும் China and adjacent aress
952 யப்பானும் அதன் அயலில் உள்ள தீவுகளும் Japan and adjacent islands
953 அரோபியக் குடாநாடும் அதன் அயலில் உள்ள பகுதிகளும் Arabian Peninsula and adjacent areas.
954 தென் ஆசியா, இந்தியா South Asia, India
954.9 பாகிஸ்தான் Pakistan
954.93 இலங்கை Ceylon.
954.9301 பிரித்தானிய காலம் 647 முதல் 1975 வரை Early history, 647 – 1975
954.9302 பிரித்தானிய காலம் 1795 – 1948 British period, 1795 – 1948
954.9303 சுதந்திரத்திற்குப்பின் 1948 முதல் Independence, 1948 –
955 ஈரான் (பேர்சியா) Iran (Persia)
956 மத்திய கிழக்கு Middle East (Near East)
957 சைபீரியா Siberia (Asiatic Russia)
958 மத்திய ஆசியா Central Asia
959 தென் கிழக்காசியா Southeast Asia
960 ஆபிரிக்க வரலாறு History of Africa
970 வட அமெரிக்க வரலாறு North American History
973 ஐக்கிய அமெரிக்க நாடுகள். United States
980 தென்னமரிக்க வரலாறு History of South America
990 ஏனையவை History of other areas
993 நியூசிலாந்தும், மெலனேசியாவும் New Zealand and Melanesia.
994 அவுஸ்திரேலியா Australia
995 பப்புவா நியூகினியா New Guinea (Papua)
996 பொலினிசியா Other parts of Pacific Polynesia
997 அத்திலாந்திக் சமுத்திரத் தீவுகள் Atlantic Occan islands
998 ஆட்டிக் தீவுகளும், அண்டாட்டிக்காவும். Arctic island and Antaretica
999 நில உலகுக்கு அப்பாற்பட்ட பொது வரலாறு Extraterrestrial worlds

# நூல்கள் அன்பளிப்பு

| | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.சு.வேலுப்பிள்ளைச் சாமியார் சார்பில் சு.மார்க்கண்டு குடும்பம் | 91 |
| 2. | திரு. வை. க. சிற்றம்பலவனார் | 51 |
| 3. | திரு. ஆறு. திருமுருகன் | 527 |
| 4. | திரு. சபா. ஆனந்தர் | 348 |
| 5. | திரு. கா. வைத்தீஸ்வரன் | 13 |
| 6. | திரு. செல்லப்பா நடராசா | 15 |
| 7. | திரு. இ. திருச்செல்வம் | 42 |
| 8. | திரு.இ. இராசலிங்கம் | 38 |
| 9. | மா. சங்கரலிங்கம் சுவாமியார் | 15 |
| 10. | திரு. மூ. சிவலிங்கம் | 18 |
| 11. | திரு. ச.வே. பஞ்சாட்சரம் | 15 |
| 12. | திரு. ப. சிவானந்தசர்மா | 21 |
| 13. | திருமதி. அ. ஸ்ரீகாந்தலட்சுமி | 100 |

# மலர் வெளியீட்டுக்கான அன்பளிப்பு

| | பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | டொக்டர் திரு.மூ. பஞ்சலிங்கம், இணுவில் கிழக்கு | 25,000 |
| 2. | திரு. கா. வைத்தீஸ்வரன் (நூல் வெளி மட்டை), கொழும்பு | 25,000 |
| 3. | திரு. நா. கணேசலிங்கம், இணுவில் கிழக்கு | 15,000 |
| 4. | திரு.பொ. நடராசா (அண்ணா கோப்பி), | 12,000 |
| 5. | திரு. மூ. சிவலிங்கம், இணுவில் கிழக்கு | 12,000 |
| 6. | டொக்டர். திரு.க. பாலசுப்பிரமணியம், இணுவில் மேற்கு | 10,000 |
| 7. | திருமதி. அ. ஸ்ரீகாந்தலட்சுமி, இணுவில் மேற்கு | 10,000 |
| 8. | திரு. ஆறுமுகம் கபேஸ்கர், லலிதா கிராபிக்ஸ், இணுவில் கிழக்கு | 5,000 |
| 9. | திரு. அ. திருமால், இணுவில் கிழக்கு | 2,500 |
| 10. | மூ.சின்னராசா, கந்தரோடை | 2,500 |
| 11. | திரு. வை.கா. சிற்றம்பலம், கொக்குவில். | 1,000 |
| 12. | செல்வி. ப. செல்வமகள், இணுவில் | 1,000 |
| 13. | திரு. ச. பீஸ்மன், இணுவில் கிழக்கு | 1,000 |
| 14. | திரு.க. பரமேஸ்வரன், இணுவில் மேற்கு | 1,000 |

# அறிவாலயத்துக்கான நிதியுதவி

| | | |
|---|---|---|
| 15-10-01 | இலண்டன் | 450,000 |
| 15-10-01 | கனடா | 50,000 |
| 10-05-02 | இலண்டன் | 500,000 |
| 08-06-02 | கனடா | 171,734 |
| 13-07-02 | இலண்டன் | 205,000 |
| 25-10-02 | கனடா | 150,000 |
| 24-03-03 | பிரான்ஸ் | 200,000 |
| 26-06-03 | இலண்டன் | 500,000 |
| 26-08-03 | கனடா | 200,000 |
| 24-10-03 | " | 200,000 |
| 11-11-03 | " | 100,000 |
| 20-12-03 | " | 85,000 |
| 12-01-04 | இலண்டன் | 200,000 |
| 28-02-04 | " | 57,000 |
| 28-02-04 | " | 500,000 |
| 09-03-04 | அமெரிக்கா | 96,000 |
| 15-05-04 | கனடா | 108,000 |
| 15-10-04 | " | 50,000 |
| 18-12-04 | " | 127,500 |
| 08-01-05 | " | 70,000 |
| 14-02-05 | இலண்டன் | 165,000 |
| 24-02-05 | கொழும்பு | 50,000 |
| 26-02-05 | இணுவில் | 156,700 |
| 28-02-05 | " | 63,500 |
| 03-03-05 | இணுவில் | 50,000 |
| 06-03-05 | " | 54,100 |
| 10-03-05 | " | 75,700 |
| | | --------------- |
| | | 46,35,234 |

# நன்றியுரை

- இணுவை மண்ணில் அறிவு சார்ந்த அளப்பரிய பணியொன்றை மேற்கொள்ளுமுகமாக இலண்டன், கனடா ஆகிய நாடுகளில் இணுவில் திருவூர் ஒன்றியத்தை உருவாக்கி, அதனூடாக இணுவில் மண்ணுக்கு அறிவுச் சேவை செய்ய முயற்சியெடுத்த நிர்வாகக் குழவினர் க. விவேகானந்தன், ப. நவேந்திரன், க. அரியராசா (இலண்டன்) , த. ஸ்ரீஸ்கந்தராசா, க. அருட்சோதி (கனடா), சி. ஐங்கரன், இரா. குகவரதன் (இலண்டன்)) ஆகியோருக்கு இணுவில் பொது மக்கள் அனைவரதும் சார்பாக மனமுவந்த நன்றிகள்.
- புலம் பெயர் மண்ணில் கருக்கொண்ட இணுவில் திருவூர் ஒன்றியத்தின் சிந்தனைகளைச் செயலுருப்படுத்துமுகமாக இணுவை மண்ணில் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் இலங்கைக் கிளையை உருவாக்குவதற்கான சகல முயற்சிகளிலும் பங்கெடுத்து இருபுறமும் இணைப்பாளராகச் செயற்படும் திரு. ஆறு. திருமுகனுக்கு அளப்பரிய நன்றிகள்.
- அமைவிடத்தைத் தெரிவு செய்து அதற்கான காணியை வாங்குவதற்கு நிதியுதவி செய்த சி. ஐங்கரன், இரா. குகவரதன் (இலண்டன்), காணி உரிமையாளர் சி. ஆறுமுகம் மனமுவந்து தருவதற்குச் சம்மதித்ததும் அதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட மதிப்புக்குரிய டொக்டர். க. பாலசுப்பிரமணியம், பொருளாளர். க. சிவராசா, இரா. பாலச்சந்திரன், அ. கிருபாமூர்த்தி, ஏ.சி. சண்முகலிங்கம் ஆகியோரது பணிக்கும் நன்றிகள்.
- கட்டிடத்தின் வரைபடத்தைக் கேட்டவுடன் வரைந்து உதவியதுடன் ஆலோசனை வழங்கிய பொறியியலாளர் அ. முருகேசம்பிள்ளையின் சேவைக்கும், கட்டிடத்தைப் பொறுப்பேற்று நிறைவேற்றித் தந்த ம. கங்காதரனின் அளப்பரிய சேவைக்கும் நன்றிகள்.
- அறிவாலயம் கட்டிடம் வெள்ளத்தில் மூழ்கியதை நேரில் கண்டு, வெள்ளத்தில் நீந்துகின்றது என கொச்சைப்படுத்தியவர்களை பார்த்து நெஞ்சு பொறுக்காது திரும்ப வெளிநாடு போய் தேவையான நிதியைச் சேகரித்து தமது பாரிய நிதியுதவியை அனுப்பி வைத்த இலண்டன், கனடா திருவூர் ஒன்றியத்தினரின் பணிக்கும், இவர்களுக்கு நிதியுதவி செய்த எமது உறவுகளுக்கும் மனமார்ந்த நன்றிகள்.
- மூன்று வருடங்களாகப் பூர்த்தியாகாது இருந்த கட்டிடத்தை மூன்று மாதங்களில் பூர்த்தியாக்க வேண்டும் எனக் கனவு கண்டு உறங்காது உழைத்த உத்தமர்கள் திரு. மூ. சிவலிங்கம், சு. சண்முககுமார், சு சண்முக குலகுமார், மா. சிவப் பிரமம், இரா பாலச்சந்திரன் ஆகியோருக்கும் நன்றிகள்.
- அறிவாலயக் கட்டிடத்தை முழுமையாக்கி இன்றைய திறப்புவிழாவரை கொண்டு வர எடுத்த முழு முயற்சி வெற்றி பெற நிதியுதவி வழங்கிய இணுவில் பொது மக்கள், விழா சிறப்புற நடைபெறுவதற்கென அமைக்கப்பட்ட விழாக் குழவில் அங்கம் வகித்து ஆலோசனை வழங்கிய பெருமனத்தோர் அனைவருக்கும் நன்றிகள்.
- அறிவாலயம் சிறப்பு நூலை வெளியிடுவதற்கான பொறுப்பைச் சிரமேற் கொண்டு பணியாற்றிய யாழ் பல்கலைக்கழகக் கல்விசார் நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களுக்கும், நூல் வெளியீட்டுக்குப் பணிபுரிந்த மலர்க்குழவினருக்கும், கட்டுரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் நன்றிகள்.
- அறிவாலயத்துக்கு நிதியாக மட்டுமன்றிப் பொருட்களாக உதவி செய்தவர்களுக்கும், குறிப்பாகத் திருமதி இந்திரா கனகநாயகம் ஞாபகார்த்தமாக நீர் தாங்கியை அமைத்துக் கொடுத்த திரு. கனகநாயகம், திரு. ஏ. சின்னத்துரை குடும்பத்தவருக்கும் நன்றிகள்.
- விழா சிறப்புறவும், இனிது நிறைவு எய்தவும் விழாவில் கலந்து கொள்ளப்போகும் அனைத்துப் பெரியோர்கள், சிவாச்சாரியர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.
- இறுதியாக அறிவாலயக் கட்டிட அமைப்புக்கும், திறப்புவிழா சிறப்புற அமையவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அனைத்து உள்ளங்களிலும் யாருக்காவது நன்றி கூறத் தவறியிருப்பின் எம்மை மன்னித்து இவ்வரிய பணி சிறப்புற ஆசீர்வாதம் வேண்டி விடைபெறுகின்றோம்.

**செயலாளர்,**
**இணுவில் திருவூர் ஒன்றியம்.**
**கோவில் வாசல், இணுவில்.**

**அறிவாலயம்** வளர வாழ்த்துகிறோம்

# அண்ணா தொழிலகம்

நாளெல்லாம் புத்துணர்வுடன் இருக்க
**அருந்துங்கள்**
**அண்ணா கோப்பி**

வளரும் குழந்தைகளுக்கும்,
கர்ப்பிணித் தாய்மாருக்கும்
சிறந்த போஷாக்குமிக்க உணவு
**ஜீவாகாரம்**

## அண்ணா தொழிலகத்தின் புகழ்பெற்ற தயாரிப்புக்கள்

உங்கள் பற்களின் வெண்மைக்கும்,
உறுதிக்கும் பற்களை
பளபளக்க வைக்கும்
**அண்ணா பற்பொடி**

அகத்தின் அழகு முகத்திலல்ல உங்கள்
கன்னத்தில் பார்க்க இன்றே
வாங்குங்கள்
**புனும் ரெல்கம் பவுடர்**

உங்கள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் நறுமணம் கமழ
**அண்ணாவின் ஊதுபத்திகள்**


- **ரோஸ்பத்தி**
- **சுகந்தமல்லி பத்தி**
- **மதுரங்கா பத்தி**
- **துர்க்கா பத்தி**

**கோழிப்பண்ணை விவசாயப்பண்ணை போன்ற**
**தொடர்புகளுக்கு :-**
**அண்ணா விவசாயப்பண்ணை,**
**புகையிரதநிலைய வீதி,**
**இணுவில்.**

**அண்ணா தொழிலகம்,**
**இணுவில்.**
**T.P :- 021 222 3565**

அறிவாலயம் நறுமணம் பரப்ப நல்வாழ்த்துக்கள்

# சைனிங் ஸ்ரார்



- மிதி வண்டி(சைக்கிள்),
- உந்துருளி (மோட்டார் சைக்கிள்),
- நீர் இறைக்கும் இயந்திரம்,
- லான்மாஸ்டர்

ஆகியவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்




**சைனிங் ஸ்ரார்**

Shinningstar sales Centre

10, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

அறிவாலயம் சிறப்புடன் பொலிவுற எமது வாழ்த்துக்கள்

# டைமன் ரேடர்ஸ்




**பலசரக்கு வாணிபம்**



தரமான பொருட்களை நிறைவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய சிறந்த இடம்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

அறிவாலயம் சிறப்புடன் மலர வாழ்த்துகிறோம்


With Best Compliments of:-

## அபிராமி பெஷன் ஹவுஸ்


## Abiramee Fashion House



அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப்
பொருட்கள் போன்ற தரமான
பொருட்களை நிறைவான விலையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
சிறந்த இடம்



அபிராமி பெஷன் ஹவுஸ்
இல:-5, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.



அறிவாலயம் சிறப்புற
வாழ்த்துகிறோம்

## லீலா களஞ்சியம்

பலசரக்கு வியாபாரம்

லீலா களஞ்சியம்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்

அறிவாலயம் வளர
வாழ்த்துகிறோம்

## சுதன் பேக்கரி





சுன்னாகம்

வாசிக்க வருபவரின்
வருகை ஏற்றும்,
மரியாதை காட்டிஅவர்க்
கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல் தந்தும்,
புதிய நூல்கள் அழைத்திருந்தால்
அவை உரைத்தும்,
நாளும் நூலை நேசித்து
வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும்
தேகத்தாலும் மாசற்ற
தொண்டிழைப்பீர்! சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென்று
முழக்கஞ் செய்வீர்!

📖 பாவேந்தர் பாரதிதாசன் 📖





Lalitha Graphics & Designers